# ஆத்மஜோதி

## வெள்ளி விழா மலர்

9637.
1519



1973

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி, இலங்கை.

# சமர்ப்பணம்

மலர் என்பது ஒரு செடியின் பக்குவ நிலையைக் குறிப்பது. அதன் பயனும் அதுவே. அதாவது மனிதருடைய கண்களையும் மனத்தையும் கவரும் நிலையடைந்ததைக் குறிக்கிறது. அதுபோலவே ஒரு புத்தக மலர் தோன்றுவது ஒரு மனிதன் அல்லது ஒரு இடம் அல்லது ஒரு ஸ்தாபனம் ஆகிய இவைகள் மக்கள் மனத்தைக் கவரும் நிலை அடைந்ததைக் குறிக்கும்.

25 ஆண்டுகளை நினைக்கும் போது கால வெள்ளத்துள் மிகச் சிறியதே. கால்நூற்றாண்டு என்னும் போது பெரிதாகத் தெரிகிறது. ஒரு தலை முறை என்று சிந்திக்கும் போது மிகப் பெரிதாகத் தெரிகிறது.

இம் மலர் இருபத்தைந்தாண்டுகளின் அனுபவம். இந்த அனுபவம் காலத்தால் அழியாதது. பல மகான்களின் அனுபவச் சுரங்கம். என்றும் மணம் குன்றாத, என்றும் வாடாத, என்றும் நிறம் குன்றாத மலர். இம் மலரை யாருக்குச் சமர்ப்பிப்பது என்றொரு வினா எழுந்தது?

இறைவனது அடிமலரை எண்ணெய் ஒழுக்குப் போல இடைவிடாது தியானிப்பவர்கள் அவரது அடியவர்கள். அவர்களோ இறைவனிலும் பெரியவர்கள். ஏன்? அவர்களுடைய உள்ளத்துள்ளே ஒடுங்கியிருக்கிறான் இறைவன். ஆகவே அத்தகைய இறைவனது அடியார்களுடைய பாத கமலங்களில் இம் மலரைச் சமர்ப்பிப்பதில் ஆனந்தம் அடைகின்றோம்.





# ஆசிச்செய்தி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

### காஞ்சிபுரம்

சூரியன் நாள் தோறும் உதிக்கின்றுன். அது இருளுக்குப் பின் ஒளி. ஆத்மஜோதி இருளிலும் பிரகாசிப்பது. ஆத்ம ஜோதியை உணர்வதற்குச் சூரியன் ஒரு எடுத்துக்காட்டு. ''உதிக்கின்ற செங்கதிர்'' என்பது அபிராமபட்டருடைய வாக்கு. சூரிய உதயம் பூத இருளை ஓட்டுகின்றது. ஆத்ம ஜோதி அஞ்ஞான இருளை ஓட்டுகின்றது.

ஆத்மஜோதி என்னும் பெயரைத் தாங்கி ஈழத்திலிருந்து மாதசஞ்சிகை ஒன்று கடந்த 25 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருப்பதை யாவரும் அறிவர். சூரியன் எவ்வித பாகுபாடும் கருதாது ஒளி தந்து கொண்டிருப்பது போல ஆத்மஜோதியும் எவ்வித வேற்றுமைக்குள்ளும் சிக்காது சமரசஞானத்தை போதித்து வருகின்றது.

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தில் இருந்து உயர் திரு. க. இராமச்சந்திரன், திரு. நா. முத்தையா ஆகிய இருவரும் ஒன்றிணைந்து ஆற்றும் சேவை அளப்பரிய ஒன்றுகும். இந்நிலையத்தார் மேலும் பல பல ஆண்டுகள் இந்த நற்பணியில் ஈடுபட்டு அறநெறியையும் நற்பண்புகளையும் பரப்பிவர எல்லாம்வல்ல இறைவனது திருவருள் பாலிக்கவேண்டுமென்று ஆசீர்வதிக்கின்றேன்.

# ஆசியுரை

சுவாமி பிரேமாத்மானந்தா
தலைவர் இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு

புல் முதலாக தேவரீருக எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து ஈற்றில் மானிடப் பிறப்பெடுத்து, மெய்யாய இறைவன் பொன்னடிகள் கண்டு, வீடுற்ற நிலையினை வியந்து, ஆராக்காதல் பொங்க நின்று பாடிக்களிக்கின்ருர் மணிவாசகப் பெருந்தகை.

இவ்வளவு அரிதாகப் பெற்ற மானிடப் பிறப்பைத் தக்கவாறு பயன்படுத்தி இறையடி சேரும்பாதையில் முன்னேறிச் செல்ல வழிகாட்டுபவர் இறைவனே அவதரித்து எழுந்தருளி வரும் சத்குருவே யாவர். சத்குருவை அடையும் வரை உள்ளம் உயர்நெறியில் நிலைக்க, நல்வழி நடக்க உதவுவது சத்சங்கம்; அடியாருறவு. எல்லாச் சூழ்நிலையிலும் சத்சங்கம் அவ்வளவு எளிதாகக் கிட்டிவிடாது. நல்ல நூல்களும் சத்சங்கமாகவே கருதப்படலாம். அடியார்கள் வரலாறு, அன்னுர்தம் ஆழ்ந்த அநுபவத்திலிருந்து எழும் அரிய உண்மைகள், சமயக்கருத்துக்களை விளக்கும் கட்டுரைகள் யாவும் அடங்கிய வெளியீடுகளும் நற்பயன் அளித்து ஆத்மீக உணர்ச்சியைத் தூண்டவல்லனவே. இந்த வகையில் நம் ஈழநன்ருட்டில் தமிழ் உலகிற்குப் பயன்படக் கூடிய வெளியீடுகள் மிகக் குறைவாகவே உள்ளன. அவற்றுள் ஒன்ருய "ஆத்மஜோதி" கடந்த 25 ஆண்டுகளாக அடியாருள்ளத்தில் ஆத்மீக ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும் வகையில் அரும்பணி ஆற்றிவருகிறது என்றே கூறலாம்.

இது இன்னும் பல்லாண்டு காலம் நிலைத்து உண்மை அடியார்கள், அநுபூதிமான்கள், அவதார புருஷர்கள் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகள், அநுபவங்கள், அறிவுரைகள், ஆன்மார்த்த விடயங்கள் போன்ற பெருநெறி காட்டும் அரும் கருத்துக்கள் தாங்கி, மனுக்குலத்தை தெய்வீக வாழ்வுக்கு ஆளாக்கும்பாதையில் பெருந் தொண்டாற்ற வேண்டுமென உளங்கனிந்த ஆசிகள் நல்கி இதற்காக இறையருளையும் வேண்டிநிற்கின்றேன்.

# Message

## from the Minister of Cultural Affairs.

I am very pleased to have got an opportunity to send a message of congratulations to the SILVER JUBILEE NUMBER of the 'ATHMAJOTHI' the magazine published by the Athmajothi Organisation.

This organisation, based in Nawalapitiya has taken a keen interest in promoting religious knowledge and practices, especially, the Hindu philosophy and principles among residents of the Central regions in Sri Lanka. The organisation has performed considerable service in this connection. This organisation is an asset to those seeking spiritual life which gives happiness, peace and strength. The religious, educational and social services thus performed by the Athmajothi organisation is praiseworthy.

The value of the 'ATHMAJOTHI' magazine which portrays the services performed by the organisation, can be assessed by the fact that it has been published uninterrupted for 25 years.

The magazine contains the essence of the requirements for spiritual life such as the philosophy of various religious leaders, their teachings, yogi systems, religious practices. It performs a valuable Service in explaining how the religion could be utilized to lead the human life along the noble path.

I wish this magazine and the services it seeks to perform, all success.

*S. S. Kulatilake*
Minister of Cultural Affairs.

Ministry of Cultural Affairs,
212, Bauddhaloka Mawatha,
Colombo - 7.




செ. குமாரசூரியர் தபால் தந்தித்தொடர்பு அமைச்சர் (இலங்கை).

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன், எல்லா உடலும் இறைவன் ஆலயமே" என்ற உயர்தனிச் சமரச நெறி நின்று, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக 'ஆத்மஜோதி' மாத வெளியீடாக வெளிவந்துள்ளது பெருமைக்குரிய ஒரு விடயமாகும்.

எப்படி ஒளியின் உதவியில்லாமல் ஒரு பொருள் ஒரு பொழுதும் பார்க்கப்படுவதில்லேயோ, அப்படி மனதில் ஆராய்ச்சியில்லாமல் எதனுலும் ஞானம் அடையப்படுவதில்லே. கண்ணுடி போன்ற மனதானது பரிசுத்தமானுல் அதில் ஞானம் தானே விளங்கும். ஆகையால் மனதைப் பரிசுத்தமாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

மனதைப் பரிசுத்தமாக்கும் பணியில் "ஆத்மஜோதி" சிறந்த பணியாற்றியுள்ளது என்பதற்கு வெள்ளி விழா மலர் வெளிவருவதே நற்சான்ருகும்.

சைவமும், தமிழும் வளர்க்கும் பணியில், சைவத் தமிழர்களுக்கு வழிகாட்டும் ஜோதியாக "ஆத்மஜோதி" விளங்கட்டும் என வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துப்பா

ஆண்டவன் பிச்சை ஸ்ரீவைஷ்ணவிகுமார் சென்னை.

ஐயைந்து ஆண்டுகள் அறநெறி சிறந்தோங்க
அவனியுள் ளோர்க்கெல்லாம் அன்பு வழிகாட்டி
மெய்ஞானச் செல்வத்தை வாரி வழங்கியே
மேதினியில் அறியாமை வறுமை ஒழிந்திடவே
பையப் பைய பாரெங்கிலும் பரவியே
பாமரர்க்கும் அறிவூட்டும் பண்புமிகும் கட்டுரைகள்
துய்யத் தமிழ் மொழியில் துடர்ந்து வழங்கிடும்
ஆத்ம ஜோதியே நீ வாழ்ந்திடுக பல்லாண்டு!

அரும்பெரியார் சரிதங்கள் ஆத்மசிந்தனை மொழிகள்
கருத்தைக் கவர்ந்திடும் கவிதைகள் சிறுகதைகள்
திருத்தமாய் எடுத்துரைக்கும் சாதனைமார்க்கங்களும்
பொருத்தமாய் அளித்திடும் ஆத்மஜோதியே வாழ்க! வாழ்க!!

கல்வியிற்சிறந்து அறிவிலுயர்ந்த பலபெண்மணிகள்
நல்லறிவு படைத்த சில ஞானியர்கள் பக்தர்களும்
சொல்லழகும் பொருளழகும் நயம்படவே எழுதும்பல
நல்விருந்தை எமக்களிக்கும் ஆத்மஜோதியே நீ வாழ்க!

சைவ சித்தாந்தமெல்லாம் சர்ச்சைக்கு இடமின்றி
கைவரும் கனியைப்போல கருத்தினில் விளங்க வைத்து
ஐவர்க்கை பாவையாக அல்லதும் மனிதர்க்கெல்லாம்
மெய்ப்பொருளை விளக்கவந்த ஆத்மஜோதியே நீ வாழ்க!
பொன் மொழிகள் பூத்தறிவு மணம்வீசும் பூங்காவே
நன்நெறிகள் நாடெங்கும் பரப்பும் இளந்தென்றலே
கன்னலினும் இனிய நற்கட்டுரை கரும்பே
அன்பெனும் அமுதூட்டும் ஆத்மஜோதியே நீ வாழ்க!

எம்மதமும் சம்மதமாய் ஏற்கும் வகையாக
தம்மதமே சிறந்ததெனும் தாழ்மை மன இருளகற்றி
அம்மதத்திலுள்ள அரிய பலவிஷயங்கள்
விம்மி மனம் விரிவடைய விளங்க வைக்கும் ஆத்மஜோதி நீ வாழ்க!

சீர்மிகும் சிங்களத்தில் சிறப்புடன் தோன்றி இப்
பார்புகழ் பாரதத்தின் பழம்பெரும் மொழி தமிழின்
கீர்த்தியை விளக்கும் பன்னிருதிருமுறை பொருளை
நேர்த்தியாய் விளக்கும் ஆத்மஜோதி சுடர் ஓங்கிவளர்க.

# வெள்ளி விழா வாழ்த்து

## ஸ்வாமி ஸாதுராம் ஸ்ரீவைஷ்ணவி சத்சங்கம் – வேலூர்

இலங்கையில்நா வலப்பிட்டி எனுமிடம்சூழ் பகுதி
இருப்பிடமாக் கொண்டமைந்த எழிலாத்ம ஜோதி
வலங்கிளரும் நிலையத்தில் பத்தொன்பான் நூறு
வாய்நாற்பத் தெட்டாம்ஆங் கிலஆண்டிற் பிறந்து
நலங்கொள்கவு ரவஆசான் ராமச்சந்த்ரன் அவர்கள்
நா. முத்தை யாஎனும்பேர் நிர்வாஹ ஆசான்
துலங்குதந்தை தாய்போல வளர்க்கவளர்ந் துமதி
தொறுமுலவி மக்களன்பால் விளையாடும் ஜோதி.

ஸமரஸநன் னெறிபரப்பி ஸாதுக்கள் சரிதம்
தமைநிரப்பித் தெய்வத்தைச் சைவத்தைப் போற்றி
ஸமயஉண்மை களைவிளக்கி ஸத்தியத்தைப் புகட்டி
தனிப்பெருந்தெய் விகஇதழாத் தமிழரிடை உலாவந்
திமயமுதற் குமரிவரை எவ்வெவரும் வியப்ப
இனிதுவிடை நடைபோட்டே எழுந்தருளி நிலவும்
ஸமயஸஞ்ஜீ வியைஒத்த தமிழ்ச்சுடராம் மாத
ஸஞ்சிகையாம் கலைமகள்தண் ணருள்ஆத்ம ஜோதி.

காணபதம் சைவம்வயி ணவம்சவுரம் சாக்தம்
கவுமாரம் எனுமாறு மதத்தைவளர் தொண்டும்
மாணஇரு மொழிமறையும் மந்திரசாத் திரமும்
மணிமந்த்ர அவுடதமும் ஜோதிடமும் வாழப்
பேணவல பெருந்தொண்டும் தமிழ்த்தொண்டும் ஆற்றிப்
பிறந்ததிரு இலங்கைநின்று பாரதத்தும் பிறண்டும்
காணஉலாப் போந்துலகிற் கடவுண்மை வளர்க்கும்
கலியுகத்துக் கோரறிவுக் கதிரவனும் ஜோதி.

எள்ளிலிரு பத்தைந்தாண் டெய்திவிட்ட ஜோதி
இலங்கையர்க்கும் இந்தியர்க்கும் இதரர்கட்கும் அறிவுக்
குள்ளிருந்தே ஒளிகாட்டி வழிகாட்டி உதவும்
ஒப்பிலருட் பெருஞ்ஜோதி உகக்கும் உயிர்ச் சோதி
வெள்ளிவிழாக் கொண்டாடும் ஸித்தாந்த ஜோதி
வேதாந்த ஜோதிசிவ பரமாத்ம ஜோதி
தெள்ளியஜீ வாத்துமஜோ தியினுத்ம ஜோதி
திருவருளாற் பல்லாண்டு வாழ்க! ஜெக தலத்தே.

நல்லை ஆதினகர்த்தர்

## ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளின்

# ஆசிச் செய்தி!

மக்களை நல்வழிப்படுத்தி ஆன்ம ஈடேற்ற வழியில் செல்லச் செய்யும் தொண்டே எல்லாத் தொண்டுகளிலும் சிறந்த தலையாய தொண்டாகும்.

ஆத்ம ஈடேற்றத்திற்காக அறிஞர்கள் பலமுறைகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். அம்முறைகளில் ஒன்று சஞ்சிகைகள் மூலம் ஆத்ம ஈடேற்ற வழிகளை அறிவுறுத்துவதாகும்.

ஆத்ம ஈடேற்றத்திற்காக நமது நாட்டில் பல சஞ்சிகைகள் தொடர்ந்து தொண்டாற்ற வெளிவருகின்றன. அவ்வாறு தொண்டாற்றிவரும் சஞ்சிகைகளில் முதன்மை பெற்று விளங்குவது ஆத்மஜோதி என்னும் மாத ஏடாகும்.

'ஆத்மஜோதி' வளர்ச்சியடைந்து தனது வெள்ளி விழாப்பராயம் அடைந்தமையால் வெள்ளி விழாக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

வெள்ளி விழா நினைவுச்சின்னமாக வெள்ளி மலர் ஒன்றும் வெளியிட ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தார் முன்வந்திருக்கிறார்கள்.

ஆத்மஜோதி வெள்ளி விழா இனிது நடைபெறவும், மலர் சிறப்புடன் பொலிந்து மலரவும் அரும்பணிபுரிந்த ஆசிரியர், அச்சகத்தார், தொண்டர்களுக்கும், ஆதரவு நல்கிய அறிஞர், வாசகர்கட்கும், பெருந் துணையாக நின்ற திருவருளைச் சிந்தித்து நல்லாசி கூறுகிறோம்.

# அருளாசி

## பால முருகனடிமை இரத்தினகிரி

1948 திருக்கார்த்திகைத் திருநாளில் ஆரம்பிக்கப்பட்ட தங்களது ஆத்மஜோதி மாத வெளியீடு சமரச நெறியுடன் இடைவிடாது வெளிவந்து 25 ஆண்டுகள் நிறைவுற்று வெள்ளி விழா மலர் வெளியிடுவது கண்டு மகிழ்வுறுகின்றேன்.

ஆத்மஜோதி தன் ஆன்மீக பணியைத் தொடர்ந்து சிறப்புற நடாத்திட பால முருகன் அருள்பொலிக.

# நீடுவாழியவே!

## —கி. வா. ஜகந்நாதன்—

காந்தமலை—சென்னை-28.

விளக்கென விளக்கின் மேலுமுச்சுடராய்
 விளங்குறு சுடர்களின் மேலும்
துளக்கமில் சோதிப் பிழம்பதாய் நின்று
 சுளவிய பரப் பிரம்மத்தைக்
களக்கமில் மனத்தால் உருவமே எண்ணிக்
 கைவிளக் கெனக்கொண்டு போற்றி
உளக் கமலத்தில் ஏற்றுவார் பின்னர்
 ஓம் எனும் சோதியிற் குளிப்பார்!

பாடுதல் பாடி ஆடுதல் ஆடிப்
 பணிதல் பின் ஒருமையுற்றடங்கி
நாடுதல் நாடித் தியான யோகத்தில்
 நண்ணுதல் நண்ணுமந் நிலையிற்
கோடுதல் இன்றி குறி குணங் கடந்து
 கூம்பிய சோதியிற் கரைந்து
கூடுதல் என்னும் படிகளை ஏறிக்
 குலவுவார் இன்பமே ஆர்வார்!

இத்தகை யருள்சேர் நெறியினில் மக்கள்
 இயங்குதல் வேண்டுமென் றவாவிப்
பத்தியை விதைத்துப் பாடுதல் என்னும்
 பணியினைப் பயிர்செய்து மோனச்
சித்தியில் சாந்தம் பெற வரும் பயிற்சி
 சேர்தரத் தொண்டுகள் செய்யும்
உத்தியில் ஆத்ம சோதியாம் நிலையம்
 ஒளிர் வதைக் கண்டு வந்தேனே!

நாவலப் பிட்டி என்னுமா நகரில்
 நல்லவர் பற்பலர் நண்ணி
ஆவலோ டிறைவன் அருளினிற் குளிக்க
 ஆர்வஞ் செய் கோயில் இந்நிலையம்
நாவலர் வருவார் பாவலர் வருவார்
 ஞானியர் வந்திருந் துவப்பார்
மேவிய பஜனை செய்பவர் வருவார்
 விதம் வித அன்பர்கள் வருவார்!

யாவரும் இங்கே நிலவிய சாந்தம்
 இனிமை யார் தருவது கண்டு
மேவியே அமைதி கொண்டுவக் கின்றார்
 விளங்கிய மாதத்தாள் ஒன்று
தூவியப் பாக்கள் கட்டுரை யாதி
 துன்னவே ஆத்தும சோதி
தேவியற் பெயரைக் கொண்டு நன் கலர்ந்து
 சிந்தையில் இன்பத் தைத் தேக்கும்!

அமைதியே உருவாய் அமைதியே உரையாய்
 அமைதியே உளமென அமைந்து
சமைதிருவாளர் முத்தையா என்னும்
 சால்புடைத் தொண்டர் தம் தலைவர்
இமையினை நேர மென்னினும் வீணே
 இல்லாத படியருள் தொண்டு
கமையொடும் இயற்றி நல்லருட் கோயிற்
 காட்சியென் றொளிர் தரச் செய்தார்!

தொண்டர்கள் பிறரும் துணை செய்ய நல்ல
 சுவைபெறு நூல்களும் தந்தார்
மிண்டிய வெறியும் கலக்கமும் குழப்ப
 வினைகளும் மலிதரும் உலகில்
அண்டிய இன்ப ஊற்றெனச் சாந்தி
 ஆலயமெனத் திகழ் நிலையம்
திண்டிறல் வேலன் திருவருளாலே
 திகழுற நீடுவா ழியவே!!!

# வாழ்த்துரை

ஸ்வாமி சச்சிதானந்தா-நியூயார்க்

ஆத்மஜோதி வெள்ளி விழாக் கொண்டாடுவதறியப் பெருமகிழ்ச்சி.

எமது ஐரோப்பிய சுற்றுப் பிரயாண மத்தியில் புனித யருசலோம் நகரிலிருந்து இச்செய்தியனுப்புவதும் திருவருட் திட்டமே.

ஆத்மா அழிவற்றது, குறைவற்றது. ஆத்மஜோதி அணையா விளக்கு. அஞ்ஞானத் திரை அதை அறியவொட்டாது மறைக்கிறது. எனவே தான் மக்கள் அவ்வுட் கலந்த ஜோதியை வெளியே நாடி நாடி ஓடி ஓடி வாடி வாடி வருந்துகின்றனர். திருவருளால் விரைவில் மக்கள் உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிக் கண்ணுடி போலக் கலந்தானைக் கண்டு களிப்புற நம் 'ஆத்மஜோதி' அரும் பணி புரிவதைத் தொடர்ந்து செய்து வருக.

இதுவே எமது பிரார்த்தனை!
இதுவே எமது செய்தி.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

## பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள்

# வாழ்த்துரை!

ஆழ்கடலில் மூழ்கி அகன்று எடுத்த முத்து
ஆத்மஜோதி ஒளியில் ஆடுதடி சித்து
சூழ்க அதன்நாமம் தூய்மைநெறி ஓங்க
துரியநிலை தங்க தோத்திரங்கள் பாடி
வாழ்க என்று வாழ்த்தி வறுமை அக்ஞானம்
வருவினைகள் மாற்றச் செய்யுதடி தொண்டு
சூழ்க இன்பவெற்றி சுத்த ஆன்ம ஜோதி
சூழ்க ஈழமெங்கும் தூரதேச மெங்கும்.

என்ற தாசன் பிரார்த்தனையை தேவி வெற்றிபெறச் செய்வாள். 1948-ல் ஆரம்பமான ஆத்மஜோதி இன்று அற்புத பணி செய்கின்றது. பல புத்தகங்களை வெளியிட்டு 25 ஆண்டுகளை தன் வயப்படுத்திக் கொண்டுள்ளது. தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டுப் பலர் பணிந்து போற்றக் கண்ட தாய் தந்தைபோல தாசன் ஆத்மஜோதியின் வளர்ச்சியிலும் திரு. முத்தையாவின் தெய்வீக சாதனையின் வெற்றியிலும் மகிழ்கிறான், பூரிப்படைகிறான்.

பல பத்திரிகைகள் தோன்றி மறைந்தன. நிலைத்துள்ள பல பத்திரிகைகள் தரக் கலப்புடன் பல விஷயங்களை—அரசியல்களை தன்பால் கொண்டு இயங்குகின்றன.

ஆனால் ஆத்மஜோதியோ தன் வளர்ச்சியில் எவ்வித கலப்புமின்றி பூரண தெய்வீகத்துடனேயே இயங்குவதைக் காணும்போது, ஈழ மக்களின் ஆதரவைக் காணும்போது தனித் தெய்வீகத்திலும் தவமியற்றும் ஆர்வத்திலும் அவர்களுக்குள்ள பற்றும் பக்தியும் விளங்குகிறது. இந்தியாவிலும் பல இடங்களில் ஆத்மஜோதியைக் காண்கிறோம். எல்லாம் சக்தியின் ஆடல்.

ஆத்மஜோதியின் ஒளியின் கருவியாக இயக்குநராக இருக்கும் உயர்திரு. இராமச்சந்திரா ஐயா, அன்பு முத்தையா அவர்களும், அவரின் சகோதரர் திரு. அருமைநாயகம் அவர்களும் மற்றும் அச்சக நிர்வாகிகள் ஆதரவாளர்கள் அனைவரும் நீடூழி வாழ்ந்து இப்பணி தொடர்ந்து நடைபெற பிரார்த்திக்கிறேன்.

ஒருமைப்பாடு — சன்மார்க்க நீதி — பக்தியோக ஞான தத்துவங்கள் —
தேச வளர்ச்சி — மக்கள் திருப்தி ஆகியவற்றிற்காக
நீண்டகால பணி செய்யும் பலத்தையும் தெளிவையும்
யாவருக்கும் அருள 'ஆத்மஜோதி' எங்கும்
பிரகாசிக்குமாக!

# ஒளிவீசித் திகழ்வதாக

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

ஒளி, இருளை நீக்கும்; இன்பத்தைத் தரும். புறத்தே நிலவும் ஒளியின் துணையில்லாது போனால், உடலியல் வாழ்க்கை அல்லற்படுகிறது. அதுபோலவே, அகத்திலும் இருள் உண்டு. அந்த இருளின் அடையாளங்கள் அறியாமை, தற்செருக்கு தன்னல விழைவு ஆகியவையாகும். இந்த உணர்வுகளால் தூண்டப்பெற்றுச் செய்யும் செயல்கள் நல்லவையாய் இருந்தாலும் இருளின்பாற்பட்டவையே! அல்லாதனவாக இருந்தாலும் இருளின்பாற்பட்டனவே! அறியாமை உடலுயிர் வாழ்க்கையிலிருக்கும் வரையில் மறைந்துவிடக்கூடியதன்று. ஓர் அறிவைக் கொண்டு பிறிதோர் அறியாமை வருதல் இயற்கை. அதைத்தான் திருவள்ளுவர், "அறிதோ றறியாமை" என்றார். இருளைச்சார்ந்த அறியாமை என்பது, அறியாத ஒன்றை அறிந்ததாக மயங்குவது; சாதிப்பது - அறியாமை உண்மையை அறியாதது. தற்செருக்கு என்பது தன்னை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது மட்டுமன்று, மற்றவரைத் தாழ்த்தித் தன்னை மேம்படுத்திக் காட்டிக்கொள்வது. தன்னல விழைவு என்பது, உயிர்க்கு இயல்பாக அமைவதொன்று. இயல்பாய் அமைந்த தன்னல விழைவு, மற்றவர் நலத்திற்குக் கேடு செய்யாது, மாறாகத் "தாம் இன்புறுவது உலகு இன்புற" வேண்டும் என்று விரும்பும். இருளைச்சார்ந்த தன்னல விழைவு, பிறர் நலம் பற்றி எண்ணாது, மற்றவர் நலத்திற்கு மாறாகவேயிருக்கும். இங்ஙனம், அகத்தில் இருள்சூழ்ந்த மனிதர்கள் வாழும் உலகியல் சிறக்காது. மனிதனின் அகத்தைப் போலத்தான் அவனுடைய புற உலகம் அமையும். இன்றையப் புற உலகம் நன்றாக இல்லை என்பதை எடுத்துக்காட்ட வேண்டுவதில்லை. உலகத்தில் இனவெறியும், நிற வெறியும் தலைவிரித்தாடுகின்றன. குல-கோத்திரச் சண்டைகள் கும்மாளம் போடுகின்றன. ஆதிக்க உணர்வு, வெறிபிடித்தாடுகிறது. சமயக் கணக்கரும் கூட ஆரோக்கியமில்லாத போட்டா போட்டிகளில் ஈடுபடுகின்றனர்.

மொழி, மனிதனை உறவு நெறியில் பிணைக்கவே தோன்றிற்று. ஆனால், இன்று மொழியின் பேரால் நடைபெறும் ஆதிக்கப்போட்டிகளும், கலகங்களும், அம்மம்மா! நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகின்றது!

சரளைக் கற்களாலும், மண்ணாலும் போடப் பெற்ற சாலை, ஊர்களை - உலகத்தை இணைப்பதில் வெற்றி கொண்டு விட்டது. ஆனால் மனித உள்ளங்களை இணைக்கக் கண்ட ஆன்மீக நெறிகள் அந்த முயற்சியில் முழுமையான வெற்றியைப் பெற வில்லை. ஏன்? இருளிருந்தாலும் சரி, இருட்கலப்பு இருந்தாலும் சரி, ஒளி பயன்படாது. திணிந்த இருளில் ஒரு சிறு விளக்கை ஏற்றினால் இருள்தான் ஒளியை விழுங்கும். இருளையகற்றி ஒளியுண்டாக்க வேண்டுமென்றால் இருளடர்த்திக்குத் தகுந்த - அதைப் புறங்காணக்கூடிய ஒளி விளக்குத் தேவை. மனிதனின் சோதியாக - சுடராக - சூழ் ஒளி விளக்காக இலங்கிடும் எம்பெருமானின் அருள் ஒளியை உண்மையில் ஏற்றுக்கொள்ளுவோமானால் இருளகலும்; துன்பம் நீங்கும்; இன்பம் பெருகும். அத்தகைய ஆன்ம சோதியை இனங்காட்டி அழைத்துச் செல்லுகின்ற- நாவலப்பிட்டியில் தோன்றி வளர்ந்து வரும் "ஆத்மஜோதி"யை வாழ்த்துகின்றோம். ஈழத்தில் - நாவலப்பிட்டியில் திருநெறிய தமிழ் அன்பர் முத்தையா அவர்கள் ஏந்தி வரும் 'ஆத்மஜோதி' அனைத்துலகும் ஒளிவீசித் திகழ்வதாக.

# வெள்ளி விழா வாழ்த்துரை

ஸ்வாமி சிதானந்தா ஜீ தலைவர்: சிவானந்தாஸ்ரமம்
ரிஷிகேஷம்

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"

"அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்கின்ற உயர் தனிச் சமரச நெறி நின்று கடந்த 25 ஆண்டுகாலமாக இடைவிடாது ஆன்மீகத் தொண்டு புரிந்து வரும் தமிழ் மாத சஞ்சிகையான "ஆத்மஜோதி"க்கு எனது மனமார்ந்து வாழ்த்துக்கள். ஆத்மஜோதியை அறிந்து அதிலேயே இரண்டறக் கலப்பதுவே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறுர்கள் ஆன்றேர்கள். அந்த ஆத்மஜோதியைக் காட்டிக் கொடுப்பதற்காகவே உழைத்து வரும் இந்த 'ஆத்மஜோதி' இன்னும் பலநூறு வருஷங்கள் தொடர்ந்து மக்களுக்குப் பணிபுரிந்து வர வேண்டு மென்பது எனது விருப்பம். இந்த சத்சங்கல்பம் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை மனமாரப் பிரார்த் திக்கின்றேன்.

லோகா: ஸமஸ்தா ஸுகினே பவந்து.
எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறென்றறியேன் பராபரமே.

ஹரி: ஓம் தத் ஸத்.

# சிவத்தொண்டு செய்வோம்

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்

தொண்டு செய்வோம் — சிவத்தொண்டு செய்வோம்

தொல்லுலகம் கோயிலெனக் கண்டுசெய்வோம் — இங்கே
துலங்குயிர் சாமியெனக் கொண்டு செய்வோம்
வண்டுபோல் ஓமிசைத்துத் தொண்டு செய்வோம்
வாழ்வெல்லாம் வேள்வியெனத் தொண்டு செய்வோம்! (தொண்டு)

அப்பரைப்போல் அன்புத்தொண்டு செய்வோம்
ஆளுடைப் பிள்ளையெனத் தொண்டு செய்வோம்
எப்போதும் இதயத்தில் நடம்புரியும்
இறைவன் பெயரைச் சொல்லித் தொண்டு செய்வோம்! (தொ)

காலை எழுந்திலகும் கதிரவன் போல்
கடலை முகந்து பொழி கார்முகில்போல்
மாலை மணம்பரவும் மல்லிகையைப் போல்
மதலைக்குப் பால்கொடுக்கும் தல்லியினைப்போல் (தொ)

பயிரை வளர்க்கு மலையருவியைப் போல்
பண்ணார் இனிய இசைக் கருவியைப்போல்
உயிரை வளர்க்கும் உலகியற்கையைப் போல்
உலகைச் சுழற்றும் உயர் சக்தியினைப்போல் (தொ)

கீதை வழியில் அருட்பணிகள் செய்வோம்
கிறிஸ்து வகுத்தவழி நலம்புரிவோம் — ஆத்ம
ஜோதி துலங்கிடநந் நீதி துலங்கச்
சுறுசுறுப்பாய் பொதுத் தொண்டு புரிவோம் (தொ)

கல்வி பரவத் தெய்வக்கலை பொலிய
கட்டுங் கவலைகளும் விட்டுவிலக
செல்வத் தொழில் வளரச் சிந்தை உயர
திருவோங்க, அறிவோங்க, அறமோங்கவே (தொ)

ஒன்றே கடவுளென உணர்ந்திடுவோம் — சம
யோகத்தால் உள்ளமதைப் புணர்ந்திடவே
என்றும் இருப்பதனில் என்றுமிருந்தே
எல்லாரும் வாழ்க எனத் தொண்டுசெய்வோம்! (தொ)

# ஆத்மஜோதி வாழ்க

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை
கலாசாலை வீதி
திருநெல்வேலி

ஆதியும் அந்தமும் இல்லாததும், வேதத்தில், 'அத்வைதம்' என்று பேசப்படுவதும் ஆகிய சிவாத்ம பரமாத்ம சம்பந்தம், சுட்டிறந்து, அநுபவ முகமாக உணர்ந்துணர்ந்து பேரின்பமுறற்பாலதாம்; பந்த நிலைக்கெட்டாத தாம்.

எட்டாததை எட்டும் வழியை விளக்கமுறச் செய்தற் கெழுந்தது ஆத்மஜோதி.

எத்தனையோ மகான்களின் பிரமிக்கத்தக்க வாழ்க்கை வழிகளைத் தொட்டுத் தொட்டுக் காட்டி வந்திருக்கின்றது; வருகின்றது ஆத்மஜோதி.

ஆத்மஜோதியின் வெள்ளி விழா மகிழ்ச்சியை மலர்விக்கின்றது.

மேலும் மேலும் பல விழாக்கள் எடுத்தற்கு நிலைக்களனாய், ஆத்மஜோதி என்றும் நின்று நிலவுவதாக என்று வாழ்த்தித் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

வாழ்க ஆத்மஜோதி!

ஆத்தும ஜோதி நிலையம் என் இல்லம்
அதில் எப்போதும் என் உள்ளம்

ஆத்தும ஜோதியைப் பணிவோம்
அருள்வழி வாழ்ந்திடத் துணிவோம்
சாத்விகத் தினை யணிவோம்
சமயோகத்தினை பயில்வோம்

உள்ளத்தி லுள்ளது கடவுள்
ஊனுடலே அதன் கோவில்
தெள்ளறி வன்பினை வளர்ப்போம்
சிவமய வாழ்வினை யுகப்போம்.

— கவியோகி சுத்தானந்த பாரதி

# உள்ளே.......


| | |
|---|---|
| கடந்த கால நினைவுகள் | 1 |
| மறக்க முடியாத சில நினைவுகள் | 4 |
| உள்ளொளி | 10 |
| அணையா விளக்கு ஆத்மஜோதி | 11 |
| உலகின் ஆத்மஜோதி நிலையம் | 12 |
| ஆத்மஜோதி | 13 |
| பெரும் பயணம் | 15 |
| மரண விஞ்ஞானம் | 19 |
| பக்தியினால் ஏற்படும் பரவச நிலை | 21 |
| ஆன்மநேய ஒருமைப்பாடு | 22 |
| உடலுக்குச் சிறைவாசம் உள்ளத்திற்கு விடுதலை | 24 |
| ஆத்மஜோதி | 26 |
| ஆடும் தெய்வம் | 27 |
| பழமொழி அடிப்படையில் எழுந்த தனிப்பாடல்கள் | 28 |
| ஒன்றாகி நிற்கும் நாள் எந்நாளோ? | 33 |
| வைகாசி மூலம் | 35 |
| ஆத்மஜோதி அருட்சோதி | 38 |
| சலம்பூவொடு தூவ மறந்தறியேன் | 39 |
| ஜோதி வழிபாடு மனிதனின் ஆதிவழிபாடு | 41 |
| பதினாறு பேறு | 44 |
| அகக்கோயில் | 45 |
| மன அமைதி எங்கே? | 47 |
| கோயிற்றிருநாடு | 49 |
| முருகன் மகிமை | 51 |
| அன்பின் பெருக்கும் அடியவர் வீரமும் | 54 |
| வீர சைவம் | 56 |
| விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் | 59 |
| சுந்தரர் தரிசனம் | 61 |
| மும்மூர்த்திகளும் அட்டதிக்கு பாலகரும் | 63 |
| விஞ்ஞான உலகில் சமய வாழ்வும் சமரச உணர்வும் | 65 |
| பிரபத்திநெறி | 68 |
| சன்மார்க்கம் | 71 |


விலை ரூபா 5-00

# கடந்த கால நினைவுகள்

## நா. முத்தையா

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் பகவான் ரமண மகரிஷிகளின் ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது. அதைப்பற்றிய அறிவித்தல் ஒன்று கைக்கு எட்டியது. புகையிரத நிலைய அதிபராயிருந்து தற்போது இளைப்பாறியிருக்கும் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஜயந்தியின் முக்கிய இயக்குநராக உயர்திரு. க. இராமச்சந்திரா அவர்கள் சில சத்சங்க அன்பர்களுடன் வந்திருந்தார்கள். அவர்களை இன்னுரென நான் அறிந்திருந்தேன். ஆனால் அவர்கள் என்னை இன்னுரென அறிந்திருக்க நியாயம் இல்லை.

கோயிலில் பூஜை நடைபெற்றது. பூஜையின்போது அவர்களுக்குப் பக்கத்தில் நின்று வணங்கும் வாய்ப்புக் கிடைத்தது. குருக்கள் தேவாரம் அருளிப் பாடுக என்றார். தேவாரம் பாடத்தக்கவர்கள் பலர் இருந்தும் ஒருவரும் பாடவில்லை. காரணம் திரு. இராமச்சந்திரா அவர்கள் பாடவேண்டும் எனப் பலர் விரும்பியிருந்தார்கள். அவர்களோ முகமெலாங் கண்ணீர் வரத் தம்மையும் மறந்து நின்றார்கள்.

திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் அவருக்குக் கிட்ட வந்து தேவாரம் பாட வேண்டும் என்று சொன்னார்கள். பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னதை விளங்கிக் கொள்ள சில விநாடிகள் சென்றன. அத்தகைய நிலையில் அவர்கள் வாய் திறந்திருந்தால் ஒரு வரிக்கு மேல் தேவாரம் பாடியிருக்க முடியாது. எல்லாரும் அழுது தீர்த்திருப்பார்கள்.

பக்கத்தில் நின்ற நான், மெய்தான் அரும்பி, விதிர் விதிர்த்து, கண்ணீர் ததும்பி நிற்கும் திரு. இராமச்சந்திரா அவர்களுடைய முகத்தைப் பார்த்தேன். அவர்கள் தழுதழுத்த குரலில் என்னைத் தேவாரம் பாடுமாறு பணித்தார்கள். அது தேவியின் கட்டளை என்று சிரமேற்கொண்டு பாடினேன். ரமண பகவானைப் பற்றி அவர்கள் பேசும் போதெல்லாம் நாத் தழுதழுக்க பக்தி வெள்ளத்தில் மூழ்கியதைக் கண்டேன். அன்றைய தினம் அவர்களோடு உரையாடும் வாய்ப்போ பழகும் வாய்ப்போ ஏற்படவில்லை.

நாவலப்பிட்டி றெயில்வே கந்தோரில் அரா லிச் சுப்பிரமணியம் என்ற அன்பர் வேலை பார்த்து வந்தார். அவரையும் அவரது குடும்பத்தினரையும் நாவலப்பிட்டி கதிரேசன் கோயிலில் வாரந்தோறும் சந்திக்கும் பழக்கம் ஏற்பட்டது ஒரு வெள்ளிக்கிழமை கோயிலில்சந்தித்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் "திரு. இராமச்சந்திரா அவர்கள் நாளை கொழும்பு சத்சங்க அன்பர்களுடன் குயீன்ஸ்பெரி செல்ல வருகிறார்கள். புகையிரத நிலையத்திற்கு வந்தால் சந்திக்கலாம்" என்றார்கள். புகையிரத நிலையத்திற்கு நானும் சென்றிருந்தேன். வேறும் பல அன்பர்கள் வந்திருந்தார்கள். 15 பேர் வரை புகையிரதத்தில் இருந்து இறங்கினார்கள்- ஒருவரையுமே எனக்குத் தெரியாது. திரு. சுப்பிரமணியம் அவர்கள், திரு. இராமச்சந்திரா அவர்களுக்கு 'இவர்தான் முத்தையா மாஸ்டர்' என்று என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். புகையிரதம் உலப்பனையில் வரும்போதே 'நான் இவரைக் கண்டுகொண்டுதான் வந்தேன்' என்றார்கள் திரு. இராமச்சந்திரா அவர்கள்.

---

மூன்று முறை நாவல்நகருக்கு விஜயம் செய்தேன். ஆத்மஜோதி நிலயத்தையும் அதன் பணிகளையும் கண்டு மகிழ்ந்தேன். இது என் இதயத்தைப் போன்றது. அனைவரையும் கண்டு மகிழ்கிறேன். வாழ்க ஆத்மஜோதி சமயப் பணிகள்.

—நா. கிரிதாரி பிரசாத்

---

அவர்கள் மனக்கண்ணுல் கண்டதை என்னுல் அப்போது உணர முடியவில்லை.

அதன் பின்பு அவரது வீட்டிலும் கொழும்பிலும் நடைபெறும் கூட்டுவழிபாட்டுக் கூட்டங்களில் சந்தித்துப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பகவான் அரவிந்தரின் ஜெயந்திக்கு வருமாறும் அத்தருணம் 10 நிமிட நேரம் பேச வேண்டும் என்றும் இராமச்சந்திரா ஐயா அவர்கள் கேட்டிருந்தார்கள். அவர்களோடு நெருங்கி உறவாடும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். மாலையில் நடக்கும் ஜெயந்திக்குக் காலையிலேயே சென்று சேர்ந்து விட்டேன். அன்று முழு நாளும் அவர்கள் தனிமையாகவே இருந்தார்கள். ஆனபடியினுல் பல ஆத்மீக அனுபவங்களை அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

நாவலர் பெருமானைப் பற்றிய பேச்சும் எழுந்தது. அவர் தொடக்கிவிட்ட பணிகள் அப்படியே நின்று போய் விட்டன. அவர் நடத்திய பத்திரிகையை அப்பெயரால்நடத்தினுல் என்ன என்று கேட்டேன். காலத்திற்கேற்ற வகையில் ''ஆத்மஜோதி'' என்ற பெயருடன் ஒரு பத்திரிகை நடத்தினுல் நல்லது என்ருர்கள். தான் காசோடு சம்பந்தப்பட முடியாதென்றும், கௌரவ ஆசிரியராகத் தாம் இருப்பதாகவும் என்னை நிர்வாக ஆசிரியராக இருந்து நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். எனக்கோ பத்திரிகை நடத்துவதில் எவ்வித அநுபவமும் இல்லை. இதுவும் இறைவன்கட்டளை என்று ஏற்றுக் கொண்டேன்.

திருக்கார்த்திகைத் தினத்தன்று முதல் பத்திரிகை வெளிவர வேண்டும் என்றும் கூறி விட்டார்கள். நான் நாவலப்பிட்டி சேர்ந்து அடுத்த நாளே பத்திரிகை நடத்தும் போது கவனிக்க வேண்டிய அறிவுரைகளைத் தாங்கிய கடிதம் வந்தது. அதற்குமேலும் என்னுல் சும்மா இருக்க முடியவில்லை. முதல் வெளியீடு சிவனொளிபாத மலையைத் தாங்கி வரவேண்டும் என்று ''புளொக்'' செய்வித்து அனுப்பியதோடு கட்டுரைகளும் அனுப்பி வைத்தார்கள். விரும்பிய விடயமாக ஆத்மீகக் கட்டுரை மாதந்தோறும் எழுதலாம் என்றும் எனக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தார்கள்.

ஆத்மஜோதி வருடச் சந்தா 3 ரூபாவுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆயுள் சந்தா 75 ரூபா. கொழும்பில் இருந்து பல அன்பர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்து அனுப்பியிருந்தார்கள். ஆரம்ப சாதகர்களுக்கு அருமையான வழிகாட்டியாக ஆத்மஜோதி விளங்கியது.

அங்கத்தவர்களைச் சேர்த்தலும் உரிய காலத்தில் சோதியை வெளிவரச் செய்து அன்பர்கள் கையில் கிடைக்கச் செய்தலும் எனது பொறுப்பில் விடப்பட்டன.

இருபத்தைந்து ஆண்டுகள் ஆத்மஜோதி நடைபெற்றது எப்படி என்பதை நினைக்கும் போது எனக்கே ஆச்சரியமாக உள்ளது. ஈழத்தில் தோன்றிய பல பத்திரிகைகளில் 25 நாளிலும் 25 வாரத்திலும் 25 மாதத்திலும் மறைந்தனவே அதிகம். அதுவும் சமயப் பத்திரிகை ஒன்று 25 ஆண்டுகள் தொடர்ந்து வந்து வெள்ளி விழாக் கொண்டாடுகிறது என்ருல் உண்மையிலேயே தெய்வத்திருவருள் அன்றி வேறு எதைக் கூறமுடியும்.

ஆத்மஜோதி அங்கத்தவர் சேர்க்க பதுளை சென்றிருந்தேன். பத்திரிகையை நடத்தும் நோக்கத்தைப்பற்றி ஒரு அம்மையாரிடம் கூறினேன். அவர்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். வீட்டினுள்ளே சென்ருர்கள். ஒரு தங்கப் பவுணைக் கையிலே தந்து ஆயுள் சந்தா என்ருர்கள். மூன்று ரூபாவைத் தேடிச் சென்றவனுக்கு தங்கப்பவுண் கிடைத்தால் எப்படி இருக்கும்? அந்த அம்மையாரின் மனமும் தங்கமேதான். அவர்களுடைய மனம் மாத்திரமல்ல, கையும் தங்கமேதான். ஆனபடியால்தான் இன்றுவரை ஆத்மஜோதி தடையின்றி நடைபெற்றுவருகிறது.

பல மகான்களுடைய ஆசீர்வாதமும் அன்பர்களுடைய தெளிந்த உள்ளமுமே ஆத்மஜோதியின் சொத்தாகும். ஆதரவு உள்ளது போல் அநாதரவும் இருக்கத்தான் செய்கிறது. சில நண்பர்கள் சிலருடைய விலாசத்தைத்தந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண்டு அனுப்பி விட்டுச் சந்தாவை நினைவூட்டினுல் நீர் யாரைக் கேட்டு அனுப்பினீர்? அனுப்பச் சொன்னவரிடம் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் என்று எழுதியிருந்தார்கள். இன்னும் சிலர் இது இலவசமாக வருகிறது என்று நினைத்தேன். எனக்கு வாசிக்க நேரமில்லை, இனிமேல் அனுப்பாதீர்கள் என்று எழுதியிருந்தார்கள். வேறு சிலர் எனக்கு ஒழுங்காகப் பத்திரிகை கிடைக்கவில்லை, ஆதலால் இனிமேல் அனுப்பாதீர்கள் என்று எழுதியிருந்தார்கள். ஒரு சிலர் பத்திரிகை படிக்க ஆசைதான், சந்தா கட்ட முடியாத நிலையிலுள்ளதாகவும் எழுதியிருந்தார்கள். ஆத்மஜோதி எப்போ வரும் என்று காத்திருந்து வாசித்து தாம் அனுபவித்த சாந்தியைப் பக்கம் பக்கமாக எழுதிப் பெரும் பொருள் கொடுத்து உதவிய அன்பர்களும் இல்லாமல் இல்லை. நான் வாசிக்கா விட்டாலும் பிள்ளைகளாவது வாசிக்கட்டும் என்று பிள்ளை

களுக்காக ஆத்மஜோதிக்கு ஆயுள் சந்தா செலுத்தியவர்களும் உண்டு. நல்ல ஒரு பத்திரிகை நடப்பதற்கு எமது சிறிய உதவியாவது இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அங்கத்தவர்களாக இருப்பவர்களும் உண்டு.

சுவாமி சிவானந்த சரசுவதி அவர்களிடம் உரையாடிக்கொண்டிருக்கும்போது ஆத்மஜோதிச் சந்தாதாரர்கள் எத்தனை பேர் என்றார்கள். இரண்டாயிரம் பேர் என்றேன். அவர்கள் அதைக் கேட்டதும் துள்ளிக் குதித்து ஆத்மீகத்தில் பெரும் வெற்றி வெற்றி என்று சந்தோஷித்தார்கள். ஏன் சுவாமி அப்படிச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டேன். இரண்டாயிரம் பத்திரிகையைக் குறைந்தது இருபதினாயிரம் பேராவது வாசிப்பார்கள் அல்லவா? இதைவிட ஆத்மீகத்திற்கு வேறு என்ன வெற்றி வேண்டும்? என்றார்கள்.

யோகர் சுவாமிகளுடன் ஒருமுறை உரையாடும்போது, ''ஓய்! ஆத்மஜோதியும் வேணும் காணும்; சிவதொண்டனும் வேணும் காணும்'' என்றார்கள். சமீபத்தில் ஸ்ரீ பகவான் சத்திய சாயிபாபாஜீயைச் சந்தித்தபோது பக்தியைப் பரப்புவதற்குப் பத்திரிகையைப் பயன்படுத்த வேண்டும் என்றார்கள்.

ஆத்மஜோதியின் பத்தாவது ஆண்டிலும் பதினைந்தாவது ஆண்டிலும் இரு விசேட மலர்கள் வெளிவந்தன. அவை அன்பர்கள் பலருடைய உள்ளங்களில் அழியா இடம் பெற்றுள்ளன. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெள்ளிவிழாமலர் அன்பர்களைத் தேடி வருகிறது. இதனை ஆண்டவன் அடியார்களது திருப்பாதங்களில் சமர்ப்பித்து அவர்கள் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

கடுதாசி விலை ரெக்கெற் வேகத்தில் ஏறிக்கொண்டு செல்லும் இத்தருணத்தில் விளம்பரம் தந்து உதவிய அன்பர்களுக்கும் கட்டுரைகளும் ஆசியுரைகளும் வழங்கிய பெரியோர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றி எப்பொழுதும் உரித்தாகுக!

★

## ஹரிதாஸின் பாடலின் சிறப்புக்குக் காரணம்

அக்பருடைய காலத்திலே தான்சென் என்ற சங்கீத வித்துவான் இருந்தார். இசையிலே பெரும் புலவர் அவர். ஒரு நாள் அக்பர் அவரை அழைத்து உங்களைவிட சிறந்த சங்கீத வித்துவான் யாரும் இருக்க முடியாது என நான் கருதுகிறேன் என்றார்.

''நான் எம் மாத்திரம்? எனக்கு ஹரிதாஸ் என்ற ஒரு குரு இருக்கிறார். அவர் அற்புதமாகப் பாடுவார். ஆனால் அவரைப் பாடச் சொல்வது கஷ்டம்; கடவுளைத் தவிர வேறு யாரையும் அவர் மதிப்பதில்லை'' என்றார் தான்சேன். அக்பரும் தான்சேனும் மாறுவேடம் தரித்து ஹரிதாஸ் வீட்டுக்குச் சென்றனர். நல்ல வேளையாக அவர் அப்போது பாடிக் கொண்டிருந்தார். அக்பர் அதில் லயித்து மெய் மறந்தார். அவருடைய ஆனந்தத்துக்கு அளவில்லை. ''நீர் ஏன் இந்த மாதிரிப் பாடுவதில்லை'' என்று தான்சேனைப் பார்த்துக் கேட்டார் அவர்.

''நான் உங்களைத் திருப்தி செய்வதற்காகப் பாடுகிறேன். அவர் அந்தராத்மாவைத் திருப்தி செய்வதற்காகப் பாடுகிறார். இது தான் காரணம்'' என்றார் தான்சேன்.

# மறக்கமுடியாத சில நினைவுகள்

க. இராமச்சந்திரன்

"போதமுறு சூதமுனி புகன்றகாந்தப்
புகழ்க்கடலிற் படிந்ததன் கட்பொருளதான
மேதகுவண் புனலருந்தி வையமுய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மைதீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டிலேறிச்
சலதியமு தினைநிகர் செந்தமிழதான
காதன்மழை பொழிந்தஅருட் கொண்டலானை
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்."

இவை இற்றைக்கு நாற்பது ஆண்டுகட்கு முன் நடந்த நிகழ்ச்சிகளும் சம்பாஷணைகளும். ஆனால் அவை நேற்று மாலை நடந்தவை போல் உள்ளத்தில் மிளிர்கின்றன. எங்கள் தாயாரின் தகனக்கிரியைகள் முடிந்தபின் ஒரு பெரும் கூட்டம் மயானத்தைவிட்டு விலகி, நடுவீதிமார்க்கம் மேற்குக்கரை ஓரத்திலிருந்து கிழக்கு நோக்கி வந்துகொண்டிருந்தது. சிறு சிறு தொகையினராகப் பிரிந்து தோட்டக் கிணறுகளிலும், குளங்களிலும் முழுகப்போக இன்னும் பதினைந்து நிமிஷம் வரையில் இருந்தது. எல்லார் வாயிலுமிருந்து வழக்கம் போல் சுடலை ஞானம் வரத் தொடங்கியது. அப்போது ஒரு பெரியார் எங்கள் தந்தையார் மூன்று வருங்கட்கு முன் திடீரென இறந்ததைப் பற்றி கூறிவிட்டு, இருமாச காலமாக படுக்கையாயிருந்த தாயார், மரணத்தை ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்த அம்மையார் சிவபதம் அடையப் பிந்தியது பெரும் மர்மம் என்றார். அருகினில் நடந்து வந்தவர், விதியின் வலிமையை எடுத்து விளக்கி, ஊழ்வினையை வெல்லவல்லவர் இல்லவே இல்லை என்றார். "அம்மையார் விதவையாகவே இறக்க வேண்டுமென்பதே அன்னாரின் தலைவிதி. அல்லாவிட்டால் அவரது மரண வீட்டுக்குப் பந்தல் போடுவிக்கும் வேலையில் ஈடுபட்ட நாயகர் இருதய நோய்கண்டு திடீரென மறைந்திருப்பாரா? அவர் கட்டுவித்த பந்தலின் கீழ் அவரது சொந்த மரணவைபவமே நடந்திருக்குமா?" என்று சொல்லி முடித்தார் இரண்டாவது பெரியார்.

இவற்றிற்கெல்லாம் செவிசாய்த்த வண்ணம் நான் முன் வரிசையில் நடந்து சென்றேன். அப்போது, எனது இடப்பக்கத்தில் நடந்து வந்த மைத்துனர் ஒருவர் மிருதுவான குரலில், "ஓர் சாமியார் இந்த ஊருக்குச் சில தினங்களுக்கு முன் வந்துள்ளார், அவர் பெரும்பாலும் தெற்கேயுள்ள பிள்ளையார் கோவிலில் தங்கியுள்ளார். சில வேளைகளில் ஓர் வீட்டுக்கும் போய்த் தங்குகிறார். அங்கே உணவும் அருந்துகிறார்" என்றுசொன்னார். இந்தக்கூற்று சற்றே பின்னால் வந்த ஓர் இனத்தவரின் செவிக்கும் எட்டியது. எனக்குப் புதினந் தந்தவர் இவருக்குத் தம்பி முறையானவர். எனவே பெரியவர் அதிகார தோரணையில், இளையவரை நோக்கி பெருத்த குரலில், "ஓஹோ! நீ கண்டு பிடித்துள்ள சாமியாருக்குப் பிரசாரம் தொடங்கி விட்டாயா? ஒரு பிழைப்பும் இல்லாத சோம்பேறிகள். வண்ணானுக்குக் கூலி கொடுக்க முடியாமல் வேட்டிக்குக் காவி போட்டுக்கொண்டு, அம்பட்டனுக்குக் கூலி கொடுக்க வழியற்று சடையையும் தாடியையும் வளர்த்துக் கொண்டு சாமியாராய்விடுகிறார்கள். உன் போல மடையர்கள் கும்பிடு போட்டு அவர்களைக் கெடுத்துவிடுகிறீர்கள்", என்று கண்டித்

நாவலர் போற்றி மகிழ் நாவலப்பிட்டி யுறை
ஆவலார் முத்தைய அண்ணலின் —
மாவிளங் நம்
சீராரும் ஆத்மஜோ தித்திங்கள் செய்ய
இதழ்
நேராக வாழ்க நெடிது.

—கிருபானந்த வாரி

தார். இவர் பேச்சு உரத்த குரலில் துடுக்காய் இருந்தபடியால் எல்லோருக்கும் எட்டிவிட்டது. முன்னர் விதியின் வலிமைக்கு விளக்கந்தந்த பெரியார் என்னை விளித்து, "தம்பி! நீ உன் மைத்துனன் சொல்லை நம்பி பிள்ளையார் கோவிலுக்குச் சென்று சாமியாரைக் காண்பதால் குற்றமில்லை. ஆனால் அவர் இடைக்கிடை தங்கும் இல்லம் பக்கம் மாத்திரம் போகாதே அவ்வளவுதான் நான் சொல்லக் கூடிய புத்திமதி" என்றார். சில நிமிடங்களில் கூட்டம் கலைந்து விட்டது. முழுகிவிட்டு எல்லோரும் மரண வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். உணவு அருந்தியதும் முதல் நாள் இரவு முழுதும் விழித்திருந்து தோத்திரம்பாடிய களைப்பினால் அவசர அவசரமாய் எல்லோரும் படுக்கையை விரித்தனர். சாமியாரைப்பற்றி என்னிடம் பேசியவரை எனக்கருகில் படுக்கும்படி கேட்டேன். மயானத்திலிருந்து வீடு வரும் வரைக்கும் வாய்திறவாமல் இருந்த நான் இதனைச் சொன்னதும் அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"அதிகாலை நாலரை மணிக்கு எழுப்புவேன் மேலும் நடக்கப்போவதை வெளியே சென்று தீர்மானிப்போம்" என்று சொல்லி விட்டு இருவரும் நித்திரையாய் விட்டோம். எண்பது பேர் அடங்கிய அக்கூட்டத்தில் பிறிதொருவருக்கும் நாங்கள் பேசிக்கொண்டது தெரியாது.

நாலரை மணிக்கு நித்திரைவிட்டு எழும்புவது எனது முதல் குருவான தாயாரிடம் படித்த முதல் பாடம். அந்தப் பழக்கம் இன்னும் என் வழியில் பிரியவில்லை. வடதுருவத்தை அடுத்த குளிர்மிகுந்த நாடுகளான நோர்வே, சுவீடன் முதலாய இடங்களில் வசிக்கும் போதும் இந்த நல்ல வழக்கம் இருக்கவே செய்கிறது. அன்பரும் யானும் அதிகாலையில் எழுந்து, வேறு எவரது நித்திரையையும் குழப்பா முறையில் வெளி வந்தோம். நேரே பிள்ளையார் கோவிலுக்குப் போவது, சாமியார் அங்கே இல்லாவிட்டால் வீடு திரும்புவது, வேறு எங்காவது தேடிச் செல்வதில்லை என்று திட்டமிட்டுக்கொண்டு நடையை ஆரம்பித்தோம். நடக்கவேண்டிய தூரம் ஒன்றேகால் மைல் இருக்கும். கோயிலுக்குப் போகு முன் பல் விளக்கி கால் முகம் கழுவ வேண்டும். பிள்ளையார் கோயில் வீதியிலுள்ள கிணற்றில் சுத்தம் பண்ணிக் கொள்வது முறையாக இராது. அதற்கு முன் சாமியாரும் வெளியே வரக்கூடு மல்லவோ. தெருவில் நின்ற வேப்பமரத்தில் குச்சிகள் முறித்து பல்லைத் துலக்கிக் கொண்டு எங்கள் வீட்டுக்கருகிலுள்ள முருகன் கோயிலுக்குச் சென்றோம் தேகசுத்தி பண்ணிக் கொள்ள.

இந்த முருகன் கோயிலில்தான் சின்னஞ் சிறு வயசிலிருந்து, அதாவது அக்ஷர, ஆரம்பத்தின் முன், எனது ஆன்மீக வாழ்வு தொடங்கியதாகும். இக்கோயிலைக் கட்டியவர் எனது தாயாரின் தந்தையாரும், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத் தருமகர்த்தாவுமான ஸ்ரீ இராமச்சந்திரன் முத்துக்குமாரு அவர்கள். தமது தந்தையாரின் பெயரை எனக்குச் சூட்டியவரும் அவரே. முருகன் பக்தரான அவர் தமது சொந்த வழிபாட்டிற்காகவே, தமது இல்லத்திற்கு அருகில் இந்தக் கோயிலை அமைத்தனர்.

பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதற்காக போதிய காணிகள், நெல் வயல்கள், தினைப் புலம், தென்னந்தோப்பு, நந்தவனம், கோயிலைச் சுற்றி வாங்கி வைத்தனர். தமது புத்திரிமார் இருவர்க்கு வள்ளியம்மை (எனது தாயார்) தெய்வநாயகி என்ற பெயர்களைச் சூட்டியதிலிருந்தே அவரது முருகபக்தியின் தனிச்சிறப்பை யாம் உணரலாம். இந்தக் கோயிலில், அவர் மரணம் வரைக்கும் கந்தபுராண படலம் வருடந்தோறும் ஒழுங்காக நடைபெற்று வந்தது. அவர் உடல்நிலை தளர்ச்சியடைந்து, பொருளாதார நிலையும் குறைந்தபோது அவரது மூத்த புத்திரியாரான வள்ளியம்மையார் கந்தபுராண படலப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அம்மையாரின் முருக பக்தி அன்னாரின் நாமத்திற்குப் பொருந்த அமைந்து, நாளடைவில் வளர்ந்து கனிந்து, முருகப்பெருமானின் திருக்காட்சியைப் பெறும் அரும் பாக்கியத்தையும் அளித்தது. அன்னாரின் புண்ணியமானது அத் திருக்காட்சியைக் காணும் பாக்கியத்தை எனக்கும் சேர்த்தது. அப்போது எனக்கு வயது பத்து. தாயாருக்கு மிகவும் கடுமையான குன்மநோய் தோன்றி, முதலில் பண்ணாகம் பெரிய பரியாரியார் என்ற பிரசித்திபெற்ற வைத்தியரிடம் மருந்தெடுக்கப்பட்டது. ஆறுவார வைத்தியம் அவர் வீட்டிலேயே தங்கி நடந்தும், ஒருவித குணமும் காணாமையால் மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியில் ஆங்கில வைத்தியத்திற்காகக் கொண்டு செல்லப்பட்டார் தாயார்.

இந்த வைத்தியத்தினாலும் சுகம் வரவில்லை. உடலும் மனமும் சோர்ந்த நிலையில் படுத்திருக்கும்போது, விவிலிய நூல் பிரசாரம் செய்யும் பெண்கள் இருவர் தாயாரின் படுக்கைக்கருகில் முழந்தாளிட்டுப் பிரார்த்தனை செய்த பின்னர், அன்னாரை நோக்கி, "தாயே! இங்குள்ள வைத்தியர்கள் தங்களாலியன்றது செய்தனர். அதற்கு முன் சிறந்த தமிழ் சித்த வைத்தியமும் பார்த்து விட்டீர்கள். ஒன்றாலும் குணம் வரவில்லை. ஆண்டவன் கிருபைதான் உங்களைக் காப்பாற்ற முடியும்' ஆகையால் எங்கள் கர்த்தாவான ஏசுநாத

ரிடம் சரண் புகுங்கள். இதைச் சொல்லி உங்களை மதமாற்றஞ் செய்யவே நாங்கள் வந்துள்ளோம்'' என்று கூறினர். அப்போது யான் தாயாரின் கட்டிலின் தலைப்பாகத்தில் நின்றேன். வழக்கமாகவே யான் மிகவும் கூச்சமும் வெட்கமும் உடையவன்; அந்நியருடன் எதுவும் சொல்ல விரும்பாதவன். ஆனால் அந்த நேரத்தில் என்னை அறியாமலே என் வாயிலிருந்து சில சொற்கள் வந்து விட்டன. ''அன்னைமார்களே! தெய்வ நம்பிக்கையால் அற்புதம் நிகழும் என்பது உண்மையே! ஆனால், அது உங்கள் சமய நூலில் மாத்திரம் அடங்கிவிடவில்லை. எங்கள் புராணங்களிலும் உண்டு. அப்பர் சுவாமிகட்குத் தோன்றிய சூலை நோயை அவரது தமக்கையாரான திலகவதியார் சிவபிரானிடம் அழுது புலம்பி வரங் கேட்டுத் தீர்த்துள்ளார்'' என்று அடக்கமாய்ச் சொன்னேன். அந்தப் பெண்கட்கு ஆத்திரம் வந்து விட்டது. ''பையன் ஆள் சின்னன். ஆனால், அதிகப் பிரசங்கி'' என்று சொல்லிக்கொண்டு வெளிக் கிளம்பினர்.

அன்று இரவு அன்னையார் உறங்கவில்லை. முகத்தில் கடுமையான யோசனை தென்பட்டது. வேலைக்காரி நடுஇரவு வரைக்கும் ஆறுதல் கூறிவிட்டு, கதவின் அருகில் பாயை விரித்துப் படுத்துக்கொண்டாள். தாயாருக்கருகில் கட்டிலில் படுத்துக் கொண்டாள். தாயாருக்கருகில் கட்டிலில் படுத்து யானும் உறங்கி விட்டேன். கூட இருந்த இருவரும் நல்ல நித்திரை என்று நினைத்துப் போலும், தாயார் எழுந்து சத்தமின்றிக் கதவைத் திறந்து வெளிச் சென்றார். ஏதோ கனவு கண்டவன்போல் யானும் விழித்து விட்டேன். அருகில் தாயார் இல்லாமையால், வெளியே சென்று பார்த்தபோது, அவர் ஆஸ்பத்திரி படலையைத் தாண்டி மருதடிப் பிள்ளையார் கோயிலை நோக்கிச் செல்வதாக உணர்ந்தேன். சத்தம் போடாமல் ஓடிச்சென்றபோது, தாயார் கோயிலின் முன்னுள்ள தடாகத்தில் இறங்கி ஆழமான பகுதிக்கு நடந்ததைப் பார்த்தவண்ணம் படிக்கட்டில் இருந்து விட்டேன். இதனைக்கண்ட தாயார் என்னையும் தேகசுத்தி செய்யச் செய்தபின் அழைத்துக்கொண்டு பிள்ளையார் கோவிலுக்குச் சென்றார். கோயில் பூட்டியிருந்தபடியால், வீதி வலம் வந்து சந்நிதானத்தில் நின்று வழிபட்டபின், ஆஸ்பத்திரி அறைக்குத் திரும்பினோம். தாயாரின் முகத்தில் அமைதியிருந்ததை வேலைக்காரியும் அறிந்து விட்டாள்.

அவளுக்கு நடந்ததெல்லாம் சொன்னபின் இரு மணித்தியாலம் படுத்து உறங்கினோம். எட்டு மணிபோல் டாக்டர் வந்தார். அவரிடம் தாம் அன்று காலையே ஊர்போய் வேறு வைத்தியம் செய்விக்கப் போவதாய் தாயார் அறிவித்தார். அவரும் ஒப்புக் கொண்டார்.

முதனாள் மாலை நடந்த விஷயத்தை அவர் கேள்விப்பட்டிருக்கலாம். ஊர்போய் வீடு சேர்ந்ததும் எனது சகோதர சகோதரிகள் மூன்று மாசங்காணமல் இருந்தவர்கள் ஆவலோடு வரவேற்றனர். அவர்களைப் பார்த்து தாம் அவர்கட்குச் சிரமங்கொடுக்கவோ அல்லது வீட்டிலிருந்து வைத்தியஞ் செய்விக்கவோ வரவில்லையென்றும் உடனே முருகன் கோயிலுக்குச் செல்வதாகவும், அங்கே குறைந்தது இரு வாரமாவது தங்கப் போவதாகவும் தாயார் கூறினர். பூசை செய்யும் ஐயருக்கும் கோயில் அருகில் வசிக்கும் எங்கள் பாட்டன் பாட்டி இருவர்க்கும் செய்தி அனுப்பப்பட்டது. அவர்கள் மூவரும் வந்து தாயாரை அழைத்துச் சென்றனர். நான் படித்த தில்லையம்பல வித்தியாசாலை ஆசிரியரும் வந்து சேர்ந்தார். என்னையும் கோயிலிலேயே தங்கவிடும்படி தாயார் கேட்டார். ''பள்ளிக்கூடம் அருகில்தானே இரவில் கோயிலில் தங்கிவிட்டு, பகலைப் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் கழிக்கலாமே'' என்றார் ஆசிரியர். அந்த ஏற்பாட்டை தாயார் ஏற்றுக்கொள்ளவில்லை. ''மூன்று மாசம் தடைபட்ட கல்வி இன்னும் பத்துநாள் தவறட்டுமே, முந்தானாள் இப்பிள்ளையின் வாயிலிருந்து தெய்வாதீனமாக வந்த சொற்களே எனக்கு வைராக்கியத்தை உண்டாக்கி, முருகப்பெருமானிடம் சரணகதியடைய வேண்டுமென்ற விரதத்தை என் உள்ளத்தில் பதியச் செய்தது. ஆகையால், அவனும் இந்தப் பத்துநாளும் என்னை விட்டுப் பிரியாமல் கோயிலில் தங்கட்டும்'' என்று பரிந்து கேட்டார். அதுகுறித்த விபரத்தை அறிந்ததும் ஆசிரியரும், பாட்டன் பாட்டியும் ஏனையோரும் உடன்பட்டனர்.

இந்த நேரத்தில் தந்தையாரும் வியாபார விஷயமாக குருநாக்கலில் தங்க நேர்ந்ததும் தெய்வ சித்தம் போலும் என்றனர். இருவரும் கோயில் வாசந்தொடங்கி ஒன்பதாம் நாள் நடுச்சாமம் ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தது.

பூட்டப்பட்டிருந்த கோயில் வாசல் திடீரெனத் திறக்கப்பட்டு, மணி ஓசையுங்கேட்டு தாயார் விழித்தெழுந்தனர்; என்னையும் எழுப்பினர். மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த வேலாயுதத்திற்கு கற்பூர பஞ்சாலாத்தி எடுக்கப்படுவதைப் பார்த்துப் பரவசப்பட்டோம். அதே வேளையில், அந்த வேலாயுதத்திலிருந்து ஸ்ரீ பாலசுப்பிரமணிய உருவில் முருகன் தோன்றித் தமது வலக்கரத்தை உயர்த்தி அபயம் அளிக்கவே, தாயார் ஆனந்தக் கண்ணீர் பெருக, நடுக்குற்றுக் கீழே விழுந்த

னர். நானும் திடுக்குற்று கதறிவிட்டேன். அன்னையார் என்னைக் கட்டியணைத்துத் தேற்றினார். கோயில் கதவு வழக்கம் போல் மூடப்பட்டிருந்தது. காலையில் பாட்டியார் பூசைக்குப் பாலுடன் வந்தார். அப்போது தன் மகளார் உற்சாகத்துடன் கோயில் வீதியைச் சுத்தம் பண்ணியபின், மண்டபத்தில் சாணமிட்டு மெழுகிக்கொண்டிருந்தார். இதைக் கண்டதும் கிழவியார், ''பிள்ளை இருமாசகாலம் அன்னம் எதுவும் உட்கொள்ள முடியாமல் வாடி மெலிந்த உடலால் ஏன் கஷ்டப்படுகிறாய்? பாத்திரத்தை இங்கே தா நான் மெழுகுகிறேன்'' என்றார். ''ஆச்சி நீ சிரமப்பட வேண்டாம். சின்னஞ்சிறு வயசிலிருந்து,

> ''முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
> மருகனே! ஈசன்மகனே! — ஒரு கைமுகன்
> தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
> நம்பியே கைதொழுவேன் நான்.''

என்று நான் தினந்தோறும் போற்றி வழிபட்ட பெருமான் என்னைக் கைவிடவில்லை; புதுப் பிறவி ஈந்து புதுத்திறனையும் அருளியுள்ளான். இங்கிருந்து வீடு போய் எனது பிள்ளைகட்கும், புருஷனுக்குஞ் செய்ய வேண்டிய கடமைகளை முன்போல் செய்யுமாறு நேற்றிரவு கட்டளை தந்துள்ளான். நீ தினந்தோறும் காலை மாலை கொண்டுவந்த பாலே சென்ற ஒன்பது நாட்களாக முருகனுக்கு நிவேதிக்கப்பட்டு ஐயரால் எனக்குத் தீர்த்தமாகத் தரப்பட்டது. அதனை எனக்கு நல்வழிகாட்டிய இப்பிள்ளையுடன் பகிர்ந்து எடுத்து வந்தேன். அதுவே பரம ஔடதமாக அவனருளால் மாறிவிட்டது. பண்ணுகத்தில் வைத்தியம் நடந்த போது, நீயே அருகிலிருந்து என்னைப் பார்த்தாய். இந்த இடத்திற்கு உன் கூடவே வந்து சேர்ந்தேன் — முன்னரும் பின்னரும். ஆகையால் நாளைக்காலை என்னை என் மனைக்கு அழைத்துச் செல்லவா'' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

திட்டம் இட்டபடி அடுத்தநாள் வீடு சேர்ந்தோம். அந்த நாள் தொடக்கம் அடுத்த இருபத்தெட்டு ஆண்டுகளாக, அதாவது மரணத்துக்குக் காரணமாயிருந்த கடைசி நோய் தோன்றும் வரையில், அன்னையார் எந்தவித பிணியாலும் பாதிக்கப்படவில்லை. மேலே தரப்பட்ட நிகழ்ச்சிகளின் விபரங்களெல்லாம், இற்றைக்குப் பதினொரு வருஷங்கட்கு முன்னரே ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. தமிழில் வெளிவருவது இப்போதுதான் முதல் முறையாக. என் ஆன்மீக வாழ்வைப் பொறுத்தமட்டில் தாயாரின் முக்கிய கவனம் எனக்கு சமய தீக்ஷை வைக்க வேண்டுமென்பதாம். அதுவும் அடுத்த ஆண்டில் ஊரெழு பிரமஸ்ரீ. சதாசிவக் குருக்கள் அவர்களால் அருளப்பட்டது. அது முடிந்ததும் முருகன் ஆலயத்தில் நடைபெறும் கந்தபுராணப் படலத்தில் பங்குபெறும் பாக்கியம் கிடைத்தது.

இனி ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட விஷயத்திற்குச் செல்வோம். அன்பரும் நானும் கால் முகம் சுத்தி செய்து கொள்வதற்காக கோயில் கிணற்றை நோக்கி நடந்து செல்கிற போது, இருட்டு வெளிக்கவில்லை. கோயில் வளவில் ஓரடிப் பாதையால் சென்றோம். அப்போது எத்தனையோ பழைய நினைவுகள் என் மனதில் தோன்றின. அரசமரத்தடியில் ஓர் சூலம் நடப்பட்டிருந்ததும், அதற்கு ஐயர் பூசை முடிவில் தீர்த்தம் தெளித்துவிட்டு பூச்சாத்துவதும் பளிச்சென்று மனக் கண்முன் தென்பட்டது. அந்தச் சூலத்தை வெய்யிலிலிருந்தும் மழையிலிருந்தும் காப்பாற்ற ஓர் குட்டிக் கோயில் அமைக்கப்பட்டுள்ளதோ என்று அன்னாரிடம் விசாரித்தேன். அவர் ''அப்படியொன்றும் இல்லை. நேற்றுக்காலைகூட நான் இந்த வழியால்தான் போனேன். பழைய காலத்தில் இருந்த சூலத்தை எடுத்துவிட்டார்கள் போலும்'' என்றார். ''அப்படியென்றால் மூன்றடி உயரத்தில் தோன்றுவது என்ன?'' என்றேன். அன்பர் திகைப்புற்று, ''அந்தச் சாமியார்தான் பத்மாசனத்தில் எழுந்தருளியிருக்கிறார். சடாமுடி தெளிவாய்த் தெரிகிறது, கிட்டே போய்ப்பார்ப்போம்'' என்று கூறிக்கொண்டு எனக்கு முன் போனார். அவர் சொன்னது சரியே.

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் காட்சியளித்த பெருமானேவென்று எண்ணக் கூடிய முறையில் கம்பீரமான தோற்றத்துடன் விளங்கினார். இருவரும் அவரை நெருங்கியதும், அன்பரின் பேரைச்சொல்லி ''நீ போய் கால் முகம் கழுவிவிட்டு நந்தவனத்தில் பூக்கள் பிடுங்கு'' என்று கட்டளை கொடுத்துவிட்டு என்னையும் பேர் சொல்லி அழைத்து தனக்கு முன்னால் இருக்கும்படி சொன்னார். விசுவாசமுள்ள அன்பருக்கு விஷயம் விளங்கிவிட்டது. என்னுடன் சாமியார் ஏதோ தனிமையில் சம்பாஷிக்க விரும்புகிறாரென்பதை யூகித்துக்கொண்டு அவர் விலகிவிட்டார்.

நான் முன்னால் இருந்ததும் ''நீயும் நம்ம பட்டிதான், ஆன்மீக விஷயத்தில் அவசரப்படக்கூடாது'' என்று ஆரம்பித்தார். தமது உபதேசத்தை ''நேற்று மாலை சுடலையிலிருந்து வரும்போது சனங்கள் பேசிக் கொண்டதெல்லாம் எனக்குத் தெரியும்; அவர்களின் கண்டனம் உனது செவியில் ஏறவில்லை யென்பதும்

எனக்குத் தெரிந்தது. ஆகையால் நீங்கள் இருவரும் வீட்டை விட்டுக் கிழம்பிய வேளையில் நானும் பிள்ளையார் கோயிலைவிட்டுக் கிழம்பி விட்டேன். உனக்குச் சிரமந்தராது, உனக்கும் உனது அரிய தாயார்க்கும் புகலிடமாயிருந்த இந்தப் புனித இடத்தில் சந்திக்கச் சங்கல்பம் செய்து விட்டேன். அந்தச் சங்கல்பம்தான் உங்கள் இருவரையும் இந்தப்பாதையில் வரச் செய்ததாகும்'' என்று திருவாய் மலர்ந்தார்.

''பிரிந்த அம்மையார் உனக்கு மாத்திரம் தாயார் அல்லர் எனக்கும், இந்த ஊர் மக்கள் சகலருக்குமே அவர் தாயார் ஆவர். பெரிய இல்லற ஞானி அவர். அன்னதானஞ் செய்வதில் அவருக்கு ஓர் தனி ஆனந்தம். இடம், பொருள், ஏவல் மூன்றும் பூர்வ புண்ணிய வசத்தால் வந்தமைந்தபடியால் அன்னரின் கோரிக்கை பூரணமாய் நிறைவேறி விட்டது. உங்கள் வீட்டுத் தலைவாசலில் ஓர் பெரிய குடம் நிறைய மோர் தில்லையம்பல வித்தியாசாலை மாணவ மாணவிகளின் தாகத்தைத் தீர்க்க தினந்தோறும் வைக்கப்பட்டிருக்கும். நானும் சின்ன வயசில் நீ படித்த வகுப்புக்கு அடுத்த வகுப்பில் படிக்கும் போது, வயசொத்த பிள்ளைகளோடு வந்து மோர் குடித்துள்ளேன். குடத்தை மூடியிருந்த சட்டியின் மேல் ஓர் மூக்குப்பேணி இருந்த காட்சி மறக்க முடியாத ஒன்று'' என்று தாயாரின் தெய்வத் தன்மைகளை விபரித்த பின்னர் ஆன்மீக சம்பந்தமான விஷயங்களுக்கு வந்தார். என் வாழ்வில், அத்தொடர்பில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அருகிலிருந்து பார்த்துக் குறிப்பெழுதி வைத்தவர்போல் விபரித்தார். மகாத்மா காந்தியுடன் யான் கொண்டுள்ள தொடர்பு யோகர் சுவாமிகளுடன் இருந்த அத்யாத்ம உறவு, சுவாமி இராமதாசர், சுவாமி சிவானந்தர் ஆகிய இருவரின் நூல்கள் மூலம் பெற்றுள்ள நல்லறிவு முதலாயவற்றைத் தாமே சொல்லிவிட்டு என்னையும் பேசத் தூண்டும் முறையில் சம்பாஷணையைத் திருப்பினர்.

முதலில் யான் தரிசித்த இலங்கை மகான்களைப்பற்றிக் கூற ஆரம்பித்தேன். பெரிய கடைச் சுவாமியின் அடியார்களென மதிக்கப்பட்ட காசிச் சுவாமி, கற்கண்டுச்சுவாமி ஆகிய இருவரின் ஆசிகளை எனது மூன்றும் வயசில் பெற்றதை எடுத்துச் சொல்லிவிட்டு யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வி கற்கும் போது சந்தித்த நல்லூர் செல்லப்பா சுவாமிகள், ஓட்டுமடம் பொன்னப்பா சுவாமிகள் இருவரைக் குறிப்பிட்டேன். பின்னர் உத்தியோகமானபின் சந்தித்த, அருளம்பல சுவாமிகள், சடைவரத சுவாமிகள் ஆகிய இருவர் காட்டிய விசேட அன்பை விளக்கினேன். ''ஏன் கொழும்பில் படிக்கும் போது ஆனைக்குட்டிச் சுவாமிகளைத் தரிசிக்கவில்லையோ?'' என்ற கேள்வியைப் போட்டார் சாமியார். ''ஆம் இருமுறை அவரைத் தரிசித்துள்ளேன்'' என்று விடைபகர்ந்தேன். ''அவர் உனக்கு ஒன்றும் சொல்லவில்லையா?'' என்று வேறுமோர் கேள்வி போட்டார். ''இரண்டாம் முறை அவர் தரிசனம் பெற்றது அஞ்சிலாம்படியில். அப்போது அவர் ஓர் கள்ளுத் தவறணையின் எதிர்ப்பக்கக் கானுக்குள் நின்று கொண்டு அங்கு வந்து மது அருந்திக்கொண்டு கூத்தாடும் ஆண்களையும், பெண்களையும் பார்த்தவண்ணம் சிரித்துக் கொண்டிருந்தார். யான் போய் அருகில் நின்று வணங்கியதும், 'நீயும் இப்படி ஒரு நாள் குடித்துவிட்டுக் கூத்தாடுவாய்' என்று சொல்லிப் புன்னகை செய்தார்'' என விவரித்தேன். அந்தப் புன்சிரிப்பை நினைவூட்டும் முறையில் சாமியாரும் ஓர் புதுமுறுவல் பூத்த முகத்துடன்; ''குருநாதன் நல்ல ஆசிதந்துள்ளான். ஆனால், நீ இன்னுஞ் சந்திக்க வேண்டிய ஓர் மகான் உளர். அவர் திருவண்ணமலையில் எழுந்தருளியுள்ளார். ரமணமகரிஷி என்பது அவர் பெயர். கேள்விப்படவில்லையோ?'' ''கேள்விப்பட்டிருக்கிறேன் சுவாமி, அவரது வரலாற்றையும் மௌன உபதேச மகிமையையும் படித்துமிருக்கிறேன். ஆனால் அழைப்பு இன்னும் கிடைக்கவில்லை. திருவருள் கூட்டுங்காலம் வரவில்லைப் போலும்'' என்று பதில் கொடுத்தேன்.

''ஆம்! ஆம்! அவனன்றி அணுவேனும் அசையாதென்ற ஆப்தர் மொழியின் உண்மை ஆன்மீக வாழ்வில்தான் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது. திருவாதவூரர் திருப்பெருந்துறைக்குப் போனது பாண்டியன் கட்டளைப்படி குதிரைகள் வாங்கவா? அல்லது குருதரிசனம் பெறவா? தாயுமானவர் மௌனகுரு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டா திருச்சி மலைக்கோயிலுக்குப் போனவர்? வழக்கம் போல் தெய்வஆராதனைக்காகவல்லவோ சென்றவர்'' என்று கேள்விகள் போட்டுவிட்டு, ''உன் சாதகம் பார்த்த சோதிடர்கள் அதில் பால்ய அதிஷ்டம் இருக்கிறதென்று கூறவே, உன் தந்தையார் கிலேசத்துடன் அக்காலத்தில் பிரசித்திபெற்ற சாஸ்திரியான அச்சுவேலி மன்னன் கணபதிஎன்பவரிடஞ்சென்று ஆலோசனை கேட்டனர். ஒருவரின் பூர்வ ஜென்ம வரலாற்றையும், நுண்ணறிவு கொண்டு பார்க்கும் சித்தி வாய்ந்த அந்தச் சோதிடர் மூன்றுமாசக் குழந்தையாயிருந்த உன்னை ஸ்ரீ நாகபூஷணியம்பாள் சந்நிதானத்தில் ஸ்ரீ அருணசலேஸ்வரருக்கு அர்ப்பணஞ் செய்யுமாறு ஆலோசனை கூறினர். அதன்படி உன்பெற்றோர் அர்ப்பணஞ் செய்ததோடு ஆண்டுதோறும்

திருக்கார்த்திகைத் தினத்து விளக்கீட்டுத் திருவிழாவும் இறக்கும் வரையில் செய்துவந் துள்ளார்கள். இப்போது இருவரும் மறைந்து விட்டார்கள். எனவே உனக்குத் தாயும் தந் தையும் குருவுமாவதற்கு குறித்த மகான் காத்துக்கொண்டிருக்கிறார்'' என்று ஆசிமொழி பகர்ந்தார். அவர்வாக்கில் இருந்த தீர்க்கதரி சனம் அடுத்த ஆண்டு திருக்கார்த்திகை வைப வத்தோடு நிறைவேறியது.

சாமியாரின் திவ்விய சிருஷ்டிக்கு முன் எனது பூர்வஜென்ம, இந்தப்பிறவி வரலாறு கள் அடங்கிய புத்தகம் திறந்து வைத்திருப்பது போலவும், அதிலிருந்து எனக்குப் பயன்படக் கூடிய சில வசனங்களை அவர் கருணைகூர்ந்து எனக்கு வாசித்துச் சொல்லுவது போலவும் உணர்ந்தேன். உளம் உருகி ஆனந்தக்கண்ணீர் விட்டேன்.

அந்த வேளையில் வைகறை இருளும் நீங்கி வெளிச்சம்வரத் தொடங்கிவிட்டபடியால் பெரியாரின் முகத்தில் பொலிந்த தெய்வக் களையைப் பார்க்கும் பாக்கியமும் கிடைத்தது. பரவசத்துடன் எழுந்து அவர் திருப்பாதங்களை என் கண்ணீரால் கழுவ எத்தனித்தேன். அவ ரும் எழும்பி நின்று என் உச்சிமீது வலக் கையால் தடவி ஆசீர்வதித்தார். ''கலங்காதே எல்லாம் சரிவரும். குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துமுடி'' என்று கூறிவிட்டு பூக்கள் பறிக்கச்சென்ற அன்பரின் பெயரைச்சொல்லிக் கூப்பிட்டார். அவரும் உடனே வந்துவிட்டார். அவருக்கும் நல்லாசி கூறி வழி அனுப்பிவிட்டு பிள்ளையார் கோயில் இருக்கும் தென்திசை நோக்கி நடந்தார்.

இந்தச் சாமியாரின் முழுப்பெயர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகள் என்பதாம். ஆனல், யாழ்ப்பாணத்தில் பெரும்பாலோர் அவரை நயினாதீவுச்சாமியார் என்றே அழைத் தனர். அவர் பிறந்ததும் அந்த ஊரில்; அவரது சமாதிக் கோயிலும் அங்கேதான் நிறுவப்பட் டுள்ளது. அவரது இளம்பிராய வரலாற்றில் 10 ஆண்டுகளை எங்கே கழித்தார், எந்த மார்க்கம் வந்து சாதுக்கோலத்தில் நயினார்தீவுப்பிள்ளை யார் கோயிலில் காட்சியளித்தார் என்பவை போன்ற கேள்விகட்கு விடையளிக்க ஒருவரும் முன்வரவில்லை. கடல்சூழ்ந்த தீவுக்கு ஊர்கா வற்றுறையிலிருந்தோ, அல்லது வேலணை, புங்குடுதீவுத்துறைகளிலிருந்தோ படகுமார்க்க மே ஒருவர் வரமுடியும். அப்படி சாமியார் பிரயாணஞ் செய்ததை எவரும் காணவில்லை.

அவரது சம்பாஷணையிலிருந்து யான் யூகித்துக்கொண்டது, அவரின் குருநாதர் ஆனைக்குட்டிச்சுவாமிகள். இவர் பெருஞ்சித்தர் என்பதை சேர். பொன்னம்பலம் அருணுசலம் போன்ற பிரமுகர்கள் பலர் அறிந்திருந்தனர். அவர் குடும்பமே கொழும்பு முகத்துவாரத் தில் சமாதிக்கோயில் எழுப்பி அதனை இன்றும் பராமரித்து வருகின்றனர். அந்தச்சமாதிக் கோயில் மண்டபத்தில் படுத்துறங்கிய ஸ்ரீ முத் துக்குமாரசுவாமிகள் அடுத்தநாள் வைகறைப் பொழுதில் நயினார்தீவுப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் படுத்திருந்து எழும்பினர். அவ ரது குருநாதரிடம் பெற்ற அற்புத சித்திகளில் இதுவும் ஒன்ருகும். இம்மட்டே யான் இங்கு சொல்லக்கூடியது.

இதைப்பற்றியும் வேறு ஓர் முக்கிய சம்ப வம் குறித்தும் 1936ம் ஆண்டில் ஸ்ரீ யோகர் சுவாமிகளுடன் யான் தர்க்கமிட நேர்ந்தது. அப்போது அவர் சொன்னபதில் ஆனைக்குட்டி சுவாமிகளின் அபார சித்திகளைத் தழுவியதா யிருந்ததென்பதையும் இங்கு குறிப்பிடவிரும்பு கிறேன். அதன் விபரங்கள் வாசகர்கட்குத் தே வையற்றவை. ஏறக்குறைய பத்து ஆண்டுகளை நயினார்தீவுச் சாமியார் தமது குருநாதரான ஆனைக்குட்டி சுவாமிகளின் கட்டளைப்படி இந்தியாவில் யாத்திரை செய்ததாகவும் அப் போது ஸ்ரீ ரமணரின் தரிசனமும் ஆசியும் பெற்றதாகவும் பின்னர் அறிந்தோம்.

இறுதியாக, கந்தபுராணபடன மகிமை பற்றிச் சிறிது விபரிக்க விரும்புகிருேம். நாவலர்பெருமான் ஆலயங்களிலும் மடங்களி லும் படனம்செய்வதற்கு கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்றையும் வற்புறுத்தியிருந்தபோதி லும், யாழ்ப்பாணக்குடாநாட்டில் கிராமங் களில் சிறப்பாக நடைமுறையில் இருந்தது கந்தபுராணபடனமே. நமது பெற்ருேரும் பாட் டன் பாட்டிமாரும் சென்ற நூற்ருண்டில் அறிவு மலர்ச்சியும், பக்திஞானமுதிர்ச்சியும் பெற்றது இந்தப் புராணபடனத்தின் மூலமாக வேயாம். அவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத வர்களாகயிருந்த போதிலும், கேட்டல், சிந் தித்தல், தெளிதல் என்ற முறையில் அறிவும், ஒழுக்கமும்படைத்தவர்களாய் நல்வாழ்வுவாழ்ந் தனர். இன்றைய சந்ததியினரோ, கல்லூரிப் படிப்பின் மூலமும், சர்வகலாசாலைப் பட்டங் கள் பெற்றும், வாழ்வில் வெற்றிகரமாகப் பின்வாங்கிச் செல்கின்றனர். இந்தத் தளர்ச்சி யையும், வீழ்ச்சியையும் விலக்கி, அவர்களைப் பாதுகாக்க பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் பேச்சாலும், எழுத்தாலும் செய்து வரும் அரியசமயப்பணி என்றென்றும் போற் றற்குரியது. அவரால் வரையப்பட்டு, இலங்கை பல்கலைக்கழக இந்து மாணவர்சங்க வாயிலாக வெளியிடப்பெற்ற கந்தபுராணம் - தக்ஷகாண் டம் உரை நூலை இங்கு குறிப்பிடாமல்விட முடியாது. வேலும் மயிலும் துணை!

# உள்ளொளி

**கொல்லிக் குன்றூர்க் கிழார்**

மக்களாய்ப் பிறந்தோரில் சிலர் முன் வினைப் பயனாலும் விட்ட குறையாலும், தொட்ட குறையாலும் இப் பிறவியில் சரியை, கிரியை முதலிய நெறி முறைகளைக் கைக் கொள்ளாது, பெரு முயற்சியின்றியே யோக வாழ்வில் ஈடுபட்டு உயர்ந்து பெருநிலை எய்து கின்றனர்.

வேறு சிலர் அருள் தாகத்தால் பல காலம் முயன்று அருளாளர்கள் கூறிய வண்ணம் தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்பதன் நேர்ப் பொருளின் படியும், உட்பொருளின் படியும் நின்று பல காலம் சரியை, கிரியையில் ஈடுபட்டு நிற்கின்றனர்.

மற்றும் சிலர் பிறவியின் நோக்கத்தை மறந்து இறைச்சிந்தனையும் அற்று உலகாயத வாழ்வில் மூழ்கித் திளைத்து உண்மை இன்பம் காணாது, அமைதியற்று அலைகின்றனர். இம் மூவகை மக்களுள் நடுவில் கூறப்பட்ட சாதகர்களின் உள்ளொளி பெறும் நெறி முறையில் கருத்து செலுத்துவோம்.

அவர்கள் இறைவன் திருவருளையே நாடி கோயிலுக்குச் செல்லுதல், உழவாரப்பணி கூட்டுவழிபாடு, தனிவழிபாடு நிகழ்த்தல், பக்திப் பாடல்களைப் பரவசமாய்ப் பாடல் முதலிய வைகளில் ஈடுபட்டு இறைச் சிந்தனையோடு உலக வாழ்வில் ஈடுபடுகின்றனர். சிறிது சிறிதாக உடல், உயிர், ஆன்மா முதலியவைகளின் தன்மைகளையும், ஒன்றுக்கொன்றுள்ள தொடர்புகளையும் ஆய்ந்தறிந்து விளக்கம் பெறுகின்றனர்.

அத்தகையோரில் சில தீவிர வாதிகள் அதிவிரைவில் முன்னேற்றங் கண்டு இறைவன் திருவருளாலும், குருவருளாலும் யோக வாழ்வில் நுழைகின்றனர். அவர்கள் உலக மக்களைப்போல உண்ணுமல் - உடுத்தாமல் - எண்ணுமல் - பேசாமல் வாழ்ந்து குறிக் கோளில் முன்னேற்றம் காணுகிருர்கள். மூலாதாரத்தில் தியானிக்கத் தொடங்கிய அவர்கள் எல்லாக் கலைகளையும் கடந்து இறுதியில் 'துவாத சாந்தப் பெருவெளி'யில் தியானிக்கிருர்கள்.

இவ்வாறு அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் யோகநெறி மூலம் உயர்ந்து ஞான பூமியில் கால் அடி எடுத்து வைக்கின்ருர்கள். அப்போது உள்ளொளி பெற்று இறைவனை தரிசித்து அவனது பேரின்பவெள்ளத்தில் மூழ்கி அவனோடு இரண்டறக் கலக்கிருர்கள். அப்போது பேச்சற்ற யோக சமாதி நிலை கைவரப் பெறுகிருர்கள்.

ஆகவே அருட் சாதகர்களாகிய நாமும் அவ்வழி நின்று ஆத்ம ஜோதி தரிசனம் பெற்று - அருள் தொண்டாற்றி அதன் மூலம் பிறவி நீங்கிப் பெருநிலை எய்துவோமாக.

# அணையா விளக்கு ஆத்மஜோதி

DR. K. M. P. முகம்மது காசிம் PH.D.

இருள் நிறைந்த இதயத்திற்கு இணையில்லாத அருட்பிரகாசத்தை அளிப்பது ஆத்மஜோதி. நாம் உண்மையிலேயே விழிப்புற்று தெய்வீக மறுமலர்ச்சியடைய வேண்டுமானல் மெய்ஞ்ஞானத்தின் உட்பொருளை வெகு தெளிவாக விளங்கிட வேண்டும். வாழ்க்கையின் குறிக்கோள் தேகத்தைத் "தான்" என்று எண்ணும் அபிமானத்தை, மயக்கத்தை விவேகத்தினுலும், வைராக்கியத்தினுலும் முற்றுக அகற்றி மாருப்பெருநிலை யாகிய ஆத்ம சைதன்யத்தைப் பெறுவதாகும். தெய்வீக வாழ்வு வாழ ஒருவனுக்கு உறுதியான உடலும் உயர்ந்த உள்ளமும், தெளிந்த அறிவும் இன்றியமையாததாகும்.

ஆத்மஞானம் பெற சூழ்நிலை தடையாக இருப்பதாக நாம் தப்பாகக் கருதுகிருேம். உண்மையில் புறவுலகம் நமக்குக்கேடு விளைவிப்பதன்று. புறத்தில் காணப்படும் கேடுகளெல்லாவற்றிற்கும் மூலகாரணம் நமது பண்பாடற்ற உள்ளமேயாகும். ஆகவே, மனதை ஒருமுகப்படுத்தி, உள்ளம் அமைதிபெற்று, புறப்பொருள்களில் மனம் பற்ருது ஆத்மாவில் உள்ளொளி காண்பதே முக்திநிலைபெற உற்ற நெறியாகும்.

மனித ஜீவியத்தின் அடிப்படை நோக்கம் தத்துவதரிசனமூலம் துக்கநிவர்த்தியும், பரமானந்தப்பேறுமாகும். அதாவது உண்மையாகிய அருட்ஜோதியில் மனிதனது உள்ளம் கரைந்து பெறற்கரிய பேரானந்த நிலையை எய்துவதாகும். மனிதன் எதைச்செய்துகொண்டிருந்தாலும் அவனது மனம் இறைதியானத்தில் இன்புறும் நிலையில் காணப்படுவதே ஆத்மஜோதி. அந்த ஆத்மஜோதியை அறிய உத்தம நெறி தியானமார்க்கமாகும். இதுவே மனிதனை நிறைமனிதனுக்குகிறது. தியானத்தில் சித்தியடைய வேண்டுமானல், நலங்கள் அனைத்திலும் தலைசிறந்ததாகிய சீரிய புலனடக்கத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். தியானத்தில் முன்னேற வேண்டுமானல் வாழ்வில் நிகழும் எல்லாக் கருமங்களையும் ஆத்மசாதனத்திற்கு பயனடையும்படியாக மாற்றிடும் பண்பினை அவசியம் பெற்றிடல் வேண்டும்.

துன்பத்தில் துடியாத மனமும், இன்பத்தில் நாட்டமில்லாத இதயமுமே அச்சத்தை அகற்றி, சினத்தை ஒழித்து, ஒளிமயமாகிய ஆத்மஜோதியை தரிசிக்க முடியும். மனம் அடங்காதவனுக்கு ஆத்மபோதமில்லை! தியானமில்லாதவனுக்கு சாந்தியில்லை! சாந்தியில்லாதவனுக்கு இன்பமில்லை. ஆகவே, புலன்களின் வேட்கையைக் கடந்து, ஆசை அலைகளற்று மனம் அமைதியுறும் வேளையிலே காணப்படுவதே ஆத்மஜோதி. இந்நிலையிலேதான் பற்றற்று, பயமற்று, சினமற்று உலகமெல்லாம் தேடிய இன்பத்தை தன்னிடத்திலே காணமுடியும்.

இறையருள் பூங்காவிலே அருட்கலைகள் பல உண்டு. அவற்றுள் ஒளிமயமாக விளங்கும் உன்னத நிலையே ஆத்மஜோதி. மாறுகின்ற வையகத்திலே வாழுகின்ற நமக்கு நொடிப்பொழுதில் பலதரப்பட்ட பிரச்சினைகள் உண்டாகின்றன. அவ்வேளையில் வழிகாட்டுவது என்றும் அணையா விளக்காகிய ஆத்மஜோதியே.

★★

# உலகின் ஆத்மஜோதி நிலயம்

**சுவாமி மதுரானந்தா**

உலகிலுள்ள மலைகளிலே உயரம் மிக்கது இமயமலை. உலகிலுள்ள மலைகளிலே தெய்வத்தன்மை மிக்கது இமயமலை. உலகிலுள்ள சமயங்களிலே தொன்மை மிக்க இந்து சமயத்தின் வேதங்களும், உபநிடதங்களும் உதித்தது இமயத்தில்தான். பண்டு பண்டே பல்லாயிரக் கணக்கான ரிஷி முனிவர்களின் தபோ பூமியாக விளங்கியதும் இமயமலையே. மகாபாரதம் எழுதப் பெற்றதுஇமயமலையிலேயே. ஸ்ரீசங்கர பகவத்பாகவதர் பாஷியம் எழுதியதும் இமயத்தில்தான். ராமதீர்த்தர், விவேகானந்தர், தபோவன சுவாமிகள். புருஷோத்தமானந்தர், சிவானந்த சுவாமிகள் போன்ற மகான்கள் தவஞ்செய்து சித்தி பெற்றதும் இம்மலையிலேதான். இப்போதும் உலகெங்கிலுமுள்ள சாதகர்களெல்லாம் தவத்தை நாடி வருவது இமயத்தில்தான். மேனாட்டவரும், ஆப்ரிக்கர்களும், இலங்கையிலுள்ளோரும். ஜப்பானியருமாகிய எண்ணிறந்த அடியார் பெருமக்களை இந்தப் புண்ணிய பூமியிலே பார்க்கலாம்.

உற்றார் பெற்றாரை விட்டு, வீடு வாசல்களை உதறித்தள்ளி, இறைவனை நினைந்து துறவியாய் வந்து சேரும் எண்ணிறந்த அடியார்கள் உண்டியும் உடையும் உறையுளும் எளிதாகப் பெற்று, தவஞ்செய்து வருகின்ற அற்புதக் காட்சியை இன்றும் இமயத்தில் நாம் காணலாம். கைலாஸபதியாகிய சிவனது திருவுருவாய் அமைவது இம்மலை. கௌரியன்னையின் திருவடிவாய்த் திகழ்வது கங்கா நதி. இம்மலையிலுள்ள கல்லெல்லாம் சிவலிங்கம். நீரெல்லாம் கங்கை. உதாரணமாக கேதாரநாத், அமரநாத், கைலாஸநாத், விமலேஸ்வரர், சிகரேஸ்வர், பசுபதிநாத் முதலிய சிகரங்களும், அலகநந்தா, பாகிரதி, ராம்கங்கா, தவளகங்கா, கௌரிகங்கா, காளிகங்கா முதலிய நதிகளும் இங்கேயே அமைந்துள்ளன.

கங்கையைப் போலொரு புண்ணிய நதி உலகில் மற்றொன்றில்லை. ஒன்றினாலும் மாசடையாத தெய்வநீரே கங்கை நீர். தன்னுள் வந்து பாயும் எந்தச் சாக்கடை நீரையும் தூய நன்னீராக்கும் வலிமை கங்கை நீருக்குண்டு. அது மட்டுமல்ல! தன்னுள் மூழ்குவோரையும். பானஞ்செய்வோரையும், பரிசுத்தப்படுத்தும் பண்பு வாய்ந்தது பாகீரதி தீர்த்தம். கங்கையிலிருந்து இரு கரையிலும் வீசும் காற்றுக்கூட மனிதன் மனத்திலுள்ள காமக்குரோத லோபங்களை மாற்றும் வல்லமையுள்ளது. ஆதலால்தான் அது தவம் வளர்க்கும் தாயாகத் திகழ்கின்றது. கங்கையைத் தேவியாகப் பாவித்து நம்முடைய முன்னோர்கள் வழிபட்டதின் நுட்பம் இதுவேயாம்.

வேத புராணங்களிலெல்லாம் கங்கையை நீர் வடிவான பிரம்மம் என்றே கூறப்பட்டுள்ளது. கோமுகத்தில் பிறந்து கங்கா ஸாகரத்தில் முடியும் கங்கை நதிக் கரையிலுள்ள ஆசிரமங்களுக்கும், ஆலயங்களுக்கும், அறச்சாலைகளுக்கும் ஓர் அளவுண்டோ? இந்துப் பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும் இன்றும் தொட்டிலாக தாயகமாகத் திகழ்வது கங்கா தடமாகும்!

கங்கை நீரைப் பருகி இமயமலையில் வளரும் பறவையினங்களும், மீன்களும், விலங்குகளுங்கூட சத்துவ குண மிகுதியுற்று ஒற்றுமையாய் பயமின்றி மனிதரோடு உறவுகொண்டு வாழ்கின்ற அற்புதக் காட்சியை இன்றும் அனுபவித்தறியலாம்,

ஆதலால் ஆன்மீக சாதனையில் முன்னேற விரும்பும் அடியார் பெருமக்களெல்லாம் தங்கள் வாழ்க்கையில் சில காலமாவது இமயமலையில் கங்காதீரத்தில் தவஞ் செய்வது மிகவும் ஏற்றதாகும்.

இமயத்தின் எல்லையை வந்தடையும்போதே உள்ளத்தில் எல்லையில்லா ஒரு அமைதி வந்து விடுகிறது ''சாந்தம் சிவம் அத்வைதம் பிரம்ம'' என்ற வேதமொழி நம் அனுபவத்திற்கு வந்துறுகிறது.

**இமயம் வாழ்க! கங்கை வாழ்க!**
**சிவம் வாழ்க! சக்தி வாழ்க!**
**இந்தியப் பண்பு வாழ்க!**
**இனிய நல்லறம் வாழ்க!**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

# ஆத்மஜோதி

ஸ்வாமி தேஜோமயானந்தம் — ரிஷிகேசம்

"அந்தர் ஜ்ஜோதிர் பஹிர் ஜ்யோதி
ப்ரத்யக் ஜ்யோதி: பராத்பர:
ஜ்யோதிர் ஜ்யோதி: ஸ்வயம் ஜோதி:
ஆத்ம ஜ்யோதி: சிவோஸ்ம்யஹம்"

"ஆத்ம ஜோதி" என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மேற்கூறிய மந்திரம்தான் நினைவிற்கு வந்தது. பேருண்மையாகிய மெய்ப் பொருளுக்குக் கொடுக்கப் பட்டுள்ள ரத்தினச் சுருக்கமான விளக்கமே அம் மந்திரத்தின் பொருளாக அமைந்துள்ளது.

இறைவனை ஆன்றோர்கள் ஜோதி சொரூபமாகக் கண்டு வழிபட்டிருக்கிறார்கள். 'ஜோதி' என்றால் 'ஒளி' வெளிச்சம்' 'பிரகாசம்' 'சுடர்' என்று பொருள். ஒளியினுடைய தன்மை இருளைப் போக்கி உள்ளதை உள்ளபடி விளக்கிக் காட்டுவதாகும். ஆகவே 'ஜோதி' என்ற சொல்லுக்கு ஸ்தூலக் கண்களால் பார்க்கக் கூடிய சூரியன் சந்திரன், நட்சத்திரம், அக்கினி, தீபம் போன்ற வெளிச்சங்களை மட்டும் பொருளாகக் கொள்ளுதல் கூடாது. பெரும்பாலும் நாம் இந்த ஸ்தூல ஒளிகளையே 'ஜோதி' என்று எண்ணிக் கொண்டிருப்பதால்தான் அணுவுக்கும் அணுவாக இருக்கக் கூடிய ஆத்மாவையும் இந்தமாதிரி ஸ்தூல தீபச் சுடரைப் போல 'ஆத்ம ஜோதி' யாகக் காண முற்படுகிறோம். வடலூர் வள்ளலார் ராமலிங்கம் அடிகள் இறைவனை அருட் பெருஞ் ஜோதியாகப் போற்றி ஸ்தூலமான தீபச் சுடரின் மூலமாக வழிபட்டு வந்ததனுடைய தாத்பர்யம் ஆத்மாவையும் ஸ்தூல ஜோதி வடிவில் காணுவது அல்ல. அந்த ஸ்தூல ஜோதியைத் துணையாகக் கொண்டு சூக்ஷம ஜோதியாகிய ஆத்ம ஜோதியை உணர்ந்து அதிலேயே இரண்டற (அத்வைதமாக)க் கலக்க வேண்டுமென்பதுதான் அதன் உட்கருத்தாகும்.

ஸ்தூல இருளைப் போக்குவதற்கு ஸ்தூல ஜோதி தேவைப் படுகிறது. ஸூக்ஷம இருளாகிய அஞ்ஞானம் என்னும் அறியாமை இருளைப் போக்குவதற்கு அதிசூக்ஷம ஒளியாகிய 'ஆத்ம ஜோதி' தேவைப் படுகிறது. 'ஆத்ம ஜோதி' யைத் தவிர வேறு எந்த ஜோதியும் இந்த இருளைப் போக்க சாமர்த்திய முடையதல்ல. அஞ்ஞான மாகிய அந்தகாரம் நம்மை சம்சாரமாகிய இருண்ட பாழுங்கிணற்றுக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. இதிலிருந்து தப்பித்து வெளிவர வேண்டுமானால் தன்னை அறிதலாகிய 'ஆத்ம ஜோதி' யின் சகாயம் தேவைப்படுகிறது.

இந்த அறியாமை என்னும் இருள் காரணமாக நம்மால் ஆத்மா எது, அனாத்மா எது, நிலையானது எது, நிலையற்றது எது, மெய்ப் பொருள் எது, பொய்ப் பொருள் எது என்று பகுத்துப் பார்க்க முடியாமல் இருக்கிறது. இதை ஆன்றோர்கள் அவிவேகம் என்று சொல்கின்றனர். இந்த அவிவேகம் காரணமாக 'தான்' என்கின்ற அபிமானம் ஏற்பட்டு இந்த உடம்போடு ஒட்டிக் கொண்டு எல்லாக் காரியங்களையும் தானே செய்வதாக அஹங்கரித்து உலகில் சிலவற்றை விரும்பவும், சிலவற்றை வெறுக்கவும் செய்கின்றோம். இம்மாதிரி ராகத் துவேஷங்கள் வளருகின்றன. ராகத்துவேசங்கள் நம்மை கர்மங்களில் ஈடுபடுத்துகின்றன. கர்மங்கள் பாவ புண்ணியங்கள் கலந்தவைகளாக இருக்கின்றன. அந்தப் பலன்களை அனுபவிக்கச் சரீரம் தேவைப் படுகிறது. ஆகவே கர்மங்களுக் கேற்ப பலவித யோனிகளில் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து மீளாத் துயரத்தை அனுபவித்து வருகிறோம்.

இம்மாதிரி பல பிறவிகளில் பட்ட வேதனைகளின் பலனாக விவேகம் உற்பத்தியாகிறது. விவேகத்தின் பலனாக "ஸர்வம் துக்கம் விவேகின:" என்ற மூதுரையின் உண்மை புலனாகின்றது. அதன் காரணமாக வைராக்கியம் உண்டாகிறது. புலன்வழி இன்பங்கள் மின்னலைப் போல் கணப் பொழுது சுகம் தோன்றச் செய்துவிட்டு ஒருவனை மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்து விடுகின்றன. நோய், பலஹீனம், மனச் சோர்வு, ஏமாற்றம் முதலிய எண்ணற்ற துன்பங்களே அதன் விளைவாக அமைகின்றன.

ஆகவே மனிதன் இதிலருந்து தப்பிக்கும் வழியைத் தேட ஆரம்பிக்கிறன். அங்கு மிங்கும் அலேந்து பார்க்கிறன். கானவன் வலேயிற்பட்டு கைதப்பி ஓடுமான் போல சம்சார வலியி லிருந்து தப்பி ஓடி ஒரு குருவை சரணடைந்து ஆத்ம விசாரம் செய்யத் தொடங்குகின்ருன்.

பல வருஷ காலம் குருசேவை செய்து பக்தி சிரத்தையுடன் இந்திரிய நிக்கிரஹம், அஹிம் ஸை, ஸத்தியம், பிரம்மச்சரியம், அஸ்தேயம், அபரிக்கிரஹம், சௌசம், ஸந்தோஷம், தபஸ், ஸ்வாத்யாயம், ஈசுவரப்பிரணிதானம் முதலிய யம, நியமங்களேயும், தாரணே, தியானம் முத லிய யோகாப்பியாஸங்களேயும், சிரவண, மன ஞதிகளேயும் சாதனே செய்து அந்தக்கரண சுத்தியை அடைந்து அதன் பின் குரு உபதே சித்த பிரகாரம் யோக சமாதியில் இருந்து பார்க்கும் பொழுது தான் யார் என்பதை உண ருகின்ருன்.

அப்பொழுது அவன் காணுகின்ற அனு பவக் காட்சியைத்தான் இக்கட்டுரையின் துவக் கத்திலுள்ள மந்திரம் சித்தரித்துக் காட்டு கிறது. அதாவது அவனுக்குப் பரம்பொருளா னது:—

அந்தர் ஜோதி (உள்ளொளி) யாகவும், பஹிர் ஜோதி (வெளி ஒளி) யாகவும், அஞ்ஞான இருளே நீக்கிக்காட்டுகிறதை உணர்கின்ருன். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அந்தப் பரிபூரணுனந்தப் பொருளே எங்கு பார்த்தாலும் தென்படுகிறது. அது ஒவ்வொரு ஜீவனுள்ளும் பிரத்யக் ஜோதியாக விளங்கிக் கொண்டு எல்லாவற்றிற்கும் மேம்பட்ட ஜோதி யாக பராத்பர ஜோதியாகவும் இருக்கிறது. அது நேத்திரம், சூரியன், சந்திரன், நட்சத் திரங்கள். அக்னி, மின்னல், விளக்குகள் போன்ற ஜோதிகளுக்கெல்லாம் ஜோதியாக விளங்குவதோடு மட்டுமில்றி, தன்னே விளக்க வேருெரு ஜோதியின் அவசியமின்றி சுயம் ஜோதியாக, சுயம் பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட மகத்துவம் வாய்ந்த ஜோதி எந்த ஜோதி? அதுதான் ஒவ் வொரு ஜீவ ஜந்துக்குள்ளும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் "ஆத்ம ஜோதி" யாகும். "அந்த சிவமயமான ஆத்ம ஜோதி நானே தான்" என்பதை சாதகன் சமாதி நிலேயில் அனுபவபூர்வமாக திடநிச்சயம் செய்கின்ருன்.

★★

மண்ணேத் தோண்டிப் பார். அதற்குள்ளே தண்ணீர் இருக்கிறது. சில இடங்களில் நிலக்கரி கிடைக்கிறது; பெட்ரோல் கிடைக்கிறது. விலே உயர்ந்த வைரமும் தங்கமும்கூட மலேபோன்று பூமியின் உள்ளே புதைந்து கிடக்கின்றன. இதை எந்த மனிதன் மண்ணிலே புதைத்து வைத் தான்? நீயும் இல்லே; உன் தந்தையும் இல்லே; உன் பாட்டனும் இல்லே! பின்பு யார்? யோசித்துப் பார்! அதைச் செய்தது கடவுள். கடவுளால்தான் மரத்தைக் கரி யாக்கி, வைரமாகச் செய்ய முடியும். அவனே நீ நம்பு! நம்பிஞல்தான் உனக்கு நல்வாழ்வு அமையும்!

— ஸ்ரீ துர்க்கைச் சித்தர்

# பெரும் பயணம்

திருமுருக கிருபானந்த வாரியார்

பாண்டவர்கள், துரியோதனாதிகளின் முடிவுக்குப் பின்னர் அத்தினபுரத்தை முப்பத்தாறு ஆண்டுகள் அறநெறிவழுவாது அரசுபுரிந்தார்கள்.

தருமர் யதுகுலத்தினர் அழிந்ததை யறிந்து திடுக்கிட்டனர்; அர்ச்சுனனைப்பார்த்துக் கூறுகின்றார். "அறிவுள்ளவனே! காலமானது எல்லாவுயிர்களையும் முடிவுபெறச் செய்கின்றது. இனி நாம் இந்த அரசாட்சியில் ஈடுபட்டிருப்பது நன்றன்று. துறவு என்ற ஒன்றினால்தான் பிறவிப் பெருங்கடலைத் தாண்டமுடியும். காலத்தை வென்றவர்கள் ஒருவருங் கிடையாது. காலம் என்ற சக்கரம் இடையறாது சுழன்று கொண்டிருக்கின்றது. நாம் அதில் அகப்பட்டிருக்கின்றோம். காலாதீதமான பரம்பொருளை நாடி நாம் தவ வனம் போவோம்" என்றார்.

தனஞ்சயன் "அண்ணா! தங்கள் கருத்தின்படி செய்வோம். இது கடைத்தேறும் வழி" என்றான். பீமனும் நகுலனும் சரி யென்றார்கள்.

சகாதேவன் "நிலத்தை விற்றவனும் வாங்கினவனும் பொருளாசையால் சண்டையிடக் கண்டேன். அங்குள்ள அதிகாரியும் பொருள் இச்சையுடன் இருக்கின்றான். கலியுகம் வந்துவிட்டது; இனி நாம் இங்கிருப்பது உசிதம் ஆகாது" என்றான்.

யுதிஷ்டிரர் அபிமன்யுவின் குமாரனான பரிட்சித்துக்கு முடிசூட்டினார். அவனிடம் அரசுரிமையை ஒப்புவித்தார். திருதராஷ்டிரனுக்கு வைசியமாதிடம் பிறந்த யுயுத்சு என்பானை அழைத்து "நீ பரிட்சித்துக்கு நல்ல துணையாக நின்று அரசாங்க வேலையைப் பார்த்துக்கொள். இந்த அரசை நல்ல முறையில் நடத்துவது நின் பொறுப்பு" என்றார்.

சுபத்திரையைப் பார்த்து, "அம்மா! நீ எங்களுடன் வரக்கூடாது. உன் பேரனாகிய அந்தப் பரிட்சித்தைப் பாதுகாப்பாயாக. இவன் குருகுலத்துக்கு இனி தலைவன். கண்ணபிரானுடைய பேரனுடைய மகன் வஜ்ரன் இந்திரபிரஸ்தத்தை அரசுபுரிவான். அவனையும் பரிட்சித்தையும் நீ இரு கண்களாகக் காத்தருள் புரிவாயாக" என்று கட்டளையிட்டார்.

தருமபுத்திரர், வசுதேவர், பலராமர் கண்ணன் முதலியவர்கட்கு நீரால் தர்ப்பணம் செய்து, அவர்களுக்கு நலம் விளையுமாறு வேண்டித் தான தருமங்களைச் செய்தார். மார்க்கண்டேயர், பாரத்துவாசர், யாக்ஞவல்கியர் என்ற முனிவர்களுக்குச் சுவையுள்ள உணவு தந்து உபசரித்தார். பட்டாடைகள், நவரத்தினங்கள், கிராமங்கள், வாகனங்கள், முதலியவைகளை உலகப் பொதுநலங்குறித்தே காலங்கழிக்கும் அந்தணர்கட்கும் வறியவர்கட்கும் வழங்கினார். குருநாதராகிய கிருபரை அழைத்து ஆசனத்தில் அமரச்செய்து பூசித்து சீடனான பரிட்சித்தை அவரிடம் ஒப்பித்தார். பின்னர் பட்டினத்து மக்களையெல்லாம் அழைத்து "நான் தவ வனம் போவேன். இனி இந்த பரிட்சித்து உங்கட்குத் தலைவன்; உங்களை இவன் புரப்பான்; குறைகளையகற்றுவான். எனக்கும் என் தம்பியர்கட்கும் நீங்கள் மனம் உவந்து விடை கொடுங்கள்" என்றார்.

நகரமாந்தர்கள் தருமருடைய சொல்லைக் கேட்டுத் துயரமுற்றார்கள். "எங்கள் அரும் பெருந் தலைவராகிய தாங்கள் எம்மை விட்டுப் பிரிவதை நாங்கள் எவ்வாறு சகிப்போம்?" என்று கூறிக் கண்ணீர் சிந்தினார்கள். தருமர் அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

பின்னர் பாண்டவர்கள் ஐவர்களும் திரௌபதியும் தங்கள் உடம்பில் அணிந்திருந்த விலை மதிக்க முடியாத அணிகலன்களைக் கழற்றி விட்டார்கள். மரப்பட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள். தினம் வளர்த்த அக்கினியை முடிவில் செய்யக்கூடிய யாகத்தைச் செய்து நீரில் விடுத்துப் புறப்பட்டார்கள்.

அப்போது பெண்களும் ஆண்களும் ஓ என்று உரக்க அழுதார்கள். தருமர், தம்பியர் நால்வரும் துருபதராஜகுமாரியும் பின்வரக் கானகத்தை நோக்கிச் சென்றார். அவருடன் ஒரு நாயும் தொடர்ந்து சென்றது. நகரத்து ஜனங்களும் கிருபரும் சிறிது தூரம் போய் வழிவிட்டார்கள். நாககன்னிகையான உலூபி கங்கையில் பிரவேசித்தாள். சித்திராங்கதை பப்ருவாகனன் ஆளுகின்ற மணலூரபுரத்தை (மதுரைக்கு அருகில் உள்ள பட்டினம்) நோக்கிப் புறப்பட்டாள். சுபத்திரை முதலியவர்கள் பரிட்சித்தினிடம் நின்றார்கள்.

பாண்டவர்கள் சந்நியாசிகளாகி யோக நெறியை மேற்கொண்டு ஒன்றிலும் பற்றின்றி கீழ்த்திசை நோக்கிச் சென்றார்கள்.

பாண்டவர்கள் இப்போது மஹாப்ரஸ்தானம் என்ற ஒரு விரதத்தை மேற்கொண்டார்கள். இது பெரும் பயணம் என்று பொருள் படக்கூடியது. அதாவது எங்கும் தங்காமலும் நிற்காமலும் இருக்காமலும் சென்றுகொண்டேயிருப்பது. முத்தியை நாடிச் செல்லும் பெரும் பிரயாணம்.

முதலில் யுதிஷ்டிரர் சென்றார், அவர் மனம் எதையும் நாடவில்லை. பரம்பொருள் ஒன்றையே நாடி சித்திரத்தில் எழுதிய தீபம்போல் ஆடாமல் அசையாமல் இருந்தது.

அவருக்குப் பின் பீமன், பீமனுக்குப் பின் அர்ச்சுனன், அர்ச்சுனனுக்குப் பின் நகுலன், நகுலனுக்குப் பின் சகாதேவன், சகாதேவனுக்குப் பின் திரௌபதி தேவி, அம் மாதரசிக்குப் பின் நாய். இப்படிச் சென்றார்கள். அர்ச்சுனன் மட்டும் காண்டீபத்தையும் குறைவில்லாத இரு அம்புப் பெட்டிகளையும் விடாமல் சுமந்து சென்றான். அதனை அவனுக்கு விட மனம் இல்லை. பல தேசங்களையும் மலைகளையுங் கடந்து லௌஹித்தியம் என்ற கடலைக் கண்டார்கள்.

எதிரில் மலையைப்போல் ஒரு பெரிய வடிவம் வழிமறைத்து நின்றது. "பாண்டவர்களே! நான் அக்கினி தேவன். இந்தக் காண்டீபத்தால் இனி என்ன பயன்? முன் நான் இதனைக் காண்டவவனம் எரிக்கும் தருணத்தில் தந்தேன், இதனை இந்தக் கடலில் எறிந்தால் வருணனிடம் சேரும். கிருஷ்ணரிடம் இருந்த சக்கரமும் போய்விட்டது. ஆதலால் இந்த வில்லையும் அம்புத் தூணிகளையும் விட்டுவிடுங்கள்" என்று கூறி அந்த உருவம் மறைந்து விட்டது.

உடனே அர்ச்சுனன் காண்டீபம் என்ற புனிதமான வில்லையும் அம்புப் புட்டில்களையும் கடலில் எறிந்துவிட்டான்.

பாண்டவர்கள் பூமியை வலமாக வருபவர்களாகிச் சென்றார்கள். மேற்கடலைக் கண்டார்கள். வடதிசை நோக்கிச் சென்று இமயமலையைப் பார்த்தார்கள். அதனைக் கடந்து வாலுகார்ணவம் (பெரியமணல் மேடு) என்ற இடத்தைப் பார்த்தார்கள். அதனையும் தாண்டி மேரு மலையைக் கண்டார்கள்.

யோக நெறியைத்தாங்கி வடக்கு நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தார்கள். திரௌபதி யோகந் தவறினவளாகப் பூமியில் விழுந்தாள். தருமரைத் தவிர மற்ற நால்வர்களுந் திரும்பிப் பார்த்தார்கள். இரக்கம் நிறைந்த பீமசேனன் 'அண்ணா! திரௌபதி அறநெறி வழுவாதவள். அவள் இவ்வண்ணம் விழுந்ததற்குக் காரணம் யாது?' என்று கேட்டான்.

தருமநந்தனர், "பீமா! உலகப்பற்றை விட்டுவிடு; பந்த பாசத்தைச்சுடு; திரௌபதி அர்ச்சுனனிடத்தில் அதிக அன்பைச் செலுத்தினாள்; சமமான தன்மையின்மையால் அவள் விழுந்தாள்" என்றார்.

சிறிது தூரம் சென்றதும் கூரிய அறிவும் சீரிய குணமும் படைத்த சகாதேவன் கீழே விழுந்துவிட்டான். பீமசேனன் திரும்பிப் பார்த்துப் பரிவுடன் "அண்ணா! நமக்கு அன்புடன் பணிவிடை புரிந்த சகாதேவன் விழுந்து விட்டான். என்ன காரணம்?" என்று வினவினான்.

தருமராஜர், "பீமா! இவன் கல்வியில் தனக்கு நிகரானவன் ஒருவனும் இல்லையென்று கருதியிருந்தான். அந்தக் குற்றத்தால் இவன் வீழ்ந்தான்" என்றார்.

பின்னர் நகுலன் விழுந்துவிட்டான். அழகுள்ளவனும் வீரனுமான நகுலன் விழுந்ததைக் கண்ட வீமன் "அண்ணா! இதோ நகுலன் விழுந்துவிட்டான். இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

தருமர், "தம்பீ! இவன் அழகில் எனக்குச் சமானமானவன் ஒருவனும் இல்லை; நான் ஒருவனே மேலானவன் என்று கருதியிருந்தான். அதனால் விழுந்தான். எதிலும் அகங்காரம் கூடாது. திரும்பிப்பாராமல் வா" என்றார்.

திரௌபதி, சகாதேவன், நகுலன் இவர்கள் ஒருவர்பின் ஒருவராக விழுந்ததைக் கண்டு

மனம் வருந்திய அர்ச்சுனன் விழுந்தான். ஒருவராலும் வெல்ல முடியாதவனும், இந்திரனுக்கு நிகரானவனும், பகைவர்களை அழிப்பவனும் ஆகிய விஜயன் விழுந்து மரிப்பதைக் கண்ட வீமசேனன், "அண்ணா! இதோ அர்ச்சுனனும் விழுந்து விட்டான். இவன் பரிசுத்தமானவன். விளையாட்டுக்கும்பொய்சொல்லாதவன். அவ்வாறிருக்க இவன் ஏன் விழுந்தான்?" என்று வினவினான்.

தருமர், "தம்பீ! மூன்றும் நாள் போரில் இவன் கிருஷ்ணரிடம் "நான் ஒருவனாகவே பகைவர்கள்அனைவரையும்வதைப்பேன்" என்று கூறினான். அப்படிச் செய்யவில்லை. எல்லா வில்லாளிகளையும் அவமதித்தான். அதனால் இது நிகழ்ந்தது" என்று சொன்னார். சிறிது தொலைவு போனதும் பீமன் விழுந்தான். "அண்ணா! இதோ நானும் வீழ்ந்தேன். இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான். "பீமா! நீ வலிமையால் பிறரை மதியாமல் தற்புகழ்ச்சி செய்து கொண்டாய்; இன்சொல் கூறினாயில்லை. அதனால் பூமியில் விழுந்தாய்" என்று கூறினார். யுதிஷ்டிரர் பீமனையும் திரும்பிப் பாராமல் சென்றார். நாய் மட்டுந் தொடர்ந்து சென்றது.

இந்திரன் பொன்மயமான ஒரு தேருடன் வந்தான். விண்ணிலும் மண்ணிலும் இனிய ஒலியுண்டாகியது. இந்திரன் தருமபுத்திரரைப் பார்த்து "தங்களுக்கு என்று பொற்றேர் கொண்டு வந்தேன். இதில் இந்த உடம்புடன் ஏறும்" என்றான்.

தருமர், "இந்திரனே! சுவர்க்கம் வருவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. என்னுடைய தம்பியரும் தருமபத்தினியும் விழுந்து மரித்தார்கள். அவர்கள் இன்றி நான் மட்டும் மேல் உலகம் போக விரும்பவில்லை" என்றார்.

இந்திரன், தருமரே! நீர் துயரப்பட வேண்டாம். அவர்கள் மானிட உடம்பை இங்கு போட்டுவிட்டுச் சுவர்க்கம் சென்றிருக்கிறார்கள். நீர் அவர்களைச் சுவர்க்கத்தில் பார்ப்பீர். நீர் மட்டும் இந்த உடம்புடன் சுவர்க்கம் செல்வீர் ஏறும்" என்றான்.

யுதிஷ்டிரர், "தேவர் கோமானே! என் உள்ளம் இரக்கம் உள்ளது. இந்த நாய் என்னிடம் அன்புள்ளது. இது என்னுடன் வர வேண்டும்" என்றார்.

இந்திரன், "உத்தமரே! நீர் தெய்வத் தன்மையையும், எனக்கு நிகரான உயர்வையும், எல்லாச் செல்வத்தையும், சிறந்த சித்தியையும் சுவர்க்கத்தையும் அடைந்திருக்கின்றீர். நாய் சுவர்க்கத்திற்கு வரக்கூடாது. இதில் உமது கருணைக்குக் குறையென்பதில்லை. நீர் மட்டும் ஏறும்" என்றான்.

யுதிஷ்டிரர், "தேவபதியே! நீர் சொல்வது நான் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவில்லை. நம்பி வந்தவர்களை நான் ஒருபோதும் விடமாட்டேன். சுகமோ துக்கமோ இந்த நாயுடன் சேர்ந்தே அநுபவிப்பேன். நாய்க்காக நான் மோக்ஷ இன்பத்தைவிட்டுவிடுகிறேன்" என்றார்.

இந்திரன், "தருமபூபதியே! நீர் பிடிவாதம் பண்ண வேண்டாம்; சுவர்க்கத்துக்கு நாய் வருவது கூடாது. இந்திரனாகிய என் சொல்லை நீர் மறுப்பது முறையன்று. இதோ உமக்கென்று வந்திருக்கும் இந்த சிறந்த தேரில் ஏறும்: தாமதிக்காதீர்" என்றான்.

தருமபுத்திரர், "வஜ்ரபாணியே! உலகத்தில் பக்தனை விடுவது மகத்தான பாவமாகும். ஆதலால் நான் சுகத்தை விரும்பி எக்காலத்திலும் பக்தனை விட மாட்டேன். பயந்தவனையும் பக்தனையும், துன்பமுற்றவனையும், வேறு கதியின்றி வந்தவனையும், மெலிந்தவனையும், உயிரைக் காத்துக்கொள்ள விருப்பமுள்ளவனையும் நான் உயிரைவிட நேர்ந்தாலும் விட மாட்டேன். இது எனக்கு நித்தியமான விரதம்" என்று உறுதியுடன் உரைத்தார்.

இந்திரன், "தருமரே! நாயினால் பார்க்கப்பட்ட அன்னமே உண்ணத்தக்கதன்று என்று ஆன்றோர்கள் கூறுகின்றார்கள். எல்லாவற்றையும் விட்ட நீர் நாயை விடாமல் ஏன் மதிமயக்கங் கொள்ளுகின்றீர்!" என்றான்.

யுதிஷ்டிரர், "ஐயா! இறந்தவர்களுடன் நட்பும் பகையும் இல்லை என்பது உறுதி. இறந்தவர்களை எழுப்ப என்னால் இயலாது. ஆதலால் அவர்களை விட்டேன். உயிருள்ளவர்களை நாம் விடவில்லை. அடைக்கலம் புகுந்தவனைக் காப்பாற்றுமை; பெண்மணியைக் கொல்வது; நல்லவர்கள் பொருளைக் கவர்தல், நண்பனுக்குத் தீங்கு புரிதல்; இந்த நான்கு பாவங்கட்கும் நம்பி வந்தவனை விடுவது. எனவே நான் இந்த நாயை விட்டு சுவர்க்கம் வர மாட்டேன். நீர் செல்லும்" என்றார்.

தருமபுத்திரருடைய இந்த நன்னடையைக் கண்ட தருமதேவதை நாய்வடிவத்தை விடுத்து தன் சொந்த வடிவைக் கொண்டு நின்றார். தன் மகனை யுதிஷ்டிரரைப் பார்த்துக் கூறுகின்றார். "பாரத! உன் இனிய அறநெறியைக்கண்டு மகிழ்ச்சியுறுகின்றேன். உன் தந்தை பாண்டு

வின் நற்குணங்கள் உன்னிடம் அமைந்துள்ளன. நாயை விடுத்து விமானம் ஏறியிருப்பாயானல் உனக்குப் பெரிய பாவம் நேர்ந்திருக்கும். முன்னர் நான் ஒருமுறை உன்னைச் சோதித்தேன். நச்சுப் பொய்கையில் மாண்ட துணைவர்களில் ஒருவனை மட்டும் எழுப்பு என்றேன். அத் தைவத வனத்தில் நீ குந்தி மாத்ரி என்ற இரு தாயாரையும் சமமாக நினைத்து பீமனையும் தனஞ்சயனையும் விடுத்து, மாற்ருந்தாய் மகன் நகுலனை எழுப்பினுய். இப்போது நாய் ஒரு பக்தன் என்று எண்ணி சுவர்க்கத்தை விடுத்தனையல்லவா? ஆதலால் உனக்கு நிகரான ஒருவன் விண்ணிலுமில்லை; மண்ணிலுமில்லை. முன்னும் இல்லை. பின்னும் இருக்கப்போவதில்லை. நீ உடம்புடன் சுவர்க்கம் செல்வாய். உன் புகழ் வாழ்க" என்று உள்ளங் குளிர்ந்து வாழ்த்தி அருள்புரிந்தார்.

பின்னர் தருமமும், இந்திரனும், மருத்துக்களும், அச்வநிதேவர்களும், ஏனைய அமரர்களும், தேவரிஷிகளும், சித்தர்களும், முத்தர்களும் தருமரை வரவேற்க, தருமபுத்திரர் புண்ணிய விமானத்தில் ஏறி தன் ஒளியினுல் உலகத்தை நிரப்பிக்கொண்டு மேல் உலகஞ் சேர்ந்தார். அப்போது சிறந்த முனிவரான நாரதர் உரத்த குரலில் கூறினுர். "இப்படி உடம்புடன் சுவர்க்கம் வந்தவர்கள் இதுவரை ஒருவரும் இல்லை. தங்கள் முன்னேர்களின் புகழையெல்லாம் சுருக்கித் தன் பெருமையால் எல்லா வுலகங்களையும், இங்குள்ள ஆலயங்களையும்பாரும்" என்ருர். யுதிஷ்டிரர் "என்னுடைய சகோதரர்களெங்கே? அவர்கள் சென்ற இடத்தை நான் அடைய விரும்புகின்றேன்" என்ருர்.

இந்திரன், "யுதிஷ்டிரரே! நீர் ஏன் இன்னும் மானுடத்தன்மையுடன் இருக்கின்றீர். உன் தம்பியர்கள் நரகில் இருக்கின்ருர்கள்" என்ருர்.

யுதிஷ்டிரர், "பகவானே! இதோ இந்த உயர்ந்த ஆதனத்தில் துரியோதனுதிகள் மிகச் சிறப்பாக இருக்கின்ருர்கள். பரம புனிதர்களான என் தம்பியரும் திரௌபதியும் நரகம் போனுர்களா? கர்ணன் எங்கே? என் தம்பிமார்கள் எங்கே? அங்கே என்னையும் விடுங்கள்" என்ருர்.

இந்திரன் கட்டளைப்படி தேவதூதன் வந்து நரக உலகிற்கு அவரை அழைத்துச் சென்ருன். நரகம் இருள் சூழ்ந்து உதிரச்சேறு, உரோமம், கடும் வெப்பம், நாற்றம், கொடிய விஷப்பிராணிகள், நெருப்பு முதலியவைகளுடன் கூடி பார்க்க அருவருப்பாக இருந்தது. இரும்பு முட்களும், கொதிக்கின்ற எண்ணெயும், வழுக்கு நிலமும், அனல் காற்றும் உள்ள நரகினைப் பார்த்து, "அப்பா தேவதூதனே! நான் இவ்வழியில் இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும்" என்று கேட்டார்.

"நீர் இத்துடன் திரும்பும். இதற்குமேல் உம்மை அழைத்துப் போக வேண்டாம் என்று தேவர்கள் எனக்குக் கட்டளை யிட்டார்கள்" என்ருன்.

அப்போது நாற்புறங்களிலும் தீனமான குரல்களைக் கேட்டார். 'உத்தமரே! உமக்கு வந்தனம். உமது காற்றுப் படுவதனுல் எமக்கு வேதனை குறைகின்றது. நீர் சற்று நில்லும்' என்ற அழுகுரல்களைக் கேட்டார். அவர்களின் உருவம் தருமருக்கு நன்குதெரியவில்லை. "நீங்கள் யார்" என்று கேட்டார்.

"நான் கர்ணன்" "நான் பீமன்" "நான் விஜயன்" "நான் நகுலன்" "நான் சகாதேவன்" "நான் திரௌபதி" "நாங்கள் திரௌபதி குமாரர்கள்" என்று உரக்கச் சொன்னுர்கள். தருமர், இது என்ன ஆச்சரியம்? நான் காண்பது கனவா? நனவா? பாவிகளான துரியோதனுதிகள் மேல் உலகில் சூரியனைப் போல் ஒளியுடன் வீற்றிருக்கவும், புண்ணியவான்களான இவர்கள் நரகிடை நலிந்திருக்கவும் கண்டேன். இது என்ன விந்தை? இது என்ன நியாயம்? தேவதூதனே, நீ போய்வா; நான் தம்பியருடன் நரகிலே வாசஞ் செய்வேன். இவர்களை விடுத்து வரமாட்டேன்" என்ருர். அப்போது சகல தேவர்களும் தரும தேவதையும் காட்சியளித்தார்கள். நரகவுலகம் மறைந்தது. எங்கும் நறுமணம் வீசியது.

இந்திரன் "நீர் மிகப்பெரிய நற்குண சீலர், உமக்கு அழியாத உலகங்கள் கிடைத்திருக்கின்றன. சிறிது பாவமும் அதிக புண்ணியமும் செய்தவர்கள் முதலில் நரகமும் பிறகு சுவர்க்கமும் அடைவார்கள். சிறிது புண்ணியமும் அதிகபாவமும் செய்தவர்கள் முதலில் சுவர்க்கமும், பிறகு நரகமும் அடைவார்கள். நீர் துரோணவதத்தின் போது ஒரு சிறு பொய் புகன்றீர். அதனுல் நரக தரிசனம் ஏற்பட்டது. துரியோதனுதிகள் சிறிது தானம் புரிந்தபடியால் சுவர்க்கத்தில் இருந்தார்கள். அவர்கள் இப்போது நரகஞ்சேர்ந்து விட்டார்கள். உம்முடைய தம்பியரும், கர்ணனும், திரௌபதி முதலியோரும் இதோ சுவர்க்கத்தில் வசிக்கின்ருர்கள்; பாரும். வருந்தற்க; பகீரதன், பரதன் முதலிய சிறந்த மன்னர்களுடன் வாசஞ் செய்யும். இந்த ஆகாய கங்கையில் முழுகும், உமக்கு மனிதத்தன்மை மாறிவிடும்"என்ருன்.

தருமதேவதை தோன்றி "தருமா, உன்னை இப்போது மூன்றும் முறையாகச் சோதித்தேன். தம்பியர்க்காக நீ நரகத்தில் வசிக்கத் துணிந்தாய். இனி உனக்கு அழியாத புண்ணிய உலகங்கள் யாவும் உரியவை" என்ருர்.

தருமபுத்திரர் வானுலகத்தில் ஆடினுர். மனித உடம்பு நீங்கி தெய்வ வடிவு பெற்ருர்.

# மரண விஞ்ஞானம்

ஆர். கே. முருகேசு

"அவன் வருகிறான்" என்று சொல்லும்போது நாம் எதைக் குறிக்கிறோம்? ஒரு உடல் நம்மை நோக்கி வருவதைத்தானே! "அவன் இறந்து விட்டான்" என்று சொல்லும்போது, அசைந்து கொண்டிருந்த உடல் அசைவற்று விட்டது என்பதைத்தானே! இருதயம் முதலான உள்ளுறுப்புக்கள், கைகால் முதலான வெளியுறுப்புகள் ஒரு உடலில் இயக்கமற்று ஓய்ந்துவிட்டால் மரணமாய் விட்டதாகக் கருதுகிறோம். மரணம் என்பது உடலுறுப்புகள் மாறுவதோ, அழிவதோ அல்ல. அவைகளை இயக்கிக்கொண்டிருந்த பிராணன் அதை விட்டுப் போய்விட்டதென்று பொருள். அதனால், மரணம் என்றால் உடலைவிட்டு உயிர் — பிராணன் போய் விடுவது!

ஒரு ஏரிக்கு நீர்வருத்து குறைவதாகவும், போக்கு அதிகமாகவும் இருந்தால் சில தினங்களில் ஏரி வரண்டு போகும். உடலின் ஒவ்வொரு இயக்கத்திலும் பிராண சக்தி செலவாகிறது. வரவு குறைந்துகொண்டே வந்து ஒரு நாளைக்கு வரவே இல்லாமல் நின்றுவிட மரணம் ஏற்படுகிறது. அப்படியானால் ஏதாவதொரு வகையில் உடலுக்குப் பிராணனைக் கொடுத்துக் கொண்டேயிருந்தால் எப்போதும் இறவாமல் இருக்கலாமே! இதுவும் நடக்காது. மின் சக்தியை எப்போதும் போதுமான அளவு கொடுத்துக் கொண்டிருந்தாலும், உழைப்பின் பயனாய் யந்திரங்களின் உறுப்புகள் தேய்ந்துபோனால், சக்தியிருந்தும் இயந்திரம் இயங்காது. உடலும் தன் உழைப்பால் உறுப்புகளின் தேய்மானத்தை அடைத்துக் கொண்டேயிருப்பதால் பிராணனை ஏற்க முடியாத ஒரு நிலையையடைந்து மரணமாகும். தேயும் உறுப்புகளுக்குத் தேய்மானங்களை அவ்வப்போது கொடுத்து பிராணனையும் குறையாமல் கொடுத்து வந்தால் மரணிக்காமல் இருக்கலாம். ஆனால் இது மனிதர்களால் முடியாது. மகரிஷிகளால் முடியும். ஆனால் அவர்கள் இதை உபயோகித்து என்றுமே உலகில் வாழ இச்சிக்க மாட்டார்கள். மண்ணுலகில் வாழ்வதைவிட, இறையுலகில் வாழ்வதையே விரும்புவார்கள். தம் கடனை செய்வதற்காக பல ஆயிரமாண்டுகள் உடலை புதுப்பித்துக்கொண்டு வாழ்ந்திருப்பார்கள். சாதாரண மனிதர்களுக்கு மரணம் தவிர்க்க முடியாதது.

மின்சக்தி அளவு குறைந்து வருவதை யந்திர இயக்கம் வேகம் குறைவதால் காட்டுவதைப்போல், மரணம் நேரும் பல நாட்களுக்கு முன்பே அதற்கான அறிகுறிகள் தென்படும்.

மரணம் வேதனை தரும் ஒரு செய்கையல்ல! முடிவாக, முழுப்பிராணனும் உடலைவிட்டு வெளிப்பட்டு, பூரணமரணம் ஆவதற்குப் பல மணி நேரம் முன்பாகவே ஆன்மா உடலைவிட்டு, சூக்ஷ்ம சரீரத்துடன் வெளியாகி விடுகிறது அந்த ஆன்மா உடலை விட்டுப் போக விரும்பாமல் உள்ளே புக முயற்சிக்க, பிராணன் குறைந்த உடல் அதை வெளியே நிறுத்த முயற்சிக்கும் போராட்டம்தான் மரண வேதனை. பாசம் இல்லாமல் மரிப்பவர்களுக்கு மரணம் வேதனையல்ல — பரம சாந்தமானது.

பிராணன் முதலில் முன் மூளையிலிருந்து விடுபடுகிறது. இதனால்தான் மரணம் சமீபத்தில் உணர்விழந்து பிதற்றல், பிராணக் குறைவால் உடலணுக்கள் சுருங்கி, தம்முள் உறைநிலையிலிருக்கும் பிராணனை வெளிப்படுத்துகிறது. இதனால் ஸ்வாசமந்தம், உடற் சூடு குறைதல், நாடியடங்கல், நரம்பு படபடத்தல், கண்பாப்பா அழிதல் முதலியவை நடைபெறுகின்றன. இதே சமயம் ஆன்மா சூக்ஷ்ம உடலுடன் உடலின் தலைப்புறமாக வெளியேறுகிறது. இப்படி வெளியேறும் சூக்ஷ்ம உடலுக்கும், ஜட உடலுக்கும் உடலில் பூராபிராணன் வெளியேறும்வரை கயறு போன்ற சூக்ஷ்மப்பிராணனின் தொடர்பு இருக்கிறது. இதையே 'பாசக்கயிறு' என்கிறோம். அனேகருக்கு உடலை எரிக்கும்வரை இக்கயறு அறுபடுவதில்லை. அவ்வளவு பாசம் உடலிலும் உலகிலும், உடலணுக்களிலிருந்து மெதுவாக வெளியேறிக்கொண்டிருக்கும் பிராணனுடன், இது தொடர்பு கொண்டிருந்து, அந்தப் பிராணனும் வெளியேறியபின் அறுந்து, சூக்ஷ்மஉடலைத்தனிப்படுத்துகிறது. சமாதியில்இத்தகையோரின் உடல் வைக்கப்பட்டால், மண்ணரித்து உடலின் நிலைப்பிராணன் வெளிப்படும்வரை பாசக் கயிற்றின் தொடர்பால் அங்கேயே சூக்ஷ்ம உடலுடன் திரிந்துகொண்டிருப்பர். சிலர் இதையே பேயாகக் காண்கிறார்கள். ஆகையால் தகனம் செய்வதுதான் நல்ல பழக்கம்.

ஸ்தூல உடலைவிட்டு, சூக்ஷ்ம உடலுடன் வெளியேறும் ஆன்மா, திடுமென மூளையை விட்டுப் பிரிவதால் மனதைத் தானாக உணர முடியாத நிலையிலிருக்கும். இதுவே ''மரண மூர்ச்சை''. இந்த மூர்ச்சைக்கு உள்ளாவதனால்தான் மரணம் ஆன்மாவுக்கு வேதனை தருவதில்லை. வெளிப்பட்ட ஆன்மா சிறிது நேரம் பின் மூர்ச்சை தெளிந்து பார்க்கும்போது தன் உடலையும், அதைச்சுற்றி தன் மனைவி மக்கள் அழுது கொண்டிருப்பதையும் கண்டு திகைக்கிறது. தான் இறந்துபோனோமென்பதை அது உடனே புரிந்து கொள்வதில்லை, தான் அங்கேதான் இருப்பதாக. அழுதுகொண்டிருக்கும் உறவினர்களுக்குப் பலமாகக் கத்தியும், கையால் தட்டியும் தெரிவிக்க முயற்சி செய்கிறது. ஆனால் இருப்பவர்கள் இதைப் புரிந்து கொள்வதில்லை. இப்படி பல நேரம் போராடி பயன் காணாமல் போவதால் தான் இறந்துவிட்டதைப் புரிந்து கொள்கிறது. இதன் பிறகுதான் அதனதன் ஆசாபாசங்களுக்குத் தக உடனேயோ பல நாள், மாதங்கள் பின்னோ தன் அடுத்த வாழ்க்கையைத் தொடங்குகிறது.

மரணத்தையடுத்து, அவர்களுக்கு மண்ணுலக ஞாபகம் வரச் செய்யாமல் செய்து, அவர்களின் அடுத்த யாத்திரையைக் கஷ்டமில்லாமல் மேற்கொள்ளச் செய்வதற்காகத்தான் மரணத் தறுவாயில் இருப்பவர்கள் பக்கத்தில் நல்ல சாஸ்திரங்களைப் படிக்கும்படி உபதேசிக்கிறார்கள். அதைக் கேட்டபடியே மரணிப்பவர்கள் சூக்ஷ்ம உடலில் வெளிப்பட்டதும் பாச நினைவுகள் கொள்ள மாட்டார்கள். உடனே அடுத்த யாத்திரைக்குப் போய் விடுவார்கள். இதையெல்லாம் தெரிந்த ஹிந்து மதத்தினர்கள்தான் இன்று இறந்தவர்களைச் சுற்றிச் சுற்றி நின்று ஓயாமல் அழுகிறார்கள். இது மிகவும் அறியாமை.

சாதாரணப் பிராணன் சில சமயம், இருதயம் போன்ற சில உறுப்புகள் கோளாறடைவதன் பயனாக உடலில் எங்காவது உறைந்து நிற்கும். இது மரணம் போலவே தென்படும். இதையறியவே செத்தவர்களை குளிப்பாட்டுகிறோம். இப்படியிருந்தால் பிராணன் உடனே திரும்பி வரும்.

மரண இரகசியத்தை அறிந்து, நிச்சயமாய் மரணித்துப் போவோமென்பதை அனுபவமாயறிந்து, மரண முன்னறிவுப்புகளால் தனக்குப் பின்னால் உள்ளவர்களுக்குச் செய்யவேண்டியதை செய்துவிட்டு அடுத்த வாழ்க்கைக்கான ஞானத்தைப் பெறுவதில் காலத்தைக் கழிப்பவர்கள், மரண வேதனை சிறிதுமின்றி, சாந்தமாய் — அமைதியாய் பூத உடலை விட்டு, உடனேயே சூக்ஷ்ம உலகவாழ்க்கையைத் தொடங்கிச் சுகமடைவர்.

★

# வாழ்த்து!

தாங்களும், ஆத்மஜோதியும் ஈழத்து இறையன்பர்களுக்குப் பற்பல நல்லருட் பணிகளை ஆற்றி வருகிறீர்கள். என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும் — பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபத்தைந்தாண்டின் இறையருட் பணி என்பது நினைந்து, நிறைந்து, அளந்து பார்க்கப் பெரியது, அரியது. அவற்றை எல்லாம் நீங்களும் நினைப்பீர்கள், 'ஆத்மஜோதி' வாசகர்களும் நினைப்பார்கள். பாராட்டுவார்கள். கதிர்காமக் கந்தனருளால் தங்களுக்கும், ''ஆத்மஜோதி''க்கும் சகல நன்மைகளும் சித்திக்க வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

அன்புடன்,
நா. பார்த்தசாரதி
(ஆசிரியர் – ''தீபம்'')

# பக்தியினால் ஏற்படும் பரவச நிலை

மாத்தளை — அருணேசர்

இறைவனிடம் கொண்ட பக்தியின் மிகுதியால் அடியார்கள் பற்பல விதமான பரவச நிலைகளை அடைகின்றனர்.

இறைவனைச் சிந்திக்குந்தோறும், அவன் பிரதாபங்களைக் கேட்குந்தோறும், பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத் துடித்தல், குழறுதல், உடல் நடுக்கம், சிலிர்ப்பு, வியர்வை, ஆனந்தக்கண்ணீர் என்பனபோன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன.

பக்தியின் உச்சநிலையில் உள்ளமானது அனலால் இளகுகின்ற மெழுகுபோல நெக்கு நெக்காக உருகிவிடுகின்றது. நின்ற நிலையிலும்; உட்கார்ந்தும், படுத்தும், எழுந்தும், நகைத்தும், அழுதும், தொழுதும், வாழ்த்தியும், ஆடியும், பாடியும் மகிழ்கின்ற நிலையிலும் இவ்விதமான பல மெய்யுணர்வுகள் உண்டாகின்றன. இவைகளெல்லாம் பேரானந்தத்தின் மெய்ப்பாடுகளே யன்றோ?

இவ்வித பரவச நிலைகள் மெய்ப்பக்தர்களான அடியார்களிடம் தோன்றிய விதங்களைப்பற்றி; அவ்வடியார்களின் அநுபவ மொழிகளடங்கிய பக்திப் பாடல்களிலிருந்து அறியக்கிடக்கின்றது.

இதோ அடியில் வரும் சில பக்தர்களின் பாடல்களைப் பாருங்கள். அவற்றைப் பாடும்போதே அவ்வித நிலைகளை நாமும் பெறுகின்றது போன்ற மன உணர்வை அடைகின்றோம்.

''உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி ஊற்ற
ஊசிகாந்தத்தினைக் கண்டணுகல் போலவே
ஒருறவும் உன்னி உன்னி
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியாடிக் குதித்து
பனிமதிமுகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானே அவ்வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்தும்
கடன்மடை திறந்தனைய அன்ப ரன்புக்கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நர்த்தமிடு
கருணாகரக் கடவுளே'' (தாயுமானவர்)

இப்பாடலை எத்தனைமுறை பாடினாலும் சலிப்புத் தோன்றுமா? இதேபோல மாணிக்கவாசகரும், இராமலிங்க அடிகளும், பட்டினத்தடிகளும் மற்றும் பலரும் பாடிப் பரவசமடைந்துள்ளனர்.

''நெக்கு நெக் குள்ளுருகி உருகி நின்றும்
இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானாவிதத்தால் கூத்தும் நவிற்றி
செக்கர் போலும் திருமேனி திகழ
நோக்கிச் சிலிர் சிலிர்த்து
புக்கு நிற்பது என்று கொலோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே''
(மாணிக்கவாசகர்)

பகவானிடம் பக்தி அதிகமான பக்தர்கள் இன்னும் எத்தனையோவித மெய்ப்பாடுகளையும் செய்கின்றார்கள். தாம் உண்ணும் உணவை நிவேதனம் செய்வதும், தாம் உடுத்திக்கொள்ளும் ஆடைபோல் அவருக்கு வாங்கித் தரிப்பதும், தூபதீபம் காட்டுவதும், விசிறுவதும் ஒருவித பக்தி நிலையாகும்.

இறைவனை தாயாகவும், தந்தையாகவும், தன்னைக் குழந்தையாகவும் வைத்து, அல்லது அவரை நாயகனாகவும், தன்னை நாயகியாகவும் வைத்துப் பாடி மகிழ்ந்து தம் பக்தியுணர்வைக் காட்டுதல் சிலரின் இயல்பு.

''நடக்கினு மோடினு நிற்கினும்
வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினும் செவ்விதிருக்கினும்
நல்லருட் கேள்வியிலே
தொடக்கு மென்னெஞ்சம் மனமற்ற
பூரண தொட்டிக்குள்ளே
முடக்குவன்யான் பரமானந்த
நித்திரை மூடிடுமே''

என்கின்றார் ஒரு பக்தர். இவ்விதமான மெய்ப் பக்தி நிலையை அடைந்த அடியார்களே அவ்விறைவனின் கருணையைப் பெற்றுய்ந்தவர்களாவர். அந்நிலை நமக்கு என்று எய்திடுமோ?

# ஆன்மநேய ஒருமைப்பாடு

ஆசிரியர்: பத்மஜோதி
நா. சின்னையாசெட்டியார் – சென்னை

மக்கள் வாழ்வு இன்பமாயும் இயல்பாயும் இருந்து சமூகத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவ ஆன்மநேய ஒருமைப்பாடு இன்றியமையாததொன்றும்.

இவ் ஆன்மநேய ஒருமைப்பாடு பற்றி வள்ளற் பெருமான் வெகு அழுத்தமாகப் பேசியுள்ளதைப் பலரும் அறிவர். ஆயினும் அதன் பொருளை எத்தனை பேர் சரியாக உணர்ந்துள்ளனர் என்று சொல்லக்கூடவில்லை. மனிதன் எதனை இழந்தாலும் தன் உயிரை இழக்க விரும்புவதில்லை. அரிய பொருட்கள் பல தன்னை விட்டு ஒளிந்தாலும், 'இந்த உயிர் ஒன்றிருந்தால் போதும்; எப்படியும் யான் இழந்தவற்றை பெற்று விடுவேன்' என்று பெரும் ஆர்வத்துடன் கூறக் கேட்கிறோம். அன்றோ?

ஆன்மா என்பது நம் உடலுள்ளிருந்து இயங்கும் பொருளாகிய உயிர். இதனை ஜீவன் என்றும் கூறுவர். மனிதன் விரும்புவனவற்றுள் இந்த உயிரே சிறப்பானதாகும். நாம் அனுபவிக்கும் எல்லா சுக துக்கங்களுக்கும் காரணமானதாயும், கர்த்தாவாயும், இயக்கப்பொருளாயும் உள்ளது இவ்வுயிராகிய ஆன்மாவேயாகும். ஆன்மாவே நாம்; நாமே ஆன்மாவாகும்.

இவ்வியக்கப் பொருளாகிய ஆன்மாவின் சலன சக்தியாகிய உணர்ச்சிகளே நம் அறிவு ஆற்றல்களாகத் திகழ்கின்றன! உடற் கூறுகளாகிய கண், காது! மூக்கு, நாக்கு, தோல் என்னும் இவ்வைம்பொறிகளின் மூலம் இவ்வுணர்வுகள் உள்ளத்திருந்து வெளிப்படுகின்றன. அப்படி வெளிப்படும் ஆன்ம உணர்வுகள் எப்பொருளைச் சார்ந்தனவோ, அப்பொருளுக்கு ஏற்ப இன்பமும், துன்பமும் உலகியலில் உண்டாகின்றன. உலகிலுள்ள அத்துணை உயிர்களும் இத்தன்மையினவே ஆகும். சிறப்பாக மக்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் இவ்வுணர்ச்சிகளின் அடிப்படையிலேயே உண்டாவதைத் தெளிவாக அறியலாம்.

இன்ப துன்பங்களை விளைக்கும் உணர்ச்சிகளை உடற்பொறிகளின் மூலம் ஆன்மா செலவிடாத போது அது ஆனந்தமாக, அமைதியாக இருப்பதை அறிவோம். எடுத்துக்காட்டாக, ஒருவன் களைப்புடன் படுத்தவுடனே தூங்கிவிடுகிறான். பிறகு திடீரென விழித்துக் கொள்கிறான். அப்பொழுது அவன், தான் அவ்வளவு நேரம் சுகமாகத் தூங்கியதாகவும், தன் உறக்க நிலையில் தனக்கு எவ்வித நினைப்பும் தோன்றவில்லை என்றும் கூறுகின்றான். இந்த நிலைதான் மனிதனின் இயல்பான நிலை. திடீரென விழிக்கும் போது ஏற்படும் ஆன்ம சலனமே 'மனம்' என்று கூறப்படுகின்றது. இச்சலனமற்று இயல்பாய் இருந்து இன்பம் அனுபவிக்கும் நிலையினையே சதாசிவம் என்று சாத்திரம் கூறும். இந்த நிலை திடீரெனக் கலையும் போது ஏற்படும் மயக்க நிலையில் உயிர் உணர்வு சரியாக உடலில் பாய்கின்றதில்லை. அப்போதிருக்கும் மயக்க நிலையினை மாயை என்று சாத்திரம் கூறும். பிறகு இவ்வுயிர் உணர்ச்சி உடலில் பாய்ந்து பரவியதும் தன் முனைப்பு ஏற்படுகின்றது. அப்போது தான் அத்தூக்க நிலையிலிருந்தவன் தான் எங்கு இருக்கிறான் என்று சரியாக அறிகிறான். தன்னைச் சுற்றிலுமுள்ள பொருட்களையும் தெரிந்து கொள்கிறான். இப்படி அறியும் தன்னுணர்வே அகங்காரமென்னும் பெயர் பெறுகின்றது. அவ்வகங்காரமே பிரம்மா வெனக் கற்பிக்கப்படுகின்றது. அப்போது தான் உலகப் பொருளை, அதுவரை தான் காணாமலிருந்தவற்றைப் பார்க்கிறான். எனில், பிரம்ம சிருஷ்டி ஏற்படுகின்றதென கூறப்படுகின்றது. அதாவது சகஜ நிலையிலிருந்த இயக்கப் பொருளான உயிர் தன் உணர்ச்சிகளை உடல் உறுப்புக்களின் மூலம் வெளியிடும் போது, உடலிலும், உலகிலும் பற்றுதல்கள் உண்டாகின்றன.

இவ்வாறு ஏற்படும் பற்றுதல்களால் உண்டாகும்துக்கத்தை நிவர்த்தி செய்துகொள்ளவே

— போக்கிக்கொள்ளவே - சாத்திரங்கள் மோட்சம் - விடுதலை வேண்டுமென்று கூறுகின்றன. 'துக்க நிவர்த்தி மோட்சானந்தப் பிராப்தி' அல்லவா? பக்தி, கர்மம், யோகம், ஞானம் ஆகிய நான்கு துறைகளும் இந்த மோட்ச நிலையைப் பெறுவதற்கேயாகும். இத்தகு கருத்துக்களை - உண்மையினை இத்துறை ஒவ்வொன்றிலும் ஈடுபட்டுழைக்கும் பெரும்பாலரான சமயவாதியர் அறிகின்றார்களில்லை. தாமே உயிர்ப் பொருளாகிய ஆன்மாவென்றும் தம் உணர்வுகளே தம் உடல் உறுப்புக்களின் மூலம் துன்பத்திற்கு இடமாகின்றதென்னும் உண்மையைச் சரியாக உணர்ந்தவர்களாக இல்லை. தாம் வேறு, தம் உடல் வேறு என்ற உணர்வுடன் நடப்பவர்களாகவே தெரியவில்லை.

இவ்வாறு உடல் தத்துவத்தையும், உலக நிலையினையும் உணர்ந்து ஒவ்வொருவரும் எவ்வுயிரினிடமும் அன்புடன் இணைந்து ஒழுக வேண்டுவதே அறம் - கடமை என்று அடிகளார் வற்புறுத்தி இருக்கின்றார். அப்பொழுதுதான் உலகில் அமைதியும், ஆற்றலும் கூடிய இயற்கை வாழ்வு எய்தக் கூடும். இது ஆக்க சக்தியை வளர்ப்பதாகும். அழிப்பு சக்தியாம் கெட்ட எண்ணம், சொல்லாதிகளை ஒழிக்கும் வழியாகும். இந்த ஆன்ம நேயம் ஏற்பட்டு ஒருமைப்பாடு நிலவும் போதே தன்னை அறியும் ஒப்பற்ற ஒரு நிலையையும் அடையக் கூடும். அந்நிலையே தனக்கு உலகில் நேர இருக்கும் நரை, திரை, மூப்பு, மரணாதிகளையும் கெடுத்து, என்றும் இன்பம் துய்க்கும் இறவா நிலையையும் எய்து விக்கும் என்பதை அடிகளார் கூறுகிறார். உலகிலுள்ள உயிர்களெல்லாம் ஒரே தன்மையன; அவற்றின் துன்பத்திற்கு எவ்விதத்தும் காரணமாகக் கூடாது என்னும் எண்ணத்தை வருவிக்கும் ஆன்ம நேய ஒருமைப்பாடு இவ்வளவு சிறப்பானது.

ஆனமையால், அடிகளார் நிறுவிய சமரச சங்கத்தவர்களேயன்றி பிற மக்களும் இவ்வான்ம ஒருமைப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டுவது விவேகமாகும். நீங்களும் அவ்வொப்பற்ற நிலைபெற வேண்டாமா? முயன்று பாருங்கள். திருவருள் துணை புரியும்.

★

இதயமும் சுபாவமும் தூய்மைப்பட வேண்டும். உள் உணர்வு விழிப்புற வேண்டும். திரைகள் விலக வேண்டும் — முழு தைரியத்தோடும் நம்பிக்கையோடும் ஒருவன் தன்னைத் தெய்வத்திடம் ஒப்படைத்துக் கொண்டால் தெய்வம் இவையனைத்தையும் செய்து தரும். இந்த ஒப்படைப்பை ஒருவன் உடனே முழுக்கச் செய்யமுடியாவிடினும் விடாமுயற்சியின் விளைவாக அது அவனுக்குச் சித்தி பெறப்பெற அகவழியே உதவியும் துணையும் கிட்டுகின்றன. தெய்வானுபூதியும் அவன் உள்ளத்தில் வளருகிறது. மனம் ஐயுறல் குறைவதால் பணிவும் சரண் புகுவதற்கான உள்ளத் துணிவும் வளரும்பொழுது நான் சொல்லும் ஒப்படைப்பு முற்றிலும் சாத்தியமாகிறது. அப்போது இதையன்றி வேறெந்த பக்கபலமும் தேவையில்லை, தவமும் தேவையில்லை.

— ஸ்ரீ அரவிந்தர்.

# உடலுக்குச் சிறைவாசம் உள்ளத்திற்கு விடுதலை

ஸ்வாமி நிர்மலாநந்தா

சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பது போல உலகில் மகாத்மாக்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ கொடுக்கப்படும் தண்டனையோ இழைக்கப்படும் அநீதியோ முடிவில் அவர்களுக்கு மேன்மையே உண்டாக்கும். சிறுமைப் படுத்தா. கண்ணபிரான் பிறந்தது சிறையில் தானே? நிஜாமின் வரிப்பணத்தை ராமருக்கு கோயில் கட்டியதால் சிறையிடப்பட்ட பக்த ராமதாஸ் ராம தரிசனம் அடைந்ததும் சிறையில் தானே? அரவிந்தர் நாராயண தரிசனம் பெற்றதும் சிறையில்தான். இவ்வாறு பல மகாத்மாக்கள் சிறைவாசத்தினை தாங்கள் ஆத்மீகத் துறையில் முன்னேற உபயோகப்படுத்திக் கொண்டனர். அவர்களைப் போலவே சிறையினுல் நன்மையடைந்தவர்தான் "ஸ்ரீ அநுமான் பிரசாத் போதர்ஜி" என்ற மகானும். இவர் சிறையிலிருந்து வெளிவந்து தெய்வத்தொண்டு பல செய்து பாரதத்திற்கு மிகவும் நல்வழி காட்டினுர்.

அஸ்ஸாமில் 1892-ம் ஆண்டு செப்டம்பர் 17-ல் பிறந்த இவர் சென்ற 1971-ம் ஆண்டு மார்ச்சு 22-ல் அமரரானுர். அஸ்ஸாமில் ஏற்பட்ட பூகம்பத்தால் கல்கத்தாவுக்கு குடியேறிய இவருக்கு 8-வதுவயதில் ஒரு மகானின் தீட்சை கிடைத்தது. சுதந்திரப் போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட்ட இவர் அரவிந்தர் சித்தாஞ்சர்சன் தாஸ் ஆகியோரிடம் தொடர்பு கொண்டிருந்தார். வெளிநாட்டிலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வந்த வெடி மருந்துகளையும் யுத்த தளவாடங்களையும் கடத்தி வந்த இவர் முடிவில் ஒருமுறை வைஸிராய் சென்ற ரயிலை கவிழ்க்க திட்டமிட்டு பங்கேற்ற காரணத்தால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

சிறையில் மனவடக்கம் பற்றி அறியாத இவரை தனக்கு மரணதண்டனை கிடைக்குமோ, நாடு கடத்தப்படுவோமோ, தன் குடும்பம் என்ன கதியாகுமோ என்ற கவலையும் பீதியும் தூக்கத்தைக் கெடுத்து, மனவமைதியைக் கெடுத்து விசனத்தில் ஆழ்த்தியது. அந்த சமயம் இவருக்கு கடவுள் பற்றியோ ஆத்ம சிந்தனை பற்றியோ ஒன்றும் தெரியாது. அப்படியும் அவரது புண்ணிய பலத்தால் ஒருநாள் "மனவமைதிக்காக ஜபம் செய்து பார்த்தால் என்ன?" என்று எண்ணம் தோன்றவே, அவர் சிறை வார்டனை அழைத்து தனக்கு ஒரு ஜப மாலை வேண்டும், தர முடியுமா?" என்று கேட்டார். சிறை வார்டன் ஒரு பக்தன். அதேசமயம் கடமை தவருதவன். ஆகையால் அவன் "வெளியிலிருந்து எந்தப் பொருளும் அரசியல் கைதிக்குத் தர சட்டத்தில் இடமில்லை. ஆனுல் உமக்கு ஜபம் செய்ய ஒரு உபாயம் கூறுகிறேன். அதன்படி செய்து பாருங்கள்!" என்ருன். "எப்படி?" என்று இவர்வினவ காவலன் கூறினுன். "நான் இப்போது உமக்கு சொல்லும் மந்திரம் பிரும்மாவினுல் நாரதருக்கு உபதேசிக்கப்பட்டது. இதை ஜபம் செய்பவர்களின் கலி தோஷத்தை நீக்கும் தன்மையது. இது பதினுறு கலைகள் கொண்டது. எந்நிலையிலும் எவ்வருணத்தாரும் சொல்லக்கூடியது. நேர கால நியமம் இதற்கு கிடையாது" என்றவர், "அந்த மந்திரத்தைக் கேள்! ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே; ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!" என்ற மந்திரத்தைக் கூறி, ஒரு ஆணியை இவரிடம் கொடுத்து மேலும் சொன்னுர். "இந்த மந்திரத்தை ஒருமுறை சொல்லிவிட்டு சிறையின் சுவரில் ஒரு சிறு கீறல் கீறிவிடவும். அதேபோல தொடர்ந்து 108 முறைகள் சுவரில் ஆணியால் கீறிக் கொள்ளவும். பின்னர் அந்த கீறல்களையே விரலால் தொட்டுக்கொண்டு ஜபத்தைத் தொடரவும். இந்த ஜபத்தால் முடிவில் உமது மனதும் வாக்கும் ஆத்மாவில் லயித்து விடும்!" என்று கூறிவிட்டு அகன்ருர்.

அதுபோலவே இவர் தொடங்கிய ஜபத்தால் சித்தவிருத்தி நசித்து ஜபம் இருதயத்தில் குடிகொண்டு விட்டது. இதனுல் வாழ்க்கை

திசைமாறி தெய்வ போதையில் மூழ்கி கிடக்கலானார். அதனால் சிறையிலிருந்தபோதே நாரத பக்தி சூத்திரம் போன்ற பக்தி நூல்கள் பலவற்றை எழுதி முடித்தார். விடுதலைக்குப் பின்னர் கல்யாண் கல்பதரு போன்ற பத்திரிகைகளை தொடங்கிய இவர் ஆத்மீக விஷயங்களை பரப்புவதற்கென்றே அவற்றினை வெளியிட்டு வந்தார். மக்கள் உண்மையில் நலம்பெற வேண்டுமானால் ஆத்ம சிந்தனையும் பற்றுமே அதற்கு வழி என்று உணர்ந்து இவர் இறுதி வரை பல அரிய நூல்களை வெளியிட்டு மக்களுக்கு உய்ய வழிகாட்டி உதவினார். அதே நேரம் இவர் எத்தனையோ மகான்கள் அரும்பாடுபட்டும் அடையமுடியாத நிலையை எளிதில் அடைந்து விட்டார். இவருக்கு சகஜ சமாதி வெகு எளிதில் கூடிவிடும். இதை பலர் கண்டனுபவித்து இருக்கின்றனர். எல்லோராலும் எளிதில் அடைய முடியாத நிலையிது. ஆயினும் அந்நிலையில் தான் இருப்பதாக இவர் ஒருபோதும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. இல்லறத்தில் இருந்துகொண்டே செல்வச் சூழ்நிலையில் மூழ்கியவாறே இவர் ராதாகிருஷ்ண தத்துவத்தைப் பற்றி எழுதியவை உலகத்தின் தலையாய மொழிகள் பலவற்றிலும் நமது நாட்டு மொழிகள் எல்லாவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியது ஒன்றே அவர்தம் பெருமையை விளக்கும்.

"ராதா மாதவ ராஸ சுதா!" என்ற பதினாறு கவிதைகள் கொண்ட சோடசகீதம். இதில் எட்டு கவிதைகள் ராதை கிருஷ்ணனையும் எட்டு கவிதைகள் கிருஷ்ணன் ராதையைபுகழ்வதுமே. வெறும் புத்தி சாதுர்யத்தால் எழுதப்பட்டதல்ல இந்த கவிதைகள் என்பது அவற்றைப் படித்தால் தெரிய வரும். தெய்வ திருவருளில் பக்தியில் மூழ்கி உள்ளத்திலிருந்து கொட்டிய கவிதைகள் அவை. ஆகவேதான் அவற்றிற்கு உலகில் இத்தனை வரவேற்பும் புகழும் கிடைத்தது. சிவமும் சக்தியும் ஒன்றையொன்று சார்ந்திருக்கிறது. ஒன்றில்லாமல் மற்றது இல்லை என்ற உயர் தத்துவத்தையே கிருஷ்ணன் ராதை வடிவில் கண்டு மகிழ்ந்து அதிசயித்து ராதை கிருஷ்ண சம்பாஷணை வடிவில்உலகுக்கு அளித்திருக்கிறார். இப்பாடல்கள் பிருந்தாவனம் கோவர்த்தனம் போன்ற க்ஷேத்திரங்களில், கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவரைப்பற்றி எத்தனையோ கூறலாம். ஆனால் என் சிற்றறிவில் அதிகமாகவிளக்க முற்படுவது சரியல்லவென்று நிறுத்திக் கொள்கிறேன்.

நான் கண்ட மகான்களில் இவரும் முதன்மையானவர். அரவிந்தர், திருப்புகழ்மணி, சாது வாஸ்வானி, சுவாமி அபேதானந்தா போன்ற மகான்களிடம் கண்ட அனுபவத்தையே இவரிடமும்கண்டேன். கருணைநிறைந்த பார்வையும், பரந்த இருதயமும் உடல் முழுவதும் அனுமான் போன்ற ரோமமும் கொண்ட இவர்வாயினில் நா சதா அசைந்தவாறிருக்கும். பகவன் நாமாவை உச்சரித்துக்கொண்டே இருக்கும். இவர் எப்போதும் எல்லோரிடமும் சம நோக்கு கொண்டவர். இவரைப் போன்ற மகான்களால் பிரேமா பக்தி வளர்க்கப்பட்டு பாரத முழுவதும் தழைக்க ஆண்டவன் அருள் செய்வாராக!

இன்றைக்கும் போதார்ஜி வாழ்ந்த கீதா பாட்டிகா, பிருந்தாவனமாகவே விளங்கி வருகிறது. ராதாவின் ஜென்ம உற்சவம் வருடம் ஒரு முறை சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அகண்ட நாம ஜெபமும், இவரது ராதா மாதவ சோடசகீதம் பிருந்தாவனத்தில் செம்பு பட்டயத்தில் பொறித்து ஒரு ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு இராக் காலங்களில் ஏகாந்தமாக துதிக்கப்படுகிறது.

'ஆத்மஜோதி'யின் வெள்ளி விழாவிற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் சமர்ப்பணம். 'ஆத்மஜோதி' என்றென்றும் ஆதவனைப்போல ஒளிரட்டும். வெள்ளிவிழா மலரில் மகான்களின் சரிதமும், உபதேசங்களும் ஆன்மீக அருளுரைகளும் அறிவுக்கு விருந்தாக பிரசுரிக்கப்படும்.

வாழ்க 'ஆத்மஜோதி!' வளர்க ஆத்ம ஞானம்!

★

**ஈடிணையற்ற இன்பம்!**

தேவாலயங்களிலும், மரங்களின் அடியிலும் வாசஞ் செய்தல்; மான் தோல் தரித்தல், தரையில் படுத்தல், பொருளனைத்தையும் கைவிடுதல்; பற்றுகள் யாதுமின்றி இருத்தல் - இவை இன்பம் அளிக்கும் வைராக்கியங்கள். யோகாப்பியாசத்தில் இன்பம் காணலாம்; போகத்தில் இன்பம்காணலாம்; கூட்டத்தில் இன்பம் காணலாம்; கூட்டத்தினின்று விலகி ஏகாந்தத்தில் இன்பம் காணலாம். ஆனால் உறுதியான குறைவற்ற இன்பமடைவது நம் உள்ளம் ஆண்டவனிடம் இன்புறும் போதேயாம்.

— சங்கரர்.

# ஆத்ம ஜோதி

பண்டிதர்: வே. சங்கரப்பிள்ளை
தெல்லிப்பழை

ஆத்ம ஜோதியை ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி என்கின்றது ஒரு மருந்தன்ன திருவாசகம்.

இங்கே ஆத்மா பரமாத்மா. அதன் ஜோதி நித்தியமாய் வியாபகமாய் ஒரே தன்மைத்தாய் இருப்பது. அது ஒளிப்பிளம்பு.

சீவாத்மாவுக்குஞ் சோதியுண்டு. ஆனால் அதனை ஆத்ம ஜோதி என்று விதந்து கூறுவதில்லை. சீவாத்ம ஜோதி அறியாமை என்கின்ற அக இருளாகிய ஆணவமலத்தால் மூடுண்டிருக்கும் இயல்பினது. அன்றியும் பரமாத்ம ஜோதியின் கலப்பின்றிப் பிரகாசிக்க இயலாதது.

கண்ணுக்கு ஒளியுண்டு. அது புறஇருளால் மூடுண்ணும் இயல்பினது. அன்றியும் மற்றொரு ஒளியின் கலப்பின்றிப் பிரகாசிக்க இயலாதது. சூரிய ஒளியேனும் விளக்கொளியேனும் கலந்தாலன்றிப் பொருள்களைக் கண் காணமாட்டாது. ஜோதி ஒளி ஞானம் என்பன ஒரு பொருட் சொற்கள். 'ஜோதி' தமிழில் சோதியென வழங்கும்.

சீவாத்ம ஒளி கண்ணொளி போன்றது. பரமாத்மாவின் ஒளியை இன்றியமையாதது.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடன்" என்பது உமாபதி சிவாசாரியரின் அருள் வாக்கு. இங்கே ஒளி பரமாத்ம ஒளி. இருள் அறியாமை ஆகிய ஆணவ இருள். ஒன்றே என்பது சீவாத்மாவே. ஆணவம் - அணுப்படுத்துவது. பரமாத்ம ஒளியோடு சேர்ந்து எங்கும் வியாபிக்கத்தக்க ஆத்ம ஒளியை அணுப்படுத்திக் கொண்டிருப்பது ஆணவ இருளே.

'இருள் வெளி இரண்டுக் கொன்றிடம்' என்ற ஔவை வாக்கில், வெளி என்ற பரமாத்ம ஒளியை வெளிசெய்தலின் ஒளி வெளியெனப்பட்டது. 'நால்வர்க் கொளி நெறி காட்டினை' என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

இருள் ஒளியை அறியாது, அஃதாவது ஒளி முன் இருள் நில்லாது. ஆகவே இருள் ஒளியை அறியாது. இரவு பகலை அறியாது. பகல் இரவை அறியாது. இருளோடு இருளாயும் ஒளியோடு ஒளியாயும் சார்ந்ததன் வண்ணமாயிருப்பது சீவாத்மா. அது பளிங்கு போன்றது. அதனால் அது சதசத் எனப்படுகின்றது. சத்தோடு சேர்ந்து சத்தாயும் அசத்தோடு சேர்ந்து அசத்தாயும் இருப்பதென்பது கருத்து. சத் 'ஒளி' அசத்து-சத்தல்லாதது.

சத்தாகிய ஒளி அருள். அது சித்து. அசத்தாகிய ஆணவம், இருள். அது சடம். சித்து அறிவு. சடம் அறிவற்றது.

சீவாத்மா களிம்போடு கூடிய செம்பு போன்றது. அநாதியிலேயே ஆணவ இருளால் மூடுண்டு குருடுபட்டுக் கிடக்கின்றது. தன்னகத்தேயுள்ள அருளொளியை அது அறியாது. தன்னையே அறியாது. அங்ஙனமாக அருள், ஒளியை எங்ஙனம் காணவல்லது? "குருடும் குருடும் குருட்டாட்டமாடி . . . குழிவிழும்" என்பர் திருமூலர்.

ஆணவஇருள் ஆலகால விஷத்துக் கொப்பானது. ஆதிசேடனுக்கு ஆயிரந்தலை. ஆயிரந்தலையாலும் நஞ்சு காலுவதுபோல ஆணவ இருளும் பல தலைப்பட்டு நஞ்சைக் கான்று கொண்டே இருக்கும். எங்ஙனமாயினும் ஆணவ இருள் சடமேசடம். ஞானசத்தியாகிய திருவருள் ஒளியோடு போர் தொடுத்தற்கு ஒரு காலும் இயலாது. ஆயினும், சீவாத்மாவின் அகக்கண்ணைத் திறக்க ஒட்டாது கவிந்து கொண்டே இருக்கும்.

சிற்சத்தியாகிய அருள் ஒளி, குருடுபட்ட சீவாத்மாவின் அகக்கண்ணைத் திறக்கச் சதா முயன்று கொண்டே இருக்கின்றது. அதற்குத் "தருஞ்சத்தி" என்பர் உமாபதிசிவம். உபகரிக்கும் சத்தி என்பது அதன் பொருள். இந்தச் சரீரம் அச்சத்தி உபகரித்ததே. கண்ணுக்கு இரவிற் கிடைக்கும் விளக்குப்போல சீவாத்மாவுக்கு இச்சரீரம் ஆணவ இருளிற் கிடைத்திருக்கிறது. இவ்வுபகாரத்தை, "விடிவாமளவும் விளக்கனையமாயை" என்று திருவருட்பயன் கூறும். இங்கே மாயை என்றது மாயாகாரியமாகிய இச்சரீரத்தையே.



# ஆடும் தெய்வம்

புலவர் : சி. விசாலாட்சி

தோற்றந் துடியதனிற் றேயும் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார — மூற்றமா
யூன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

என்பது ஆடுந் தெய்வமாகிய சிவபெருமானுக்கு இலக்கணமாகும். ஆடுந் தெய்வமாகிய நடராஜப் பெருமான் பக்தர்களைப் பரவசப்படுத்த, ஐந்தொழில்களை நடத்தவே ஆடுகின்ருன்.

உலகின் முழுமுதற் பொருளாகிய சிவபெருமானுக்கு, வடிவங்கள் மூன்று. அருவத் திருமேனி, அரூபத் திருமேனி, உருவத் திருமேனி என்பவைகளே அம்மூன்று திருமேனிகளாகும்.

பாலில் நெய் போலவும், விறகில் தீ போலவும் அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாக விளங்கும் சிவபெருமான் பக்தர்களின் பக்குவ நிலையை வளர்த்தற் பொருட்டு வேண்டியவேண்டிய நேரங்களில் இம்மூன்று திருமேனிகளையும் எடுக்கின்ருன்.

சிவலிங்க வடிவம் அருவ வடிவமாகும். சிவலிங்க வடிவமாகச் சிவபெருமான் இருக்கும் போது, தன்னை வணங்கித் துதிக்கும் அன்பர்கட்கு, அநாதி காலந்தொட்டு ஆன்மாவோடு விளங்கும் ஆணவமென்னும் மாயிருளை நீக்கி ஞானவொளியைக் கொடுப்பார்.

அரூப வடிவமென்பது, ஒளிப் பிளம்பாகச் சிவபெருமான் விளங்கும் வடிவம். இவ்வடிவத்தில் தன்னை வழிபடும் அன்பர்க்கு எம்பெருமான், அநாதியாகவுள்ள பலதிற ஆன்மாக்களின் மலங்களை நீக்கி ஞான சூரியனுக விளங்குவார் சிவபெருமான்.

உருவம் என்பது சிவபெருமான் தூக்கிய திருவடிவத்துடன் விளங்குவது. பரம குருவாக இருந்து தன் உருவத் திருமேனியைக் காட்டுவார் எம்பெருமான்.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும், சிவபெருமான் திருநடனம் செய்வதன் மூலம் உலகில் இயற்றுகின்ருர். இவற்றை வட மொழியில், சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்று கூறுவார்கள்.

முதற் காரணம் மாயை. முதற் காரணமாகிய மாயையிலிருந்து தனு, கரண, புவன போகங்களைத் தோற்றுவித்தல் படைத்தலெனப்படும். தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை நிலைநிறுத்தல் காத்தலெனப்படும். தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை முதற் காரணமாகிய மாயையுள் ஒடுக்குதல், அழித்தல் எனப்படும்.

ஆன்மாக்களின் பாசத்தை நீக்கிச் சிவத்தைக் காட்டல், அருளல் எனப்படும். நல்வினை, தீவினை, இருவினைப் பயன்களை, ஆன்மாக்களைக் கொண்டு நுகரச் செய்தல் ஆக்கல் எனப்படும்.

இத்தகைய ஐந்தொழில்களையும் ஆடுந் தெய்வமாகிய நடராஜப் பெருமான், ஆன்மாக்கள் பிறவிப் பிணியினின்றும் நீக்குவதற்காகவே செய்கின்ருர்.

''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று மனவாசகங் கடந்த மணிவாசகப் பெருமான் இறைவனின் பாதத்தைப் புகழ்ந்துள்ளார்.

எனவே ஐந்தொழில்களையும் நடத்தும் இறைவனின் திருவடிகள், மக்களின் துயரைப் போக்கி இன்பமும் புகழும் அளிப்பதால், சிவபெருமானின் திருவடிகளை மனதில் வழுத்தித் தியானிப்போமாக!

# பழமொழி அடிப்படையில் எழுந்த தனிப்பாடல்கள்

பேராசிரியர்: வ. பெருமாள் எம். ஏ., பி.டி
எம்.ஆர்.ஏ.எஸ்., தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்கவயல் (K.G.F) மைசூர் மாநிலம்

பழமொழியைக் கருத்துக் கருவூலமாகவும் அடிப்படையாகவும் கொண்டு தமிழில் எழுந்த பாடல்கள் பல. அவை எல்லாவற்றையும் ஆராய இங்கு இடம் தராது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் பழமொழிக் கேற்பச் சிலவற்றை மட்டும் ஈண்டு காண்போம்.

சைவசமயப் பெரியார்கள் ஆன்மீக உண்மைகளையும் மெய்ப்பொருள் கருத்துக்களையும் இனிது விளக்கத் தத்தம் பாடல்களில் மிகப் பொருத்தமான பழமொழிகளைக் கையாண்டுள்ளனர் என்பதைப் பன்னிரு திருமுறைகளைப் பழமொழிக் கண் கொண்டு ஆராய்ந்தால் நன்கு புலனாகும்.

## அப்பர்.

அப்பர் என்னும் அன்புப் பெயராலும் தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர் என்னும் சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படும் திருநாவுக்கரசர் சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர். இவர் அடிமை (தாச) மார்க்கத்தைப் பின்பற்றியவர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் 4, 5, 6 ஆகிய மூன்று திருமுறைகளும் அப்பர் பாடிய தேவாரப் பதிகங்கள் அடங்கியவை. நான்காம் திருமுறையில் 5ம் பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழி வைத்துப் பாடியுள்ளார். அவர் சிவபெருமானை விடுத்துப் பிற சமயத்தில் (சமண சமயத்தில்) உழன்ற தம் செயலுக்காகப் பெரிதும் மனம் வருந்திப் பாடும் போது 'கரும்பு இருக்க இரும்பு கடித்து இளைத்தது போல் ஆனேன்' என்று குறிப்பிடுகின்றார். 'கரும்பு இருக்க இரும்பு கடித்தது போல' என்னும் பழமொழியே அவர் பாடலுக்கு உயிர்ஊட்டுகின்றது. இதோ அப்பர் பாடல்:-

"மறுத்தானோர் வல்லரக்கன் ஈரைந்து
முடியினொடு தோளும் தாளும்
இறுத்தானை எழில்முளரித் தவிசின் மிசை
இருந்தான்றன் தலையில் ஒன்றை
அறுத்தானை ஆரூரில் அம்மானை
ஆலாலம் உண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க
இரும்புகடித் தெய்த்த வாறே"

*(4 ஆம் திருமுறை — திருவாரூர் பதிகம் — 10)*

அப்பர் தம் உள்ளக் கருத்தை இப்பழமொழி மிகத் தெளிவாக உணர்த்துவதை அறியலாம்.

## திருஞான சம்பந்தர்

அப்பர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு சைவ சமயக் குரவர் திருஞானசம்பந்தர். இறை வழிபாட்டில் இவர் கடைப்பிடித்த நெறி தந்தை மைந்தன் நெறியாகும். (சற்புத்திர மார்க்கம்). நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பியவர் ஞானசம்பந்தர். இவர் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளில் இடம் பெற்றிருக்கின்றன. இவர் சில பாடல்களில் பழமொழியைக் கருத்துக் கருவூலமாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

'நெஞ்சமே! அனைவரும் வணங்கத் தக்க ஆரூர் இறைவனை வணங்குவாயாக. தேன் உண்டு இன்பமாக வாழ்கின்ற வண்டு போல் நீ வாழ விரும்புகிறாய். நீ பாம்பின் வாய்க்குள் அகப்பட்ட தேரையைப் போல் இருக்கின்றாய்' என்று ஞானசம்பந்தர் பாடியுள்ளார். இதோ அவர் பாடல்:-

"செடிகொள்நோ யாக்கையம் பாம்பின் வாய்த்
தேரையாய்ச் சிறுபறவை
கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற
லாமென்று கருதி னாயேல்
முடிகளால் வானவர் முன்பணிந்து
அன்பராய் ஏத்து முக்கண்
அடிகள்ஆ ரூர்தொழுது உய்யலாம்
மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே".

*(திருவாரூர் 2ஆம் திருமுறை — 6)*

இப்பாடலில் அமைந்துள்ள 'பாம்பின் வாய்த் தேரை' என்னும் பழமொழி இன்றும் உலகவழக்கில் இருப்பதைக் காணலாம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சகமார்க்கநெறியில் முழுகி இறைவனுக்குத் தோழராக விளங்கியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவர் பாடல்கள் 7ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. செல்வம், இளமை, யாக்கை ஆகிய மூன்றையும் கொண்டது வாழ்க்கை. இவ்வாழ்க்கை நிலையற்றது அழிவது உறுதி. அறம் புரிந்து இறைவன் திருப்பெயரைச் சொல்லி பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடத்தல் வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். இவ்வறிவுரை பாடலின் முதலடி பழமொழியாகவே விளங்குவதைக் காணலாம்.

''வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழா(து) அறஞ் செய்மின்தடங் கண்ணான்மல
ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரம் எனீரே''

(7ஆம் திருமுறை திருக்கேதாரம் - 1)

இப்பாட்டில் முதலிடம் பெற்றுள்ள 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்பது எல்லோரும் நன்கு அறிந்த பழமொழி.

## மாணிக்கவாசகர்

தித்திக்கும் திருவாசகத்தை ஆக்கித்தந்த பெருமை மாணிக்கவாசகரைச் சேரும். சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகர் இறைவழிபாட்டில் ஞான மார்க்கத்தைப் (சன்மார்க்கம்) பின்பற்றியவர். அவர் பழிமொழியில் ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் உள்ளவர் என்பதை அவர் யாத்த திருவாசகமும் திருக்கோவையாரும் மெய்ப்பிக்கின்றன. இவை இரண்டும் எட்டாம் திருமுறையில் அடங்கியுள்ளன. இவர் காலம் 9ஆம் நூற்றாண்டு.

'இருதலைக் கொள்ளி எறும்பு' என்பது மக்களிடையே பெருவழக்கில் உள்ள பழமொழி. இருதலைக் கொள்ளி எறும்பைவிட இருதலைக் கொள்ளி உள்ளெறும்பின் நிலை மிகவும் வேதனைக்குரியது. இருதலைக் கொள்ளி எறும்பாவது கோலின் முனை வாயிலாக வெளியேற முடியாவிட்டாலும் நடுவிலாவது வெளியேறித் தப்பித்து விடலாம். ஆனால் மூங்கில் கோலுக்குள் அகப்பட்ட எறும்பு மூங்கில் கோலின் இரு முனைகளிலும் தீப்பற்றிக் கொண்டால் எவ்வாறு தப்பித்து வெளியேறும்? 'நான் உன்னைவிட்டுப் பிரிந்து இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பைப் போல் தவிக்கின்றேன்' என்று மாணிக்க வாசகர் இறைவனிடம் தன் குறையைக் கூறி முறையிடுகின்றார்.

கருவூர்த் தேவர், வேணாட்டடிகள், சேந்தனார் ஆகியோர் திருப்பாடல்கள் 9ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அவர்தம் பாடல்களில் சில பழமொழியை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

திருவிடை மருதூரில் எழுந்தருளியுள்ள இறைவன் நெருப்பில் செங்கல் இட்டது போலத் தமக்கு அருள் பொழிந்தார் என்று கருவூர்த்தேவர் பாடியுள்ளதை ஈண்டு நோக்கத் தக்கது.

''வையவாம் பெற்றம் பெற்றமே துடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாம் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பெண்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறு நூறு ஆயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர் கோன்
மருவிடம் திருவிடை மருதே''

(திருவிசைப்பா . 8)

பாதகத்துக்குப் பரிசு வைத்தான் என்னும் பழமொழியைப் பயன்படுத்தி இறைவன் சண்டீசுவர நாயனார்க்குப் பரிசளித்த புராண வரலாற்றை இனிது விளக்குகின்றார் சேந்தனார்.

''தாதையைத் தாளற வீசிய சண்டிக்கில்
அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே''

திருமூலர் இயற்றிய திருமந்திரம் 10ஆம் திருமுறையில் அமைந்துள்ளது. உயர்ந்தோர் கூறிய உண்மைகள் தூய பாலில் நெய்

கலந்ததைப் போல இருக்கும் என்ற பழமொழியைப் பயன்படுத்தி இனிது விளக்கும் திருமூலர் திறன் பாராட்டி மகிழத்தக்கது.

''புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போலத்
திரை அற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே.
(திருமந்திரம் - முதல் தந்திரம் - 22)

பன்னிரு திருமுறையில் அமைந்துள்ள பல பாடல்கள் பழமொழியை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதை நாம் சுருக்கமாக இங்குக் கண்டோம்.

உமாபதிசிவம் தாம் பாடிய சேக்கிழார் புராணத்தில் ஒரு பாடலில் 5 பழமொழிகளைத் தொகுத்து உரைப்பதைக் காணலாம். சைவ நூல்கள் பல இருக்க அநபாயன் சிந்தாமணியையே மெய்ந் நூலாகக் கொண்டு அதனையே போற்றிவந்ததை வன்மையாகக் கண்டிக்கும் வகையில் உமாபதிசிவன் பாடியுள்ளார். அப்பாடலில் 5 பழமொழிகள் தொடர்ந்து இடம் பெற்றிருப்பது நோக்கத்தக்கது. இதோ அப்பாட்டு:-

''கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்று
உலகிலுளோர் சிலர்கற்று நெற்குத்தி உண்ணாது
உமிக்குத்திக் கைவருந்திக், கறவை நிற்க
மலடுகறந்து உளம்தளர்ந்து, குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில் விழுந்து அளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று,
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார்''

இப்பாட்டைப் பழமொழிப் பாட்டு என்று துணிந்து கூறலாம்.

திருவாசகத்தேனில் பெரிதும் ஈடுபட்டுச் சுவைத்து மகிழ்ந்து அனுபவித்த திருவருட் பிரகாச வள்ளலார் தம் ஆத்மீக அனுபவத்தையும் மெய்ப்பொருள் உண்மைகளையும் இனிது விளக்கப் பழமொழிகளையே பயன்படுத்தியுள்ளார் என்பது அறியத்தக்கது.

''ஆற்றில் ஒரு காலும் அடங்காச் சமுசாரச்
சேற்றில் ஒரு காலும் வைத்துத் தேய்கின்றேன்''
(திருவருட்பா - விண்ணப்பக் கலிவெண்பா - 408)

கவிச்சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த கம்பர் உயர்ந்த கருத்துக்களையும் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் உணர்த்தும் போது பழமொழிகளையே கருத்துக் கருவூலமாகக் கொண்டார் என்பதை அறியலாம். விசுவாமித்திர முனிவர் தயரதன்பால் சென்று தாம் இயற்றும் தவ வேள்விக்கு இடையூறாக இருக்கும் கொடியோரை விலக்க இராமனைத் துணையாக அனுப்பி உதவுமாறு கேட்டார். முனிவர் சொல்லை கேட்டதும் தயரதன் அடைந்த வேதனையின் ஆழத்தை 'புண்ணிலாம் பெரும்புகழையிற் கனல் நுழைந்தால் என' வருந்தினன் என்றும் 'கண்ணிலான் பெற்று இழந்தான் என உழந்தான்' என்றும் பழமொழிகளையே பயன்படுத்தியிருப்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

தமிழில் பாரதத்தை யாத்த வில்லிபுத்தூராரும் தக்க இடங்களில் பழமொழிகளையே அடிப்படையாகக் கொண்டு தம் கருத்துக்களை விளக்கியிருக்கிறார். கௌரவரில் மூத்தவனாகிய துரியோதனன் கண்ணன் சொல்லையும் கேட்கமாட்டான். பொறுமைக்கு வேந்தனாகிய தருமன் உரைத்ததையும் கேட்கமாட்டான் என்று காண்டீபன், துரியோதனனின் இழிதகைமையைச் சுட்டிக்காட்டி இடித்துரைக்குங் காலைப், பழமொழிகளை அடுக்கடுக்காகக் கையாளுகின்றான்.

''பொன்னுருந் திகிரியினன் போனாலும்
பொறை வேந்தன் புகன்ற வெல்லாம்
சொன்னாலும் அவன் கேளான் விதிவலியாற்
கெடுமதிகண் தோன்றா தன்றே
எந்நாளும் உவர் நிலத்தில் நெல்முளைவித்
திடினும் விளை வெய்தி டாது
பன்னகந் தனக்கு அமிர்தம் கொடுத்தாலும்
விடமொழியப் பயன்கொ டாதே''
(கிருஷ்ணன் தூது - சருக்கம் - 25)

கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது. உவர் நிலத்தில் நெல் முளைவித்தாலும் விளையாது. பாம்புக்குப் பால் (அமிர்தம்) வார்த்தாலும் நஞ்சையே கொடுக்கும். முதலிய மூன்று பழமொழிகள் ஒரே பாட்டில் அமைந்திருப்பதைக் காணலாம்.

தமிழில் நாடக இலக்கியங்கள் யாத்த அறிஞர்கள் இடத்திற்கேற்பத் தக்க பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளனர். விரிவஞ்சி சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்! சீர்காழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகத்தில் இடம்பெற்றுள்ள பழமொழிகள்:—

பெண் என்றால் பேயும் இரங்குமே.
ஊமைகண்ட கனவாக உள்ளடக்கினேனே.
தம்பி உடையவன் படைக்கு அஞ்சான்.
வெண்ணெய் திரண்டு வரச்சே தாழி
உடைந்தாற் போல.
தன்வீட்டு விளக்கென்று முத்தம் இடுவாருண்டோ
நரிவாலைக் கொண்டோ ஆழம் பார்ப்பது.
மந்திரத்திலே மாங்காய் விழுமோ.
புலி பசித்தாலும் புல்லைத் தின்னுமோ.

திருகூடராசப்பக் கவிராயர் இயற்றியுள்ள திருக்குற்ருலக் குறவஞ்சியில் பின்வரும் பழமொழிகள் அமைந்துள்ளன:—

கக்கத்தில் இடுக்குவையோ வெட்கத்தை அம்மே.
கொடிக்குச் சுரைக்காய் கனத்துக் கிடக்குமோ.
ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொருரோ.
ஆசாரக் கள்வர்போல் நாரை திரியுது.
ஆற்றில் போட்டுக் கனகுளத்தில் எடுப்பது.

மனேன்மணியத்தை யாத்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மிகப் பல பழமொழிகளைத் தம் நாடகத்தில் பயன்படுத்தியிருக்கின்ருர். கீழ்க் கண்டவை குறிப்பிடத்தக்கவை:—

நெருப்பையும் கறையான் அரிக்குமோ
எடுப்பார் கைப்பிள்ளை
பூவையை வளர்த்துப் பூனைக்கு ஈயவோ
தாய்க்கு ஒளித்த சூலோ
நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால்
பிடித்தால் கற்றை விட்டால் கூளம்
அங்கைப் புண்ணுக்கு ஆடியும் வேண்டுமோ
கரும்பு கைப்பது வாய்க் குற்றமே
வெளுத்ததெல்லாம் பாலா?
கெஞ்சிடின் மிஞ்சுவர், மிஞ்சிடிற் கெஞ்சுவர்.
கள்ள மனந்தான் துள்ளும்
ஜனமொழி தெய்வமொழி
இலவு காத்த கிளி
கெட்டார்க்கு உலகில் நட்டார் இல்லை.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை இயற்றிய சர்வ சமய சமரசக் கீர்த்தனங்களில் பழமொழிகள் கருத்துக் கருவூலமாகப் பரந்து கிடக்கின்றன. சிலவற்றை இங்கு காணலாம்.

கரும்பு தின்னக் கைக்கூலி ஏனே?
செத்தால் தெரியுமே செட்டியார் வாழ்வு
பணமே உன்னல் என்ன குணமே
வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
அழுதழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்
எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்.

கீழ்க்கண்டவை பள்ளுவில் இடம் பெற்றுள்ள பழமொழிகள்:—

காலம் செய்வது கோலம் செய்யுமோ?
மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையும் காட்டி
வீணில் மெல்லும் வாயில் அவல் காணின்
என்செய்வார்
நாவிலே ஒன்று நெஞ்சிலே ஒன்று.

இவ்வாறு தமிழ்மொழியில் பல்வேறு காலங்களில் தோன்றிய எண்ணற்ற தனிப் பாடல்களும் இலக்கியப் பகுதிகளும் பழமொழியையே மூலக் கருவாகக் கொண்டு விளங்குகின்றன என்பதைக் கண்டோம். இப்பழமொழிகளில் சில இலக்கியப் பழமொழிகளாகவும், இன்னும் சில உலகப் பழமொழிகளாகவும் இருப்பதைக்காணலாம். சில பழமொழிகளைப் பல்வேறு புலவர்கள் பயன்படுத்தியிருப்பதால் அவற்றை மக்கள் நன்கு அறிந்த பழமொழிகளாகக் கருதலாம். எளிய பழமொழிகளைக்கொண்டு உயர்ந்த கருத்துக்களை விளக்கும் திறன் தமிழ்ப் புலவர்களிடம் அமைந்துள்ள சிறப்பியல்பாகும்.

திருக்குறளுக்கு அடுத்தாற்போலத் தமிழில் மிகச் சிறந்த நீதி நூலாகக் கருதப்படுவது நாலடியார். ஏறக்குறைய கி. பி. 7-ம் நூற்ருண்டில் வாழ்ந்த சமண முனிவர்களால் இயற்றப்பெற்ற 400 பாடல்களைக் கொண்ட இந்நூல் நீதிக் களஞ்சியமாக விளங்குவதைக் காணலாம். துளி குற்றமும் இல்லாத மனிதனே, பொருளோ இவ்வுலகத்தில் இல்லை. நெல்லிலும் உமியுண்டு; நீரிலும்நுரையுண்டு; பூவிலும் மணமற்ற இதழ் உண்டு. இக்கருத்தை நாலடியார் விளக்குகின்றது.

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக்கு உமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கும் உண்டு. (நாலடியார் 221)

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
முத்திலும் சொத்தையுண்டு பவளத்திலும் பழுதுண்டு.

ஆகிய இரு பழமொழிகளின் கருத்துக்களும் இப்பாட்டில் அடங்கியிருப்பதைக் காணலாம்.

'கொடுத்தால் நல்லவன் கொடுக்காவிட்டால் கெட்டவன்' என்பது மக்களிடையே பெரு வழக்கில் உள்ள பழமொழி. இப்பழமொழிக் கருத்தை ஒத்த கருத்துடைய பாடல் தமிழில் இருப்பது பலரும் அறிந்ததே.

போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடின்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியர் ஆவரே!

ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, கொன்றை வேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, நன்னெறி, நீதிநெறிவிளக்கம், நீதிவெண்பா, அறநெறிச்சாரம் முதலிய நீதி நூல்களில் வரும் கருத்துக்கள் அனைத்தும் பழமொழிக் கருத்துக்களைக் கொண்டவையாயும் பழமொழிக் கருத்துக்களை ஒத்தவையாயும் இருப்பது தெளிவு. இவற்றுள்சில பழமொழிகளாகவே ஆகிவிட்டன.

'அறஞ்செய விரும்பு' (ஆத்திசூடி) ஒளவையார் வாக்காக இருந்த போதிலும் பழமொழியாகவே ஆகிவிட்டது.

துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்பது அனைவரும் அனுபவத்தில் கண்ட உண்மை. அந்த அனுபவ உண்மையே 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்னும் பழமொழியாக காட்சியளிக்கின்றது. இப்பழமொழிக் கருத்தை விரித்துரைத்துத் தெளிவாக்கி விளக்குவது போல் அமைந்துள்ளது இராமச்சந்திரக் கவிராயர் பாடியுள்ள பாடல்.

இதோ பாடல்:

''ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகு தென்றுவிதை கொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தன் உழுதுண்ட கடமைகேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென்றுரே.''

இவ்வாறு பழமொழிக் கருத்துக்களைக் கொண்ட பாடல்கள் மிகுதியாகத் தமிழில் உண்டு.

★

# நெய்! சந்தனக்கட்டை!!

''இவ்வளவு பசுவின் நெய்யையும் விலை உயர்ந்த சந்தனக் கட்டைகளையும் ஹோமத் தீயில் போட்டு ஏன் பாழாக்கவேண்டும்?'' என்றுபரிதாபப்படுகிறீர்கள். இது எனக்குத் தெரியாததல்ல. இந்தப் பேச்சு வெறும் வரவு – செலவு மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றது. கூட்டல் கழித்தல் என்னும் கணக்குச் சிக்கல்களில் அகப்பட்டுக்கொண்டால், அடைய முடியாத திருப்தியை – ஆனந்தத்தை எவ்விதம் அடைவது? இவர்களுக்கு நெய்வேண்டும்; லாப நஷ்டத்தை எடை போட்டுக் கணக்கிட வேண்டும்; ஏட்டில் எழுத வேண்டும். சந்தனக்கட்டை வேண்டுமே தவிர, அந்த நெய்யாலும் சந்தனக்கட்டையாலும் பெறக்கூடிய ஆனந்தம் வேண்டியதில்லை. இந்த யாகம் இங்கே கூடியிருக்கும் இருபதினுயிரம் மக்களுக்கு அளிக்கும் ஆனந்தத்திற்கு என்ன விலை? அந்த விலைக்கு எத்தனை நெய் டின்கள் வாங்கலாம்; கணக்குப் போடுங்கள்.

ஹோமாக்கினியில் நெய் ஊற்றுகிருர்களே என்று வருத்தப்படுபவர்களை ஒரு கேள்வி கேட்கலாம். பிறந்தது முதல் இன்று வரை நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு மூட்டை அரிசியை பாழாக்கியிருக்கிறீர்கள்? யோசியுங்கள்! எவ்வளவு டின் நெய் உங்கள் வயிற்றில் விழுந்திருக்கின்றன? அதற்குப் பலனாக நீங்கள் என்ன படைத்தீர்கள்? உங்களுக்குத் தற்போது ஆனந்தம் இருக்கிறதா? மனச்சாந்தி அமைந்திருக்கிறதா? உங்களைச் சேர்ந்தவர்களுக்கு சுகம், சாந்தி, சந்தோஷம் உங்களால் கிடைத்திருக்கிறதா? இந்த யக்ஞத்தைக் கண்டு களித்திருக்கும் மக்களை கணக்கிடுங்கள். போகட்டும், நெய்க்கும், சந்தனக் கட்டைக்கும் யாரையும் சந்தா கேட்டதில்லையே! பின் வருத்தம் எதற்காக? நானும் என்னைச் சேர்ந்தோரும் மகிழ்ச்சி அடைகிறேமே, அதற்காகவா? பிறருக்கு இந்தப் பேச்சு எதற்கு?

துச்சமான உலக விஷயங்களில் மனம் அகப்பட்டுக் கொண்டிருப்பவரின் கொள்கை அது! ஆன்மீக ஆனந்தத்தின் கொள்கை இது!! நெய்க்கும் சந்தனத்திற்கும் வாதாடும் கொள்கை அது! எண்ணிலா மகிழ்ச்சியின் அவா இது!!

— பகவான் சத்தியசாயி பாபா

# ஒன்றாகி நிற்கும் நாள் எந்நாளோ?

பி. வெங்கடேசன்
ஆசிரியர்: மறுவாழ்வு
அமைப்பாளர்; யோகாசன ஆலயம், சென்னை.

நீரில் நீந்தத் தெரியாத செல்வந்தன் ஒருவன் ஒருநாள் கடற்கரையருகே நின்றுகொண்டு, புரண்டுவரும் அலைகளின் அழகைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான். அதுபோது, கடற்கொள்ளைக் கூட்டத்தினர் சிலர், சிறு கப்பலொன்றில் அவ்வழியே வந்தனர். விலையுயர்ந்த கற்கள் பதித்த மோதிரங்களை விரல்களில் அணிந்து கொண்டு ஒய்யாரமாக நின்றுகொண்டிருக்கும் அச்செல்வந்தனைக் கண்டனர். கண்டவுடன் அவர்கள் உள்ளத்தில் கபட எண்ணங்கள் தோன்றிவிட்டது. சிறிது நேரத்தில், அவனைத் தூக்கிக் கப்பலில் போட்டுக்கொண்டு, வெகுதூரம்வரை சென்றனர். வழியில் அவனிடமிருந்த ஆடை ஆபரணங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. அத்துடன் அவர்கள் வேலை முடிந்துவிடவில்லை. "டேய், இவனைக்கடலிலே தூக்கி எறிஞ்சிடுவோம் - இல்லேன்னு, ஊருக்குப்போய் நம்மைப் பத்தி துப்பறியும் போலீசுக்கு சொல்லிடுவான்" என்று கொள்ளைக் கூட்டித்திலிருந்து ஒருவன் படபடப்புடன் பேசினான். இதைக்கேட்டமாத்திரத்தில், செல்வந்தருக்கு ஒரே திகிலும் மயக்கமும் சோர்வும் ஏற்பட்டுவிட்டது.

"நமக்கு நீச்சல் தெரியாது, ஆகவே உடனே மூழ்கிவிடுவோம், கடல் பிராணிகள் நம்மைத் தின்றுவிடப்போகின்றன" என்ற பயங்கர எண்ணங்கள் மாறி மாறித் தோன்றியதும் அச்சுழலில் வீழ்ந்து மூழ்கினான் அவன். அதன் பலன் அவனது உடலின் இரத்தம் உறையத் தொடங்கியது. சற்றுநேரத்திற்கெல்லாம் மீண்டும் பேச்சுக்குரல் கேட்டது.

"டேய் இவனை சும்மா தூக்கி எறிஞ்சா, பிணம் மிதக்க ஆரம்பிச்சிடும், அதனாலே அந்தப்பெரிய இரும்புத்துண்டை அவன் நெஞ்சோடே சேத்துக்கட்டி, கடலிலே தூக்கிப் போட்டுடலாம்" என்றான் ஒருவன்.

"அதுதாண்டா சரியான யோசனை" என்றான் மற்றொருவன். பின் இரண்டு மூன்றுபேர்கள் அச்செல்வந்தனை அணுகினர். அவனது கையையும் காலையும் கயிறால் இறுக்கிச்சேர்த்து கட்டினர். உடனுடன் சேர்த்துக்கட்ட பெரிய இரும்புத்துண்டு ஒன்றை ஒருவன் நகர்த்தி வந்தான்.

"டேய், இவன் அதுக்குள்ளே செத்துப் போயிட்டாண்டா" என்று கத்தினான் ஒருவன். "அப்படியா, நம்ப ஒண்ணும் செய்யலையே, எப்படிடா செத்தான்" என்று ஒருவன் சற்று ஆராய்ச்சியுடன் பேசினான். "அதுதாண்டா தெரியலை" என்றான் மற்றொருவன்.

அச்செல்வந்தனின் மனமே பேயாக—எமனாக மாறி அவனைக் கொன்றுவிட்டது என்ற உண்மையை அவர்களில் எவரும் புரிந்து கொள்ளவில்லை.

மேற்கண்ட நிகழ்ச்சி உண்மையாக நடந்தும் இருக்கலாம், நடக்காமலும் இருக்கலாம். ஆனால், உண்மையாகவே நடந்த நிகழ்ச்சி ஒன்று உளது. ஆம்! அதுதான் திருநாவுக்கரசரின் (அப்பர் சுவாமிகள்) வாழ்க்கையில் நடந்தது.

சைவ சமயத்தைத் தழுவிய திருநாவுக்கரசர் அதைத் துறந்து தம் சமயமாகிய சமண சமயத்தை ஏற்க மறுக்கின்றார் என்று தெரிந்ததும், ஓர் சமண அரசன் மிகுந்த கோபங்கொண்டு இவரைக் கல்லோடு பிணைத்துக்கட்டி கடலில் தூக்கி எறியுமாறு பணித்தான். அரசன் ஆணைப்படி, அப்பரடிகள் அவ்வாறே கடலில் கல்லோடு பிணைக்கப்பட்டு, வீசஎறியப் பட்டார். இங்கு முன் நிகழ்ச்சியில் குறிப்பிட்ட செல்வந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் உள்ள வேறுபாட்டினை சிறிது நோக்குவோம்.

இருபத்தி ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி பண்ணியிருக்கிற "ஆத்ம ஜோதி"யாண்டும் அமரஜோதியாய் இருந்து அன்பர்கள் உள்ளத்தில் அருள் விளக்கை ஏற்றி வைத்து வருவதாகுக!

— சித்பவானந்தர்

ஸ்ரீ இராமக்கிருஷ்ண தபோவனம்,
திருப்பராய்த்துறை,
திருச்சிராப்பள்ளி.

அப்பர் சுவாமிகள் தான் கடலில் தூக்கி எறியப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ முன் குறிப்பிட்ட செல்வந்தரைப் போல் மனம் நொந்து திகிலுற்ருரா? மயக்கமுற்ருரா? மனப் பேயின் அடிமையானரா? மரணமடைந்தாரா? என்ருல், இல்லை! இல்லை!! இல்லை!!! என்றே கூறலாம். பின் என்ன ஆனர்? ஆனந்தக் கடலின் மேல் மலரணையில் மிதந்து துயில் கொண்டார். இது நம்பத்தகுந்ததா? இப்படியும் நடக்குமா; எனலாம். நிச்சயம் நடக்கும்! உறுதியாக நம்பலாம்! எப்படி?

முதலின்கண் உள்ளத்தில் உண்மை கொள்கையில் உறுதி, அஞ்செழுத்தில் ஆழ்ந்தபற்று இவைவேண்டும். "ஓம் நமசிவாய" என்ற திருமந்திரம்தான் நமக்கு உற்ற துணை—உண்மையான துணை என முழுமையாக நம்பி அந்நெறியில் முறையாக நின்று அதனிடத்தில் சரணடையவேண்டும். இதனுல், நடப்பவை யாவற்றிலும் நலமே நிறைந்திருக்கும்.

கடலில் தூக்கி எறியப்படும் நேரத்தில் திருநாவுக்கரசர் அருளிய பாடல் ஒன்றினை அனைவரும் மனம் ஒன்றிப் படித்து உணர்வோம்.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற அருட்பாடலை உன்னிப்பாருங்கள். ஒருமுறையல்ல — இருமுறையல்ல — ஓராயிரம் ஒரு லட்சம் முறையல்ல ஒருகோடி முறையுமல்ல—கோடிக்கும் கோடி முறைகள் உங்களால் முடிந்த வரை, திரும்பத் திரும்ப நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, பாடுங்கள். அப்போதைக்கப்போது அருள் இன்பம் சுரப்பதை உணர்வீர்கள். இதை அருளிய அப்பரடிகளைப் பற்றி சற்று நினைத்துப் பார்ப்போம்.

என்னே அவருடைய மனத்திட்பம்! எத்துணை உள்ள உறுதி! எவ்வளவு நம்பிக்கை! எவருக்கும் எப்போதும் அஞ்சாத வீரமிக்க ஆண்மைதான் என்னே! இத்துணைக்கும் காரணம் என்னை? அவர் உள்ளத்தில் வளர்த்து வந்த இறையின் திருநாமமாம். 'ஓம் நமசிவாய' என்ற ஒப்பற்ற திருமந்திரமே அன்ருே! அவரது மனம் இடைவிடாத பஞ்சாட்சர செபத்தால் அரும்பாகி, மலராகி, காயாகி, கனிந்திருந்தது.

"பாக்கியங்களெல்லாம் பழுத்து மனம் பழுத்தோர் நோக்குந் திருக்கூத்தை நோக்கு நாளெந்நாளோ" என்ற தாயுமானப்பெருந்தகையின் கூற்றுப்படி ஐந்தெழுத்தை மூன்றெழுத்தாக்கி, மூன்றை ஒன்ருக்கி, அந்த உணர்வில் பழுத்து ஐயனின் ஆனந்தக் கூத்தை பாராது பார்த்து, நின்றவர் அப்பர்பெருமான்.

திருநாவுக்கரசரைப் போல் நமக்கும் பேரருள் நிலை கிட்டுமா? அஞ்செழுத்தை ஓதினுல் உலகவாழ்க்கையில் உய்ய முடியுமா? என்ற சந்தேகக் கேள்வி நமக்கு எழவேண்டாம்.

துலங்கிடும் வெள்ளி விழாவின்
திருவொடு பொலிந்து கடல்சூழ்
இலங்கைநின் றுதிக்கும் ஞான
இரவியாம் "ஆத்ம ஜோதி"
மலங்கிடும் மக்க ளுக்கு
மதியொளி காட்டி என்றும்
இலங்கிட வேண்டு கின்றேன்
இறைவனே கருணை புரிக!
தொன்மறைப் பொருளைப் பேசி
தமிழ்மறை இனிமை பேசி
தன்மயத் தொண்டர் முனிவர்
தகவுடைச் சரிதம் பேசி
உண்மையை உரத்த குரலில்
பேசிடும் "ஆத்ம சோதி"
சின்மயப் பொருளின் அருளால்
சிறந்துபல் லாண்டு வாழ்க!

-சுவாமி மதுரானந்தா
கன்யாகுமரி.

# வைகாசி மூலம்

புலவர்: அ. வைத்தியலிங்கம் M.A
வேலூர் - சேலம்

கீழை வானில் கதிரவன் தோன்றித் தன் கதிர்களைப் பகல் முழுவதும் பரப்பி மேலை வானில் மாலையில் மறைகிறது. மீண்டும் மறு நாள் தோன்றுகிறது. ஒருநாள் உருண்டோடுகிறது. இப்படிப் பல நாட்கள் உருண்டோடுகின்றன. இந்த எல்லா நாட்களையும் நன்னாட்கள் என்று நாம் கூறுவதில்லை. இவற்றுள் சில நாட்களையே நன்னாட்கள் என்றும், மிகப் புனிதமான நாட்கள் என்றும் கொண்டாடுகிறோம். ஏன்? 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோளைக் கொண்ட சான்றோர்களை நினைவூட்டும் காரணத்தினாலேயே அந்நாட்களைப் புனித நாட்கள் என்கிறோம். அத்தகையதொரு புனித நாள் வைகாசி மூலநட்சத்திரம் பொருந்திய நாளாகும். அத் திருநாளே திருஞானசம்பந்தர், நீலகண்ட யாழ்ப்பாணர், திருமுருகர், திருநீலநக்கர் ஆகியோரின் திருநட்சத்திர நாளாகும்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் சோழ நாட்டைச் சார்ந்த சீர்காழிப் பதியில் அந்தணர் குலத்தில் சிவபாத விருதயரும் பகவதியம்மையாரும் செய்த நற்றவப் பயனாய்த் தோன்றினார். இறைவன் திருவருளால் உமையம்மையார் அளித்த ஞானப்பாலை உண்டு சிவஞானம் கைவரப் பெற்றுத் தமிழகத்திலுள்ள பல சிவத் தலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கிப் பதிகம் பாடி வந்தார். அவரைச் சூழ்ந்து பல சிவநேசச் செல்வர்கள் அஞ்செழுத்தை நெஞ்சில் பதித்து அரன் நாமத்தை நாவில் ஓதிச் சென்றனர். பௌத்த மதமும் சமண மதமும் ஓங்கிச் சைவசமயம் தாழ்வுற்றிருந்த காலத்தில் தமிழகம் செய்த தவத்தால் வேதநெறி தழைத்து ஓங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் தொண்டு செய்து வந்தார். ஞானசம்பந்தர் தேனினும் இனிய தமிழ் மொழியில் இனிய இசைப் பாடல்களைப் பாடிச் சைவ சமயத்தை நிலைநாட்டி வந்தார்.

சம்பந்தர் பெருமானுடைய திருத்தொண்டினைக் கேள்வியுற்று அவரைக் காணத் துடித்தவர் பலர். நடுநாட்டில் திருவெருக்கத் தம்புலியூரில் வாழ்ந்த பாணர் மரபைச் சார்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடைய துணைவியார் மதங்க சூளாமணியாரும் குறிப்பிடத் தக்கவர்கள்.

## திருநீலகண்ட யாழ்ப்பாணர்:

இவர் சிவபெருமானிடத்தில் அளவற்ற அன்பு கொண்டவர். திருவைந்தெழுத்தை யாழில் அமைத்து இனிய இசை பாடுபவர். சிவபெருமானுடைய பெருமைகளை யாழில் இசைத்து அன்பர்களைச் சிவானந்த வெள்ளத்தில் திளைக்கச் செய்பவர். இவர் துணைவியார் மதங்க சூளாமணியார் இசையே வடிவானவர். இனிய இசையில் இறைவன் பெருமைகளைப் பாடுபவர். 'யாழும் இசையும் போல் கூடி வாழுங்கள்' என்று திருமணக் காலத்தில் மணமக்களை வாழ்த்துவர்! பாணருடைய குடும்பம் யாழும் இசையுமாகவே உண்மையில் அமைந்திருந்தது. பாணர் யாழிசைக்க அவர் மனைவியார் பாடல் பாடத் தமிழகமே இசைமயமாக விளங்கியது அந்தக் காலத்தில்.

பல தலங்களுக்குச் சென்று சிவபெருமான் திருக்கோயிலின் முன்னால் இருந்து இசைத் தமிழால் பக்தியைப் பரப்பி வந்தது பாணர் குடும்பம். ஒருநாள் இவர்கள் மதுரைக்குச் சென்று ஆலவாயண்ணல் திருக்கோயிலின் முன் நின்று இசை பாடினர். அந்தக் காலத்தில் பாணர் மரபினர் கோயிலுக்குள் செல்வதில்லை. தம் மரபுக்கேற்ப வெளியில் நின்றே பாடினர். பாட்டுக்கு உருகும் சொக்கேசர், இவர்கள் பாட்டில் சொக்கித் தொண்டர்களின் கனவில் வந்து 'பாணரை எம் திருமுன் அழைத்து வருக' என்றார். தொண்டர்கள் விழித்தெழுந்து பாணரைத் தேடிக்

கண்டு வணங்கி இறைவனது ஆணையை எடுத்தியம்பிப் பாணரையும் அவரது துணைவியாரையும் திருக்கோயிலின் உள்ளே அழைத்துச் சென்றனர். 'இதுவும் எம்பெருமான் திருவருளோ' என்று எண்ணி மகிழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் துணைவியாருடன் திருக்கோயிலின் உள்ளே சென்று இறைவன் திருமுன்னிருந்து யாழிசைத்துப் பாடினர்.

ஏழிசையாய், இசைப் பயனுய், இன்னமுதாய் விளங்கும் இறைவன் வானில் அசரீரியாய்த் தோன்றி 'இந்தப் பாணனுர் மீட்டுகின்ற சந்த யாழ் தரையிலுள்ள சீதம் தாக்கினுல் அதன் நரம்புகளின் இறுக்கம் அழியும்; ஆதலால் இவருக்கு முன் ஓர் அழகிய பலகை இடுங்கள்' என்று அருளிச் செய்தார். அது கேட்ட அன்பர்கள் பாணருக்கு முன் ஓர் அழகிய பொற் பலகையிட்டனர். யாழ்ப்பாணர் அதன் மேலிருந்து யாழிசைத்து அம்மையப்பரை ஏத்தித் துதித்தார்.

பின்பு வழியிலுள்ள தலங்களை வணங்கிச் சென்று திருவாரூரை அடைந்தனர். அங்கும் தம் குல மரபுப்படி தியாகேசப் பெருமானின் திருக்கோயிலின் வெளியில் நின்றே இறைவன் பெருமைகளைப் பாடிப் போற்றினர். தியாகராசப் பெருமான் பாணருக்கென்றே தமது கோயிலின் வட திசையில் ஒரு வாயிலை வகுத்தருளினுர். பாணர் தம் துணைவியாருடன் அவ் வாயில் வழியே உட்புகுந்து சென்று திருமூலட்டானப்பெருமானுகிய வன்மீகநாதரை வணங்கி இசைப் பாடல்களைப் பாடித் துதித்தார்.

அங்கிருந்து பல பதிகளையும் வணங்கிய பின் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் அருமை பெருமைகளைக் கேள்வியுற்றுச் சீர்காழிக்கு வந்து சுவாமிகளைக் கண்டு வணங்கினர். ஞானசம்பந்தர், சாதி வேறுபாட்டை உதறித் தள்ளிச் சைவ சமயத்தின் உயர்ந்த குறிக்கோளையே எண்ணித் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர் மனைவியார் மதங்கசூளாமணியாரையும் அன்போடு வரவேற்று உபசரித்துத் தக்க சிறப்புக்களைச் செய்தார். தாம் தலந்தோறும் பாடி வரும் தேவாரத் திருப்பதிகங்களை யாழில் அமைத்துப் பாடச் செய்து கேட்டுப் பரவசமடைந்தார். அன்றுமுதல் பாணர் குடும்பத்தைத் தம்முடனே இருக்குமாறு வேண்டினுர். சம்பந்தர் செல்லுந் தலந்தோறும் பாணர் குடும்பத்தாரும் உடன் சென்று தேவாரப் பாடல்களை யாழிலமைத்துப் பாடி வருவாராயினர்.

ஒருமுறை பாணர் தமது ஊராகிய திருஎருக்கத்தம்புலியூருக்குச் சுவாமிகளை வருமாறு அழைத்தார். அவ்வழைப்பை அன்போடு ஏற்றுக் கொண்ட ஞானசம்பந்தர் பாணரது ஊருக்குச் சென்றுர். யாழ்ப்பாணர் சம்பந்தரை வணங்கி 'இதுவே அடியேனது பதி, என்று கூறினர். ஞானசம்பந்தர் மிக மகிழ்ந்து பாணரை நோக்கி, 'ஐயரே! நீர் அவதரித்திட இப்பதி அளவில்லாத மாதவத்தை முன்பு செய்திருக்க வேண்டும்' என்று கூறிச் சிறப்பித்தார்.

## திருநீலநக்கர்:

பின்னர், வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி பாயும் வளநாட்டிலுள்ள பல தலங்களையும் வணங்கி வருங்கால், மெய்யடியார்கள் சூழ ஞானசம்பந்தர் திருச்சாத்தமங்கை என்னும் பதிக்கு வந்து சேர்ந்தார். அப்பதியில் வாழ்ந்த திருநீலநக்கர் என்ற அந்தணர் ஞானசம்பந்தரின் வருகையை அறிந்து, நகரை அலங்கரித்து, வீதிகளில் தோரணங் கட்டி, நிறைகுடம் - தூபம் - தீபம் ஏந்தி, அடியார்களோடு வந்து சம்பந்தரை எதிர்கொண்டு வணங்கி வரவேற்றுர். சம்பந்தர் அங்குள்ள அயவந்தி என்னும் கோயிலுக்கு அடியார்களுடன் சென்று வணங்கினர். பாணரும் அவர் மனைவியாரும் வழக்கம்போல் இன்னிசைத் தீம்பாடல் பாடி யாவரையும் மகிழ்வித்தனர்.

திருநீலநக்கர் தம் வீட்டில் அன்று யாவரையும் தங்குமாறுவேண்டி விருந்துபசரித்தார். அடியார்கள் யாவரும் விருந்துண்டு தங்கினர். ஞானசம்பந்தர் திருநீலநக்கரை அழைத்து, 'இந்த யாழ்ப்பாணரும் அவர் மனைவியாரும் தங்குவதற்கு ஓர் இடம் கொடுத்தருள்வீராக!' என்றுர். திருநீலநக்கர் மிக விரும்பிப் பாணரையும் அவர் துணைவியாரையும், தமது மனையின் நடுவிலுள்ள ஒரு மேடையில் தங்கச் செய்தார். அத்திண்ணையில் என்றும் அருத செந்தீயை யாகத்தில் வளர்ப்பது வழக்கம். அத்தீயானது அன்று வலமாகச் சுழித்தெழுந்து மேலோங்கி முன்னையினும் சிறப்புற்று விளங்கிற்று. திருநீலநக்கர் அகமகிழ - உளங் குளிர இறைவனது பெருங்கருணைத்திறத்தை எண்ணி மகிழ்ந்தார். அவர்களைத் தங்கச் செய்ததால் இவ்வருள் திறம் விளைந்ததென உளம் பூரித்தார். யாவரும் திருநீலநக்கர் மனையில் அன்றிரவு தங்கினர்.

ஞானசம்பந்தர் மறுநாள் காலையில் அயவந்திநாதரை வணங்கித் திருநீலநக்கருடைய பெருமையினைச் சிறப்பித்து, ''நிறையினுர் நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர், அறையுமூர் சாத்தமங்கை அயவந்தி'' என்று பதிகம்பாடினுர்.

சம்பந்தரைவிட்டுப் பிரிய மனமில்லாமல் நீலநக்கரும் அடியார்களுடன் தலயாத்திரைக்குப் புறப்பட்டார். ஆனால் ஞான சம்பந்தரின் ஆணைப்படி தம் இல்லத்திலேயே தங்கி அவ்வப்போது சம்பந்தர் வந்திருக்கும் பதிகளுக்குச் சென்று கண்டு உரையாடித் திரும்பினார்.

## முருக நாயனார்:

இவ்வாறு பலதலங்களுக்கும் அடியார் குழாம் சூழச் சென்று வணங்கிய ஞானசம்பந்தர் திருப்புகலூர் நகருக்கு ஒருநாள் வந்தார். அவ்வூரில் முருக நாயனார் என்னும் அந்தணர் ஒருவர் சிவபெருமானிடம் அன்பு செலுத்தியும், நான்குமறைகளையும் உணர்ந்து ஓதியும் தம் வாழ்வைச் சிவப்பணிக்கே ஈடுபடுத்தியும் வந்தார். அவ்வூரிலுள்ள வர்த்தமானேச்சுரம் என்னும் கோவிலுக்குச் சென்று சிவபெருமானுக்கு மலர்மாலை அணிவித்து அருச்சனை செய்வார். திருவைந்தெழுத்தை ஓதுவார். இத்தகைய செந்நெறியில் நின்ற முருக நாயனார் ஞானசம்பந்தரின் வருகையை அறிந்து எதிர் சென்று வணங்கி வரவேற்றுத் தம் திருமடத்தில் தங்கச் செய்து உபசரித்தார். முருக நாயனார் தமது பேராலேயே ஒரு மடாலயத்தையும் நடத்தி வந்தார். ஞானசம்பந்தர் வர்த்தமானீச்சரத்தினை வணங்கி, முருகநாயனாரின் திருத்தொண்டைச் சிறப்பித்துப் பதிகம் பாடினார்.

அதன்பிறகு ஞானசம்பந்தர் பலதலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கிப்பாடியும், திருவீழி மிழலை சென்று இறைவன் அருளால் படிக்காசு பெற்று அப்பொழுது அங்குப் பரவியிருந்த கொடும் பஞ்சத்தைப் போக்கியும் திருமறைக்காடு சென்று திறவாமல் அடைத்துக்கிடந்த மறைக்கதவங்களைத் திருநாவுக்கரசரைப் பாடச்செய்து திறந்தும், தமது பாடலால் மூடியும், பாண்டிநாடு சென்று பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்துச் சமணர்களுடன் சுரவாதம், கனல் வாதம் புனல் வாதம் முதலிய வாதங்களில் வென்று யாவரையும் சைவராக்கியும், போதிமங்கை சென்று புத்தரோடு வாதாடி வென்றும், திருவோத்தூர் சென்று பதிகம்பாடி ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியும், திருக்காளத்தியில் காளத்தியப்பரை வணங்கிப் பாடியும், திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கியும் பல வியத்தகு நிகழ்ச்சிகளைச் செய்து தமிழகம் முழுவதும் சைவமணங்கமலச்செய்து சீர்காழிக்குவந்தார்.

ஞானசம்பந்தரின் பதினாறாம் வயதில் அவருக்குத் திருமண ஏற்பாடுகளை அவர் தந்தையார் சிவபாதவிருதயர் செய்தார். திருப்பெருமண நல்லூரில் நம்பாண்டார் நம்பி என்ற மறையவர் பெற்ற திருமகளாரைச் சம்பந்தருக்குத் துணைவியாராக்க உறுதி செய்தனர். திருமண நாளையும் குறித்தனர். அந்நன்னாளில் சம்பந்தர்பெருமான் மறையவர்களோடும் திருத்தொண்டர்களோடும் திருப்பெருமண நல்லூரை அடைந்தார். நம்பாண்டார் நம்பிகள் நிறைகுடம், தூபதீபம் முதலிய சிறப்புக்களோடு வரவேற்றார்.

திருமணச்சடங்குகள் மிகச் சிறப்பாக நடந்தன. திருநீலநக்க நாயனாரே திருமணச் சடங்குகளை நடத்திவைத்தார். திருமணத்திற்குத் திருநீலகண்டயாழ்ப்பாணர், அவர் துணைவியார் மதங்கசூளாமணியார், முருகநாயனார் முதலிய சான்றோர்கள் பலரும் வந்திருந்தனர்.

திருமண நிகழ்ச்சியில் திருஞானசம்பந்தர் மணமகளின் வலது கையினைப்பற்றித் தீயை வலமாக வந்தார். அவ்வாறு வரும்பொழுது 'நாம் விருப்புறும் அங்கியாவார் விடை உயர்த்தவரே' என்று கருதினார். அம்மையாரின் கையைப்பற்றிக்கொண்டே 'இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே! இவள் தன்னோடும், அந்தம் இல் சிவன்தாள் சேர்வேன்' என்று முடிவு செய்து மணக்கோளத்தோடு கோயிலை நோக்கி நடந்தார். திருமண மண்டபத்தில் கூடியிருந்த யாவரும் பிள்ளையாரைப் பின் தொடர்ந்து கோயிலுக்குச் சென்றனர். திருக்கோயிலின் முன் நின்று இறைவனை வணங்கி 'பவம் அற என்னை முன்னாள் ஆண்ட அப் பண்பு கூட, நவமலர்ப் பாதம் கூட்டும்' என்று வேண்டினார். 'கல்லூர்ப் பெருமணம்' என்று தொடங்கி 'நாதனே! நல்லூர் மேவும் பெருமண நம்பனே! உன், பாதமெய்ந் நீழல் சேரும் பருவம் ஈது' என்று திருப்பதிகம் பாடியருளினார்.

அப்பொழுது சிவபெருமான் பெருஞ்சோதி லிங்கமாகத் தோன்றினார். கோயில் முழுவதும் சோதிப்பிழம்பாகத் தோன்றி அதில் ஒரு வாயிலும் தோன்றியது. ஞான சம்பந்தப் பிள்ளையார் ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியை வணங்கி 'ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொல்லாம்' என்ற நமச்சிவாயப் பதிகத்தைப் பாடி அங்கிருந்தவர்களை யெல்லாம் 'ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக' என்று ஆணையிட்டார். பிறவிப் பிணியை அறுக்கத் துடித்துக் கொண்டிருந்த தொண்டர்கள் யாவரும் அப்பெருஞ் சோதியில் புகுந்தனர்.

இவ்வாறெழுந்த பெருஞ்சோதியில் திருநீலநக்கர், திருமுருகர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணியார், சிவபாதவிருதயர் முதலிய தொண்டர்கள் யாவரும் புகுந்து பேரின்பம் துய்த்தனர். திருஞானசம்பந்தர் தம் துணைவியாரின் கையைப் பிடித்தவாறே அப்பெருஞ்சோதியினை வலமாக வந்து அச்சிவச்சோதியுள் புகுந்தருளினார். அச்சோதியுள் புகுந்த நாளே வைகாசித்திங்கள் மூலநாளாகும்.

# ஆத்மஜோதி அருட்சோதி

**சுவாமி சீதாலெட்சுமிஅம்மாள்**

"அத்தமியாத ஜோதி அருக்கனுய் அளவிலதாய்
மெத்தியபிணி யிலதாய் மேவரும் பிறப்பிலதாய்
எத்தலங்களிலும் என்றும் யாவுமாய்
முதற் பரம்பொருள் ஒன்றுண்டு"

"உலகத்தில் எல்லாம் சுடர்ஞான வடிவான - தொழிலே
திகழ் இரவி தேசுக்கு தேசாய் நின்று தேசளித்து
திகழ்வித்து திகழா நிற்கும்"

திருமூலரும் சமயத்தை தன்னை 'ஜோதி'யறிவதே என்றும் சமயமென்பது தன்னையறிவதே என்றும் ராமவசிட்ட சம்வாதத்திலும் மேலே சொன்ன "அத்தமியாதே திகழ் இரவி தேசுக்கு தேசாய் நின்று தேசளித்த திகழ்வித்து திகழா நிற்கும்" என்ற செய்யுள்களிலும் 'அங்கு இங்கு எனுதபடி' என்று தாயுமானவரும், மணிவாசகப்பெருமான் திருவெம்பாவையில் எடுத்த எடுப்பிலேயே 'ஆதியும் அந்தமுமிலா அருட்பெருஞ் ஜோதியை யாம் பாட' என்று 'ஆத்மஜோதி'யாகக் கண்டுபாடி ஆனந்தித்தார்கள்.

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்த நாயன்மார்கள், ஆழ்வார்கள், நக்கீரர், திருபனந்தாழ்வார் ஜோதியை வர்ணிக்கின்றுர்கள். சமயமென்பது சைவம் என்பது தெளிவு. ச. அது ஏவ தெளிவு. ஔவைபிராட்டியும் ஆதியாய் நின்றது உள்ளொளிஎன்றும் உள்ளும் புறமும் கொளுவூரினுல் கல்லமலம் அறுக்கலாம் என்றும், சாவித்திரி ஜோதியை பாடி தன் கணவனே எழுப்பினுளென்றும்

சாவித்திரி மந்திரம் சவிதா பச்சாதாத்
சவிதா புரஸ்தாத் சவிதா உத்தராதாத்
சவிதா அதராதாத் சவிதா நகவத் தாத் என்று ஜோதியைப் பாடியிருக்கிறுர்.

'சவிதா சவிதரோ ராஜதாம் ஆயுள்திர்க' சவிதா என்றது தேவபாஷையில் ஜோதி பிரகாசம் என்று பெயர். சவிதா அர்த்தங்களென்றது மங்கள ஒலி. நான்கு திக்குகளிலும் பாதாளத்திலும் அந்தரத்திலும் நகவத் எனது உள்ளிலும் எங்கும் நிறைந்த ஜோதி என் கணவரிடத்திலும் இருக்கின்றது என்று பாடி கணவனே எழுப்பினுள் என்று சாவித்திரி உபநிஷதத்தில் இருக்கின்றது. நான்கு வேதத்திலும் உபநிடதத்திலும் ஜோதி நிரதசியானந்தம் என்று கோஷிக்கின்றது.

அருட்பா வள்ளலார் அடிகளும் புலவர்களும் ஜோதி பாடி ஆனந்தித்தார்கள், மகரிஷிகளும் தபோதனர்களும் யோகிகளும் தீர்க்கதரிசிகளும் சொரூப நிஷ்டையில் ஆனந்தித்தார்கள். காரைக்கால் அம்மையார், திலகவதி அம்மையார், மங்கையர்க்கரசி அம்மையார், பக்தசிரோன்மணிகள் சொரூப ஜோதிபாடி ஆனந்தித்தார்கள். பக்தை மீரா சக்குபாயா பத்மாவதி இன்னும் எத்தனே தாய்மார்கள் ஜோதியை பாடி பரவசமானுர்கள். ஔவை அக்கம்மா, பாலகார்க்கி மைத்திரேயி சொரூபத்தில் ஆனந்தித்தார்கள். சொரூபம் விட்ட கள்ளமோகவரும் என்று சொரூப ஜோதியில் ஆனந்தித்தார்கள்.

ஆத்மாவின் ஜோதி அருட்பெருக்கை பறைசாற்றும் "ஆத்ம ஜோதி" என்னும் திங்கள் ஏடு மாந்தர்க்கு பல்வகையாலும் ஆன்மீக ஒளிகாட்டி பணிபுரிகின்றது. அப்பணி சிறக்க பரஞ்ஜோதியாம் வானுகி, மண்ணுகி,வளியாகி, ஒளியாகி இருக்கும் 'ஆத்ம ஜோதி' நினைவு கூர்ந்து "ஆத்ம ஜோதி" திங்கள் ஏட்டின் வெள்ளி விழாச் சிறக்க வாழ்த்துகிறேன்!

சுபம்!

# சலம் பூவொடு தூவி மறந்தறியேன்

காஞ்சிபுரம் சிவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

நாவலப்பிட்டி 'ஆத்மஜோதி' ஆசிரியர் தவச்செல்வர் நா. முத்தையா அவர்கள் எங்களை அழைத்து அடியவர்களைக் குரு வழிபாடு செய்வித்த நாளில், ஆத்மஜோதி' நிலையத்தில் சிலமணிநேரம் இருக்க நேர்ந்தது. அன்று எண்ணிய ஒன்று இன்று கூடுகின்றது.

'ஆத்மஜோதி' வெள்ளிவிழா மலருக்கு ஒரு கட்டுரை எழுதித்தர வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு மலர் தூவும் பொருள் குறித்து இதனை எழுதித் தந்தோம். இது பெரும் பயன் உண்டாக்காது. சொல்லாராய்ச்சியும் உண்மையுணர்ச்சியும் வேண்டும் அறிஞர்க்கு ஒரு சிறிதாதல் இன்பம் தோற்றும். அத்தோற்றமாதல் இக் கட்டுரையால் உண்டாகும் எனின், அதுவே நம் முயற்சிக்குப் பயனுகட்டும்.

தொல்காப்பியச் செய்யுளில் 149—ஆவது நூற்பாவுரையில் பேராசிரியர், தரவிணைக் கொச்சகம் ஒன்று காட்டினுர். அச்செய்யுள் சிவதோத்திரம். அதைச் சைவர் அனைவரும் மனனம் செய்து கொண்டு பயனுக்கிக் கொள்ளல் நல்லது.

''பூணுகை வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணுகைக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றுன்
மாணுகை வெண்ணூலான் வாணுதலாள் பாகத்தான்
ஊணுரும் பிச்சையான் உண்ணுத நஞ்சுண்டான்
வானுறு தோய்ந்த சடையான் மழுவலத்தான்
யானுர்வஞ் செய்யும் இறை:
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் பயந்த
புனைபூங் கழற்கான்மேற் பூவொடு நீர்தூஉ
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
யெனைநாளு மேத்துதும் எந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு!''

இப்பழம்பாடலில், பூவொடு நீர் தூவும் பழக்கமும், அத்தூவல் சிவபிரான் பூங்கழற்கான்மேல் நிகழ்வது மாதியல் பாதியனை வாழ்த்துதலும், ஏத்துதலும், அம்முழுமுதற்பொருளை நெஞ்சு நினையாதொழியாமை வேட்டலும், பிற்பால் அறியலாம். முற்பால், அப்பொருளைக் குறித்த புகழ் கூறுகின்றது. இதன் பொருளாழத்தைத் தனிக் கட்டுரையில் விளக்கல் வேண்டும்.

பூத்தூவுதல் எல்லார்க்கும் தெரிந்த மரபு. பூவொடு நீர் தூவுதல் என்பது பிரசித்தியன்று. முன்னேர் பல இடங்களில் நீர் தூவுதலையும் உணர்த்தினர். திருவாய்மொழியிலே நம்மாழ்வார்,

''பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றி நன்னீர் தூய்
புரிவதுவும் புகை பூவே'' (2954)

என்று பாடியருளியதிலே 'நன்னீர் தூய்' என்றமையால் நீரைத் தூவுதல் கூறப்பட்டவாறறிக.

''பூவைவீயா, நீர்தூவிப்
போதால் வணங்கேனேலும் நின்
பூவைவீயாம் மேனிக்குப்
பூசும்சாந்து என்? நெஞ்சமே'' (3253)

என்ற திருவாய் மொழியிலும் 'நீர் தூவல்' கூறப்பட்டது.

''புண்ணியஞ் செய்து நல்ல புனலொடு மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தை நாமம் இப்பிறப் பறுக்கும் (அப்பால்
திண்ணம்நாம் அறியச்சொன்னேம் செறிபொழில் (அனந்தபுரத்
தண்ணவார் கமலபாதம் அணுகுவார் அமரர் ஆவார்''
(3906)

என்ற திருவாய் மொழியிலே ''புனலொடு மலர்கள் தூவி'' என்றுளது மலர் தூவுதலோடு புனல் தூவுதலும் உடன் கூறப்பட்டது.

மலர்களொடு புனல்தூவி என்றில்லே. ''புன லொடு'' என்றே உளது. மலர்வளரும் புனல் மல ரினும் சிறந்தது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திரு வலிதாயத்திருப்பதிகத்திலே முதலடியிலே, ''பத்தரோடு பலரும் போலியம்மலர் ''அங்கைப் புனல் தூவி'' என்றருளினர். பல இடங்களைக் காட்டலாம்.

சுந்தரமூர்த்தி நாயனர் திருக்கேதாரக் திருப்பதிகத்திலே (38) ''சுனை நீர்களைத் தூவி'' என்றருளினர்.

திருநாவுக்கரசு நாயனர் ''அப்போடு மலர் தூவி ஐம்புலனும் அகத்தடக்கி'' என்று அரு ளியது பாடாந்தரமாகக் காணப்படுகின்றது. படவே அவ்வாசிரியர் திருவாக்கில் வந்த முதற்றிருப்பதிகம் ''குருவருள்'' எனப் போற் றப்படும் பெருமையுடையது. ''தோடு கூற்றுப் பித்தா மூன்றும் பீடுடைத்தேசிகன் பேரருள் ஆகும்'' என்பது பழம் பாட்டினடி. அதில் உள்ள ''சலம்பூவொடு தூபமறந்தறியேன்'' என் றிருப்பது சலம் பூவொடு தூவ மறந்தறியேன்'' என்றிருந்ததோ என யூகம் செய்ய இடம் உண்டு. தூபம் போடவேண்டாம் என்று நாம் மறுக்க மாட்டோம்.

இதுவரையில், ஒரு பழம் பாடலிலும் திரு வாய் மொழியிலும் மூவர் திருமுறையிலும் உள்ள சான்று காட்டிப் பூத்தூவல் போன்று நீர் தூவலும் உண்டு என்பதும், மிக்க பிரசித்த மாக வழங்கும் ''சலம் பூவொடு தூபமறந்தறி யேன்'' என்றது ''சலம்பூவொடு தூவமறந்தறி யேன்'' என்றிருந்து, வகரம் பகரமாகப் பிழைத்ததோ என ஐயுறலாம் என்பதும் அறி யலாயின.

இதனை எழுதத் தூண்டிய 'ஆத்மஜோதி' ஆசிரியர்சைவத்தவத்தவர் நா.முத்தையாஅவர் களும், நிருவாக ஆசிரியர் திருவாளர். க. இராமச்சந்திரா அவர்களும் அதனை ஆதரித்து வரும் அன்பர்கள் அனைவரும் நீடூழி வாழ்க!

வெள்ளிவிழா வெள்ளிமலை போல் ஓங்கி விளங்குக! பொன்னம்பலக் கூத்தன் திருவருள் எல்லார்க்கும் பொங்குக! எங்கும் மங்களம் தங்குக!

★★

## தியாகம்

குடும்பத்துக்காக ஒருவனைத் தியாகம் செய்துவிடலாம்; கிராமத்துக்காக ஒரு குடும்பத்தைத் தியாகம் செய்யலாம்; தேசத்துக்காக ஒரு கிராமத்தை தியாகம் செய்யலாம்; தன் உயிருக்காக உலகத்தையே தியாகம் செய்யலாம்!

—பஞ்சதந்திரம்

## குலத்திற்கு அடையாளங்கள்

உபகாரம் செய்யாதவர்களுக்கும் உபகாரமே செய்வது; பிரியமாக இருப்பது, செய் நன்றி மறக்காமல் இருத்தல்; விழுந்தவர்களைத் தூக்கிவிடுதல் இவைகளே நற்குலத்தில் பிறந்தவர்களுக்கு அடையாளங்கள்! —பஞ்சதந்திரம்

## மனிதரில் தலையானவர்

தமக்கென வாழாது பிறருக்காக வாழுகிறவர் மனிதரில் தலையானவர். ஏழை களுக்குக் கொடுத்து நீங்கள் உண்ணுங்கள்; இயன்ற அளவு அறஞ்செய்து வாழுங்கள். இம்மையில் அறஞ்செய்தோர் மறுமையில் நலம் பெறுவர். —புத்தர்

## முந்திக்கொள்ள வேண்டும்

இளமையிலே துறவுக்கோலத்தைக் கொள்வதற்கு யாரும் வருந்த வேண்டிய தில்லை. என்றுமே மரணம் நம்மை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது. நாம் முந்திக்கொள்ள வேண்டும்.

—புத்தர்.

# ஜோதி வழிபாடு மனிதனின் ஆதிவழிபாடு



ஸ்ரீமதி புவனேஸ்வரி அருணாசலம்

"அருள்பழுத்த செழுங்கனியே அகம்பழுத்த
சிவஞான அமுதே முத்திப்
பொருள்பழுத்த அருட்பாவை எமக்களித்த
தெய்வமணப் பூவே என்றும்
மருள்பழுத்த அடியேங்கள் மனவிருளை
அகற்ற வருமணியே மெய்மைத்
தெருள்பழுத்த வடலூர்வாழ் இராமலிங்க
நின்னருளைச் சிந்திப்பேனே"

இன்று எங்கு பார்த்தாலும் சமய நெறியில் சமரசப்பேச்சு முழங்குகின்றது. ஏறக்குறைய இருநூற்றைம்பது பிரிவுகளைக் கொண்ட கிறிஸ்து மார்க்கம் ஒரு தனிக்குடையின் கீழ் இயங்க வேண்டுமென்ற கருத்து உலகமெங்கும் தலைகாட்டியுள்ளது. ரோமாபுரியைத் தலையிடமாகக் கொண்ட கத்தோலிக்கத் தலைவர்கள் கூட இந்த இயக்கத்திற்கு ஆதரவளிக்கின்றார்கள். நாஸ்திகம் பரவிவரும் இந்த நெருக்கடியான சூழலில் சமயங்களிடையே போட்டியும் பூசலும் இருக்கக் கூடாதென்பது அவர்கள் கருத்தாகும்.

1967-ம் ஆண்டில் கனடாவில் நடைபெற்ற உலகக்காட்சி மகாநாட்டில் கிறிஸ்தவர்கள் எல்லார்க்கும் பொதுவான ஆலயம் ஒன்று மாத்திரம் அமைக்கத் தீர்மானித்துள்ளனர். இந்த நாட்டில் வசிக்கும் நான்கு முக்கிய சமயத்தைச் சேர்ந்தவர்களிடையே பரஸ்பர ஒற்றுமை உணர்ச்சியைப் பரப்பும் நோக்குடன் அரசியல் தொடர்பற்ற பிரமுகர்கள் அயராதுழைத்து வருகின்றனர்.

## இணையற்ற தீர்க்கதரிசி

இவற்றை யெல்லாம் நேரில் பார்த்தும் படித்தும், இன்புறும் போது, இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன், உத்தரஞான சிதம்பரமெனவும், பார்வதிபுரமெனவும் அழைக்கப்படும் வடலூரில், இணையற்ற தீர்க்கதரிசியும் அற்புத சித்தருமான ஸ்ரீ இராமலிங்கசுவாமி அவர்களால் நிறுவப்பட்ட சமரச சுத்த சன்மார்க்கத்தின் நினைவு ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் கட்டாயமாக எழவே செய்யும். அதன் நூற்றுண்டு விழாவை சென்ற தை மாதந்தொடக்கம் அடுத்த தைப்பூசம் வரையில் தென்னிந்தியாவில் கொண்டாட அபிமானிகள் பலர் திட்டமிட்டுள்ளார்கள். இதுவரையில் பல கூட்டங்கள் நடந்துள்ளன.

இந்த நூற்றுண்டு விழாவை இலங்கையிலும் பல இடங்களில் கொண்டாட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளமை கண்டு மகிழ்ச்சியடைகின்றோம். விழாவின் முதற் பகிரங்கக் கூட்டம் இன்று வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க மண்டபத்தில் நடைபெறப் போவதாகவும் அறிகின்றோம்.

## உலகளாவிய சமரசத்தொண்டு

இந்த அரிய சந்தர்ப்பத்தில் அருட்பிரகாச வள்ளலாரின் உலகளாவிய சமரசத் தொண்டைப் பற்றிச் சிந்திப்பது சாலவும் பொருத்தமுடைத்து. பிரம்மஞான சபையின் (Theosophical Society) சமரச சேவையைப்பற்றிப் பலர் அறிவார்கள். அது 1875-ம் ஆண்டில் ஆரம்பமாகியது. பொதுவான சில அடிப்படைக் கொள்கைகள் எல்லா மதங்களிலும் உள்ளன என்ற உண்மையை உணர்ந்தால் உலகில் சமயச் சச்சரவுகளுக்கு இடம் இராது என்ற கருத்துடன் பல்வேறு மத சித்தாந்தங்களையும் விஞ்ஞான உண்மைகளையும் எல்லோரும் கற்க வேண்டுமென்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டெழுந்தது இப்பிரமஞான சபை.

## "உண்மை சொல்ல வந்தனனே"

இதன் ஸ்தாபகர்களான ஓல்கெற்துரையும் பிளவஸ்க்கி அம்மையாரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு உறுதுணையாக இருந்தது இராமலிங்க சுவாமிகளின் ஆத்மசக்தியென் பதை அவ்விருவர்களால் அறிகின்றோம்.

அந்த வேளையில்தான் வள்ளலார் "உண்மை சொல்லவந்தனனே" என்றும் "உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை" உள்ளிருந்த விளக்கை திருமாளிகைப் புறத்தில் வைத்துத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச்சாத்தி விடப்போகிறோம். நாமிப்போது இந்த உடம்பிலிருக்கிறோம். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வோம். சுத்த பிரணவ ஞான தேகத்துடன் வெளிப்படுவோம்" என்றும் அங்கிருந்த அடியார்கட்குக் கூறி திருக்காப்பிட்டுக் கொண்டனர்.

காந்தியடிகள் விளக்கிய "சர்வ தர்ம சமன் தவ" (எல்லா மதங்களும் ஒத்தவையே) "சர்வ தர்ம சமபவ" எல்லாச் சமயங்களுக்கும் ஒரே மதிப்பு) என்ற கொள்கைகளும் வள்ளலார் காட்டிய சுத்த சமரச சன்மார்க்கத்தில் அடங்கியவைகளேயாம்.

"ஒருவன் பிரார்த்தனை செய்கையில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல; இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை யெல்லாம் அடங்கி விடுகின்றன." இதுவே வள்ளலார் அருளிய சுத்த சன்மார்க்கப் போதனை. அதைக் குறித்து அவர் செய்த விண்ணப்பம் கீழ்வரும் தோத்திரத்தில் அடங்கியிருக்கின்றது:-

"பாதி இரவிலெழுந் தருளிப்
பாவியேனை யெழுப்பியருட்
ஜோதி யளித் தென்னு ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதி
நான் பெற்ற நெடும் பேற்றை
ஓதி முடியது என்போ லிவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே!"

ஆறுவது திருமுறை — பதிகம்-20

'அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங் கருணை' என்பதே அவர் அருளிய மகாமந்திரம். ஜோதி வடிவான பரம்பொருளை அடைதற்கு சீவகாருண்யமே இணையற்ற வழியாகும். 'ஜீவகாருண்யமே முத்திக்கு முதற்படி' என்பது அவர் மணி வாக்கு.

## ஆதி வழிபாடு

ஜோதிவழிபாடு மனிதனின் ஆதிவழிபாடு. அதற்கு விஞ்ஞான, மெய்ஞ்ஞான ரீதியாகப் புது விளக்கம் அருளிய பெருமை இராமலிங்க சுவாமிகளைச் சார்ந்ததாகும். பிண்டத்தில் உள்ளதே அண்டத்திலும் பிரகாசிக்கின்றதென்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஜோதி வழிபாடு பிண்டத்திலுள்ள அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்ற நான்கும் ஆன்மா, சீவன், கரணம் இந்திரியங்களாகும். இவைஅண்டத்தில் முறையே அக்கினி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்களாகும். வேதகால வழிபாடுகள் எகிப்தியர் பேணிய சூரிய வழிபாடு முதலானவைகளெல்லாம் இந்தத் தத்துவ ரீதியாக அருமையான விளக்கம் பெற்றுள்ளன.

## உலகெங்கும் பரவியுள்ளது!

இனி குறித்த ஜோதி வழிபாடானது இந்த நூற்றுண்டில் உலகெங்கும் எப்படிப் பரவியுள்ளது, பரவி வருகின்றன என்பதையுஞ் சிறிது ஆராய்வோம். சென்ற சில வருடங்களாக இந்நாட்டில் எப்புதுக்கருமத்தை ஆரம்பிக்கும்போதும் திருவிளக்கேற்றுவதைக் காண்கின்றோம். எல்லாச் சமயத் தலைவர்களும் இதனை எவ்வித கூச்சமோ, தயக்கமோ இன்றிச் செய்கின்றார்கள். தெரிந்தோ தெரியாமலோ அவர்களெல்லாம் சமரச முறையில் ஜோதி வழிபாட்டில் கலந்து கொள்கிறார்கள் என்பதை மறுக்க முடியுமா?

## வள்ளலாரின் ஆத்ம சக்தி

இற்றைக்கு இரு வருடங்களுக்கு முன் அமெரிக்காவுக்கு ஆன்மீகத் தொண்டுக்காகச் சென்றிருந்தபோது, நியூயோர்க் நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாட்டுச் சபையின் கட்டிடத்திற்குச் சென்றிருந்தோம். அந்தக் கட்டிடத்தின் கீழ் மாடியில் உள்ள தொழுகை மண்டபத்தில் சில அன்பர்களுடன் தியானம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. அருட் பிரகாச வள்ளலாரின் ஆத்மசக்தி எவ்வளவு தூரம் அங்கே தொண்டாற்றியுள்ளதென்பதை அதிசயத்துடனும், ஆனந்தத்துடனும் உணர்ந்தேன்.

ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் பிரதான காரியதரிசியாக இருந்த ரிறைக்விலீ (Trygrelie) அவர்களால் வெயின்றைற் (Wain Wright Home) இல்லத்தைச் சேர்ந்த அன்பர்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழுகை மண்டபம் 1957-ம் ஆண்டில் அப்பெரியாரின்பதவிக்கு

வந்த கலாநிதி டாக் ஹமர்ஷீல்ட் அவர்களால் மௌனத் தியான மண்டபமாகத் திருத்தி அமைக்கப்பட்டது.

## பிரகாச வணக்கம்

அவரைப்போலவே சுவீடன் தேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற வர்ணக்காரரான வோ – வெஸ்கோ (BO-EESKOW) என்பவர் அத்தியான அறையின் சித்திர வேலையில் உதவி செய்துள்ளார். மண்டபத்தின் மத்தியில் பளிங்குக் கல்லினால் அமைக்கப்பட்ட ஓர் மேடை உள்ளது. அதன் மேற்பாகம் மாசுமறுவற்ற கண்ணாடி போல் மினுக்கப்பட்டுள்ளது. நேர் மேலேகூரையிலுள்ள மின்சார விளக்கின் ஒளிக்கதிர்கள் பளிங்குக் கல்மீது பரவியதும் பிரகாசம் உண்டாகின்றது.

அப்பிரகாசத்தைத் தியானிப்பதே அங்கு நடைபெறும் வழிபாடாகும். சாதி, மத, நிற பேதம் எதுவுமின்றி எல்லா மனிதர்க்கும் பொதுவான ஓர் நிலையத்தில் எவ்வித சமய அல்லது கலாச்சார சின்னத்தையோ காட்டும் வழிபாட்டு மண்டபத்தை டாக் ஹமர் ஷீல்ட் (Dag Hammerskjold) விரும்பவில்லை. இதிலிருந்து அவர் இராமலிங்க சுவாமிகள் விளக்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டை நன்கு உணர்ந்தவரென்பதை நாம் ஊகிக்கலாம்.

## பகவத்கீதையின் எதிரொலி

பகவத்கீதையின் கர்மயோகசாரத்தை "இன்றைய சகாப்தத்தில் தெய்வ நிலைக்கு வழி கொண்டுலகின் ஊடாகச் செல்கின்றது" என்ற ஒரு சிறு வரியில் (In our era, the road to holiness necessarily passes through the world of action) அடக்கிவிட்ட மேதாவி அவர். பால கங்காதர திலகரின் கர்மயோக விளக்கத்தின் எதிரொலியை இதில் கேட்கின்றோம்.

அமெரிக்காவில் மாத்திரமல்ல, ஐரோப்பா ஜப்பான் முதலிய தேசங்களிலும் 'ஜோதி' வழிபாடு புத்தம் புதுமுறையில் இன்று பரவி வருகின்றது. விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகின்றோம். வள்ளலார் திருவடிகள் வாழ்க!

(வள்ளலாரால் நிறுவப்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் (1965) திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் செய்த பிரசங்கத்தைத் தழுவி வரையப்பட்டது.)

★

### பக்தி!

அதன் விதைகள் அங்கோலா மரத்தையே மீண்டும் அடைகின்றன; ஊசி காந்தத்தால் இழுக்கப்படுகிறது; பத்தினிப் பெண் தன் நாயகனுடனேயே தங்குகிருள்; கொடி செடியைச் சுற்றிக் கொள்கிறது; நதி கடலில் சங்கமமாகிறது – இங்ஙனமாகவே என் சிந்தனை பசுபதியின் கனகப் பாதங்களை அடைந்து என்றுந் தங்குமானல், அதுவே பக்தியாம்! — சங்கரர்

### இதயத்தில் ஈசன்!

குருவின் கமலப் பாதங்களில் குன்ருப் பக்தி செலுத்தினல், நீ இச்சம்சாரச் சிறையினின்று மீள்வது உறுதி. உன் புலன்கள் கட்டுப்பட்டு மனம் அடங்குமானல், உள்ளத்தின் ஆழத்தில் உறையும் ஈசனைக் காண்பது உறுதி. — சங்கரர்

### துணை!

காலன் நெருங்குகிருன். நீ பயின்ற கலைகளும் ஓயாமல் செய்து வரும் வியாகரண சாத்திர ஆராய்ச்சிகளும் உன்னைப் பாதுகாக்குமென நினைத்தால் நீ மூடனே ஆவாய். கோவிந்தனிடம் அன்பு செலுத்தி அவனை வழிபடு. யமனின் பாசக்கயிற்றினின்று தப்ப இதுவே வழி! — சங்கரர்

### ஆத்ம சக்தி!

உலகத்திலுள்ள எல்லாச் சக்திகளையும்விட ஆத்ம சக்தியே அதிகப் பலமுள்ளதாகும்! அதை அழிக்கவோ — எதிர்த்து நிற்கவோ எந்த அரசாங்கத்தாலும் முடியாது. நமது ஆத்மீக பலத்தின் உயர்வைப் பொறுத்தே நமது சர்வேதசச் செல்வாக்கு செல்லுபடியாகும். — காந்தி

# பதினாறு பேறு

ஆ. செல்லத்துரை - சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

தமிழ் மக்களுட் சான்றோர் பலர் தம் மைந்தரை வாழ்த்துங்கால் ''பதினாறும் பெற்று பெரு வாழ்வின் வாழ்ந்திரு'' எனக் கூறுதலை யாமெலாமறிவோம். இக்கூற்றில் சொல்லப் படும் பதினாறு பேறுகளும் யாவை? பெரு வாழ்வு யாது? என்பவற்றைத் தற்போது ஆராய்வாம்.

பொதுவாக மக்கள் பதினாறு என்பதற்குப் பதினாறு பிள்ளைகளைப் பெறுதல் என்றும், பெருவாழ்வு என்பதற்குப் பெருஞ் செல்வ வாழ்க்கை என்றும் பொருள் கொள்வர். புலவருள்ளும் சிலர் ''மக்கள் பதினாறு பெற்று மங்காமல் வாழ்ந்திரென்றார்'' எனக் கூறியுள்ளார்கள். இஃது பெரும் வியப்பே! பதினாறு பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவன் எவ்விதகஷ்ட முறுவானென்பதை யாமெலாந் தெரிவோம். அப்படியிருக்க இது என்ன விபரீதமான வாழ்த்தாகும்? குசேலர் பல பிள்ளைகளை பெற்றுப் பட்ட பாடதனையறியாதாருமுளரோ? உலக வழக்கில் நாலைந்து பிள்ளைகளைப் பெற்ற ஒரு குடும்பஸ்தனைப்பற்றி பேசும் பொழுது, ''ஐயோ பாவம்! நாலைந்து பிள்ளைகுட்டிக் காரன்'' என்று இரக்கத்துடன் பேசுவார்கள். இவ்வாறு கூறுவதன் கருத்தெல்லாம் பிள்ளைகளதிகமானால் துயரமுமதிகமாகும் என்பது தானே. ஆதலினால் பதினாறு என்பது பிள்ளைகளின் கணக்கன்று. ஆதலின் இதன்பொருள் என்னவோ!

யாவரும் இணங்கும்படி தமிழ் நூல்களிற் பொதுவாகக் கூறப்படுவன; புகழ், கல்வி, வலி வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூறவு, நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை துணிவு, நோயின்மை, வ்ாழ்நாள் என்னும் பதினாருகும். இதனை,

''துதிவாணி வீரம் விசயஞ்சந் தானந் துணிவு தனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமை அறங்குல நோயகல் பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே''

எனக்கூறுவதும் உண்டு.

இது எல்லா மதத்திற்கும் பொதுவான தாகும். ஆயினும் இவைகள் பொய்யான உலக சம்பந்தமானவையேயன்றிப் 'பெரு வாழ்வை' (வீடுபேற்றை)த் தருவனவாகா. எனவே இங்கு யாம் எடுத்துக் கொள்ள வேண்டிய கருத்து யாதாகும்?

சைவ சமயத்திற் கூறப்படும் குரு பரம்பரைக்கெல்லாம் முதற் குருநாதனான திருநந்தி தேவர் சிவபெருமானிடத்து வேண்டிக்கொள் வனவாகப் பதினாறு பேறுகள் கந்தபுராணத்தில் காணக்கிடக்கின்றன. அப்பாடல்களாவன:

## கலிநிலைத்துறை

''மறைக ளிந்தனை சைவநிந் தனைபொரு மனமும்
தறுக ணைம்புலன் களுக்கேவல் செய்யுறுச் சதுரும்
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்.

யாது நல்லன்பர் கேட்கினும் முதவுறு மியல்பும்
மாத வத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந்
(தெளிவும்.

மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்.

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறு வளனும்
ஏமு றும்பா தாரநச் சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ்
(செருக்குறுத் துறவும்''

## கலி விருத்தம்

''துறக்கமீ துறையினு நாகிற் றேய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்.''

எனவே யாவர்க்கும் என்றும் இக மகிழ்ச் சியையும் பர மகிழ்ச்சியையும் அளிக்கும் மேற் கூறப்பட்ட பேறுகள் பதினாறினையும் பெறு தற்குகந்த எடுத்துக்காட்டான வாழ்வினை யாமும் வேண்டிப் பெற்றுய்வோமாக!

—சிவதொண்டன்.

# அகக் கோயில்



வித்துவான்: திருமதி வசந்தா வைத்தியநாதன்

''சகமலா தடிமையில்லை தானலாற் றுணையுமில்லை
நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந்
தொண்டர்
அகமலாற் கோயிலில்லை ஐயன் ஐயாறனார்க்கே''
(அப்பர்)

கடவுள் எங்கிருக்கின்றான்? இரண்யன் காலத்திலிருந்து இந்த இருபதாம் நூற்றாண்டு வரை சங்கிலித் தொடராகத் தொடரும் வினா. இவ்வினாவிற்கு விடையாக . . . ''கடவுள் எங்கு இல்லை?'' என்ற மற்றொரு வினாக்குறி இடுகின்றனர் அறிஞர் பெருமக்கள்.

''சாணிலும் உளன்; ஓர்தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணிலும் உளன்; மாமேருக் குன்றிலும் உளன்
இந்நின்ற
தூணிலும் உளன்; முன் சொன்ன சொல்லினும்
உளன் இத்தன்மை
காணுதி விரைவினென்றான்; நன்றெனக் கனகன்
சொன்னான்''

கடுமனம் கொண்ட கனகனுக்கு தனக்கே உரித்தான பீடுநடையில் கம்பநாடார் விடைபகர்கின்றார்.

அகிலமெல்லாம் புரக்கும் பரம்பொருள் எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றான். அண்டத்தில் உறையும் ஆண்டவன் அணுவின் கூறிலும் குடிகொண்டிருக்கின்றான். மலையில் உறையும் மங்கை பாகன் மலரில் எழிலாய்த் திகழ்கின்றான். தீயிடை வெம்மையாக விளங்குபவன் புனலிடைத் தண்மையாகப் பொலிகின்றான்.

''மனத்தகத்தான், தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான்
(காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தியான் அவனென் கண்ணுளானே''

என்று காளத்தியப்பனைக் கண்ணுள் கண்டுகளிக்கின்றார் தாண்டகச் சதுரர்.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து விளங்கினாலும் சிறப்பாக இறைவன் அன்புசெய்வார் அகத்தினுள்ளே உறைகின்றான். இதனை அப்பர் பெருமான்,

''அன்புடையான் சிந்தை அகலான் போலும்''

என்று திரு இன்னம்பர் திருத்தாண்டகத்துள் குறிப்பிடுகின்றார். இறைவனை அன்பு செய்வது எவ்வாறு? பொன்னும், மணியும் மிகு பொருள் கொடுத்தும் பெருமானை நம் பக்கம் வசப்படுத்தலாமா? ஒருபொருள் ஒருவருக்குத் தேவைப்பட்டால் நாம் அந்தப்பொருளால் அவரை வளைக்கலாம். ஆனால் அகிலமெல்லாம் படைத்துக் காத்து, அழித்து வேண்டுவார் வேண்டுவதே ஈயும் இந்த வள்ளலோ, பொன்னார் மேனியன்; இவன் உறையும் இடமோ கனகக் குன்று. இவனது காதன் மனையாளோ பர்வத ராஜகுமாரி; மரகதச் செல்வி; அருமருந்தன்ன மைந்தர்கள் இருவரில் ஒருவன் முத்துக்குமரன்; மற்றவன் மாணிக்க விநாயகன்; மைத்துனனோ செல்வத்திற்கே மூலாதாரமான திருமகளை மணந்தவன். இப்படி எங்கு நோக்கினும் செல்வ வளம் கொழிக்கும், பிஞ்ஞகனா நாம் அளிக்கும் பொருளுக்கு மயங்குபவன். பின்... பெருமானது அன்பைப் பெறுவது எங்ஙனம்? அதற்கு வழி உண்டா? வழி இருக்கின்றது. நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே அவன்புக்கு நிற்பான்.

''உயிராவணம் இருந்து உற்றுநோக்கி,
உள்ளக் கிழியின் உருவெழுதி,
உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவரோ டொட்டி வாழ்தி.''

என்னும் திருத்தாண்டகம் ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, உள்ளமாகிய கிழியில் ஆனேறுயர்த்த ஐயனின் திருவுருவத்தை எழுதி, உயிரும் உடலும் ஒன்றுகின்ற யோகமுறையை உணர்த்துகின்றது.

எண்ணங்கள் அலையும் இயல்புடையது. ஒன்று விட்டு ஒன்று பற்றும் தன்மையது. இதனை வாக்கின் மன்னவர்,

''உறுகயிறூசல் போல ஒன்றுவிட்டு ஒன்று பற்றி
மறுகயிறூசல் போல் வந்துவந் துலவும் நெஞ்சம்
பெறுகயிறூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூசலானேன் அதிகை வீரட்டனீரே!''

கள்ளம் புகாத வெள்ளை உள்ளத்துடன் கண்ணுதற் பெருமானை நம் அகத்தில் இருத்தி வழிபட்டால் கனியினும் இனியனாய், கட்டிபட்ட கரும்பினும் இனியனாய், பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும் இனியனாய், தனி முடி கவித்தாளும் அரசினும் இனியனாய் காட்சியருளுவான். ஆகம்பகிர்ந்தளித்த மாதொரு பாகனார்க்கு அகவழிபாடு எவ்வாறு இயற்றுவது? நமது உடலையே வினைகெடுத்தாளும் வேதியன் உறையும் கோயிலாக்கி உலையும் மனத்தை உருவத்திருமேனியாக்கி, அன்பாகிய வெள்ளத்தால் நீராட்டி, கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம் அன்பு என்ற எண்வகை மலரால் (அட்ட புட்பம்) அகப்பூசனை புரிதல் வேண்டும். இப் பூஜாகாலத்தில் இன்றியமையாது வேண்டப்படுவது ஆழ்ந்த அன்பு. இவ் அன்பு இல்லாது ஆரவாரமும், ஆடம்பரமும் மிக்க புறப்பூஜையை புனிதன் ஏற்றுக் கொள்ளாமல் எள்ளிநகையாடித் தள்ளி விடுவானும்.

''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியே!''

என்ற திருக்குறுந் தொகைப் பாடல் நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றது. இதனையே அன்னையின் அருள்பெற்ற அபிராமிப் பட்டரும்,

''மெய்வந்த நெஞ்சினல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகலறியா மடப்பூங்குயிலே''

என்று அபிராமித்தாயின் இணையடியை வந்தித்து வழிபடுகின்றார்.

அன்பிற்கு நெகிழும் ஆண்டவன் ஆணவத்துடன் இயற்றும் புறவழிபாட்டில் ஒன்றுவதில்லை.

''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி
என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே''

என்ற திருமந்திரமும் அன்பின் ஆழத்தை வலியுறுத்துகின்றது.

தாடகை நல்லாளின் தூய அன்பிற்கு முடிதாழ்த்திய இறைவனை சோழமன்னன் நால்வகைப் படைகளின் பலமும் கொண்டு நிமிர்த்த எண்ணினான். தோல்வியை சந்தித்தான். கடவூர்க் கலயனார் தனது அன்பையே கயிறாக்கி இழுத்தார். ஆண்டவன் நிமிர்ந்தான். அன்பிலே வளைந்த ஆண்டவன் அன்பிலே நிமிர்ந்தான்.

''நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி இளைத்தபின் திரும்பிநிற்க
ஒண்ணுமோ கலயனார்தம் ஒருப்பாடு கண்டபோதே
அண்ணலார் நேரே நின்றார் அமரரும் விசும்பில்
(ஆர்த்தார்''

காடவர்கோன் கழற்சிங்கன், பொன்னாலும், மணியாலும், கல்லாலும் சுதையாலும் எடுத்த கற் கோயிலில் தங்க விரும்பாது, திருநின்ற ஊரில் உறைந்து வந்த பூசலார் என்ற அன்பர் பொருட்பேறு இல்லாது அருட்பேறு ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு எழுப்பிய ''அகக்கோயிலையே'' ஆதாரத்தானமாகக் கொண்டான் அருமறை வல்லான்.

இவ்வாறு பக்தி வலையில் படும் பரம்பொருளை நமது இருவினையை ஈடழித்து இன்பம் விளைவிக்கும் இணையிலியை தில்லைத் தொல்லோனை தித்திக்கும் தீங்கரும்பை அழகனை நமது அகக் கோயிலில் இருத்தி ஆனந்தம்டைவோமாக!!

★

யோகச்சுடரால் உள்ளத்தில் ஒளிரும் ''ஆத்மஜோதி'' பொலிக! என் உள்ளம் இலங்கையின் எழிலில் இன்பக் கூத்தாடுகிறது. இலங்கையே இதய வடிவு. அதில் சைவம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகிய நான்கு கண்ணறைகள் உள்ளன. அனைத்திலும் அன்பு - இன்பம் '(இன்பமே என் பெரும் அன்பே') என்ற உயிர்த்துடிப்பே உணர்வாகும். எல்லாச் சமயங்களும் அன்பிலே தொடங்கி இன்பத்திலே முடிகின்றன. அன்பின் வழியது உயர்நிலை. அறத்தால் வருவதே இன்பம் என்ற இரண்டு உண்மைகளை அறிந்து நடந்தால் எல்லோரும் இன்புற வாழலாம்!

— கவியோகி சுத்தானந்த பாரதி

# மனஅமைதி எங்கே?

தி. கி. நாராயணன் M.Sc.
ஆசிரியர் : சமயஜோதி - மதுரை

எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஒன்று நமது மனம். வருடக்கணக்காக அறிஞர்கள் பலர் இந்த மனம் என்பது யாது, அதனது தன்மை எத்தகையது என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து பல்வேறு கருத்துக்களை நமக்குத் தந்து சென்றிருக்கின்றனர். எனினும் மனதைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கிறது.

அந்த ஆராய்ச்சிக்கு முடிவே கிடையாதோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. எனவே தான் நமது மூதறிஞர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பேயே மனதினைப் பற்றிய ஆராய்ச்சியை நடத்தி "மனதை அடக்குவதே யோகம்" என்ற முடிவிற்கு வந்தனர்.

மனித மனம் பெற்று விளங்கும் சக்தி ஒப்பற்றது. ஒருவனை அழிக்கவும் ஆக்கவும் அதனுல் இயலும். மனித வாழ்க்கையை மனத்துடன் மனிதன் நடத்தும் இடைவிடாத போர் என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். ஒருவனுடைய சிறந்த நண்பன் அவனுடைய மனம். அதே வேளையில் அவனுடைய பரம எதிரியாகவும் அது விளங்குகிறது.

மனதின் வழியில் தாங்கள் செல்பவர்கள் கீழோர். தங்கள் வழியில் மனதைச் செலுத்துபவர்கள் மேலோர். மனம் ஓயாது அங்குமிங்கும் அலைந்து திரியும் தன்மையது. பல்லாண்டு காலம் சாதகர்கள் பயிற்சி செய்வதெல்லாம் இடைவிடாது அலைந்து திரியும் மனதைச்சிறிது நேரமாவது கட்டுப்படுத்தி வைக்கத்தான். அவ்விதம் சிறிது நேரமாவது மனம் ஒடுங்குமேயானுல் அந்த வேளையில் கிடைக்கப்பெறும் அமைதியின் மகிமையை அனுபவித்தவரே அறிவர்.

நிறமற்ற கண்ணுடி ஒன்றை நீல நிறத் துணியின் மீது வைத்தால் அது நீல நிறத்ததாகத் தோன்றுகிறது. சிவப்பு நிறத் துணியின் மீது வைத்தால் அது சிவப்பு நிறமுடையதாகத் தோன்றுகிறது. அதாவது கண்ணுடி எதனுடன் சேருகிறதோ அதனது தன்மையைத் தற்காலிகமாகப் பெறுகிறது. மனித மனமும் அது எந்தச் சூழ்நிலையில் இருக்கிறதோ அந்தச்சூழ்நிலையின் தன்மையை அடைகிறது. தீயார் சேர்க்கையில் அதைவிட்டு விட்டால் அது தீய குணங்களைப் பெறுகிறது. நல்லவர் தொடர்பில் இருக்கச் செய்தால் அது நல்ல குணங்களைப் பெறுகிறது.

மேலேயிருந்து கீழே விழுதல் எளிது. ஆனுல் கீழேயிருந்து மேலே ஏறுவது கடினம். தண்ணீர் மேட்டுப் பகுதியிலிருந்து பள்ளத்தை நோக்கித்தானே எளிதில் பாயும். ஆனுல் பள்ளத்திலிருந்து மேட்டுப் பகுதிக்கு தண்ணீரைப் பாய்ச்சுவதற்கு மின்சாரத்தின் உதவி தேவையாயிருக்கிறது. அதுபோல் தீய குணங்கள் மனதில் வெகு எளிதில் பதிந்துவிடுகின்றன. ஆனுல் நல்ல குணங்களைப் பெற்று விளங்குதல் மிகவும் கடினம்.

கிளி ஒன்றை சாதுக்களின் தொடர்பில் விட்டுவைத்தால் அது 'ராம்' 'ராம்' என்று சொல்லக் கற்றுக் கொள்ளும். முரடர்களின் தொடர்பில் விட்டு விட்டால் அதேகிளி 'வெட்டு' 'கொல்லு' என்ற வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளும். அதுபோல் மனமும் சூழ்நிலைக் கேற்றவாறு மேலானதாகவோ அல்லது கீழானதாகவோ அமைகிறது. பல்வேறு நிலைகளில் நமது மனநிலையை ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும். உதாரணமாக, நண்பர்களின் வற்புறுத்தலுக்கிணங்க நாம் ஒரு சினிமாவிற்குச் செல்வதாக வைத்துக் கொள்வோம். சினிமாத் திரையில் பற்பல காட்சிகள் தோன்றி மறைகின்றன. படத்தில் பார்த்த காட்சிகள் நமது மனத் திரையிலும் விழுகின்றன.

தற்காலசினிமாவைப்பற்றித்தான்நமக்குத்தெரியுமே! மிகவும் மட்டரகமான காட்சிகளையெல்லாம் காணுகின்றபொழுது மனம் அவற்றைப் பற்றியே சிந்தித்த வண்ணம் இருக்கிறது. இரவு படுக்கச் செல்லும்பொழுது சினிமாவில் பார்த்த காட்சிகளும், உருவங்களும் மனக்கண் முன் தோன்றி தூக்கத்தைக் குலைத்து சக்தியைச் சிதறடிக்கின்றன. மனம் அமைதியற்றுத் தத்தளிக்கிறது. சினிமாவில் பார்த்த காட்சிகளை நடைமுறை வாழ்விலும் பெற வேண்டி மனம் ஏங்குகிறது. அதன் விளைவாக உள்ளம் கெட்டு, உடல் வியாதிகளுக்குள்ளாகிறது.

மாருக சினிமாவிற்கு அழைக்கும் நண்பர்களது வற்புறுத்தலுக்குச் செவி கொடுக்காது, சத்சங்கம் நடைபெறும் இடத்திற்கு நாம் செல்வதாக வைத்துக் கொள்வோம். சத்சங்கத்திற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தவுடனேயே நமது மனநிலை அடியோடு மாறிவிடுகிறது. சத்சங்க மண்டபத்திற்கு வெகு தொலைவில் இருக்கும் பொழுதே அங்கு நடைபெறும் இனிய பஜனையின் ஒலி காதில் விழுகிறது. உடனே நம்மையறியாது ஒருவித பரவச நிலைக்கு நாம் உள்ளாகிறோம். உலக சிந்தனைகளிலிருந்துவிடுபட்டு மனம் இறைவனைக் குறித்தும் மகான்களைக் குறித்தும் சிந்திக்கத் தொடங்குகிறது. சத்சங்கத்தில் மகான்கள் ஆற்றும் சொற்பொழிவு நமது மனதிற்கு அமைதியையும், ஆனந்தத்தையும் தருகிறது. அங்கு நடைபெறும் பஜனையில் லயித்தவாறு நாம் மணிக்கணக்காக உட்கார்ந்திருக்கிறோம். சத்சங்கம் முடிந்து வெளியே வருகையில் ஏதோ புத்துணர்ச்சி நம்முள் புகுந்தது போன்று உணர்கிறோம். தெய்வீக இன்பத்தில் திளைத்தவாறு இப்படியே சதாகாலமும் சத்சங்கத்தில் இருந்துவிட்டாலென்ன என்று மனம் சிந்திக்கிறது. இது போன்று அன்ருடம் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மனதில் வெவ்வேறு விதமான பதிவுகளை ஏற்படுத்துகிறது. நாம் எத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறோம், யார் யாருடன் எத்தகைய இணக்கம் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நமது மனோநிலையும் அமைகிறது. மனதின் அமைதியைக் குலைக்கவல்ல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுவிட்டு, மனதின் அமைதியைக் கெடுக்கவல்ல நபர்களுடன் இணக்கம் வைத்துவிட்டு, பிறகு அமைதியில்லை, ஆனந்தமில்லை என்று குறை கூறுவது நாமே வேண்டுமென்று சுவற்றில் முட்டிக் கொண்டுவிட்டு, 'ஐயோ வலிக்கிறதே' என்று தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்வதற்குச் சமமாகும்.

மன அமைதி வெளியே பஜாரில் விலை கொடுத்து வாங்கும் ஒரு பொருளல்ல. மன அமைதிக்குப் பணம் தேவையில்லை. விலையுயர்ந்த பொருள்களைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி விடலாம். ஆனால் மன அமைதியை எங்கே போய் யாரிடம் வாங்குவது? பணத்திற்கும் மன அமைதிக்கும் வெகுதூரம். பணமும் பொருளும் கூடக்கூட ஒருவன் பெற்று விளங்கும் மன அமைதி குறைகிறது. பணமும் மன அமைதியும் எதிரிடை விகிதத்தில் தொடர்பு கொண்டுள்ளன. அதற்கான காரணம் சொல்லாமலே விளங்கும். பொருளைப் பெறும்வரை அதைப் பெற வேண்டும் என்ற நாட்டம், பெற்றபின் அதைக்காக்க வேண்டுமே என்ற ஏக்கம். அது நமது கையை விட்டுப் போனபொழுது 'ஐயோ போய்விட்டதே' என்ற துக்கம் - ஆக எல்லா நிலைகளிலும் மனம் அமைதியின்றித் தவிக்கிறது.

பொதுவாக நாம் நம்மிடம் பணமும் பொருளும் நிறைய இருந்தால் இன்பமாகவும் மன அமைதியோடும் வாழலாம் என்று எண்ணுகிறோம். ஆனால் பொன்னும் பொருளும் நிரம்பப் பெற்றுள்ள அநேகர் அவற்ருல் மன அமைதியைப் பெற முடியாது. குறிப்பாக அயல் நாட்டவர், அவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு எளிய வாழ்க்கை வாழ முனைகின்றனர். கங்கைக் கரையில் அமைந்திருக்கும் ஆச்சிரமங்கள் பலவற்றில் வசிக்கும் சாது மகாத்மாக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் இந்த உண்மை புலனுகும்.

ஆனல் உலகில் வாழ்வதற்குப் பொருள் வேண்டும். பணம்வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே பொருளைப் பெறவும் வேண்டும், மன அமைதியோடு வாழவும் வேண்டும்—இது எப்படி சாத்தியமாகும் என்ற ஐயம் மனத்தே எழலாம். எனவேதான், மறை நூல்கள், ''நண்பா! நீ உனக்குத் தேவையான பொருளை அற வழியில் ஈட்டு. ஈட்டிய பொருளை உன்னுடையது என்று எண்ணுது, இறைவன் தந்தது இச்செல்வம் என்று எண்ணி அதனிடம் பற்று வையாது அதைப் பயன்படுத்து. உனக்குத் தேவையானது போக மிகுதியை வேண்டுவார்க்கு கொடு. உன் வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் பெருகும்'' என்று இவ்வுலகில் பொருளைப் பெற்று விளங்குவதற்கிடையில் மன அமைதியையும், இன்பத்தையும் பெற்று நல் வாழ்வு வாழ்வதற்கான வழியைக் காட்டுகின்றன. மன அமைதி பெற நல்லார் இணக்கம் வேண்டும். சத்சங்கம் வேண்டும்.

எனவே நல்லார் இணக்கம் கொள்வோம். நல்லநூல்களைக் கற்போம். இறைவன் நாமத்தை ஜபிப்போம். இனிய கீர்த்தனங்களைப் பாடுவோம். மன அமைதியை அடைவோம். அதற்கு இறைவன் அருள் நமக்குத் துணை நிற்குமாக!

# கோயிற்றிருநாடு

சி. முருகவேள்
நூலகம், இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகம்.

தமிழ்ப் பாஷையினைப் பேசி, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் கூட்டம், நினைவு செல்லக் கூடிய மிகவும் பழைய காலம் தொட்டு கோயில் கட்டிச் சுவாமி கும்பிட்டு வாழ்ந்து வருகிற மக்கள் கூட்டமாகும். அவர்கள் சமுதாய வாழ்வு, காதல் வாழ்வு, கலை, கலாச்சாரம், இலக்கியம், பாஷை சில சில குறிப்பிட்ட முறைகளில் மோடிகளில் அமைந்து விளங்குகின்றன என்றால், அதற்குக் காரணம் அவர்கள் அவ்வாறு வாழ்ந்து வந்தமையே ஆகும். தமிழ் நாட்டிற்கு வந்த சமண, புத்த, இஸ்லாமிய சமயங்களைக்கூட மாற்றி அமைக்கக் கூடிய அளவிற்கு கோவில்கட்டி சுவாமிகும்பிடுகின்ற வித்தை அவர்கள் வாழ்விற்கு நடுநாயகமாக, வற்றாதஊற்றாக சக்தியின் பிறப்பிடமாக இருந்து வந்திருக்கின்றது.

இந்த வித்தையினை, தமிழ் மக்கள் எப்பொழுது, எவ்வாறு கற்றுக்கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. வேண்டுமென்றால், இலக்கியங்களையும் இன்னும் ஏனைய வரலாற்றுச் சாதனங்களையும் அடிப்படையாகக் கொண்டு கோயில்களை இன்ன இன்ன முறையில், இந்த இந்த காலங்களில் தமிழ் மக்கள் கட்டினார்கள், அவற்றில் இந்த இந்த முறைகளில் வழிபாடு செய்தார்கள் என்று அடிக் குறிப்புக்களுடன் கட்டுரை எழுதலாம். எழுதித்தான் என்ன பயன்? இது எவ்வாறாயினும் ஆகுக. சங்க காலம் தொட்டு, முருகாற்றுப்படை, பரிபாடல் காலம் தொட்டு, இன்றுவரை கோயில்கள் எமது தமிழ் நாட்டில் உயிருள்ள ஸ்தாபனங்களாக இருந்து கொண்டே வந்திருக்கின்றன. என்பது மாத்திரமன்று. அவை தமக்குள் ஒன்றோடு ஒன்றாக ஓர் ஒருமைப்பாட்டினைச் சிருஷ்டித்து வைத்துக் கொண்டிருக்கின்றன; பிரிக்க முடியாத முறையில் தமிழ் நாட்டோடு தமிழ் நில அமைப்போடு ஓர் இசைவினையும் ஒருமைப்பாட்டினையும் சிருஷ்டித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களோடு அவர் தம் உள்ளங்களோடு ஓர் ஒருமைப்பாட்டினைச் சிருஷ்டித்து வைத்துக் கொண்டிருக்கின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக, இக் கோயில்கள், காலத்திற்குக் காலம், தம்மைத் தாமே, ஆற்றல் வாய்ந்த முறையில் புதுப்பித்துக் கொண்டும் வருகின்றன. இவையெல்லாம் எவ்வாறு சாத்தியமாயின?

பதி, பசு, பாசம் என்பனவே தமிழ் மக்கள் கண்ட மூன்று சாசுவதமான பொருள்கள் என்று சைவ சித்தாந்திகள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்கள் சொல்வார்கள். இன்னொரு முறையிற் பார்க்கிற போது சுவாமி, கோயில், அடியார் என்று வருகிற மூன்றையுமே, தமிழ் மக்கள் கண்ட சாசுவதமான பொருள்கள் என்று கூறலாம். இம் மூன்றினுள்ளும் அடியார்களே நடுநாயகமான இடத்தினைப் பெறுகின்றார்கள்.

சுவாமி எம் மக்களிடையே, சாக்ஷாத்கரித்து விளங்கித் தோன்றி உலாவுவதற்கும், கோயில்கள் சுவாமியின் இருப்பிடங்களாக விளங்குவதற்கும், ஒரு கோயில் மற்றைய கோயில்களுடனும் கோயில்கள் அனைத்துமே, நாட்டுடனும் மக்களுடனும் ஒருமைப்பாடு பெற்று விளங்குவதற்கும், காரணகர்த்தாக்களாக விளங்கியவர்கள் விளங்குபவர்கள் இவ்வடியார்கள். இவர்கள் தோற்றத்தில் சாதாரண மானவர்கள் போலவே இருப்பார்கள். ஆனால் இவர்கள் பேசுவது சத்தியமாகவும் செய்வன தவமாகவும், நீதியாகவும் இருக்கும். உய்யக் கொள்கின்ற இப்பூமியில் இவர்கள் சிவலோகக் காட்சிகளை யெல்லாம் காண்பார்கள்; அக்காட்சிகளுக்கு உருவமும் கொடுத்து நிலைபேறும் செய்துவிடுவார்கள். இவர்கள் கண்ட காட்சிகளின் பெறுபேறே நாங்கள் இப்போது காண்கின்ற கோயிற்றிரு நாட்டுக்காட்சியாகும்.

காலத்திற்குக் காலம். இத்தகைய அடியவர்கள் தோன்றி காண முடியாத காட்சிகளை யெல்லாம் கண்டு நெகிழ் தமிழில் சொல்லிச் செல்வதனுற்ருன் நான் மேலே குறிப்பிட்ட அற்புதமான காரியங்கள் எல்லாம் சாத்திய மாயின.

புலவர்களாகத் திகழ்ந்த அடியவர்கள் சொல்லியவற்றில் எல்லாம் நாங்கள் இவ்வுண் மையை உணர முடியும். ஆனுல் அப்பர் தமிழில், அதுவும் ஆரும் திருமுறையில் குளிர்ந்த தண்ணென்ற ஆற்றெழுக்குத் தமிழில் இவ்வுண்மை புலப்படுமாறு வேறெரு இடத்திலும் புலப்படுகின்றதில்லை எனலாம். இவ்வாறும் திருமுறையில் அப்பர் சுவாமிகள், சுவாமியை என்ன என்ன கோலத்திலெல்லாம் கண்டார்! ஒவ்வொரு கோயிலிலும் சுவாமியை அங்கே நிலைபெற்று வாழும் பொருளாகக் கண்டார்; ஒரு கோயிலில், மற்றைய எல்லாக் கோயில்களிலும் உள்ள சாமியைக் கண்டார். எல்லாக் கோயில்களிலும் ஒரு கோயிலில் உள்ள ஒரு சுவாமியைத்தான் கண்டார். இவற்றினை யெல்லாம் தமிழ் நாட்டில், தமிழ் மண்ணில் நீங்காது ஒன்றிப் போன அம்சங்களாகக் கண்டார்.

தமிழ் நாட்டில் ஓரூரில் ஒரு கோயிலில் சுவாமி உறைகின்ற அழகைப்பாருங்கள்.

"கைகிளரும் வீணை வலவன் கண்டாய்
கபாலி கண்டாய் திகழுஞ் சோதி
மெய்கிளரு ஞான விளக்குக் கண்டாய்
மெய்யடியா ருள்ளத்து வித்துக் கண்டாய்
பைகிளரும் நாக மசைத்தான் கண்டாய்
பராபரன் கண்டாய் பாசூரான் கண்டாய்
வைகிளரு கூர்வாட் படையான் கண்டாய்
மறைகாட் டுறையும் மணாளன் ருனே"

தமிழ் நாட்டில், ஏன் பாரத நாட்டில் என்று கூடச் சொல்லலாம், இடங்களும் கோயில் களும் பலவாகத் தோன்றினுலும், அவையெல் லாம் உண்மையில் ஒரே மகாதேவனின் ஒரே கோவில்தான் என்ற அப்பரது காட்சியினை அடைவு திருத்தாண்டகத்தில் காணலாம்.

சிறப்பு என்னவென்ருல், இந்த சுவாமியும் அங்கங்கே, கோயில்களில் "கல்லுச் சுவாமி யாக" அமர்ந்திருக்கும் சுவாமி அல்லர். ஒரு கோயிலிலிருந்து இன்னெரு கோயிலுக்குத் தமது அருமைத் திருப்பாதம் நோவ தமிழ் மண்ணில் அடியெடுத்து வைத்து, தர்ம வடிவான இடபத்திலே ஏறி, சதா யாத்திரை செய்து கொண்டிருக்கின்ற சுவாமி இவர்.

வானம் சிவந்து விளங்கும் அந்திப்பொழுது. இடம், சிதம்பரம். பெரியவரான அப்பரிடம் வந்து யாரோ ஒருவர் சந்தித்த கோவணத்தர், வெண்ணுல் மார்பர், சங்கரனைக் கண்டீரோ என்று கேட்டார். அதற்கு அப்பர், நிமிர்ந்து பார்த்து, 'என்னப்பா கேட்கிருய், கண்டேனு ஆம், கண்டேன்' என்று தான் கண்ட அற்புத மான காட்சியினை விவரிக்கின்ருர்.

"நன்ருக நாணயம் போட்டுக்கட்டின அழ கான விடையிலே பாய்ந்து லாவகமாக ஏறி உடைந்த மண்டை ஓட்டிலே என்னத்தையோ ஏந்திக்கொண்டு, என் உடலையும் உள்ளத்தை யும் உருக்கி, பூதங்கள் பொன் தீ மணிவிளக்குப் பற்ற, திருவாரூரிலிருந்து புலியூர்ச் சிற்றம் பலத்திற்குள் போனுரே, நான் கண்டேன்.

இக்காட்சியினைக் கண்ட அப்பர் சுவாமிகள் கண்டதோடு, அக்காட்சிக்கு நான் முன்னே குறித்த நெகிழ் தமிழில் நிரந்தர வடிவமும் கொடுத்து விடுகின்ருர்.

சந்தித்த கோவணத்தார் வெண்ணூல் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோ மிந்நாட்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையி லென்கொலோ வேந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமு மெல்லா
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றி மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே!

அப்பர் தேவாரத்தில் ஆறும்திருமுறையில், இது அப்பரது ஒரு காட்சி. இப்படிப் பல, அப்பர் தேவாரத்திலும் பிற இலக்கியங்களிலும்.

இவ்வாருக, அழகிய எமது மிகவும் ஆழ மான அபிலாஷைகளைத் திருப்தி செய்யக் கூடிய காட்சிகளைக் கண்டு சொல்லும் பெரிய வர்கள் காலத்திற்குக் காலம், எமது அருமைத் தமிழ் மண்ணில் தோன்றிப் போனபடியால் தான், தமிழ் மக்கள் எவற்றையெல்லாம் தமக் குப் பெருமை தருவனவாகக் கருதுகின்ருர் களோ, அவற்றுக்கெல்லாம் அடிப்படையான இந்தக்கோயில் கட்டிச் சுவாமி கும்பிடுகின்ற வித்தை உயிருள்ள ஒரு வித்தையாக, அர்த்த புஷ்டியுள்ள வித்தையாக நிலைபெற்று வந்திருக் கின்றது. மாசுமறுவற்ற இப்பெரியவர்களின் காட்சிகள் உண்மைக் காட்சிகளாகும்; வாக்கு கள் நிறைமொழிகளாகும். இக்காட்சிகளும் நிறைமொழிகளும் மிகுந்த ஆற்றல்வாய்ந்தவை ஆதலினுல் தம்மைத்தாமே நிரூபித்துக் கொள் வன.

# முருகன் மகிமை



K.V. தியாகராஜன் செயலாளர்: திருப்புகழ்ச் சபை. மதுரை.

அருள் நலங் கண்ட பெரியோர்கள் நிலங் கண்டலராய், நிலத்தை நான்காகப் பிரித்தார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்றார்கள். இவற்றுள் மலையும், மலையைச் சார்ந்த பகுதியும் குறிஞ்சி. முருகனைக் குறிஞ்சிக் கிழவன் என்றார் அருணகிரிநாதர். நம் உடம்பில் சிறந்தது சிரம். சிரத்திற்குமேல் சிகை. முருகன் தெய்வசிகாமணி. ஆதலால் உயர்ந்த மலைமீது வைத்து வணங்கினர் கள். மலைக்கு 'நாயக' என்றார் அருணகிரிநாதர் திருக்கொணமலைத் திருப்புகழில்.

இறைவன் பேரும், ஊரும், செயலும், குண மும், குறியும், வரவும், போக்கும், முன்னும், பின்னும் இல்லாதவன்.

''ஊரிலான் குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல்போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்!''

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ!''

— திருவாசகம்

பேரும் ஊரும் வடிவும் முடிவும் இல்லாத இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பேரும் உருவும் தாங்கிக்கொண்டான்.

இத்திருவருளின் இயல்பை உள்ளவாறு உணராத புலவர்கள் இறைவனுக்கு நாமரூபம் நம்மால் கற்பிக்கப்பட்டது என்று கூறி மயங்கு வார்கள்.

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனுக்கு இன்றிருந்து நாளை மறையும் அற்ப மனிதனா பேரும் உருவும் இடவல்லான்?

தவம் பெருக்கும் சீகாழியில் திருவவதாரம் செய்த சிவம் பெருக்கும் பிள்ளையார் அழுதலும், அவருடைய பண்டைத் தவ வலிமையால் இறை வன் திருவுருவுடன் காட்சி தருகின்றான். வெள்ளை விடையில் பவளக் குன்றென்ன திருவுருவும், மர கதக் கொடியன்ன அம்பிகையும், பிறைமதி யணிந்த திருமுடியும், மான்மழு ஏந்திய திருக் கரங்களும், நீலகண்டமும் தோடணிந்த தாழ் செவியும், கருணை பொழியும் மலர்க் கண்களும் நீறணிந்த திருமேனியும் சண்ணரைக் கண்டு, அச் சிறிய பெருந்தகையார், ''தோடுடைய செவியன்'' என்றுபாடுகின்றார். அத்திருமேனியை மூவாண்டுக் குழந்தை கற்பனை புரியவில்லை. கண்கண்ட காட்சி யைப் பண்கண்ட தமிழால் பாடி, தன் தந்தையா ருக்குக் காட்டுகின்றார்.

சூரபன்மனுக்குச் சிங்கமுகாசுரன் கூறுகின்ற அறவுரையைக் கந்தபுராணத்தில் காண்க:

''வாரிதாமதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியும் முக்கணும் நாற்பெரும் புயமும்
நீலமாமணிக் கண்டமும் கொண்டு நின்றனனால்
மூலகாரணம் இல்லதோர் பராபர முதல்வன்''

''தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுறாச் கொண்டது
என்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்
பின்னை வீடுபே றருளுவான் நினைத்தபே ரருளே''.

செவ்வண்ணச் சிவமூர்த்தி இவ்வாறு இவ் வண்ணம் ஆன்மாக்களின் நலன் கருதி எடுத்துக் கொண்ட அருள் திருவுருவங்கள் பல. அவற்றுள் மிகவுந் தொன்மையும் நன்மையும் மிக்க வடிவம் ஆறுமுக வடிவம்.

''அந்திக்குறிகர் மெய்யண்ணல் அருள்புரிந்து
அறிஞராயோர்
சிந்திக்குந்தனதுதொல்லைத் திருமுகமாறுங்கொண்டான்''

—கந்தபுராணம்

''பழைய வடிவாகிய வேலா''

(—இருவர் மயலோ) திருப்புகழ்

தேவர்களின் துயர் தீர்க்கும் பொருட்டு வடிவும் முடிவும் இல்லாத பரம்பொருள் மூவிரு முகங்களும் ஆறிருபுயங்களும் மூவாறு நயனங்களும் அமைந்த திருமேனி கொண்டு அருள் புரிந்தார். நமது கருமேனி போன்றதன்று அத்திருமேனி. அது அருளேயாகும்.

ஆறு சமயங்கட்கும், ஆறு ஆதாரங்கட்கும், ஆறு அத்துவாக்களுக்கும், ஆறுபடை வீடுகட்கும் அதிபன் ஆறுமுகப் பெருமான். முருகன் என்ற பேரும் ஆறு பொருள்களைக் கொண்டது.

தெய்வத் தன்மை, இனிமை, இளமை, மணம், மகிழ்ச்சி, அழகு என்று ஆறு தன்மைகளையுடையவன் முருகன்.

''முருகுகள் இளமை நாற்றம்
முருகவேள் விழா வனப்பாம்''

என்கின்றது பிங்கல நிகண்டு. முருகன் பிறப்பு, இறப்பு இல்லாதவன்; என்றும் அகலாத இளமையுடையவன்; இனிமையுடையவன்; ஞான மணம் வீசும் ஞான பண்டிதன்; அளவில் இன்பமுடையவன்; பேரழகுடையவன்.

முருகன் அறிவே வடிவாய்த் திகழ்பவன். இந்த அறிவு, நூலினால் எய்தும் அறிவன்று.

''ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும் என்றால் அஃதெளிதோ
மோனந் தீர்கலா முனிவருங் காண்கிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை''

—கந்தபுராணம்

அறநெறி வழுவாத ஓரரசன் வேட்டையாடினான். விலங்கின்மீது விட்ட கணை குறி தவறி ஒரு புறந் தவம் செய்துகொண்டிருந்த ஒரு அந்தண முனிவரைக் கொன்றுவிட்டது. அந்த பிரம்மகத்தி அரசனைத் தொடர்ந்து அல்லல்படுத்தியது. நின்றாலும் சென்றாலும் அரசனை விடாது நிழல்போல் நெருங்கி நிலை கலங்க வைத்தது. மன்னன் வாடினான். அந்த அல்லல் அகலும் சாதனத்தை நாடினான். கங்கை நதியருகில் ஓடினான். கங்கைக்கரையில் கடுந்தவம் புரியும் மாதவ முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்தான்.

அரசன் அடைந்த அந்த சமயத்தில் அருந்தவ முனிவர் இல்லை. வெளியே சென்றிருந்தார்.

ஆச்சிரமத்தின் வாசலில் மாதவ முனிவருடைய மைந்தன் இருந்து வேதம் ஓதிக்கொண்டிருந்தான். சிறுவன் அரசனை வரவேற்று இன்சொல் இயம்பினான்.

''குழந்தாய் நான் இந்த நாட்டையாளும் மன்னன்.''

''அரசே உன்னைக் கண்டவுடன் அரசன் என்று உணர்ந்தேன்.''

''குழந்தாய்! மிகுந்த வேதனையுடன் இங்கு வந்தேன்.''

''வேந்தே! நீ வேதனையுடன் வந்தாய் என்பதை உன் வாடிய முகமே உணர்த்துகின்றது.''

''மகனே! தவமுனிவர் எங்கே? அவரிடம் குறையைக் கூறி பரிகாரந் தேடவந்தேன்''

''அரசே! அப்பா வெளியே சென்றனர். என்னைச் சிறு குழந்தையென்று எண்ணாதே. உனக்கு என்ன துன்பம்? சொல். அதற்குப் பரிகாரம் நான் கூறுவேன்.''

''மகனே! நான் அபுத்திபூர்வமாக ஒரு முனிவரைக் கொன்றுவிட்டேன்.'' பிரமகத்தி என்னைத் தொடர்ந்து துயரந் தருகின்றது. அப்பாவத்தைப் போக்கும் சாதனையைக் கேட்க வந்தேன்.

''அரசர் பெருமானே! வருந்தாதே. இவ்வளவு தானே! இதற்கென்ன பெரிய ஆராய்ச்சி? சிறுபிள்ளையென்று என்னைக் கருதாதே. சிறு பிள்ளை விளக்கேற்றினால் இருள் நீங்குந்தானே. நான் சொன்னபடி செய். பிரமகத்தி நீங்கும். இதோ உள்ள கங்கையில் நீராடி, வடதிசை நோக்கி, முருகவேளை உள்ளக்கண்ணால் நோக்கி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ''முருகா! முருகா!! முருகா!!! என்று ஓது. பிரமகத்தி நீங்கும்.''

அரசன் அவ்வாறு அன்புடன் அகமகிழ்ந்து ஓதி பிரமகத்தி நீங்கப்பெற்றான். முனி மைந்தனை தலையால் வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

பின்னர் முனிவர் பெருமான் ஆச்சிரமத்தையடைந்தார். தேர்ச் சக்கரங்ளின் சுவட்டினைக் கண்டார்.

''மகனே! இங்கு வந்தவர் யார்?''

''அப்பா! இந்த நாட்டினை ஆளும் மன்னவர் வந்தார்!''

''கண்ணே! இறைவன் எதன் பொருட்டு வந்தார்?''

இத்தரையோ ரெந்நாளு மிறைவனடி
மறவாம லிருப்ப தொன்றே
புந்தியென நனியுணர்ந்து புவிக்குணர்த்தும்
பொறுப்பேற்றுப் பொலியுமீழத்
துத்தமவாத் துமசோதி நிலையமொன்று
கண்டதனை யுவந்து காக்கு
முத்தையவே எருமைநா யகமிவர்கள்
தொண்டினிதே யோங்கு மன்றே!

—ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகர்

"தந்தையே! அவரைத் தொடரும் பிரம கத்தி தீர வழி கேட்டார். அதற்குப் பரிகாரத்தை நான் பகர்ந்தேன். துயரந் தீர்ந்து மகிழ்ந்து சென்றார்.

முனிவர் பெருமகிழ்ச்சியடைந்தார். "கண்ணே! மன்னவரை நீ வரவேற்று இன்னுரை கூறிக் கவலை தீர்த்து அனுப்பியதுபற்றி நான் பெரிதும் மகிழ்கிறேன். நல்லது. நீ என்ன பரிகாரத்தைக் கூறினாய்?"

"தந்தையே! பிரமகத்தி நீங்க முருக மந்திரத்தை மும்முறை கூறுமாறு உபதேசித்தேன்."

முனிவரின் விழிகள் சிவந்தன. புருவங்கள் துடித்தன. உடல் கொதித்தது.

"மூடனே! நீ என் மைந்தனா? உனக்கு ஏன் இந்தப் புத்தி உண்டாயிற்று?" உனக்கு ஒரு சிறிதும் முருக பக்தியில்லையே. பெருந் தவறு செய்துவிட்டாயே. பேதையே! என்பால் வேதம் ஓதிய உனக்கு உறுதியில்லையே?

மைந்தன் நடு நடுங்கினான். தந்தையின் தாள் மீது வீழ்ந்தான். பலகாலும் பணிந்தான். பதைபதைத்தான். "அப்பா! நான் என்ன பிழை செய்தேன்? நம் குல தெய்வம் குமரக் கடவுள். அந்தக் கந்த நாயகன் திருமந்திரத்தைத் தானே ஓதச் சொன்னேன்? இது பிழையாகுமா?"

"மகனே! ஒரு மாத்திரை தந்தால் தீரக் கூடிய நோய்க்கு மூன்று மாத்திரைகள் தரலாமா? ஒரு முறை முருகா என்றால் கோடி பிரமகத்திகள் தீருமே? நீ மூன்று முறை சொல்லச் சொன்னாயே, நீ முருக நாமத்தின் அருமை பெருமைகளை அறிந்தாயில்லை. நீ வேடனாகப் பிறக்கக்கடவது" என்று சாபமிட்டார். அம்மைந்தன் அருந்தவ முனிவரின் அடிமலர் மீது வீழ்ந்து பிழை பொறுத்தருளுமாறு பலகாலும் வேண்டினான்.

முனிவர் தண்ணருள் புரிந்தார். மைந்தனே! நீ வருந்தற்க. நீ இதே கங்கா தீரத்தில் வேடர்களுக்கு அரசனாகப் பிறப்பாய். முருக நாமங்களில் ஒன்றாகிய குகன் என்ற நாமத்துடன் வாழ்ந்து, இனி அவதரிக்க இருக்கும் ஸ்ரீ ராமருக்குத் தோழனாக வாழ்வாயாக. முடிவில் உனக்கு முருக பதம் சித்திக்கும்" என்று கூறி அருள் புரிந்தார்.

அம் முனிவர் மகன் வேடர் குலத்தில் குகனாகப்பிறந்து, இராமபிரானுக்குத்தோழமை பூண்டு, ஆண்டு இறுதியில் கந்தலோகத்தை அடைந்தான்.

'முருகா' என்று நாக்கு மட்டும் நவிலக் கூடாது. ஊன் உள்ளம் உணர்வு உயிர் நாடி நரம்பு எல்லாம் ஒன்றுபட்டு உருகி ஓத வேண்டும். குறையாத செல்வமும் ஞானமும் பெறுவர். நோய் துன்பம் முதலியன எய்தார். யமபயம் அடையார். பரகதி அடையார்.

"முருகா எனவுனை ஓதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார் வியாதி அடைந்துநையார்
ஒருகால முந்துன்பம் எய்தார் பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே"

—சிதம்பர சுவாமிகள்

பல பிறவிகளில் செய்த புண்ணியப்பயன் உடையவர்க்கே முருக பக்தி எய்தும். முருக நாமத்தை ஓதும் உயர்வு கிடைக்கும்..

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்

அன்பர்கள் முருகன் திருநாமங்களை ஓதி இகபர நலன்களுடன் இனிது வாழ்க.

ஒரு உண்மை ஞானியின் சந்நிதியில் ஒருவன் சற்று நேரம் அமர்ந்திருந்து பார்த்தால் அவன் மனம் அவன் முயற்சியின்றியே அமைதிக் கடலில் ஆழ்வதை அவன் உணர்வான். உண்மை உணர்ந்த உத்தமர்களைக் கண்டுணர இதுவே சிறந்த உபாயம். வேறுவாதங்களில் இழிந்து அல்லல்படத் தேவையில்லை.

— பகவான் ரமண மகரிஷிகள்

# அன்பின் பெருக்கமும் அடியவர் வீரமும்

பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை
வியாபாரிமூலை — பருத்தித்துறை

பெரியப்ராணத்தை 'எடுக்குமாக் கதை' என்று அதனைப்பாடியருளிய சேக்கிழார் பெருமான் கூறினர். பெருமை மிக்க புண்ணிய சரிதமாயிருந்ததோடு அதன் கண் விதந்து கூறப்படுமடியார்களின் குறிக்கோள் படிப்பவர் மனத்தையும் உயர்ந்தநிலைக்கு உயர்த்துவதால் அஃது எடுக்கும் மாக்கதையாகிறது. இறைவன் திருவருளிலே தோய்ந்த அடியவர் சரிதம் படிப்பவரையும் புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி நன்னெறிக் கண் உய்க்கும் இயல்பினது. இத்தகைய அடியார்கள் அறுபத்துமூவர். அந்தணரும் வணிகரும், அரசரும், வேளாளரும், புலையருமாகப் பல வருணத்தாரும் பல ஊரைச் சேர்ந்தவர்களுமாகிய இவர்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளாகிய அரச திருவும் அந்தணர் திருவும் ஒருங்கு பெற்ற நம் சமய குரவர் உளமுருகி, தாம் அவர்களுக்கு அடியவன் எனத் திருத்தொண்டத் தொகையிலே தனித்தனி போற்றுகிருர். பலவகைத் தொண்டுகளிலு மிவர்கள் ஈடுபட்டிருந்தாலும் சிவதொண்டு என்னும் ஒன்றில் இவர்தம் பணிகளடங்கும். இவர்கள் 'பாரம் ஈசன் பணியல தொன்றிலார்' என்கிருர் சேக்கிழார் பெருமான். பணி செய்து கிடப்பதைக் கடனுகக் கொண்டவர்களாகையால் குன்றெத்துக் குறுக்கிடும் இடர்களைக் கண்டும் அஞ்சாதவர்களாய் இறை திருவருளையேதஞ்சமென நாடியிருப்பவரிவர். 'படைக்கலமாக உன் நாமத் தெழுத்தஞ் சென் நாவிற் கொண்டேன்' என்கிருர் அப்பரெம்பெருமானுர்.

மன்னருக்கோ விலங்கினங்களுக்கோபயங்கர இயற்கை நிகழ்ச்சிகளுக்கோ அஞ்சாத இறைவன் சார்புடைய இவ்வடியார்களை விளம்பரிய வீரச் சிறப்புடையரென இவர்தம் 'வீரம் என்னுல் விளம்புந் தகையதோ' எனச் சேக்கிழார் நமக்குக்காட்டுகிருர். ஒரு உதாரணத்தால் நாம் இதனை விளங்கிக் கொள்ளலாம். புண்ணிய முனிவர் சிவகாமியாண்டார் வைகறைப் பொழுதில் அரனுருக்குச் சாத்தும் மாலைக்கு ஏற்ற மலர்களைக் கொண்டு கடிதினில் வருகின்ருர். புகழ்ச்சோழ மன்னர் பட்டத்து யானை கட்டுக்கடங்காது கொடு வேகத்துடன் வந்து மலர்க்கூடையைப் பறித்துச் சிந்துகிறது. வாச மலரெடுக்கும் சிவநேயச் செல்வராற்றல் எத்தகையது பிளிறும் மதயானைப் பலமெத்தகையதென்றெண்ணுதே! பாகர்க்கடங்கா யானையை 'தண்டுகொண்டடிக்க வந்தார்' வாலறிவன் நற்ருள் தொழும் தொண்டர். மூப்பால் தளர்ந்த பூக்கூடை தாங்கிய தொண்டர் விழுந்து கையால் தரையினை அடித்து அடியார்க்கருள் புரிபவனே என்ற கருத்துள்ள 'சிவதா' என்ற ஒன்றனையே பலகால் உச்சரிக்கிருர். 'வழுக்கிவீழினும் சிவன் திருநாமமன்றி மறுமாற்றம் அறியாதவரே உண்மைத் தொண்டர். 'சிவதா' என்பதனை ஒரு தொடராகக் கொண்டு சிவனே என்பூங் கூடையைத் தந்தருள் என்றும் பொருள் கொள்ளலாம்!

> ''களியா னையின்ஈர் உரியாய் சிவதா
> எளியார் வலியாம் இறைவா சிவதா''

''உன்னை ஏழைபங்காளன் எளியவர்க்கு இரங்குபவன் என்றெல்லாம் பெரியோர் உரைப்பார். உடல் வலியற்ற எளியார்க்கு உன்னைத்தவிர வேறு வழியில்லையே 'திக்கற்றவருக்குத் தெய்வமே துணை'யன்ருே?

உன்னை அர்ச்சிப்பதற்கு எடுத்த மலரால் யான் வணங்க வேண்டும். அதனைச் சிவனே தந்தருள்'' என்று கதறி வேண்டுகிருர் முதியவர். மதங்கொண்ட யானையின் தோலை ஈர்த்தெடுத்துப் போர்வையாகக் கொண்டவனே என்று அடியார் முறையிடும்போது அதனுள் ஒரு குறியுந் தோன்றுகிறது. ''தாருகா வன முனிவரேவிய யானையின் முன் இஃது எம்மாத்திரம்? இதன் கொடுமையை மடியச்செய்.''

ஆத்மா வேறு ஜோதி வேறு அல்ல. தெளிவின் ஆன்மா ஜோதி எனப்படுவது. இவ்வொளி ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பொது. இவ்வொளியை உணர்வால் அதாவது சொரூபத் தியானத்தால் அடையலாம். அதன் முதிர்ச்சி கேவலகும்பகம் எனப்படும். இந்நிலை ஒவ்வொரு ஜீவனும் பெற்று பேரானந்தப் பெருவெள்ளத்தில் அழுந்தி எல்லாம் வல்ல நிறைவாம் பிரம்ம நிலையை அடைய வேண்டுமென்பதே ஆத்மஜோதி ஆசிரியரின் உள்ளக்கிடக்கை. அவ்வுள்ளம் கடந்த கால் நூற்றுண்டாக செயல் பட்டுள்ளது. உலகம் இதை உணர்ந்து அதற்கு ஆக்கம் அளிப்பதாகுக.

—ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ சிவானந்தமுனீஸ்வரர்

'ஆறும் மதியும் அணியும் சடைமேல்
ஏறும் மலரைக் கரிசிந்துவதே?'

"உன் புனித சடைக்குரிய உயர்ந்த மலரையா இந்த ஈன யானை சிதறுவது?" உண்மை அன்பாலேற்பட்ட உள்ளக்குமுறலைத் தொண்டர் சீர் பரவுவார் சிவகாமியாண்டார் மூலம் வெளிப் படுத்தும் விந்தை உணர்ந்தே அனுபவிக்கத்தக்கது.

'நெடியோன் அறியா நெறியார் அறியும்
படியால் அடிமைப் பணிசெய் தொழுகும்
அடியார் களில்யான் ஆரா அணைவார்
முடியா முதலார்?'

இத்திருப்பாடல் அவர் சோகத்தின் உச்சப் படியாகிறது. "விஷ்ணுவுக்குத் தெரியாத அன்பு நெறி முறையையுடைய அடியவரில் ஒருவனுயின் பெருமான் இப்படி நிகழ விடமாட்டார். யான் சிவனுக்கு அடியவனன்று கடையவனே" எனத் தம் அன்பின்மையையே கூறும் உண்மை அடியாரிடரை இறைவன் பார்த்துக் கொண்டிருப்பானு? நான்கு சிறிய ஆயின் பொருள் நிறைந்த அவலச் சுவை தொனிக்கும் பாடல்களை ஈண்டு சேக்கிழார் நமக்குத் தந்துள்ளார். முதிர்ந்த உள்ளத்தின் சோகக் குரல் ஆண்டுத் தொனிக்கிறது.

அடியாரிடர் தடிவதைத் தொண்டாகக் கொண்டவர்.


அன்பர்க்கு இடர் வந்த காலத்து அதனைப் பொடியாக்கும் எறிபத்த நாயனுர் சிவனுர் திருவருள்போல் உதவவருகிறுர். கையில் பரசு (மழு ஆயுதம்) தாங்கி நிற்கிறுர் எறிபத்தர். 'அன்பர்க்கு அடாதன அடுத்தபோது முரண் கெட எறிந்து தீர்க்கும்' இறைவன் பரசுபோல அஃது இலங்க எறிபத்தர் சிவகாமியாண்டாரை வணங்கி அவர் வாயிலாக நிகழ்ந்ததை அறிகிறுர். "மன்றவர் அடியார்க் கென்றும் வழிப் பகை களிறே யன்றோ? கொன்றது வீழ்ப்பன்" என்று சிங்கம் போற் சீறிக் களிற்றுடன் பாகர் மூவரும் யானை மீதேறிச் செல்பவர் இருவரும் படமழுவோச்சி நிற்கிறுர் எறிபத்தர்.

இச்செய்தி மன்னனுக்கெட்டியதும் சினமீதூர வந்த மன்னன் அவர் திருவுருவைப் பார்த்த மாத்திரத்தே அவருள்ளக் குறிக்கோளை அறிந்து இறைவர் அன்பரிருவர் துன்புறவும் தன்னை முனியவும் நேர்ந்தமையை நோக்கி வருந்துகிறுன். தன்னையும் கொன்று முறை செய்ய வேண்டுமென்ற மன்னன் பெருந்தன்மை எறிபத்தர்க்குப் புலப்படுகிறது. தொண்டர் தம் திறத்தினை உலகுக்குக் காட்டச் சிவபிரான்செய்த திருவிளையாடல் இதுவென விசும்பினின்றும் இறையருள் வாக்கு எழுகிறது.

எறிபத்தர் ஆண்மையும் மன்னன் பெருமையும் சிவகாமியாண்டார் தூய சிவபக்தியும் ஒருங்கே புலப்பட எல்லாம் சுயமாக நிறைவெய்துகின்றன, சிவனைத் தவிர வேறு தஞ்சம் வேண்டாச் சிவகாமியாண்டார் தொண்டின் பெருமையுடன் தொண்டர் துன்பம் தீர்த்தலில் அரசதண்டனையையோ வேறெதையோபொருட் படுத்தாத எறிபத்தர் மாசுமறுவற்ற தூய வீரத்தையும் உணர்ந்து அடியார் பெருமையை ஓரளவாவது அறியும் நீர்மைக்கு நம்மை வழிநடாத்தும் சேக்கிழார் திருவடியை வழுத்துவோமாக!

அனைத்துயிரும் ஒன்றே (பிரமமே) என்று கருதும் அத்வைத அடிப்படையிலேயே, பிறர் பசி நம் பசிதான்! பிறரை வஞ்சிப்போர் தமக்குத்தாமே வஞ்சகர். பிறருக்கு இனியர் தமக்கு இனியர்! என்ற சன்மார்க்கத் தனிப்பெருங் கோயில் உறுதியாக நிற்கமுடியும் என்று கருதுவோர் உண்டு. விசிஷ்டாத் வைதிகளின் சித்தாந்தம் குறித்து, அருளே விசிஷ்டம். அன்பே விசேஷணம். அன்புக்கே சுரப்பது அருள். அருளுக்கே வளர்வது அன்பு. உடலும் உயிரும்போல் அன்பும் அருளும், என்று ஓர் அறிஞர் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

— பி. ஸ்ரீ



# வீர சைவம்

கோவை பேரூராதீனம்
சாந்தலிங்க இராமசாமி
அடிகளார் அவர்கள்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறுநீர் போல் சிந்தை வாய்ப் பாயுந்
திருப் பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக்கேனே.

உலகில் கடவுளை வழிபடும் நெறிகள் பல உள்ளன. நமது நாட்டில் இந்நெறிகள் பல சமயங்களாக வகுக்கப்பெற்று வளர்ந்துள்ளன. அந்நெறிகளின் கருத்துக்களைத் தன்னகத் தடக்கிச் சிறந்திருப்பது சிவநெறி. சிவநெறி மிகப்பழமையானது. உலக முழுவதும் பரவி யிருந்தது. கடல் கடந்த நாடுகளில் சிவநெறிக் குரிய அடையாளங்களும், குறிகளும் தென் படுகின்றன. பண்டைப் பெருநெறியாகிய சிவநெறியினைச் சைவம், வீரசைவம் எனக் குறிப்பிடுகின்றனர். இவற்றின் உட்பிரிவு களாக பாசுபதம், காளாமுகம் முதலான பல வற்றையும் காண்கின்றோம்.

நம் நாட்டில் இமய முதல் குமரிவரை அமைந்துள்ளன, வழிபாட்டுத்தலங்கள். அவற் றுள் மிகச் சிறப்பாகப் போற்றி வழிபடப் பெறுவன பல. வடக்கே உயர்ந்து விளங்கும் இமய மலையில் உள்ளது கைலாயம். கைலா யத்து உச்சியிலுள்ள பெருமான் சிவபெரு மான். அப்பெருமானை மனத்தகத்தும், புறத் தும் வழிபடும் நெறி சிவநெறி. இறைவனை இமைப்பொழுதும் நீங்காது உடனுறையும் மெய்ப்பொருளாக அருளாளர்கள் போற்றி வழிபட்டனர். அவ்வாறு வழிபடுதற்குரிய உருவங்களாக அமைந்த சிவ வடிவங்கள் பல. அத்தகைய திருவுருவங்களை அருளாளர்கள் பலவாகக் கண்டுள்ளனர். சிவபெருமான் அம்மையப்பராக, ஆனந்தக் கூத்தராக, பிட் சாடனராகக் காட்சியளிக்கிறார். 'மாதர்ப் பிறைக்கண்ணியானை, மலையான் மகளொடு கூடிய வடிவத்தைப்பாடிப் போதொடு நீர் சுமந்தேத்திப் புகுந்து வழிபடுவர் அடியார் கள்'. ''இது அவன் திருவுரு இவன் அவன்'' எனக்கண்டு வழிபடும் ஆன்றோர்கள் அருவம், உருவம், அருவுருவம் என்னும் நிலைகளில் இறைவனைக் கண்டனர். இவ்வாறு வழிபடும் பெற்றிக்கேற்பச் சிவலிங்கத்தை அமைத்தனர். சிவலிங்கத்தை வழிபடுவது அம்மெய்ப் பொ ருளை எல்லா நிலைகளிலும் வழிபடுவதாகும்.

இதனை, பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய செந்தமிழ் முனிவர் சேக்கி ழார் பெருமான், ''காணாத அருவினுக்கும், உருவினுக்கும் காரணமாய் நீணாக மணிந் தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்'' என அருளியுள்ளார்.

சிவலிங்க வழிபாடு உலகெங்கும் பரவி இருந்ததென்பதை ஆராய்ச்சியாளர்கள் விளக்கி யுள்ளனர். அங்கங்கே சிவலிங்கம் இருப்பதை யும் எடுத்துக் கூறியுள்ளனர். சிவ வழிபாட் டினர் 'கைப்போது மலர் தூவிக் காதலித்து நாடோறும் முப்போதும்' வழிபடுவர். அவ் வாறு வழிபடும் திருவுரு சிவலிங்கம். சிவலிங் கத்தைத் தம் வாழ் முதலாகிய பொருள் எனக் கருதித் தம்மினின்றும் பிரித்தறியாக் கொள் கையினர் வீரசைவர். இக்கொள்கை மிகப் பழ மையானது என்பதை அகழ்வாராய்ச்சியினர் மெய்ப்பித்துக் காட்டி உள்ளனர். சிந்து வெளிப் பள்ளத்தாக்கில் அகழ்ந்த இடங்களி லெல்லாம் வீரசைவர்கள் அங்கத்தில் அணி கின்றதாக உள்ள சிறு சிறு சிவலிங்கங்கள் கிடைப்பதாகக் கூறுகின்றனர். மேலும், பண் டரி புரத்தில் உள்ள திருமால் திருவுருவின் முடியில் சிவலிங்கம் இருப்பதும் அங்கலிங்கத் தின் சிறப்பை வெளிப்படுத்துகின்றது. மயி லாப்பூரில் உள்ள திருவள்ளுவர் திருவுருவின்

முடியிலும் சிவலிங்கம் விளங்கக் காண்கிறோம். இமயத்தின் ஒரு பகுதியாக முதல் திருக்கோயிலாக விளங்கும் திருக்கேதாரம் வீரசைவ நெறியினர் வழிபாட்டையுடையது. வீரசைவ பீடத்தைச் சேர்ந்தது. இத்தகைய சான்றுகளால் நம் நாட்டின் பழம் பெரும் நெறி வீரசைவ நெறி என்பது புலனாகிறது.

வீரம் என்பது ஞானம். ஞானநெறி இறைவனோடு ஒன்றியிருத்தல், மெய்ப் பொருளை உணர்ந்து பிரிவற நிற்றல் என்பர். அடியார்களது பெருமை கூறும் பெரியபுராணம், அடியார் திறத்தைக் கூறும் போழ்து, "வீரம் என்றால் விளம்பும் தகையதோ" என்றுகூறும். எட்டு உருவமைந்தும் உருவம் ஒன்றின்றி இற்றென உணர்வரும் பொருளை, "கைத்தலத் தமர்ந்த கண்ணுதலாகக் கண்டு பிரிவற நிற்பதே வீரசைவ நெறி" உரை மனங் கடந்த ஒரு பொருள் உலகத் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் இடமாக நிற்பது. அப்பொருள் குறைவிலா நிறைவு, அதைப் பரம், பரமசிவம் என்பர். அது இட்டலிங்கம், பிராணலிங்கம் பாவலிங்கம் என மூவகையாகக் கொள்ளப் படும். இட்டலிங்கம் (தூல சரீரம்) பருவுடலின் கன்ம மல நீக்கத்தின் பொருட்டுத் தரித்திருப்பது. பிராணலிங்கம் (சூக்கும சரீரம்) நுண்ணுடம்பில் மாயாமல் நீக்கத்தின் பொருட்டுத் தரித்திருப்பது. பாவலிங்கம் (காரண சரீரம்) யோகவுடம்பில் ஆணவ மல நீக்கத்தின் பொருட்டுத் தரித்திருப்பது.

இவ்வாறு முழுமுதலாகிய மெய்ப்பொருளை அகத்தும் புறத்தும் ஏற்று உயிர்க்குயிராய் நிற்பதாக உணர்ந்து வழிபடுதலாகிய மூன்று நெறிகளும் ஒன்றுக்கும் பற்றாத நம்மை மேனிலை அடையச் செய்கின்றன. இம் மூன்று நெறிகளையும் ஆறுபடி நிலைகளில் நின்று மேற்கொள்ளுதல் முறைமை. அவற்றைச் சடுத்தலம் என்பர். அவை பக்ததலம், மகேசதலம் பிரசாதிதலம், பிராணலிங்கதலம், சரணதலம், ஐக்கியதலம் என்பன. படி நிலைகளில் நின்று வழிபடும் தகுதி பெற்றவன் இறைவனிடத்து ஈடுபட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி வழிபடும் அன்பின் திறத்தால் உயர்வது பக்தநிலை. அன்பின் முதிர்வால் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணிச் செந்தன்மை பூண்டு மற்றையோரால் போற்றப்படும் தகுதியால் தொண்டனாந் தன்மையால் சிறப்பது மகேசநிலை. அன்பின் முதிர்வும் அனைத்து உயிர்க்கும் அருள்தாங்கும் தண்ணளியும் பெற்றுத் தான் பெற்ற மெய்யுணர்வை மற்றையோரும் பெற அருளுதல் பிரசாதிநிலை, புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன் னெடுங் கோயிலாப் புகுந்து என்பெலாம்

> ஆத்தும சோதிமுத் தையன் அவரிளவல்
> ஏத்தி வரவேற் றினிதுவப்பர்—தோத்திரங்கள்
> சாத்திரங்கள் கற்ற சமயப் பெரியோரைக்
> கோத்திரம் கொண்ட குணம்.
>
> —சிதம்பரம் பழ. சண்முகம் செட்டியார்

உருக்கி ஆண்டதிறம் நினைந்து உள்ளொளி பெருக நிற்கும் நிலை பிராணலிங்கநிலை. காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக, மனமணிலிங்கமாக, நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப்பூசனை ஈசனார்க்குப் போற்றுவிக்காட்டும் நிலையில் ஓங்குவது சரணநிலை.

இறவியொடு பிறவியற அவனேயாகிய அந்நெறியில் நிற்பது ஐக்கியநிலை. இவ்வாறு கூறப்படும் ஆறுபடி நிலைகளும் வீரசைவத்தின் நுண்மை நிலைகளாகும்.

வீரசைவர் அட்டாவரணங்கள் எனக்கூறும் எட்டையும் பெரிதும் போற்ற வேண்டும். அவை திருநீறு, அக்கமணி, ஐந்தெழுத்து, குரு, இலிங்கம், சங்கமம், தீர்த்தம், பிரசாதம் என்பன. இவையெட்டும் வீரசைவநெறி நிற்போருக்கு என்றும் வேண்டப்படுவனவாகும்.

வீரசைவ நெறி இமய முதல் குமரி வரையிலும் பரவியிருக்கிறது. நாட்டில் சைவம், வீரசைவம் என்னும் பகுப்பின்றிப் பரவிய காலம் ஒன்று இருந்திருக்கலாம். தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக இந்நெறி சிறப்புற்றிருந்தது. தமிழ் நாட்டில் தோன்றிய வீரசைவ மடங்கள் ஐம்பத்தாறு. கிளைமடங்கள் பல, பல திருக்கோவில்கள் திருமடங்களுக்குட்பட்டிருந்தன. ஆனால் இக்காலத்தில் பல மறைந்து விட்டன. தமிழுக்கும் சமயத்திற்கும் இத்திரு மடங்கள் செய்திருக்கும் உதவிகள் போற்றுதற்குரியனவாகும். சமயநெறி வாழ்வோர் அனைவரும் ஒரே தகுதியினர். அவர்களுள் ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதை வலியுறுத்துவது பெரியபுராணம். அக்கொள்கையே வீரசைவமாகும். இக்கொள்கை சேக்கிழார் காலத்திற்குப் பிறகு சிறப்பாகத் தமிழ் நாட்டில் வலுப்பெற்றிருக்க வேண்டும். ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கன்னட நாட்டில்வலுப்பெற்றுப் பலமாநிலங்களில் பரவியது.

பசவண்ணர் தோன்றினர். எழுச்சியுடைய சமய நெறியாக வளர்த்தார். அல்லல் தரும் அயல் நெறிகளில் சுழலா வண்ணம் அனை வரையும் வீரசைவ நெறியில் ஈடுபடுத்தினர். இந்நெறி வடபுலங்களில் இலிங்காயதம் எனக் கூறப்படுகிறது.

பெரியபுராணம் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டுப் பசவபுராணம் எனப்போற் றப் பெற்றமையும் ஆய்தற்குரிய ஒன்ருகும்.

வீரசைவர்கள், திருக்கோவிலில் எழுந்தரு ளும் பெருமானை வழிபடுவதுடன், இமைப் பொழுதும் தன்னை விட்டுப் பிரியாதவராகக் கொண்டு வழிபடுவர். இறைவனை உயிர்க்குயி ராகக் காண்பர், உள்ளத்து உறைபவனுகக் கொள்வர். உடலிடங்கொண்டவனுக ஏற்பர். இறைவனே பசுபாசமறக் கருணை கொண்டு எழுந்தருள்புரிகின்ருன். அவனருளாலே அவன் ருள் வணங்குகிருேம் எனக் கருதுவர் இக்கருத் தமைந்தது.

தந்ததுன் தன்னைக் கொண்டதென்தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப் பெருந்துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்
யான் இதற் கிலன் ஓர் கைம் மாறே.

என்னும் திருவாசகப் பாடல்.

இந்நெறி தொன்று தொட்டுத் தமிழகத் தில் பரவியிருந்தது. கும்பகோணம் பெரிய மடம் ஒட்டக்கூத்தர் காலத்திற்கு முன்பிருந்து சிறந்து விளங்கி வீரசைவ நெறியை வளர்த்து வருகிறது. மயிலம் பொம்மபுரம் ஆதீனம், பன்னூறு ஆண்டுகளாக வீரசைவத் திருநெறி யைப் பரப்பும் பணியில் முன்னிற்கிறது. இவ் வாதீனத்தின் பெரும் புலவர்கள் பலர் கற் பனைக் களஞ்சியம். துறைமங்கலம் சிவப்பிர காசர் இவ்வாதீனப் புலவரும் மாணவரும் ஆவார். அவரது நூல்களில் பல வீரசைவச் செந்நெறியை விளக்குவன. அவற்றுள் கைத் தலமாலை, நிரஞ்சனமாலை, இட்டலிங்க அபிசேக மாலை, சித்தாந்த சிகாமணி யாதியன இந்நெறி யின் நிற்பார்க்கு பெரிதும் துணைபுரிவன.

திருவாவடுதுறையாதீனத்தின் ஆதி குரு முதல்வர், நமசிவாய தேசிகரது மாணவர் துறையூர் சிவப்பிரகாசர். இப்பெருமான் தில் லைக் கூத்தன் திருவருள் வழியே வீரசைவ நெறியை மேற்கொண்டார். வீரசைவ உண் மைகளை விரித்து, அத்துவித வெண்பா என் னும் நூலையருளியுள்ளார். அவர் மாணவராய் "வீர சைவக் கோள் விட்டிடாத குருவாகி" கொலை மறுத்தல், வைராக்கியசதகம், வைராக் கியதீபம் அவிரோத உந்தியார், என் முத் திப்பெரு வீட்டினுக்கு நான்கு திருவாயில் களாக விளங்கும். நான்கு நூல்களை யருளிய வர், எமது ஆதி குருமுதல்வர் சாந்தலிங்க அடிகளார் அவர்களது திருப்பெயரால் மீகொங்கில் மேலைச் சிதம்பரமாம் திருப்பே ரூரில் விளங்கும் பேரூராதீனம் வீரசைவத் திரு நெறிக்கு வளமூட்டி வருகிறது. சாந்தலிங்க அடிகளார் மாணவரும், கன்னட நாட்டரசரு மாகிய, குமார தேவர் வீரசைவநெறி நின்ற அருள் ஞானியாவார். அவரருளியன சுத்த சாதகம், மகராசத் துறவு முதலிய பல நூல் கள் இந்நெறிக்கு உறுதுணை புரிவன. திருமுது குன்றத்தில் இவரது திருப்பெயரால் திருமடம் சிறப்புற்று விளங்கிப் பணியாற்றுகிறது. குமார தேவரது மாணவராகி, முருகன்திருவாச கம் என்ன ஆன்ரூேர் போற்ற 'போரூர் சன் னிதி முறை' யருளிய சிதம்பர சுவாமிகள் திரு மடம்இந்நெறி சிறக்க நற்பணி பல புரிந்துவரு கிறது. இந்நெறி இவ்வாறு தமிழக மெங்கும் பரவியிருப்பதுடன், ஈழம் முதல் கேதாரம் வரை பரவியிருக்கிறது.

"சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு
ஆர் பெறுவார் அச்சோவே."

வளர்க வீர சைவம்!

நாம் பிறந்துவிட்டோம். மரணம் வந்தே தீரும். அதைத் தவிர்க்க முடியாது. அது ஓர் மிக்க பயங்கரமான சம்பவம். மரணத்திற்குப் பிறகு மறுபடி பிறப்பும் வந்தே தீரும். இப்படிப் பிறப்பிறப்புகள் ஜீவனுக்குத் தவிர்க்க முடியாத தீராப்பிணிகள். எக்கணத்திலும் நேர இருக்கும் மரணத்தை மகோற்சவமாக மாற்றிக் கொள்ள ஓர் மருந்து தேவை. பிறந்தால் தானே மரணம் வரும். பிறவாதிருத்தலுக்கும் மருந்து வேண் டும். இவ்விரு தீராப்பிணிகளுக்கும் மருந்து வெவ் வேறு? அல்லது ஒன்றே தானு? என்ற கேள்வி எழுகிறது. இவ்விரண்டுக்கும் ஒப்புயர்வற்ற மா மருந்து ஒன்றே தான். அதுதான் குருபக்தி.

— ஸ்ரீ ஞானனந்த சுவாமிகள்

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

கரும சித்தி ஞான சித்திக்கு வழி. இது படிமுறையாய் வரும். நம்பிக்கை வை; அன்பு செய்; பயிற்சிபண்ணு இம் மூன்றும் மனித வாழ்வின் உயிர்நாடி போன்றவை. மனிதன் சீவசக்தியின் வடிவானவன். ஆதலின் எல்லாரும் இறைவனின் பிள்ளைகளே.

மனித வாழ்வு தெய்வீக வாழ்வின் முதற் படி. முதலில் மனிதனை நம்பு; மனிதனில் அன்பு வை; மனிதனுக்குச் சேவை செய். இம் மூன்றும் சீவவிருட்சத்தின் அரும்புகளாகும். இவை மூன்றும் போதாகி: தெய்வ நம்பிக்கை தெய்வ பக்தி; தெய்வத் திருத்தொண்டு என்னும் மலர்களால் விரிந்து மணம் கமழ்தல் வேண்டும். இம்மூன்று மலர்களையும் கொண்டு தான் மனிதன் இறைவனை யணுகும் தகுதியைப் பெறுகின்றான்.

இந்தத் தகுதியைப் பெற்றவன் இறைவனது திருமுன்னிலையில் இடையறாது சார்ந்து நிற்பதால், அவனது நம்பிக்கையும், பக்தியும், கருமமும் இறைவனில் நிலை பெறுகின்றன. இதனால் இறைவனது உண்மைநிலையினை உணரும் பெரும் பேற்றுக்கு அவன் உரியவனாகின்றான். திருவருளே கண்ணாக இறைவனை ஒருவாறு காணுகின்றான். இது மயலறு காட்சி; அனுபவக் கனி. கருமயோகத்தால் ஞானயோகமும்; சீவாத்தும தரிசனத்தால் பரமாத்தும தரிசனமும் காரண காரியத் தொடர்பாகக் கைகூடுகின்றன.

ஆராத இன்பத்தை அருளுகின்ற இந்தப் பேராத நிலை மனிதனுக்குத் தகுதியாலும், உரிமையாலும், கடமையாலும் சித்தியாகின்றது. உரிமையும், கடமையும் இணையும்போது தான் மனிதன் மனிதனாகின்றான்; மனிதனுக்காக வாழ்கின்றான்; தானும் வாழ்ந்து மனித குலத்தையும் வாழ்விக்கின்றான்.

முழுப்பொருளை யுணர அதன் பங்குப் பொருளெல்லாம் அதனுள் அடங்கும். இறைவன் பரிபூரணப்பொருள். முன்பெல்லாம் இறைவனை உண்டென்று நம்பிப் பக்திசெய்து கிரியைகளால் வழி பட்டவன்; பின்பு காட்சியளவையால் ஒருவாறு கண்டு அனுபவிக்கின்றான். இது மனவாசகம் கடந்த காட்சி; மனிதனும் மனிதனும் இணைந்து பின்னர் மனிதனும் தெய்வமும் இணைகின்ற மகத்தான காட்சி.

உண்டென உணர்தல் உத்தேச உணர்வு. கண்டுணர்தல் நிச்சய உணர்வு. உத்தேச உணர்வு நம்பிக்கையின் வடிவம். நிச்சய உணர்வு இன்ப வடிவம். முதலில் உத்தேச உணர்வு உதித்து அதில் நிலை நின்றாலன்றி நிச்சய உணர்வு சித்தியாது. பக்தியே இவற்றின் நிலைக்களன்.

உலகங்களை யெல்லாம் தானே படைத்தலும், தானே காத்தலும், தானே அழித்தலும் வல்லவன் இறைவன் ஒருவனே; எல்லாம் அழிந்துபோக அழியாது எஞ்சி நிற்பவனும் அவனே; அழிந்தவற்றை மீளப்படைப்பவனும் அவனே. இவைகள் உத்தேச உணர்வாய் உதித்து உண்மை உணர்வாய் உறுதிபெற வேண்டும். உத்தேச உணர்வு உண்மை உணர்வை முன்னிட்டு உதிப்பதே.

ஞானம் இருவகை. ஒன்று விஞ்ஞானம்; மற்றது மெய்ஞ்ஞானம். இறைவன் பிரகிருதியுள் கலந்து நின்று அதனைப்பற்றியும் பற்றாதும் இயக்குகின்ற நிலையினை அறிவதே விஞ்ஞானம். அதாவது பிரகிருதி வேறு; இறைவன் வேறு என வெவ்வேறாகப் பகுத்தறியும் அறிவு. பிரகிருதிக்கு அப்பாற்பட்டு நிற்கும் இறைவனது உண்மை நிலையினைக் கண்டறியும் அனுபவ உணர்வே மெய்ஞ்ஞானம். விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்தின் படி போன்றது.

விஞ்ஞானம் சடப்பிரகிருதி அனுபவம். அது மாற்றமடைவது; நிலையற்றது; அப்பாற் செல்லாதது. மெய்ஞ்ஞானம் சீவப் பிரகிருதி அனுபவம். அது மாற்றமடையாதது; நிலையுள்ளது; அப்பாலுக்கப்பாலாய்ச் செல்வது.

இவ்விரு அனுபவங்களும் பக்தி சிரத்தையால் கைகூடுகின்றன. இலௌகீக அனுபவத்துக்கும் பக்தி சிரத்தையே ஆதாரம்; தெய்வீக அனுபவத்துக்கும் பக்தி சிரத்தையே ஆதாரம். பக்தி அன்பு வடிவானது; சிரத்தை விசுவாசரூபமானது. இவ்வுலக இன்பம் வேண்டுமா? அவ்வுலக இன்பம் வேண்டுமா? பக்தி செய்; விசுவாசமாய் நட. பக்தி சிரத்தையின்றி இவ்வுலகமும் இல்லை; அவ்வுலகமும் இல்லை.

அழகான உடம்பு; அழகான உலகம்; இவற்றின் சார்பான அனுபவங்கள்; இவையெல்லாம் அழகான உயிரின் விடுதலைக்காக அல்லவா? இவற்றை அற்பமாக மதிக்கலாமா? உடம்பினுள்ளே வாழ்ந்து கொண்டு உடம்பை இழிவு செய்வதா? உலகினுள்ளே வாழ்ந்து கொண்டு உலகை இழிவு செய்வதா? இவற்றின் இயல்பை அறிந்து; இவற்றோடு சார்ந்து நின்று; இவற்றைப் பயன்செய்து; இவற்றால் பயன் பெற்று; வாழ்வாங்கு வாழ்வதே வாழ்வு; மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதே வாழ்வு. இதுதான் விஞ்ஞான வாழ்வு.

சடசக்தி தன்னிலே தானேயாய் இயங்காது. சீவசக்தி தன்னிலே தானேயாய் இயங்கிச் சடசக்தியையும் இயக்கி நிற்கும். சீவனின்றிச் சடம் இயங்காது. இது இயற்கை நியதி; அனுபவத்திற் கண்டது. எந்த அணுச்சக்தியும், இயந்திர சக்தியும் மனித சக்தியின்றி இயங்குவதில்லை. இந்த நுட்பத்தினை அறிந்து சீவசக்தியைச் சடசக்தியினும் மேலாக மதிப்பதே விஞ்ஞான வாழ்வு. இதிலிருந்து மெய்ஞ்ஞான வாழ்வுக்கு வழிபிறக்கின்றது. விஞ்ஞானத் தாயின் மடியிலே மெய்ஞ்ஞானக் குழந்தை தவழ்ந்து விளையாடுகிறது. உண்மையான விஞ்ஞானக் கண்ணுக்கு இந்த விளையாட்டுப் புலனாகின்றது.

இந்த விளையாட்டைத் திருவள்ளுவர் காண்கின்றார்.

''சுவை ஒளி ஊறோசை நாற்றமென்
றைந்தின் வகைதெரிவான் கட்டே உலகு''

என்று பாடுகின்றார்.

''மண் நீர் ஆனல் அனிலம்
வான் வடிவார் மாமாயன்''

என்று கவி செய்கிறார் வில்லிபுத்தூரர்.

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் விளைந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி''

இவ்வாறு இயற்கையை ஊடுருவி நோக்கி மனமுருகிப் பாடித் துதிக்கின்றார் மணிவாசகர். விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமுமாகிய இரு கண்களாலும் உலகை நோக்கி நடப்போமாக.

★

# சொல்லும் செயலும்!

சொல்லுதல் கற்கண்டுபோல் இனிமையாக இருக்கிறது. செய்கையோ நஞ்சின் கரிப்புக் கொண்டுள்ளது. சொல்லை நிறுத்திச் செயல் புரிந்தால் நஞ்சில் இருந்து அமுதம் உண்டாகும். வாய்ப் பேச்சை நிறுத்திச் செய்கையில் மனத்தைச் செலுத்து. நீர் குடிக்காமல் மனிதன் தாகம் போகாது.

000

அஞ்ஞானி இரவும் பகலும் செயலில்லாமலே பேச்சுப் பேசுகிறான். காதால் கேட்ட வார்த்தைகளை நாய் போல் குரைத்துக் கொண்டு திரிகிறான். அங்கு இங்கு எழுத்துக்களைக் கல்லி எடுத்து ஞான மொழிகள் செய்து கொண்டு வந்தாய். எச்சில் இலையை நக்கி எவ்வளவு நாள் வரை வாழமுடியும்? சொல்லெல்லாம் எச்சிலே! செய்கை செய்!!

000

தனக்கு நீர் கிடைக்கவில்லை, மற்றவருக்குப் பால் தானம் செய்கிறான். தன் மனம் தைரியம் அடையவில்லை. மற்றவருக்குத் தைரியம் ஊட்டுகிறான். உலகில் சொல் எல்லாம் சக்கைதான். செய்கைதான் சாரமானது. செய்கை வலுவுள்ளது. பிறவிக் கடலில் இறக்கிக் கரை ஏற்றும்.

000

சொற்களைச் சேர்க்கிறார். ஞானமொழிகள் பேசுகிறார். வெற்றியோ வீண் வழி போய் விடுகிறது. வெளியேறியிருக்கும் நீரைக் குடிக்கிறதில்லை. வெளியேற்றிக் குடிக்கும் ஆவல் கெடுக்கிறது. பேச்சுக்கே நேரம் கழித்துச் செயல் ஒழிகிறார். பெரியோர் தேடித்தந்த வழியிருக்க அதைப் பின்பற்றாமல் புது வழி தேடிப் பேச்சுப் பேசி வேலை செய்யாமல் அழிகிறார்.

000

— கபீர்



# சுந்தரர் தரிசனம்

ப. அருணாசலம்
இந்தியப் பகுதி மலேயாப் பல்கலைக் கழகம்

சேக்கிழார் சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டர் புராணம் அறுபத்துமூன்று தனி அடியார்களுடையவும் ஒன்பது தொகையடியார்களுடையவும் வரலாற்றைக்கூறுவதென்பர். இவ்வாறு கூறும்போது தனித்தனியாக வாழ்ந்த அடியவர்கள் பலரின் வாழ்க்கைத் தொகுப்பா? என்ற வினா எழலாம். பலரின் வாழ்க்கையினைச் சேக்கிழார் சுவாமிகள் பாட விரும்பினர் எனக் கூற முடியவில்லை. பலர் வாழ்க்கையின் ஊடாகச் சேக்கிழார் கண்ட ஒற்றுமைக் காட்சி ஒன்றுண்டு. அக்காட்சியினையே சேக்கிழார் பாடினர் எனல்வேண்டும்.

பெரியபுராணத்துக்கு அடிப்படையாக நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியினையும் அதற்கும் அடிப்படையாகச் சுந்தரரின் திருத்தொண்டத் தொகையினையும் கூறுவர். இது நூல் வளர்ந்த வரலாறேயன்றி நூலமைப்பில் காணப்படும் ஒற்றுமைக்காட்சியன்று. ஒற்றுமைக்காட்சி அளவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருளுருவில் உபமன்னியு முனிவர் ஒன்றி நின்று பெற்ற அனுபவமே திருத்தொண்டர் புராணமாக உருவெடுத்தது எனல் வேண்டும்.

புராணங்கள், பொதுவாகப் பரஞானம் கைவரப்பெற்ற முனிவர்களின் காட்சியாக வெளிப்படுத்தப்படுவனவே. பெரியபுராணமும் கயிலையில் பரஞானம் கைவரப்பெற்ற உபமன்னியு முனிவர் கண்ட சுந்தரர் தரிசனத்தை விளக்குவதாகவே அமைந்துள்ளது. உபமன்னியு முனிவர் பெற்ற சுந்தரர் தரிசனமும் திருக்கயிலையில் நிகழ்கிறது.

## கயிலைக்காட்சி:

பெரியபுராணத்தின் முதல் சருக்கம் திருமலைச்சருக்கம். இச்சருக்கத்திலும் முதலில் பாடுவது சைவர்களின் இலட்சிய உலகாகிய கயிலையினையே.

பொன்னின் வெண்டிருநீறு புனைந்தெனப்
பன்னு நீள் பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னிவாழ் கயிலைத் திரு மாமலை 1

பொன்மயமான உடம்பில் வெள்ளிய திருநீறு புனைந்திருப்பது போன்றுள்ளது இம்மலை; யாராலும் அறிதற்கரியனாகவுள்ள சிவபிரான் இம்மலையில் நிலையாக நீங்காது வாழ்கிறான். இம்மலை சிவபிரானையே நினைவூட்டிக் கொண்டிருக்கிறது எனப்பாடுகிறார் போலும்! இம்மலைச்சாரலில் பலர் சிவனையே எண்ணித் தவம் கிடக்கின்றனர். உபமன்னியு தொடக்கத்துப் பல முனிவர்கள் அங்குள்ளனர். அவர்கள் முன் ஒரு பேரொளி தோன்றுகிறது. ஆயிரம் ஞாயிறு போன்ற பேரொளியாக அது உள்ளது.

''அங்கண் ஓரொளி ஆயிர ஞாயிறு
பொங்கு பேரொளி போன்று முன் தோன்றிட''

அத்தகைய பேரொளியினைக் கண்டதும் உபமன்னியு முனிவரைச் சூழவிருந்த முனிவர்கள் பலரும் இஃதென்? என வியப்புற்றுவினவுகின்றனர். உபமன்னியு முனிவரே இறைவன் திருவடியைத் தியானித்து, அதன் உண்மை உணர்ந்து அவ்வொளியின் வரலாற்றைக் கூறுகிறார். நாவலர் கோனாகவும் வன்றொண்டனாகவும் வாழ்ந்த சுந்தரரே எம்பிரானருளால் இங்கெழுந்தருளுகிறார் எனக் கூறி விளக்குகிறார். விளக்குவதோடு நில்லாது, எழுந்து கைகூப்பித் தொழுது மெய்யில் ஆனந்த வாரி விரவிட அத்திசை நோக்கிக் கும்பிட்ட வண்ணம் செல்கிறார். இவ்வாறு செல்லும் உபமன்னியு முனிவரைப் பார்த்த அருகிருந்த முனிவர்களுக்கு ஓர் ஐயம் எழுகிறது.

சம்புவின் அடித்தாமரைப் போதலால்
எம்பிரான் இறைஞ்சாய் இஃதென்ன?

எனத் தமக்கேற்பட்ட ஐயத்தை வினவுகின்றனர். அதற்கு அம் முனிவரோ,

தம்பிரானைத் தம் உள்ளம் தழீஇயவன்
நம்பி ஆரூரன் நாம் தொழும் தன்மையன்

எனக் கூறுகின்றார்.

இவ்வாறு உபமன்னியு முனிவர் தரிசித்த சுந்தரர் தரிசனமே திருமலைச் சிறப்பில் விளக்கப்படுகிறது.

உபமன்னியு போன்ற முனிவர்களும் தொழும் தன்மையராக, பேரொளியாகத் தோன்றிய சுந்தரர் வரலாற்றினை அறிய அருகிருந்த முனிவர்களுக்கு நாட்டம் செல்கிறது. உபமன்னியு முனிவரை நோக்கி அருகிருந்த முனிவர்கள், 'இப்பேரொளியார் செய்த விழுத் தவத்தைக் கேட்க விரும்புகிறோம்' என்று தம் விருப்பத்தை வெளிப்படுத்த, அதற்கிணங்கி உபமன்னியு முனிவரே அவர் வரலாற்றைக் கூறத் தொடங்குகிறார். 'கயிலையில் இறைபணி செய்து வந்த ஆலால சுந்தரருக்குக் கமலினி, அனிந்திதை என்னும் சேடியர் பால் நாட்டம் சென்றது; இக் காதல் நாட்டம் கயிலையில் இறைவனுக்குத் திருத்தொண்டு செய்து வந்த ஆலால சுந்தரரும் கமலினி, அனிந்திகை என்னும் இரு சேடியர்களும் இப்பூவுலகில் பிறந்ததற்குக் காரணமாயிற்று. இப்பிறப்பு உண்மையில் தமிழர் தவப்பயனால் ஏற்பட்ட பிறப்பு.

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதர

நிகழ்ந்த பிறப்பு என விளக்குகிறார் சேக்கிழார். 'சுந்தரர் பிறந்ததால் தென்றிசை வாழ்ந்தது; அவர் பிறப்பால் நாம் பெற்றது திருத்தொண்டத் தொகை' இவ்வாறு விளக்கும் போது 'திருத்தொண்டத் தொகையாளி' என்ற நிலையிலேயே சுந்தரரைக் காண்கிறார் என்பது தெளிவு. திருத்தொண்டத் தொகை சுந்தரர் பாடிய பல பதிகங்களுள் ஒன்று எனக் கூற வில்லை. சுந்தரர் அவதரித்ததன் நோக்கமே 'திருத்தொண்டைத் தருவதற்கே' என்பது இங்கு தெளிவுபடுத்தப் படுகின்றது. சுந்தரரை இவ்வாறு விளக்கும் போது, உபமன்னியு தரிசித்த சுந்தரர், 'அடியவர்' என்னும் பேரொளியினைப் பரப்பி நின்ற சுந்தரரே என்பது தெளிவு. சுருங்கக் கூறின் திருத்தொண்டத் தொகையே சுந்தரர்; தாம் கண்ட காட்சியினை இவ்வாறே உபமன்னியு முனிவர் விளக்கினார். அவரோடு கலந்து நின்று அவர் விளக்கிய விளக்கத்தையே நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்று தொடங்குகிறார் சேக்கிழார்.

என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
யன்று சொன்ன படியால் அடியவர்
தொன்று சீர்த் திருத் தொண்டத்தொகைவிரி
இன்றநாதரவாலிங்கியம் புகேன். 37

இவ்வாறு கூறத்தொடங்கியவர், வெள்ளானைச் சருக்கத் தொடக்கத்தில், 'மூலமான திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராயிருந்த ஞாலமுய்ய வெழுந்தருளுநம்பி' எனச் சுந்தரரைக் குறிப்பிடுவதும் இக்கருத்தினை உறுதிப்படுத்தும். எனவே சேக்கிழார் அடியவர் பலரை நமக்கு அறிமுகப் படுத்துவதற்காகப் பெரிய புராணத்தைப் பாடவில்லை. திருத்தொண்டத்தொகையாளியாக உபமன்னியு தரிசித்த சுந்தரர் தரிசனத்தையே விரிவாகப் பாடுகிறார். சுந்தரர் வாழ்க்கையாக, சுந்தரர் செய்தியாகவே கண்டு பாடுகிறார். அதுவும் பேரொளிப் பிழம்பாகக் கண்டு உபமன்னியு முனிவர் பாடிய சுந்தரர் வாழ்க்கையினையே பாடுகிறார். உபமன்னியு முனிவர் கண்ட சுந்தரர் தரிசனமே பெரியபுராணம். அதனை விளக்குவதே சேக்கிழார் பணி.

★

## கருத்துக் கருவூலம்!

அறிவுரைகள் பகருவான். அவற்றைப் பற்றி அவற்றின்படி நடக்க மாட்டான். ஆற்றில் யாரையும் அடித்துக்கொண்டு போகும் படியான மோக வெள்ளம் ஓடுகிறது. அதில் கீழே கால் பாவுவது எளிதல்ல. வழி நடந்து விழுந்தவனைப் பற்றிக் குற்றம் இல்லை. உட்கார்ந்தே இருக்கிறானே அவன் தலையில் கோடித் திட்டுக்கள்.

சொல்கிறவர் பலர் கிடைத்தனர். ஆனால் சொன்னதைப் பற்றியவர், பற்றி நடந்தவர் ஒருவரும் கிடைக்கவில்லை. பிடித்துக் கொள்ளாமல் சொல்கிறவனாகமட்டும் இருக்கிறானே, அவனை நீரோடு போக விடு. சட்டை செய்யாதே.

— கபீர்



# மும்மூர்த்திகளும் அட்டதிக்கு பாலகரும்

கவிராசகேசரி பண்டிதர் ஆ. சபாபதி.

தேசுலா மேரு வரையினேர் பாங்கர்
தினகர ஞெளியினை வெருட்டும்
மாசிலாப் பொன்னும் மணிகளும் ஒளிரும்
மனேவதி லென்னும் மாநகரில்
பாசிலைப் புழைத்தாட் பொன்னிதழ்க் கமலப்
பனி மலர்ப் பொ குட்டிளில் உறைவோன்
ஆசிலாப் படிகக் கொடிபுரை மேனி
யரசியோ டரசியல் நடத்தும்.

சனசரே முதலா முனிவரர் வானேர்
தளைக்குறும் பெருந்தவர் உயர்ந்தோர்
வினையற நோற்றேர் மெய்ந்நிலை யுணர்ந்தோர்
விழுமிய தவத்தினி லுயர்ந்தோர்
நினைவினை யொடுக்கி யோக ஞானங்கள்
நிலையென வாழ்ந்தவ ரிணையோர்
மனையென மகிழ்வாய் மனேவதி நகரில்
மலரவ னரசினில் வதிவார்

மேருவி னேர்பால் மனேவதிக் குடபால்
மேவுவை குந்த நன்னகரில்
நேரிலாமாடி நிரைந்து வானுயர்ந்து
நித்தில விதானம்மேற் பரந்து
கூரிய முடியிற் கருடனை யேந்துங்
கொடிநிறை யசைந்துநின்று ஆலும்
சீருயர் பதியிற் கலைமகள் மார்பஞ்
சேர்ந்திடு முகுந்தனு முறையும்.

பானிற வெண்ணம் பொருப்பிடை யுயர்ந்த
பவளமா நிறக்கொடு முடியின்
பால்மணங் கமழும் பங்கயங்குமுதம்
பானலங் கோங்குபைங் காந்தள்
வானுறப் பூத்த மரகத நிறத்து
வல்லிமேற் படந்ததா லென்னக்
கூனலம் பிறையுங் கங்கையுஞ் சுமந்தோன்
கொம்பனுள் தழுவ வீற்றிருக்கும்

வேதமே யோதும் முனிவரர் குழுவும்
மேனில வமரர்கள் குழுவும்
கீதவாய்ச் சித்தர் கேடில் காந்தருவர்
கின்னரர் கெழுமிய குழுவும்
வேதனும் மாலும் விண்ணவ ரிறையும்
விரைமல ரடியினை யேத்த
ஆதியாய் நின்றேன் அசோவதி நகரில்
அம்பிகையோ டரசியற்றும்.

தண்டமுங் கையிற் கமண்டலமோடு
சாமகானம் பொழிந்திடுவோர்
கண்டிகை யணிந்து பூதியிற் தோய்ந்தோர்
கரணங்கள் ஓய்ந்துமெய் யுணர்ந்தோர்
முண்டக மலர்த்தா ளன்றிமற்றெவையும்
முற்றிலும் மறந்தவர் நீல
கண்டனை யுள்ளும் புறத்திலுங் கண்டோர்
கருவழித் திடற் கிவண்நிறைவார்.

ஆதியுமின்றி யனுதியுமின்றி
யந்தமுமின்றி யண்டத்தின்
சோதியாய் விளங்குஞ் சுத்தநிட் களமாந்
தோன்றலின் பாங்க ரண்டங்கள்
கோதிலா தீன்றும் கன்னிகையான
கோமளக் கொடியிடைக் குமரி
பாதியாய் அமரும் அசோவதி நகரைப்
பாலகர் எண்மர் காத்துறைவார்.

நசையுட னீரேழ் புவனமு மேத்தும்
நாதனும் இறைவியோ டமர்ந்து
திசைமுக மெட்டி லதிபர்கள் காக்கத்
தேர்ந்தன ராகமற் றிவர்கள்
வசையிலார் தத்தம் வரிசையி லுயர்ந்தோர்
மாதவன் வகுத்தபோல் நடப்போர்
இசைபெறு மிவர்கள் தகைமைகள் இவையென்
டெடுத்தியம் பிடுதலுமினிதே.

குணதிசை விளக்கும் அமரர்கள் பதியிற்
கோதில்சிந் தாமணி சுரபி
மணமிகு பொன்னின் தருவுடனைரா
வதமொளிர் புட்பக விமானம்
குணநிறை சங்கம் பதும்மா நிதியம்
கொடியிடை யரம்பையர் குழாங்கள்
அனைவுறப் பாங்கர்ப் புலோமசை யமர
அமரர்கோன் அரசுவீற் றிருக்கும்.

மகநிறை தென்கீழ்த் திசையினிற் தேசோ
வதியெனும் தெய்வத நகரிற்
புகலரும் அறங்கள் புரிந்தவர்க் கருள்செய்
பொன்னிற அங்கியங் கடவுள்
நகைமுகச் சுவாகா தேவியுற் றணைய
நான்குநீள் கோ டெழுநாக்குப்
புகைமுகம் இரண்டு மூன்றுவன் தாள்கள்
பொலிவுற இருந்தருள் புரியும்.

தென்திசை விளக்குஞ் சயமினி நகரிற்
தேவியர் மூவர்கள் தழுவ
வன்பிறை எயிற்றுப் பேரழல் நால்வாய்
மருவிய விழியிணை துடிக்கும்
அன்பிலா இதழ்கள் அஞ்சன மலையில்
அமைந்தென மூவறு கரத்தோ(டு)
இன்பிலாத் தண்டும் பாசமுமேந்தி
எருமைமேல் இயமனும் உறையும்.

சிவபெரு மானே தெய்வமென் றுணர்ந்தோர்
சீருயர் மகம்பல புரிந்தோர்
தவமெனக் கற்பைத் தழுவிய மகளிர்
சத்தியந் தவறிடா மாந்தர்
அவநிறை பாசம் அறுத்து உணர் வொடுக்கி
அன்பினிற் கலந்தவர் தருமன்
புவனமீ துறைந்து புகலரும் வாழ்விற்
புகழுடன் வாழ்வர்கள் மாதோ.

களமுறு தென்மேற் திசையினிற் கிருட்டிணங்
கனையெனும் வியனக ருளதால்
வளமுறும் இரக்கோ வதியெனும் பெயரும்
மற்றிதற் குண்டென மொழிய
இளமையின் பிறைபோ லெயிற்றரக் கர்கள்
ஏத்திடப் பூதவாகன மேல்
உளமுறு தீர்க்கா தேவியோ டமர்ந்தே
உவந்தர சியற்றிடும் நிருதி.

குடதிசை யொளிரும் விபாவதி நகரில்
குறுநகைக் கோம்கள் சேட்டை
வடமுலைப்பாரஞ் சுமந்த சிற்றிடையின்
மக்கள் வாருணியொடு சுகந்தை
திடநிறை யியக்கா வானவர் போற்றத்
திரைகடற் சுருக்கொடி யேந்தி
மடமறு வன்மீன் வாகன மேறி
வருணனும் வளவரசியற்றும்

சீருறு வடமேற் றிசையினிற் கந்த
வதியெனும் திருநகர் செழிப்பக்
காருறு கூந்த லிள முலைச் செவ்வாய்க்
காந்தரு வக்குல மகளிர்
நேரிலா விசைகள் யாழினிற் பொலிய
நிகழ்த்து கின் னரக்குலக் கொடிகள்
பாரினில் வாழ்த்த நவ்விமீ தமர்ந்து
பவனனும் அரசுவீற் றிருக்கும்.

வடதிசை மருங்கிற் காசிப னீன்ற
மகன் அளகாபுரிக் கிறைவன்
நடமிடு தேவின் நண்பனுகியவன்
நகைமுகத் தஞ்சனை மனையா
ளுடன் பெரு முனிவ ரியக்கர் ஏத்தெடுப்ப
உன்னியில் ஊர்ந்து மாநிதிய
வடைவினின் மகிழ்ந்தோன் இராவணனுக்கும்
அன்பனு யிருந்தர சியற்றும்

உரைபெறு வடகீழ்த் திசையினிற் கங்கை
யோடிய வளம்பல நிரப்பிப்
புரையிலா மகஞ்செய் முனிவ ரேத்தெடுப்பப்
பூதவே தாளங்கள் புகழ
வரையிலாக் குறுந்தாள் முக்கண் ஈசானன்
வளந்திடு செம்மயிர் மூடக்
கரையிலாச் செல்வ மசோவதி நகரிற்
களிப்புட னரசு வீற்றிருக்கும்.

☆

# விஞ்ஞான உலகில்
## சமய வாழ்வும் சமரச உணர்வும்

— சுவாமி பிரணவானந்த சரஸ்வதி —
— தலைவர் மலேசிய தெய்வீக வாழ்க்கைச் சங்கம் (கோலாலம்பூர்) —

நாம் கலியுகத்தில் 'அணு' சகாப்தத்தில் வாழ்கிறோம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலக வரலாற்றிலே என்றுமில்லாத அளவுக்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் மருத்துவக் கண்டுபிடிப்புகளும் வாழ்க்கை வசதியைப் பெருக்கிக் கொள்ளும் கண்டு பிடிப்புகளும் அதிகரித்துள்ளன என்று பெருமை பேசிக் கொள்ளுகிறோம். மனிதன் பூமியைப் பிரித்தாண்டான்; கடலைக் கட்டியாண்டான்; ஆகாயத்தையும் சொந்தமாக்கிக் கொண்டான். இன்று விண்வெளியில் சந்திரமண்டலத்தையும் ஒரு கை பார்த்து விட்டான் மனிதன். இப்புது யுக மனிதன் கல்வித்தரத்திலும் அறிவாற்றலிலும் பழையகாலத்து மனிதனைவிட பன் மடங்கு மேம்பட்டுள்ளான் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனாலும் என்ன! பழையகாலத்து மனிதன் தன் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகக் கருதிய அரும்பொருள் ஒன்றை இன்றைய சமுதாயம் இழந்துவிட்டதைப் பார்க்கிறோம். பழைய நாளில் வாழ்க்கை வசதிகள் மிகக் குறைந்திருக்கலாம். மாடிக் கட்டிடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள். பொழுதுபோக்குக்குரிய வாய்ப்புக்கள் முதலியன இல்லாதிருந்திருக்கலாம். குடிசையில் வாழ்ந்தாலும் மனிதன் அமைதியோடு வாழ்ந்தான் என்பதை மறுக்க முடியாது. வாழ்க்கை வசதிகளும் நாகரிகமும் மிகுதியாகப் பெற்றுள்ளதன் பயனாக இன்று மனித சமுதாயம் 'அமைதி' என்ற செம்பொருளை இழந்து 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று செல்கிறது. 'வானையும் மண்ணையும் பரிசாகப் பெற்றுத்தான் என்ன பயன்? அந்தப் பேரத்தில் நம்முடைய ஆன்மாவை நாம் இழப்பதானால்!' என்ற ஆன்றோர் வாக்கு இங்கு நினைவு கொள்ளத் தக்கது. வாழ்க்கை வசதிகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரித்துள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு பொறாமை, போட்டி, பூசல், வெறுப்புணர்ச்சி, சகிப்பின்மை, புரிந்துணர்வின்மை ஆகியன பெருகியுள்ளன. ஒரு புறம் வாழ்க்கையை வளப்படுத்தும் வசதிகளும் மறுபுறத்தில் மனிதனைத் துயரத்தில் ஆழ்த்தும் பிரச்சினைகளும் மலைபோலக் குவிந்துள்ளன.

விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் பெற்றுள்ள நாகரிக வாழ்க்கையினால் தன்முனைப்பு மிகுந்தவனாய், அறிவினைப் போற்றி, உணர்வினை இழந்து, அறநெறியை மறந்து புலன் வழிச் செல்லும் போக்குடையவனா யிருக்கின்றான் மனிதன். கடவுள் நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் இழந்து சமயத்தையும் ஆன்மீகத்துறையையும் வெறுத்தொதுக்கும் அளவுக்கு சென்றுள்ளமையால் 'அமைதி' யின்றி வாடுகிறது இன்றைய உலகம். சந்திர மண்டலத்தில் கவனம் செலுத்தும் மனிதன் தனக்குள் இருக்கும் ஆன்மீக மண்டலத்தை மறந்து விட்டான். விஞ்ஞான வளர்ச்சியோடு சமய ஆன்மீக வளர்ச்சியையும் கலந்துறவாடின் தனிமனிதன் உள்ளத்திலும் மனிதசமுதாயத்திடையேயும் அமைதியும் சாந்தியும் நிலவும்.

பொருளாதாரத்துறையிலும் நாகரிக வாழ்க்கையிலும் உச்ச நிலையை அடைந்துள்ள மேலை நாடுகளுக்குச்சென்றவர்கள்கவனித்திருக்கலாம். (அத்தகைய வாய்ப்பு எளியேனுக்குக் கிடைத்தது.) குறிப்பாக அமெரிக்காவில் சமீப காலத்தில் இளஞ்சமூகத்தினரிடையே தோன்றி வளர்ச்சியடைந்து வருகின்ற 'ஹிப்பி', 'ஹரே கிருஷ்ணா' போன்ற இயக்கங்கள் அங்குள்ள சமுதாயத்தின் உள்ளத்தில் நிகழும் பெரும் மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றன என்றே கூற வேண்டும். பெரியநகரங்களில் வசிக்கும் செல்வந்தரின் பிள்ளைகள் பலர் எல்லா வசதிகளுமுள்ள நாகரிக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு இந்த இயக்கங்களில் சேர்ந்து

புதிய முறையில் அமைதிகாண முற்பட்டுள்ள னர். தவிரவும் மேலைநாடுகளில் நிலவிவரும் யோக நிலையங்கள் மக்களிடையே புத்துணர்ச்சியையும் பெருவிழிப்பையும் ஏற்படுத்தி வருகின்றன.

மனிதனுக்குத் தேவையானது முழுமையான வளர்ச்சியாகும். ஒருமுக வளர்ச்சி (One Sider) அமைதிக்கு வழிகாட்ட முடியாது. மூளையைப் பற்றி நிற்கின்ற அறிவும் நெஞ்சத்தைப் பற்றி நிற்கும் உணர்வும் சமமாக வளர்ச்சி பெற்றால்தான் அவனை முழுமனிதன் என்று சொல்ல முடியும். அறிவை வளர்த்து உணர்வை புறக்கணிப்பின் எங்ஙனம் அமைதி காண்பது!

மனிதனுடைய மனம் ஓர் அதிசயக்கருவியாகும். அது பண்படுமளவுக்கே அமைதி உண்டாகும். இக்கருத்தை மனதிற் கொண்டே தாயுமான அடிகள் "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்றும் "நான் நான் எனக்குளறியே ஒன்றை விட்டு ஒன்று பற்றி பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்" என்றும் "பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ?" என்றும் பேசுகிறார்.

முதலில், மனிதன் தான் யார் என்பதையும் தனக்கும் இறைவனுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பையும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். பண்டைய முனிவர்களும் மகரிஷிகளும் தமது ஆத்மீக அனுபவத்தின் மூலம் கண்ட பேருண்மை, மனிதன் இயல்பில் தெய்வீகத் தன்மை பொருந்தியவன் என்பது. உடல் உயிர் ஆகியவற்றின் கூட்டே மனிதன். உடல் அழியுந்தன்மையுடையது. ஆத்மா அழிவற்றது; அது பூரணப் பொருளாகிய கடவுளின் அம்சம். ஆத்மானுபூதியே மனிதனின் இறுதி இலட்சியம். ஏனையவை அனைத்தும் அதற்கான தயாரிப்பே. இந்தக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே வாழ்க்கை இயல்பு அமைய வேண்டும். மனித சரித்திரத்தில் பழைய காலமாயினுஞ்சரி, இன்றைய விஞ்ஞான சகாப்தத்திலாயினும் சரி, நவயுகமாயினுஞ்சரியே. எக்காலத்திலும் மனிதனுடைய அடிப்படைப் பிரச்சினைகள் பொதுவானவை. அவை வாழ்வில் துன்பம், சோகம், துயர், வேதனை இன்னும் தவிர்க்க முடியாத பிணி, மூப்பு, சாக்காடு இவற்றை என்றும் எதிர்நோக்கி நிற்கிறது; மனித வாழ்க்கை. சமயம் ஒன்றுதான் இவற்றிற்குத் தகுந்த பரிகாரத்தைத் தரக்கூடும்.

இந்து சமயம் இகலோக வாழ்க்கைக்கு போதிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்ற தவறான கருத்து சில பகுதிகளில் நிலவி வருகிறது. இந்து சமயம் யாரையும் உலகத்தை விட்டுக் காட்டுக்கு ஓடச்சொல்லவில்லை. அது மனிதன் பூரணத்துவம் அடைவதற்கு பல படித்திறத்திலும் ஏற்ற பயிற்சி அளிக்கும் சர்வகலாசாலையாகவே இந்த உலகத்தைக் கருதுகிறது. வர்ணாச்சிரம தர்மத்தில் இல்லறத்திற்கே முதலிடம் கொடுக்கிறது இந்துசமயம். பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூன்று ஆச்சிரமத்தாருக்கும் ஆதரவு கொடுப்பவர் 'இல்லறத்தவரே'. "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணை" என்கிறது திருக்குறள்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப்பெற்ற நாம் இம்மை மறுமையாகிய இருமைக்கும் வேண்டிய நான்கு புருஷார்த்தங்களையும் பெற்றுய்தல் வேண்டும். அவையாவன: தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்) மோட்சம் (வீடுபேறு) என்பனவாம். மனிதன் பொருளை நல்லாற்றில் நின்று ஈட்டவேண்டும். 'அருளொடும் அன்பொடும் பொருந்தி வாராத பொருள் பசுமட்கலத்து நீர்போலச் செய்தானையும் கொண்டிறத்தலின்' அங்ஙனம் சம்பாதித்த பொருளை இருவகையாகப் பயன்படுத்த வேண்டும் — அறத்திற்கும் (சற்பாத்திரர்க்குக் கொடுத்தல்), நல்லறமாகிய இல்லற இன்பம் துய்ப்பதற்கும், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் இகலோக வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை; மோட்சம் அல்லது பேரின்பவீடு என்னும் நான்காவது பேற்றைப் பெறுதற்கு இன்றியமையாதவை, மனிதமுயற்சிகளுக்கெல்லாம் மணிமுடியாகத் திகழ்வது மோட்சத்தை அடைதல். இதனை ஔவைப் பிராட்டி விளக்குகிறார், "ஈதல் அறம்; தீவினை விட்டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்; பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு." ஆகவே மனிதனுடைய இறுதி இலட்சியம் அல்லது குறிக்கோள் கடவுள் காட்சியே; இறைவனுடன் இரண்டறக் கலந்து பிறப்பு இறப்பு இல்லா பேரின்பத்தை அனுபவித்தலே.

மனிதனிடத்து மூன்று வகையான தன்மைகள் படித்திறத்தல் அமைந்துள்ளன. முதலாவது சுயநலம், காமம், கோபம், பேராசை வெறுப்பு முதலிய விலங்கு இயல்புகள்; இரண்டாவது சகோதரத்துவம், இரக்கம், அன்பு முதலிய மனிதப்பண்புகள்; மூன்றாவது எல்லா சீவராசிகளிடத்திலும் அனுதாபம், கருணை, அருட்திண்மை, சிந்தை சொற் செயலில்

தூய்மை ஆகிய தெய்வீகப்பண்புகள். இறுதி யாகக் குறிப்பிட்ட உயர்ந்த வாழ்க்கையை தெய்வீக வாழ்க்கை என்கிருர் இமயஜோதி சிவானந்தர். மனிதன் தன்னுள் மண்டிக்கிடக் கும் விலங்கியல்பை உதறித்தள்ளி, உள்ளே கனலும் மனிதத்தன்மையில் தெய்வ உணர் வை ஏற்றி அருளன்பில், தெய்வ சேதனத்தில் ஊன்றி வாழவேண்டும். இவ்வாறு தீவிரமாக வாழ்தலே, தெய்வீக வாழ்வு என்கிருர் சிவா னந்த முனிவர்.

ஆன்மீக வாழ்க்கை மனிதனுடைய விலங்கு மனத்திற்கும் தெய்வீகத் தன்மைகளுக்கும் இடையில் நிகழும் பெரும் போராட்டமாகும். மனிதன் புலன்களுக்கும் உலக இன்பங் களுக்கும் அடிமையாகும் போது அவனது மனம் கீழ்நிலைப்படுகிறது. எப்போது அவன் புலன்களுக்கு எஜமானுகிருனேஅப்போதுஅவ னது மனம் அவனைத் தெய்வீக நிலைக்கு எடுத்துச் செல்கிறது.
தாமசம், ராஜசம், சாத்வீகம் என்னும் முக்குண ங்கள் வசப்பட்டு மனிதனது மனேநிலை பெரும் மாறுதல் அடைகிறது. சாத்வீககுணம் மிகும் போது மனிதன் கடவுளுக்கு அண்மையில் சென்றுவிடுகிருன். முக்குணபேதங்களையும் தாண்டி குணுதீதனுகின்றபோது தெய்வ சாந் நித்தியத்தைப் பெறுகிருன்.

இந்த ஆன்மீக ஒருமைப்பாட்டினை அடை வதற்கு இந்து சமயம் மக்களின் தனிப்பட்ட உள்ளப்பாங்கிற்கும், ஆற்றலுக்கும், பரிணும வளர்ச்சிக்கும் ஏற்ப, நான்கு பெரு நெறிகளை வகுத்துள்ளது. (1) கர்மயோகம் – பயன்கரு தாப் பரநலத்தொண்டிற்குரிய பாதையாகும். உலக நலன்களைக்கருதி, தன்னலமற்ற சேவை புரிதல். ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பது அப்பரின் அருள்வாக்கு. இது சுறு சுறுப்பான இயல்புடைய மனிதனுக்குப் பொ ருத்தமானது. (2) பக்தியோகம் – ஆண்டவன் மீது அளவுகடந்த அன்பிற்குப் பக்தி என்றும் அந்த மார்க்கத்தைப் பக்தியோகம் என்றும் கூறப்படும். இறைவனுக்குத் தன்னை பூரண மாக அர்ப்பணித்து விடுதல்-ஆத்மநிவேதனம். இது உணர்ச்சிவசப்படும் மனிதனுக்கு உகந்த வழியாகும். (3) இராஜயோகம் அல்லது அட் டாங்க யோகம் என்பது புலனடக்கம், மன வொழுக்கம் ஆகியவற்றின் மூலம் இறைவனு டன் ஒன்றுபடும் பாதையாகும். எட்டு அங் கங்கள் ஆவன: யமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி. இது தெளிவற்ற இயல் புடைய மனிதனுக்குப் பொருந்தும். (4) ஞான யோகம் – ''நான் யார்?'' ''இவ்வுலகம் யாது?'' போன்ற ஆராய்ச்சியின் மூலம் சத்–சித் ஆனந்த சொரூபத்தில் அமைதி பெறுதல். ஆய்வுத்திறனும் ஆன்மீகப் போக்கும் கொண்ட மனிதனுக்கு இது தகுதியுடையது. மேற்படி நான்கு பாதைகளும் தனித்தோ, கூட்டாக வோ பரஞானத்தைப் பெறுவதற்கும் சிவானு பூதி அடைவதற்கும் உதவுவன.

சுவாமி விவேகானந்தர் இந்த நான்கு யோகங்களின் சேர்க்கையே கலப்பு யோகம் என்றும், இந்த நான்கு மார்க்கங்களிலும் இசைவான முறையில் ஒருமைப் படுத்துதல் தமது சமயத்தின் இலட்சியமாகும் என்றும் கூறியுள்ளார். மகரிஷி சிவானந்தர் இதனை முழுமையான யோகம் (Yoga of Synthesis) என் றும் தற்கால மக்களின் உள்ளப் பாங்கிற்கு இயைந்ததாகவும் கருதுகிருர். இது தலை (மூளை) இதயம், கை (head, heart, hand) ஆகிய மூன்றை யும் ஆக்கப்பூர்வமான பணியில் ஈடுபடுத்தி பரிபூரண நிலையை அடைய வழிகாட்டும். இதனைக் கீழ்க் கண்ட சொற்றொடர்கள் மூலம் தெளிவுபடுத்துகிருர்.

''தொண்டு செய், அன்புகாட்டு, கொடு, பரிசுத்தனுக, தியானம் பயில், அனுபூதி அடை; நல்லவனுயிரு, நல்லதையே செய்; இரக்கமுள்ள வனுயிரு, கருணையுள்ளவனுயிரு, ''நான் யார்?'' என்று ஆராய், ஆத்மாவை அறி, விடுதலைபெறு.''

இந்து சமயம் சர்வமத சமயக் கொள்கை கள் அனைத்தையும் தன் அகத்தே கொண்டுள் ளது. அது பல்வேறு சமயங்களும் இறைவனை அல்லது பேரின்பத்தினை அடைதற்குரிய வெவ்வேறு மார்க்கங்கள் எனக்கருதுகிறது. எவ்வாறு நதிகள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி வெவ்வேறு வழிகளில் ஓடி ஈற் றில் நாமரூபங்களை இழந்து சமுத்திரத்தில் சங்கமமாகின்றனவோ, அவ்வாறே வெவ்வேறு மதங்களும் வெவ்வேறு நெறிகளைப் பின்பற்றி இறுதியில் ஒரே இலட்சியத்தை அடைகின்றன.

இந்து சமய சமரச விளக்கம் இன்றைய உலகில் பெரிதும் தேவைப் படுகிறது. நல்லி ணக்கம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், ஆன்மீக ஒற்றுமை, மன அமைதி, சாந்தம், சமாதானம் உலகில் விளங்குவதற்கு சமய வாழ்வு பெருந்துணைபுரியும் என்பதில் ஐய மில்லை.

சேவை செய்! அன்பு செய்!
தியானம் செய்! ஆத்மானுபூதி அடை!

# பிரபத்தி நெறி



டாக்டர். இரா. தண்டாயுதம்
மலாயாப் பல்கலைக்கழகம். கோலாலம்பூர்

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு நுண்ணுணர்வுகளால் மட்டுமே உணரக்கூடிய ஒரு நுட்பமான உறவாகும். இந்த உறவை நாம் உள்ளபடி உணர்ந்து கொள்ளாவிட்டாலும், இந்த உறவு நம்மை விட்டு அகல்வதில்லை. இந்த உறவின் ஆழத்தையும் ஆற்றலையும் நாம் உணரும்போதே 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' என்பதன் உண்மைப் பொருளை உணர முடியும். இவ்வாறு உணரும்போது, இவ்வுறவு இறைவனுடனும் ஒழிக்க முடியாத ஓர் இனிய உறவாக மலர்ந்து விடுகிறது.

இந்த உறவின் பெருமையை உணர்ந்து, இறைவன் எவ்விடத்தும் எப்பொருளிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் எனத் தெளிந்து, அவனிடம் ஈடுபாடு கொண்டிருத்தலே உயிர்களின் இயற்கையென சமய நெறிகள் உணர்த்துகின்றன. 'எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்... நடிக்கும் மெய்ப்பொருள்' என்று இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதைப் பாடுவார் ஒரு பெரியார். இவ்வாறு நீக்கமற நிறைந்திருப்பவனிடம் நீக்கமற ஈடுபாடு கொள்ளும் உயிர்களின் இயற்கையையும் பல சமயச் சான்றோர்கள் விளக்கியுள்ளனர். 'கடலை நோக்கி ஓடுவது எவ்வாறு ஆறுகளின் இயற்கையோ, மணத்தைப் பரப்புவது எவ்வாறு மலர்களின் இயற்கையோ, அவ்வாறே இறைவனை நோக்கிப் போவதும் உயிர்களின் இயற்கை' என்று ஒரு வங்காளிப் பாடல் கூறுகிறது. பொய்கையாழ்வாரும் உயிர்களின் இந்த இயற்கையைத் தம் பாசுரங்களில் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார். 'ஆறு கடலையே நோக்கியிருக்கும்; சூரியகாந்தி மலர் கதிரவனையே நோக்கியிருக்கும்; உயிர் எமனையே எதிர்பார்த்திருக்கும்; உணர்வோ ஒண்தாமரை கேள்வனையே நோக்கியிருக்கும்' என்பது ஆழ்வார் கருத்து.

''பெயருங் கருங் கடலே நோக்கும் ஆறு; ஒண்பூ
உயருங் கதிரவனே நோக்கும்; உயிரும்
தருமனையேநோக்கும்;ஒண் தாமரையாள்கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு!''

என்பது ஆழ்வார் பாடல்.

இத்தகைய உயிரின் அடிப்படையான இயற்கைத் தன்மை, தனக்கு உறவாகிய இறைவனையடைய பல வழிகளிலும் முயல்வதையே சமய நெறிகள் காட்டி நிற்கின்றன. கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் ஆகியவை நமது சமயம் காட்டும் சிறந்த நெறிகள். திருமாலை முழுமுதலாகக்கொண்டு, அவனருளாலே உய்தலுக்கு வழி காட்டும் வைணவ நெறியோ இவ்வெல்லா நெறிகளினும் பிரபத்தி நெறியையே வற்புறுத்தி நிற்கின்றது. திருமாலின் சம்பந்தம் பெற்றவன் என்ற பொருளையுடைய சொல்லால் குறிக்கப்படும் வைணவன், அச்சம்பந்தத்தைப் பிரபத்தி நெறியாலேயே அடைய முடியும் என்பதே வைணவ நெறி காட்டும் மிகப் பெரிய உண்மை.

'இறைவனே என்னை ஆட்டுவிப்பவன்; நான் வெறும் கருவிதான்' என்று உணர்ந்து. தெளிந்து, 'எல்லாம் அவனே' எனக்கொண்டு, அவனையே தஞ்சமாய்க் கருதி, அவனருளால் உய்வதே பிரபத்தி நெறி என்று போற்றப்படுகின்றது. சரணாகதிதான் பிரபத்தி நெறியின் உயிர். பக்தனுடைய காதலைக் காட்டிலும் அதி தீவிரக் காதலை உடைய இறைவன், பக்தனின் இதயத்தைத் தேடித் தவத்து, அவனுடைய சரணாகதியையே நாடி நிற்கிறான். அந்தச் சரணாகதி கிடைக்கும்போதே அவனும் மகிழ்கிறான்; தன்னைச் சரணாகத் தந்தவனும் பூசித்துத் திளைக்கிறான். கீதையில் கண்ணன் உணர்த்துவதும் இதைத்தான். ''எனது மாயை கடத்தற்கரியது. என்னைச் சரணமாக அடைபவர்க்கே அதைக் கடக்க இயலும்'', ''எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணாகப்பற்றினால் நான் உன்னை விடுவிப்பேன்'' என்னும் கீதை மொழிகள் சரணாகதியின் உயிர்ப் பகுதியைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன. 'ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்' என்று நம்மாழ்வார் இதனைக் குறிப்பிடுவார்.

''நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலும்
இனியுன்னை விட்டொன்றும் ஆற்றற் கிலேன்''

என்று உணர்ந்து தெளிந்து சரணடையும்போதே இந்நெறி சிறக்கிறது. இந்நெறியில் நின்றொழுகுபவர்களை பிரபன்னர்கள் என்று வைணவ நெறி சிறப்பாகப் போற்றி நிற்கின்றது.

நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம். நாம் அவருடைய தாய். நமக்கும் அவருக்கும் ஒரு குறைவுமில்லை. நம்மை அவர் பிரிய முடியாது. முழுதும்உண்மை.
— யோகர் சுவாமிகள்.

அறியாமை மிக்கு, இறைவனை அடைவதற்குரிய வேறு சாதனங்களைப் பழக இயலாதவராய், வேறு கதியற்றவராய் இருப்பவர்கள்தாம் இறைவனிடம் அடைக்கலமாகத் தந்து விடும் இந்த நெறியைப் பின்பற்றுகிறார்கள் என்பதில்லை. ஞான நெறியில் தலைசிறந்து நிற்கும் ஆசாரியர்களுக்கும் இந்த நெறியே உகந்த நெறியாக விளங்கியிருக்கின்றது. ஆன்மாவின் உண்மையியல்பை உணர்ந்து, ஞான முயற்சியாலே சாதனம் செய்யும் ஆற்றல் பெற்றிருந்தும், ஆசாரியர்கள் இறைவனிடம் தம்மை ஒப்படைத்துக் கொள்வதையே விழைகின்றார்கள். இவ்வாறு வாழ்க்கையின் எந்த நிலையில் இருப்பவர்களும் பின்பற்றக்கூடிய விதத்தில் அமைந்திருப்பது தான் இந்த நெறியின் தனிப்பெரும் சிறப்பு எனலாம்.

இந்த நெறியில் தலைசிறந்து நின்றவர்கள் ஆழ்வார்கள். திருமாலை நினைத்தவுடன் இவர்களுடைய உள்ளமெல்லாம் நெகிழ்ந்து கனிந்து விடுகின்றது. அந்தப் பேரன்பு நிலையில் மனந் தளர்ந்தவராய் சாதனம் செய்யும் ஆற்றல் பெற்றிருந்தும் செய்யாமல் இறைவனுடைய பாதங்களிலேயே இச்சான்றோர்கள் சரணடைந்து விடுகின்றனர். திருமாலினுடைய கல்யாண குணங்களிலும், வடிவ அழகிலும் ஈடுபட்டு அழுந்தியதால்தானே இவர்கள் ஆழ்வார்கள் என்றே போற்றப் பெறுகின்றனர்.

"உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும்
வெற்றிலையு மெல்லாம்
கண்ணன் எம்பெருமான்என் றென்றே
கண்கள் நீர் மல்கி ......."

இருப்பதுடன், திருமாலை எப்படியெப்படித்தான் போற்றி மகிழ்வேன் எனத் திகைத்து மனம் மயங்கி அவனுடைய அன்பிலே ஆழ்வார்கள் திளைத்துக் கிடக்கின்றனர்.

"பங்கயக் கண்ணனென்கோ பவளச்
செவ்வாயன் என்கோ
அங்கதிர் அடியன் என்கோ அஞ்சன
வண்ணன் என்கோ
செங்கதிர் முடியன் என்கோ திருமறு
மார்பன் என்கோ
சங்கு சக்கரத்தன் என்கோ சாதி
மாணிக் கத்தையே!"

என்பது நம்மாழ்வார் பாசுரம். இந்த உன்னத மனநிலையில் நெறியும் குறியும் இரண்டாக நிற்காமல் ஒன்றுகவே இணைந்து விடுகின்றன. இந்தப் பேரின்பத்தைத் தவிர வேறு எதுவும் வேண்டாம் என்ற முடிவிற்கே அவர்களுடைய உள்ளங்கள் விரைந்து விடுகின்றன,

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!"

என்ற தொண்டரடிப் பொடியாரின் பாசுரம் இந்த உன்னத நிலையை அற்புதமாக விளக்கிக் காட்டுகின்றது. அதனால்தான் பிரபத்தி நெறியின் இலக்கியமாக ஆழ்வார்களின் பெருவாழ்வு வைணவர்களால் கருதப்படுகிறது.

'நான்' என்னும் அகங்காரத்தை ஒழித்தலே பிரபத்தி நெறியின் முதல் படியாகவும் முக்கிய படியாகவும் கருதப்படுகின்றது. பிரபத்தி நெறியின் உயிரே 'நான் என்பதில்லாமல், இறைவனிடம் சரண் புகுவது தான். அதனால்தான் 'நான்' என்று கூறுவதையே வைணவர்கள் ஒரு திருட்டாகக் கருதுகிறார்கள். இறைவனுக்குரிய ஆத்மாவை 'எனது' என்று சொந்தமாக்கிக் கொள்வது திருட்டுத்தானே? இந்தத் திருட்டை 'ஆத்மாபஹாரக் களவு' என்று வைணவ சித்தாந்தம் வருணிக்கும். மற்ற நெறிகளில் செல்வார் பழகும் சாதனங்களில் 'நான் செய்கிறேன்' என்ற நினைப்பு ஓர் அணுவேனும் இருப்பதாலும், பிரபத்திநெறியில் இது அறவே ஒழிக்கப்படுவதாலும்தான், பிரபத்தி நெறி மற்ற நெறிகளினின்றும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. உயிர்களெல்லாம் இறைவனுக்கே சொந்தமாதலின், பிரபன்னன் எல்லாம் அவன் செயலே என்று அவனிடமே எல்லாம் விட்டு விடுகிறான். தன் செயல் என ஒன்று இருப்பதாகவே அவன் கருதுவதில்லை. இந்த நிலையில் இறைவனே அவனுடைய சாதனமாகி விடுகிறான். இவ்வாறு உபாயமும் உபேயமும் ஒன்றுகப் பரிணமிக்கின்ற நிலையிலேதான் பிரபத்தி மலர்ந்து நிற்கின்றது. இந்த மலர்ச்சியில் திளைக்கும்போது, இறைவனுடைய திருநாமத்தை எண்ணுத நாட்கள் பட்டினி நாட்களாகவே படுகின்றன.

"உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோ நாராயணு வென்று
எண்ணு நாளும் இருக்கெசுர் சாமவேத
நாண்மலர் கொண்டுன் பாதம்
நண்ணுநாள் அவைதத் துறுமாகில்
அன்றெனக் கவை பட்டினி நாளே!"

என்பது நம்மாழ்வார் திருவாக்கு.

## பொறுமை

தீய சொற்களைப் பொறுத்துக் கொள். சினம் கொள்பவரிடம் சினம் கொள்ளாதே! தீமைசெய்பவர்க்குத் தீமை செய்யாதே! சினத்தைப் பொறுமையாலும் தீமையை நன்மையாலும் பொய்யை மெய்யாலும் வெல்க! பொறுமையே பொன்றுமையை அளிப்பதாகும்.

— மகாபாரதம்

பிரபத்தி நெறியில் ஈடுபடுவோர் உள்ளிந்திரியங்களை அடக்குவதுடன் புற இந்திரியங்களையும் அடக்க வேண்டும். இறைவன் உகக்கும் செயல்களைச் செய்து, அவன் விரும்பாத செயல்களை விட்டுவிட வேண்டும். சாதனங்கள் பழகும் ஆற்றல் தன்னிடம் மிக்கிருந்தாலும், அவற்றை நம்பாமல் இறைவனையே தஞ்சமாகப் பற்றி நிற்க வேண்டும். இறைவனுடைய அருங்குணங்களையும் அருட்செயல்களையும் நெஞ்சத்தில் இருத்தவேண்டும். இவையெல்லாவற்றையும்விட இறைவனால் ஆட்டுவிக்கப்படும் ஒரு கருவியாகவே பிரபன்னன் தன்னைக் கருத வேண்டும். இறைவனுடைய மகிழ்ச்சிக்காகவே தான் என்ற எண்ணம் பிரபன்னனுடன் இரண்டறக் கலக்க வேண்டும். இவ்வாறு கலந்த நிலையிலேதான் குலசேகர ஆழ்வார்,

''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும்
—கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே''

என்று பாடுகிறார். 'குருகாய்ப் பிறப்பேனே', 'மீனாய்ப் பிறக்கும் விதிவுடையேன் ஆவேனே', 'செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே', 'தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே', 'கானாறாய்ப் பாயும் கருத்துடையேன் ஆவேனே', நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே' என்றெல்லாம் படிப்படியாகக் கூறிச் செல்லும் இவ்வாழ்வார் இறுதியில், 'எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே' என்று கூறும்போது, 'இறைவன் மகிழத் தான் ஒரு கருவி' என்று கருதும் ஓர் உயரிய நிலையையே காண்கிறோம். இறைவன் தன்னை எந்த நிலையில் எந்த இடத்தில் எந்தக் காலத்தில் எவ்வாறு அனுபவிக்கத் திருவுள்ளம் கொண்டிருக்கின்றானோ, அதற்கியைந்த கருவியாவதுதான் பிரபன்னன் செய்யவேண்டியது. இந்த நிலையிலேதான் பிரபத்தி நெறி முழுமை கொள்கிறது.

பிறப்போ, சாதியோ, குலமோ, இடமோ பிரபத்தி நெறிக்குத் தடையாவதில்லை. சரணாகதிக் காவியமாகக் கருதப்படும் இராமாயணம் இதனை மிகச் சிறப்பாக விளக்குகின்றது. குகனும், சுக்ரீவனும், வீடணனும் சரணாகதியால் உய்வதை விளக்குவதே இக்காவியம் என்றுகூடக் கூறி விடலாம். இவர்களுள்ளும், வீடணனின் சரணாகதியைச் சரணாகதியின் உச்சநிலை என்றே வைணவ குலம் கருதுகிறது. அரக்கர் குலத்தவனாக இருந்தாலும்,

''குகனொடும் ஐவரானோம் முன்பு பின்பு குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம், எம்முறை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்''

என்று இராமன் கூறிய அளவில், வீடணன் இராம குலமாகிய இட்சுவாகு குலத்தினனாக ஆகி விடுகிறான். இவ்விதிகாசக் காட்சி, பிரபத்தி நெறியின் உயிர் நிலையையே உணர்வுச் சித்திரமாக்கிக் காட்டி விடுகிறது.

இவ்வாறு, வைணவ நெறிக்கே அடிப்படையாக அமைந்திருந்தாலும், பிரபத்தி நெறி உயிர்க் குலத்தின்உய்விற்கே வழிகாட்டும் பெரு நெறியாக விளங்குகின்றது. பின்பற்றுவதில் எளிமையும், பயன் தருவதில் முதன்மையும் கொண்டிருப்பதாலேயே இந்த அரிய நிலை எனலாம்,

★

## பிரார்த்தனை

கடவுளே! என்னைப் பொய்யிலிருந்து மெய்க்கு அழைத்துச் செல்லும்; இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும்; மரணத்திலிருந்து அமரத்துவத்திற்கு அழைத்துச் செல்லும். அருள் வள்ளலே! உம்மை அடைய அருளும். என்னகத்தே எழுந்தருளும். அப்பொழுது நான் தூய்மை பெறுவேன்.

— உபநிடதம்

# சன்மார்க்கம்

சி. இராமசுவாமி
துணைத் தலைவர் யோகாசன ஆலயம் - சென்னை

சமய ஆராய்ச்சி செய்து உயர்ந்த நிலையை யடைந்த அறிஞர்கள், சமயத்தின் முடிவான பொருள் ஒன்று உண்டென்றும், அப்பொருள் தில்லையில் பிரகாசிக்கக்கூடியது என்றும், சரீரத்தின் கண் அவ்விடம் (தில்லை) சென்று அப்பொருளையடைவதே சன்மார்க்கம் என்றும் கூறினர். சமயம் ஒழுக்க நெறியைக் கற்பிக்கும். மக்கள் அவ்வொழுக்க நெறியைப் பின்பற்றுவதோடு நில்லாமல் அதன் உட்கருத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவ்வாராய்ச்சியே சன்மார்க்கம்.

குயவன் பாண்டங்களை செய்வதற்காகப் பலவகை மண்ணைப் பரிசீலனை செய்து தக்கதோர் மண்ணை எடுத்துப் பயன் படுத்துவது போன்று தாயுமானவர் இறைவனைக் காண வேண்டும் என்ற வேட்கையுடன் பல சமயங்களையும் நன்கு ஆராய்ந்தனர். சமயங்கள் பாலைவனத்திற்குச் சமமானவைகள். பாலைவனத்தில் செல்லுகிறவனுக்கு குறிப்பு ஒன்றும் இல்லை என்றால் மீண்டும் அவன் எவ்வழியாகச் செல்ல வேண்டும் என்று தெரியாமல் திகைப்படைவான். அஃதே போன்று சமய ஆராய்ச்சி செய்பவர்களும் இறைவனைக் காணும் பொருட்டு குறிப்பு ஒன்றைத் தெரிந்து கொள்ளாமல் ஆராய்ச்சி செய்வாராகில் திகைப்படைய நேரிடும். தாயுமானவருக்கு அத்திகைப்பு நேர்ந்ததாக அவரது பாடல்களில் சொல்லியுள்ளதைக் காணலாம். இந்து தர்மத்தில் சமயங்கள் பல இருந்தபோதிலும் அவைகளின் உள்ளக்கிடக்கையை எவ்வாறு அறிந்து கொள்ள வேண்டும் என்பதை,

''நெறிகள் தாம்பல பலவுமாய் அந்தந்த நெறிக்காஞ்
செறியுந் தெய்வமும் பலபல வாகவுஞ் செறிந்தால்
அறியுந் தன்மையிங் காருனை வறிவினால் அறிந்தோர்
பிரியுந் தன்மையில் லாவகை கலக்கின்ற பெரியோய்''

என்று தாயுமானவர் சொல்லியதிலிருந்து அறியவும்.

சமயங்கள் பலவாயினும் அவைகளில் உறையும் பரம்பொருள் ஒன்றே என்று அறிஞர்கள் உழைத்து அறிவால் அறிந்தனர். தாயுமானவர் அதற்காக உழைத்து யோகப் படியிலிருந்து பார்த்தார். எங்கும் பிரம்ம சொரூபத்தைக் கண்டார். அவ்வாறு அருள் நிலையிலிருந்து காண்பது ஞானமாகும். அவர்களே ஞானிகளாவர். அவ்வனுபவம் பெற்றவர்கள் அப்பரம்பொருளைப் பிரிந்து வாழ விரும்பமாட்டார்கள். பரம் பொருளையடைவதற்குச் சமயத்தைக் கடந்த மோன சமரசத்தைப் பெறவேண்டும். சமரசத்தைப் பெற்றவர்கள் சன்மார்க்கிகள்.

''சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு சமய சங்கேதப் பொருளுந் தானென்றாகப், பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை பகர்வரியதில்லை மன்றுள் பார்த்த போதங்கென் மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர், சன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே கண்டவுடன் ஆனந்தங் காண்டலாகும்'' சீவன் பரவெளியை (ஆகாசத்தை) அடைந்ததும் அவ்விடத்தில் தனித்திருக்கும். அவ்விடத்தை தில்லை மன்றம் என்றனர் தாயுமானவர். மக்களுக்கு அக்கருத்தினை உணர்த்தும் பொருட்டு ஆன்றோர்கள் ஆகாசத்தைக் காட்டுவதற்கு சிதம்பரத்தில் நடராஜர் (ஆகாச) ஸ்தலத்தை ஏற்படுத்தினர். அது புற வழிபாடாகும். அத்தலத்தில் சென்றதும் அங்குள்ளவர்கள் மக்களை உள்ளே அழைத்துச் சென்று திரையை விலக்கி ஆகாசத்தைக் காட்டி, இது தான் ''சிதம்பர ரகசியம்'' என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அதனால் நாம் பெறுவது என்ன?

திரை என்பது மனம். ஆகாசம் என்பது பரவெளி என்று அந்தரார்த்த கருத்தாகும். நாம் அங்கு சென்று பார்த்ததை ஆன்றோர்களிடம் நெருங்கி விசாரணை செய்ய அதன் உண்மைப்பொருள் விளங்கும். அத்தகைய

விசாரணை செய்வதே சன்மார்க்கம். அம்மார்க்கம் மக்களை உயர்ந்த நிலைக்கு (தில்லைமன்றத்திற்கு) கொண்டு செல்லும்.

பரவெளி கடல் போன்றது. சமயங்கள் நதிகள் போன்றது. நதிகள் சென்று கடலில் கலந்ததும் கடலாக மாறுமேயல்லாது நதிகள் போன்றிராது. அதுபோன்று சமய ஆராய்ச்சியில் உள்ளவர்கள் பரவெளியை யடைந்து அவ்விடமிருக்க வேட்கை கொள்வார்களே அன்றி சமய வேட்கை கொள்ளமாட்டார்கள். அவ்வனுபவம் பெற்றவர் எச்சமயிகளாயினும் அவ்விடத்திலிருந்து இறைவன் அருளைப்பெறுவதற்காக வணங்கிநிற்பர் என்று தாயுமானவர் சொல்லுகிறுர். இந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்ள குருவிசுவாசம் வேண்டும். குருவிசுவாசம் உள்ளவர்களுக்கு இறைவனே ஆசானுக வந்து அருள்புரிகிறுன். அருளுதல் என்பது அறிவினிடத்தில் தீ மூட்டுதல் அல்லது தீட்சை (குறிப்பு) இடுதல் எனப்படும். அத் தீ பற்றி எரியும் சமயம் சீவனைப் பற்றியுள்ள வினைகள் எரியும். அவ்வருள் ஒளியைப் பார்ப்பவர் ஞானதீரர். கருணையுள்ளவர். அவ்வனுபவம் இல்லாதவர் கல்நெஞ்சம் உடையவர். கல்நெஞ்சம் சீக்கிரம் உருகுவதில்லை. அதற்குக் காரணம் பாசபந்தங்களின் நெருங்கிய தொடர்பாகும். அவைகளை எவ்வாறு விலக்குவது என்பதை சிவஞான சித்தியார் சொல்லுகிறுர், ''பாசஞானத்தாலும், பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதி ஞானத்தாலே, நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத நிழர்கீழ் நில்லாதே நீங்கிப் போதின், ஆசைதரும் உலகமெலாம் அலகைத்தேராமென்று அறிந்தகல அந்நிலையே யாகும் பின்னும், ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலா மோட'' சிவஞான சித்தியார் தாயுமானவர் முன்தோன்றியவர்.

ஞானங்கள் மூன்றுவகை. முதலாவது பாசஞானம். அதுமிக தாழ்ந்தது. அதிலிருந்து விலகி முயற்சித்து பசுஞானத்தைப் பெற வேண்டும். அதைக்கொண்டு பதிஞானத்தைப் பெறவேண்டும். இக்கருத்துக்களையே மூன்று மதாச்சாரியர்கள் போதித்தனர்.

பதிஞானம் சீவன் பிரம்மம் ஒன்றே என்ற அத்வைதத்தை சங்கரரும், பசுஞானம்; சீவன் வேறு பிரம்மம்வேறு இரண்டும் நித்தியம். ஆனுல் சீவன் முயற்சி செய்து பிரம்மத்தை அடைய வேண்டுமென்று துவைதத்தை மத்வரும், பாசஞானம்; பிரகிருதி (உலகம்) சீவன், பிரம்மம், மூன்றும் நித்தியம். சீவன் சேவையிலீடுபட்டு பாசத்தினின்று விலகி பிரம்மத்தையடைய முயற்சிக்க வேண்டும் என்ற விசிஷ்டாட்த்துவைதத்தை இராமானுஜரும் போதித்தனர்.

பாசங்களை விலக்க பஞ்சாட்சரத்தை உச்சரித்து யான் எனது அகற்றி பசுஞானத்தையும், பசுவானது பரவெளியில் (தில்லைமன்றத்தில்) இருந்து பதியை யடைய உழைத்து அவனைக் காணும்பொருட்டு அவன் அருளைப் பெற்று அதில் நிலைத்திருப்பதற்கு பதிஞானத்தையும் பெறவேண்டும்.

மனம் எப்பொழுதும் சீவனுக்குச் சத்துருவாகவுள்ளதால் விரைவில் தில்லைமன்றத்தை அடைய முடிகிறதில்லை. அம்மனத்தை தாய்மைப்படுத்த ஓசை தரும் ஐந்தெழுத்தை விதிப்படி உச்சரிக்க உள் ஒளி பிரகாசிக்கும். கல்நெஞ்சம் கரைந்துருகும். ஆன்ருேர்கள் ஐந்தெழுத்தை மகா மந்திரமாகக் கொண்டு அதன் உள்ளக் கிடக்கையை அறிந்து இறைவன் திருவடியை அடைந்தார்கள்.

அத்தகைய சன்மார்க்கப் பெரியவர்கள் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துச் சொல்லும் ''ஆத்மஜோதி'' இருபத்து ஐந்து ஆண்டுகள் மக்களுக்கு நற்பணியாற்றி ''வெள்ளி விழா''க் கொண்டாட இருப்பது கேட்டு மகிழ்ச்சி. ''ஆத்மஜோதி'' மேலும் மேலும் ஓங்கி நாடெங்கும் பரவி இன்னும் பல விழாக்கள் கொண்டாட இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

## நான் யார்?

நீ உடம்பன்று, மனமன்று,
புத்தியன்று, சித்தமன்று.
நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும்
அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம்.
இந்தஉண்மை
உனதுஉள்ளத்
தில் நன்றுப்ப
பதியக்கடவது.
ஆனுல் நீ கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே.
எவ்வுயிரும் பெருமான்முன்னிலை என்று சாதனை செய்.
கடவுள் உள்ளும் புறமும்
உள்ளவர்.

—யோகர்
சுவாமிகள்.

ஸ்ரீ ஆத்மஜோதி

அனுபவமிக்க
தொழிலாளர்கள்
நவீன
அச்சியந்திரங்கள்
விதவிதமான
அச்செழுத்துக்கள்
குறைந்த
செலவு
குறிப்பிட்ட
நேரம்
கவர்ச்சிகரம்

ஆகியவற்றுடன்
உங்கள்
அச்சு வேலைகளை
மும்மொழிகளிலும்
செய்துகொள்ள
மலைநாட்டில்
சிறந்த இடம்

அச்சகம், நாவலப்பிட்டி.

ஆத்மஜோதி
வெள்ளி விழா
சிறக்க
வாழ்த்துகிறோம்!

சகலருக்கும்
ஏற்ற சிறந்த ஆடை வகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்!

வாசன்ஸ்

நிர். 3, வோகன்ஸ் பார்க் வீதி
நாவலப்பிட்டி.

அழகிய
அச்சு வேலைகளில்
தங்களைத் திருப்திப்படுத்துவதே
எங்களின் ஒரே நோக்கம்.

விவேகானந்த அச்சகம்
புத்தகசாலை

(சிறந்த கலண்டர் தயாரிப்பாளர்கள்)

விவேகானந்தாக் கட்டிடம் - யாழ்ப்பாணம்.

தந்தி: 'பிறின்ரேஸ்' கிளை: தொலைபேசி: 517

230, ஆட்டுப்பட்டித் தெரு - கொழும்பு

த. பெ. இல: 853 தொலைபேசி: 32260

மலையகத்தில் மின்சார வேலைகளுக்கு ஒரு சிறந்த ஸ்தாபனம்

## பதுளை எலக்ட்ரிக்கல்ஸ்

எங்களிடம்:—

- சகல மின்சாரக் கருவிகள்-உபஉறுப்புகள்
- ரேடியோ உபஉறுப்புகள்
- பைசிக்கள் — பைசிக்கள் உபஉறுப்புகள்

பெற்றுக்கொள்ளலாம்.

---

உங்கள் வானொலிகளை நல்லமுறையில் பழுது பார்ப்பதற்கு
ஒரு சிறந்த ஸ்தாபனம்.

---

சகல மின்சார இணைப்பு வேலைகளும் பொறுப்பேற்று செய்து தருவோம்.
இன்றே விஜயம் செய்யுங்கள்

# பதுளை எலக்ட்ரிக்கல்ஸ்

203, லோவர் வீதி - பதுளை.

உளத் தூய்மைக்கு ஆத்மஜோதி!
உங்கள் உடை தூய்மைக்கு டொலர் சோப்!

உங்கள் ஆடைகளை பளபளப்பாகவும் விரைவாகவும்
அழுக்கின்றி சுத்தம் செய்து வெண்மையாக்குவது — — டொலர் சோப்

சந்தையில் முன்னணியில் திகழ்வது — — — — டொலர் சோப்

மலிவான விலையில் கிடைப்பது — — — — — டொலர் சோப்

இன்றே வாங்கி சலவை செய்யுங்கள் — — — — டொலர் சோப்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

# டொலர் சோப் தொழிற்சாலை

46, சௌண்டர்ஸ் பிளேஸ் - கொழும்பு-12

# உங்களுக்குத் தெரியுமா?




பால் போன்ற
வெள்ளைப்
பற்களுக்கு

பாரதத்திலும்,
ஈழத்திலும்

பல கோடி மக்களுக்குப் பணிபுரிவது..................

## கோபால் பற்பொடி!

தயாரிப்பாளர்கள்:

## எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.

மதுரை — கொழும்பு.

விற்குமிடம்:

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி: 26584

—EELAMANI

## ஆத்மஜோதி வெள்ளி விழா சிறக்க
## எங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

நாகரீக நங்கையருக்கான

லங்கா மணிபுரி, பிரிண்டட் சாரிகள்

சில்க்ஸ், சர்ட்டின்ஸ் பிளவுஸ் வகைகளும்

ஆண்களுக்கான சகல சேர்ட்டிங்ஸ், சூட்டிங்ஸ்களுக்கும்

தலை நகரில் சிறந்த ஸ்தாபனம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்!

# சாரதா ஸ்டோர்ஸ்

96-98, யோர்க் வீதி, கொழும்பு-1

தொலைபேசி: 22075.



## ஆன்மீக வெளியீடுகள்!

அருவமும் உருவமும் ரூ. 1-25

உருவ வழிபாட்டின் விஞ்ஞான விளக்கம்.

பிரபஞ்சம் இன்பமயம் ரூ. 1.10

ஆண்டவன் படைத்த உலகம் இன்பமயமானது, துன்பத்திற்கு காரணம் மனிதன், என் அனுபவ விளக்கம்.

மானசயோகம் ரூ. 6-00

சூக்ஷ்ம திருஷ்டி, சூக்ஷ்ம ஞானம், சூக்ஷ்ம யாத்திரை, சூக்ஷ்ம தரிசனம் முதலியவைகளைப் பெறும் முறையிலும்; அட்டமா சித்துகள் புரியும் விளக்கங்களும், முக்தி பேற்றுக்கு மனம் எப்படி உதவுகிறது என்ற விபரங்கள் அடங்கிய அரிய படைப்பு.

ஸ்ரீ சிவபாலயோகி வழ்க்கை வரலாறு ரூ. 1-00

நவராத்ரீ கவசம் ச. 70

அருட் குரல் (ஸ்ரீ துர்க்கை சித்தர்)

ஸ்ரீ துர்க்கா தேவியின் பரிபூர்ண அருளைப் பெற்ற ஸ்ரீ துர்க்கை சித்தரின் மந்திர இரகசியம், மந்திர, யந்திர சாஸ்திர உண்மைகள் ஆன்ம ஞான இரகசியங்கள் அடங்கி வெளிவரும் ஆன்மீக மாத சஞ்சிகை.

வருட சந்தா ரூ. 5-00

தபால் செலவு தனி.

கிடைக்குமிடம்:

209, காலி ரோட்

வெள்ளவத்தை - கொழும்பு 6.

எல்லா தொடர்புகளும் கடிதம் மூலமே! நேர் தொடர்பு கிடையாது!

# SABA AGENCY

THE NAME RENOWNED FOR
RADIO, RADIO SPARE PARTS AND ELECTRICAL GOODS
OF THE HIGHEST QUALITY.

Stockists of:

- Electrical Accessories
- Electrical Fittings
- Electrical Cables
- C. B. E. Bulbs
- C. E. I. Productions
- Elect, Marina, Electrola & Philips Spares for Radios.
- Philips Transistors & Valves

Order promptly Executed
Call early & obtain your requirements

# SABA AGENCY

129, Sea Street, COLOMBO - 11

T'phone: 32502

★ தமிழுலகில் முதன் முதல் வெளிவந்ததும்

★ சித்திரக் கலன்டராய் முதன் முதல் வெளிவந்ததுமான

# மெய்கண்டான்

## திருக்குறட் கலன்டர்

அறிஞர் அன்பும் ஆதரவும் ஆசியும் பெற்று
உங்கள் இடங்களின் மங்கள சூரியனாக
என்றும் விளங்குவது

முத்திரையின் அளவிலே சித்திர சகிதமாய் அப்பர், சுந்தரர், நாவலர், போன்ற சமய ஞானிகள் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, கெனடி போன்ற உத்தமப் பெரியார்கள், உலகு புகழ் மேதையர்கள், தத்துவ ஞானிகள், தமிழ்ப் பேரறிஞர்கள் இத்தகையோர் படங்கள் எல்லாம் இலக்கத்தினுள் பொறித்து

**சித்திரக் கலன்டராய் முதன் முதல்
வெளிவந்தது**

# மெய்கண்டான்

பிளாஸ்ரிக் டயறிகள்,

பேர்ஸ் டயறிகள்,

சிறிய பொக்கற் டயறி முதல் பெரிய டெஸ்க் டயறி வரை
பல அளவுகளில் வெளிவருவன.
கண்ணைக் கவரும் அழகும் கருத்தைக் கவரும்
பொலிவும் உடையன.

"ஆத்மஜோதி"க்கு எங்கள் நல்லாசிகள்!

எல்லோரும் விரும்பி வாங்குவது

# சூரியோதய சூடம்

தயாரிப்பு:
MAP இண்டஸ்ட்ரீஸ்

★ மற்றும் வெளிநாட்டு மருந்து வகைகளும்
பட்டர், பழரச பானங்களும் கிடைக்கும்.

# S. RAMALINGAM & CO.,

12, GAMPOLA ROAD ::: NAWALAPITIYA.

வெள்ளிவிழா கொண்டாடும்
"ஆத்மஜோதி"க்கு எமது நல்வாழ்த்துக்கள்!

சுத்தமான உணவுவகைகள் தயாரிக்க
சிறந்த உணவுப் பொருட்கள் தேவை!

சகல பலசெலவு சாமான்களும் தரம்
மிக்கவையாகவும், நியாய விலைக்கும்
பெற்றுக்கொள்ள நகரிலே
சிறந்த ஸ்தாபனம்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# கொத்மலை ஸ்டோர்ஸ்

(நகை அடவு பிடிப்பாளர்)
[உரிமையாளர்: மு. உண்ணுமலை]

நிர். 21, கொத்மலை வீதி — நாவலப்பிட்டி.





ஆத்மீகத்

துறையில்

ஒளிவிளக்கென

மிளிரும்




# "ஆத்ம ஜோதி"

திக்கெட்டும் மணம் வீசி திசையெங்கும் அருளொளி பரப்பி,
பல்லாண்டு காலம் வாழ
எம் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

அனைத்திலங்கை பீடிப் பிரியர்களால் போற்றிப் புகழப்படுவது **சபா பீடி!**

சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பை உண்டு பண்ணுவது **சபா பீடி!**

கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு தயார் செய்யப்படுவது **சபா பீடி!**

தயாரிப்பாளர்கள்:

## கே. எஸ். சுப்பிரமணியம்

அன் சன்,

கம்பளை. போன்: 325.

# தெய்வபக்தி உள்ளவர்களுக்கு மாத்திரம்!

பாரத நாட்டில் காடு, பனிமலைகள், பொதியமலைச் சாரல்களில் மறைந்து வாழும் கடுந் தபஸ்விகள், சித்தர்களையண்டி, அவர்களிடமிருந்து பெற்ற ஆன்மீக உயிர் மூலிகைகளைக்கொண்டு சாஸ்திர முறைப்படி தயாரித்து, சம்ஸ்காரம் செய்து ஜபசக்தியேற்றிய பூஜா திரவியங்கள்:

**தூபக் கலவை:** சாம்பிராணியோடு கலந்து வீட்டில் தூபம் போட, தெய்வ ஆகர்ஷண சக்தி அதிகரிக்கும். சகல தோஷங்களும் விலகி சாந்தி நிலவும். பெக்கட் ரூபாய் 2-00

**தேவ தூபம்:** தியானம் செய்யு முன், அல்லது பூஜையின்போது இத்தூபம் போட, மனமாயை அகன்று, மாதவனின் ஒளி புலனுகும். தியானம் கைகூடும். பெக்கட் ரூபாய் 5-00

**பூதஹர தூபம்:** கிரக தோஷங்கள், அசுர சக்திகளின் சேஷ்டைகள், திருஷ்டி பிரபாவங்கள் மற்றும் பலவகை துன்பங்களைப் போக்கி, அமைதி, ஆனந்தம் பெருகச் செய்யும். சாம்பிராணியுடன் கலந்து உபயோகிக்கலாம். பெக்கட் ரூபாய் 3-50

**ஸ்நானக் கலவை:** தெய்வ உபாசனை செய்பவர்கள், நீரில் கலந்து வாரமொரு முறை ஸ்நானம் செய்ய உடல் புனிதமடையும். தீய எண்ண அலைகள் நம்மைத் தாக்காது. ப்ரம்ம தேஜஸ் உண்டாகும். பெக்கட் ரூபாய் 2-00

| | |
|---|---|
| பூஜா விபூதி (ஜபசக்தியூட்டியது) | பெக்கட் ரூ. 1-00 |
| பூஜா குங்குமம் ( ,, ) | பெக்கட் ரூ. 1-00 |
| மங்கள விபூதி ( ,, ) | பெக்கட் ரூ. 2-50 |
| மகாமிருத்யுஞ்ஜெய தேவனின் மூவர்ணப்படம் (மந்திரத்துடன்) காணிக்கை: | ரூ. 2-00 |
| (பூஜையில் வைத்து சக்தியேற்றியது) | தபால் செலவு தனி |

கிடைக்கும் இடம்:
ஆத்மயோக ஞான சபா!

## ஸ்ரீ காயத்ரீதேவி அருள் பெற வேண்டுமா?

சகல பாபங்களையும் போக்கி, புண்ணியம் கொடுத்து. சம்பத்துகளையளித்து, மோக்ஷ சுகத்தையும் அளிக்கவல்ல, ஸ்ரீ காயத்ரீ தேவியை வழிபட்டு, எளிய முறையில் அரிய நன்மைகளை அனுபவமாகப் பெற்று, அருள்வாழ்வு வாழ, அருந்தவ யோகியால் எழுதப்பட்ட புஸ்தகங்கள்:—

1. காயத்ரீ உபாசனு பத்ததி [பூஜா ஹோம விதியுடன்]
2. காயத்ரீ சகஸ்ரநாம ஸ்தோத்ரம் [தமிழ் உரையுடன்]
3. ஸ்ரீ காயத்ரீ தேவியின் மூவர்ணப் படம்

காணிக்கை: ரூ. 5-00

புஸ்தகங்கள், படம் தேவையானேர்க்கு காயத்ரீ யாக பூஜையில் வைத்து, ஸ்ரீ காயத்ரீ உபாசனு சித்தி பெற்ற ஒருவரால் சக்தியேற்றி, பிரசாதத்துடன் அனுப்பப்படும்.

— கிடைக்குமிடம் —

# ஆத்ம யோக ஞான சபா,

21, கூப்பர்ஸ் ஹில், கொழும்பு — 3.

சுவையா? சுத்தமா?

★ தொட்டால் கை மணக்கும்
சுவைத்தால் வாய் மணக்கும்

★ சுத்தமான - சுவையான
சாப்பாடு

★ திறமான சமையல்
மணமான பொரியல்

நீங்கள் கண்டி மாநகருக்கு வந்தால்
மறவாதீர்கள்!

# நியூ கிரீன்லன்ஸ் கபே

60, திருகோணமலை வீதி - கண்டி.

மனோரம்மியமான நறுமணத்துடன் கூடிய

# அண்ணா கோப்பி

சுவை குன்றுமல் உடனுக்குடன் உங்கள் முன்னிலையில்
அரைத்துப் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம செய்யுங்கள்

எமது விசேஷ தயாரிப்பான

## ஐஸ் கோப்பியை

அருந்தி இன்புறுங்கள்
எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

# அண்ணா தொழிற்சாலை (கிளை)

இல. 4, மக்கள் நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி - - யாழ்ப்பாணம்.

"ஆத்மஜோதி"
வெள்ளி விழா
சிறக்க
எமது மனமுவந்த
வாழ்த்துக்கள்

குமரன் ஸ்டோர்ஸ்
73, மெயின் வீதி — அட்டன்.

● ஆடவர்களுக்கேற்ற . . .
காற்சட்டை, சேட்

● பெண்மணிகளுக்கேற்ற . . .
நவீன முறையில் சாயம் அகலாத,
சுருங்காத, நீடிய பாவனைக்கு
தக்கபடி புதிய மோஸ்தர்களில்
தயாரான பிரஷியர்ஸ் மற்றும்
பிளவுஸ் தினுசுகள்

சிறுர்களுக்கேற்ற . . .
கவுன், போய்சூட், பேபிசூட், காற்சட்டை
சேட்

இவைகளை குறைந்த விலைக்கு
சிறந்த முறையில்
மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

நியூ
ஸ்டார் காமன்ட்ஸ்
44, மெயின் வீதி, வட்டவளை.

யாழ்ப்பாணம் - -
● திறம் சுருட்டு
● புகையிலை
● நல்லெண்ணெய்
மற்றும்
● சாப்புச் சாமான்களுக்கு

முருகன் ஸ்டோர்ஸ்,
43, மெயின் வீதி — அட்டன்.

கண்டி மா நகரில் - - -
பிரபல ஜவுளி மாளிகை

திறமான ஜவுளி தினுசுகளை
நயமான விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெறுவதற்கு

ஸ்ரீ முருகன்ஸ்
94, கொழும்பு வீதி.
கண்டி.

வெள்ளி விழா காணும் "ஆத்மஜோதி" சமய சஞ்சிகை
பொன் விழா — மணி விழாக்களும்
கொண்டாடிட எமது நல் வாழ்த்துக்கள்!

எம்மிடம் யாழ்ப்பாணம் திறம் புகையிலே சுருட்டுக்கள் மற்றும் சாப்புச்சாமான்களும் பெற்றுக் கொள்ளலாம்.

தினசரி வார செய்திப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

# கெங்கா ஸ்டோர்ஸ்,

எம். சின்னத்துரை அன் சன்ஸ்,
அட்டன் வீதி — கினிகத்தேனே.

'ஆத்மஜோதி' வெள்ளி விழா
சிறப்பாய் அமைய
எமது நல்வாழ்த்துக்கள்!

—எங்களிடம்—

யாழ்ப்பாணம் திறம் புகையிலேயும்,
சுருட்டுக்களும், பீடி மற்றும்
சாப்புச்சாமான்களும் கிடைக்கும்.

## ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸ்

(உரிமையாளர்:- S. பொன்னம்பலம்)
நிர். 1, கம்பளே வீதி,
நாவலப்பிட்டி.

## டி. கே. டி.
## என்டர் பிரைஸஸ்

கம்பளை.
பிரசித்திபெற்ற ஸ்தாபனம்—
உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான
சகல மருந்துகள், சத்துணவுகள், டின்
பால் மா வகைகள் கட்டுப்பாட்டு
விலேக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

D. K. D. ENTERPRISES,
*6 MODEL MARKET — GAMPOLA*

"ஆத்மஜோதி"
வெள்ளி விழா
சிறக்க
எமது
இதயபூர்வமான
நல்வாழ்த்துக்கள்!




—யாழ்ப்பாணம்—
புகையிலைக்கும் — திறம் சுருட்டுக்கும்
நாவல்நகரில் புகழ்பெற்ற ஸ்தாபனம்

# என். கே. ஆர். ஸ்டோர்ஸ்,

17, அம்பகமுவ வீதி — நாவலப்பிட்டி.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

## ஏ. பீ. எஸ். A. P. S.

- உண்மையான கோழித்தீன்
- மருந்து வகைகள்
- கால்நடை உணவுகள்
- (B.C.C.) பீ.சி.சி. & இலங்கை எண்ணெ கொழுப்புக்கள்-
- கூட்டுஸ்தாபனத்து உற்பத்திப் பொருட்கள்

யாவும் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் வீடுகளுக்கும் — பண்ணைகளுக்கும்
— பொருட்களை நேரில் விநியோகம் செய்யும் ஒரேயொரு ஸ்தாபனம் —

# ஏ. பீ. எஸ். A. P. S.

(உரிமையாளர்: எஸ். இராசரத்தினம்)
63, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு — 13.

தந்தி: "போல்ட்றி"    தொலைபேசி: 31151

சைவம் தழைக்க. தமிழ் ஓங்க
தொண்டாற்றும்

"ஆத்மஜோதி"
பல்லாண்டு வாழ்க

வ. வடிவேல் சகோதரர்,
120, கண்டி ரோடு,
நுவரெலியா.
தந்தி: 'வடிவேல்ஸ்' தொலைபேசி: 421

'ஆத்மஜோதி'
கடந்த 25 ஆண்டுகளாக
ஆற்றிவரும் அரும்பணிக்கு
எமது நல்லாசிகள்

லங்கா மோட்டார்
ஸ்பெயார்ஸ்,
46, பேராதனை வீதி,
கண்டி.
போன்: 7539.

—யாழ்ப்பாணம்—
திறம் புகையிலை சுருட்டு எம்மிடம்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பராசக்தி ஸ்டோர்ஸ்,
6, கொத்மலை வீதி,
நாவலப்பிட்டி.

"ஆத்மஜோதி"
வெள்ளி விழாவிற்கு
எமது வாழ்த்து!

ரஞ்ஜனஸ்
(பிடவை மாளிகை)
17, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி.

A BONANZA FOR OWNERS OF POULTRY FARMS!
A NEW WORD IN THE MASH WORLD!

*INSIST ON*

# MOREX

*POULTRY FOOD.*

FOR MORE & MORE EGGS—MORE & MORE PROFITS!

**MOREX** A complete balanced ration - mixed on a new formula, under special care & supervision.

*HOME DELIVERY & FARM DELIVERY UNDERTAKEN.*

For details —

## ESSAR MOREX MASH WORKS,

102/1, WOLFENDHAL STREET - COLOMBO - 13.

கோழி வளர்ப்பில் புதியதோர் சகாப்தம்!
கோழிப்பண்ணையாளர்களுக்கோர் வரப்பிரசாதம்!

## மோறெக்ஸ் கோழித்தீன்

கூடுதலான முட்டைகளுக்கும், அதிக லாபத்திற்கும்
வற்புறுத்தி வாங்குங்கள்!

**மோறெக்ஸ்** விசேஷ கவனத்துடன், சிறந்த மேற்பார்வையில் புதியதோர் முறையில் தயாரிக்கப்படும் போஷாக்கு நிறைந்த சரிவிகித உணவு!

வீடுகளுக்கும் பண்ணைகளுக்கும் விநியோகம் செய்யப்படும்.

விபரங்களுக்கு—

## எஸ்ஸார் மோறெக்ஸ் கோழித்தீன் உற்பத்தி ஸ்தாபனம்,

102/1, ஆட்டுப்பட்டித் தெரு - கொழும்பு 13.

# — வைஜெயந்தம்ஸ் —

நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு சிறந்தவை
ஆனால் விலை மலிந்தவை!

- அலங்காரப் பொருட்கள்
- மணிச் சாமான்கள்
- குடைகள்
- பீங்கான்வகைகள்
- வாசனைப் பொருட்கள்
- மண்ணெண்ணெய் அடுப்புகள்
- சூட்கேஸ்கள்
- சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள்

— மற்றும் பல —

சில்லறையாகவும் - மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**2, நியூ சென்ரல்மார்கட் — நுவரெலியா.**

தலைமை ஸ்தாபனம்:-
விஜயசுந்தரம் அன் கோ.,
1, ஹில் வீதி — நுவரெலியா.

தற்கால நாகரீகத்திற்கேற்ற - - -

நங்கையர் விரும்பும்:
நைலோன், நைலெக்ஸ், கொட்டன்,
டெக்காபருத்தி சாரிகளும்.

ஆடவர் விரும்பும்:
சேட்டிங், சூட்டிங், ரெடிமேட் தினுசுகளும்.

சிறுவர் சிறுமியர்களுக்கான:
சிங்கார சீருடை மற்றும்
பள்ளிக்கூட ஆடைகளும்

ரேடியோ, சுவர்க்கடிகாரம், கைக்கடிகாரம்
பேனு மற்றும் பாதணிகள்.
— விலை சகாயம் —

மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ். பி. சதாசிவம் பிள்ளை அன் கோ,**

**நிர். 7 - 9, அட்டன் ரோடு, — கினிகத்தேனை.**

★ சுத்தமானது
★ சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டது

● குணம்
● மணம்
நிறைந்தது

அநேகரின் அபிமானத்தைப் பெற்றது.

# ஜீவா கோப்பி தூள்

ஒருமுறை பாவித்தவர்களே மறுமுறையும்
வாங்கத் தூண்டும்.

பரீட்சித்துப் பாருங்கள்!

தயாரிப்பாளர்:-

# ஜீவா இன்டஸ்ட்ரீஸ்

மடவளேரோடு,
கட்டுகாஸ்தோட்டை.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்



## நல்ல உடல் இருந்தால்தான் வாழ்க்கையை இனிது அனுபவிக்கலாம்.

இழந்த சக்தியை மீட்டுத்தந்து மீண்டும் இளமைப் பூரிப்பை அளிக்கவல்ல அற்புதமானதொரு அபூர்வ சஞ்சீவி

# மதன சஞ்சீவி லேகியம்

வாலிப வயோதிப அன்பர்களே! உங்கள் உடல் நலனைச் சிறிது சிந்தித்து, சிறு வயதிலும் வாலிப வயதிலும் தெரிந்தும் தெரியாமலும் தவறான நட்பாலும் செய்கிற தவறுதல்களே இப்போது உங்களின் தசை, நாடி, நரம்பு முதலிய சப்த தாதுக்கள் கெட்டு நஷ்டமடைந்து ரத்தக்குறைவு, சோர்வு, கண் எரிவு, தளர்ச்சி, கெட்ட கனவுகள், அடிக்கடி சிறுநீர் உறுப்புக்கள் தளர்ச்சி, எடை குறைவு, முதுகு கை, கால் மூட்டுக்களில் வலி, பலஹீனம், பீதி, பயம், வெறுப்பு உண்டாகி தாய் தந்தையாரிடமும் சொல்லமுடியாமல் மன வேதனையும் கஷ்டமும் அடைந்து நிம்மதி இல்லாமல் வாழ்கின்றீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், பலரிடம் வருடக்கணக்கிலும் சிகிச்சை பெற்றும் ஒரு பலனும் இல்லாமல் ஏமாந்தவர்களும் இனி கவலைப்படவேண்டாம்.

வியாதியஸ்தர்கள் எமது மதன சஞ்சிவி லேகியத்தை ஒரு புட்டி உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். எடை அதிகப்பட்டு இரத்தவிருத்தியுடன் நாடி நரம்புகள் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று வாழலாம். எடை கூடியவர்களும் நீரிழிவு (ப்லட் பிரசர் Blood Pressure) பித்தக் கொதிப்பு உள்ளவர்களும் சாப்பிடலாம்; ருசியானது; நம்பிக்கையானது; பத்தியமில்லை. ஒரே புட்டியில் குணம் காணலாம். இழந்த சக்தியை மீட்டு விரியத்தையும் தேகவளர்ச்சியையும் தரும். குடும்ப வாழ்க்கைக்கும் சிறந்த லேகியம்.

எமது முருகானந்தா வைத்தியசாலையின் இணையற்ற தயாரிப்பான மதன சஞ்சிவி லேகியம் சக்தி வாய்ந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.

ஒரு முத்தல் ரூபா 23-00. அரை முத்தல் ரூபா 12-00. வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

# மதனலேபனம்

நரம்புகளின் பலவீனத்தைப் போக்க சிறந்த ஔஷதம்.
வெளிப் பூச்சு மருந்து விலை ரூபா 5-50.

எந்த வியாதியாக இருந்தாலும் எங்களைக் கலந்து ஆலோசியுங்கள். உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

சித்த மருத்துவ பண்டிட் — கா. சிவசுப்பிரமணியம் M.I.H.S.M.P

## முருகானந்தா வைத்தியசாலை

104 செட்டியார் தெரு
கொழும்பு—11

ஆயுர்வேத மருந்துகளுக்கும், வைத்தியத்திற்கும்
தலைசிறந்த ஸ்தாபனம்.

நவ நாகரீக நங்கையர்கள்



சீரான உடையுடுத்தி
**அருணா ஜுவல்லரி**
தங்க நகையணிந்து
ஜோராக நடைபோட
**எத்தனை ஜொலிப்பு?**
அதனால் அவர்கள் மனதிலே களிப்பு!
உள்ளத்திலே பூரிப்பு!!

இதனால் இன்றைய நவீன டிசைன்

தங்க நகைகளுக்கு

நம்பிக்கை, நாணயத்திற்கு
அனைவருமே நாடுவது
உறுதிக்கும், உத்தரவாதத்திற்கும்
எல்லோருமே தேடுவது

**அருணா ஜுவல்லரி தங்க நகைகளே.**

நீங்களும் இன்றே
விஜயம் செய்யுங்கள்

# அருணா ஜுவல்லரி

40, மெயின் வீதி — அட்டன்,

தொலைபேசி: 353.

உ

- தற்கால நாகரீகத்திற்கேற்றதும்,
- சிக்கனத்திற்கும், சிங்காரத்திற்கும்,
- அன்றாட பாவனைக்கு அனைவரின் விருப்பத்திற்கும்



— உகந்த சகல ஜவுளிதினுசுகளும் —

மலிவான விலையில்

மொத்தமாகவும் - சில்லறையாகவும்

கிடைக்கும்.

# பாலகிருஷ்ணு அன் கோ.,

30, மெயின் வீதி - அட்டன்.

தொலைபேசி: 302.

உ

வாழ்விலே ஒரு நாள் மணநாள்!
வருடத்திலே ஒரு நாள் திருநாள்!!

இந்நாளிலும், ஏனைய எந் நாளிலும்
எழிலோடு, புதுப் பொலிவோடு,
எல்லோரது கண்ணைப்பறிக்கும்
ஆடைகளை கருத்திற்கிசைந்த வகையில்
காலத்திற்கேற்ற முறையில்
தெரிவுசெய்யுங்கள்!

**நங்கையர்களுக்கு - ஆடவர்களுக்கு - சிறுர்களுக்கு**

ஏற்ற எல்லாவிதமான

பிடவை, ரெடிமேட்டுகளும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

# லெட்சுமி கார்ப்பரேஷன்,

111, நியூ பில்டிங், மெயின் வீதி - அட்டன்.

நவநாகரீக நங்கைகளுக்கும் ஆடவர்களுக்கும் ஏற்ற முறையில் புதுப்புது டிசைன்களிலும், பல அழகிய வர்ண நிறங்களிலும் ஒவ்வொருவரையும் திருப்தி செய்யும் ஸ்தாபனம் எம்முடையதே.

தங்களுக்குத் தேவையான நவநாகரீக பட்டுச்சேலைகள்
கைத்தறிச்சேலைகள், சேட்டிங், சூட்டிங், பெப்ரிக்ஸ்
இன்னும் பலரக ஆடைகளும் குறைந்த விலையில் கிடைக்குமிடம்

# மோகன் ஸ்டோர்ஸ்,

(உயர்ந்தரக ஜவுளி வியாபாரத்தின் முன்னணியில் விளங்குபவர்கள்)

நிர். 2, மொடல் சொப்,
புதுக்கடை வீதி — நுவரெலியா.
போன்: 342.

BEST COMPLIMENTS
FROM

# VILASINI & COMPANY

DEALERS IN
• Sarees • Shirtings • Curtains etc.
WHOLESALE AND RETAIL

Telephone: 27196

148, Keyzer Street,
COLOMBO – 11

உங்களுக்குத் தேவையான

சகலவிதமான

கலர் - லைன் - ஹாப்டோன் - ஸ்டீரியோ!!

# புளக்குகளும்

சினிமா சிலைட்

சித்திரவேலைப்பாடுகளுக்கும்

— புகழ்பெற்றவர்கள் —

# ஸ்ரீ லங்கா புளக் மேக்கர்ஸ்

131, மெசஞ்சர் வீதி,

கொழும்பு.

கண்டி மாநகரில் _ _ _

சுத்தமான
சுகாதாரமான சாப்பாட்டிற்கு

லட்டு, ஜிலேபி
அல்வா, கேசரி இன்சுவை தின்பண்டங்களுக்கு

வடை, பட்ஜி, போண்டா
சுசியம் பலரக பலகாரங்களுக்கு

அனைவருமே
இன்று நாடிவருவது

# H. H. & விஜயா கபே

9, திரிகோணமலை வீதி,
கண்டி.

ஊரல்

கரப்பான்

சொறி சிரங்கு

மற்றும்

சரும வியாதிகளுக்கு

இன்றே

தாமதிக்காமல்

எம்மிடம் வாருங்கள்!

# எச். எம். உடையார்

(ராஜவைத்தியர்)

[எக்ஸிமா கிளினிக்]

மெயின் வீதி — கெலிஓய.

* நவீன காலத்தில் நாகரீக நங்கையர்கள் விரும்பும் நைலக்ஸ், மணிப்புரி, டெக்கா கொட்டன் சாரிகளும்
* தற்கால ஆடவர்களுக்கேற்ற சேட்டிங், சூட்டிங், ரெடிமேட் ஆடைகளும்
* இளஞ் சிறுர்களுக்கேற்ற சீருடைகளும்

— மலிவான விலையில் தரமானவைகளாக —
வாங்குவதற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்

↓

# பேன்ஸி ஹவுஸ்

[யூனிக் ரேடியோ ஏஜன்ட்]

34 - 35, மெயின் வீதி — அட்டன்.

தொலைபேசி: 339.

இத்தொண்டு
சிறக்க
எமது
அன்பளிப்பு

↓

**தவமணி ஸ்டோர்ஸ்,**
67, மெயின் வீதி — அட்டன்.

எங்கள்
மனமுவந்த
அன்பளிப்பு

↓

**பாம்பே ஸ்டோர்ஸ்,**
31, மெயின் வீதி — அட்டன்.

# நியூலன்ட்ஸ் (ரூறிஸ்ற்) ஹோட்டல்

நியூலன்ட்ஸ் (ரூறிஸ்ற்) ஹோட்டல்

சுத்தமான சுவையான சைவ
உணவுகளுக்கு, சகலவசதிகளும்
அடங்கிய சிறந்த அறைகளுக்கு,
வைபவ தினங்களுக்கு ஆடர்களை
உடன் கவனிக்க,
யாவரும் விரும்பி
மீண்டும் விஜயம்
செய்ய
விரும்புவது

நியூலன்ட்ஸ் (ரூறிஸ்ற்) ஹோட்டல்

# நியூலன்ட்ஸ் (ரூறிஸ்ற்) ஹோட்டல்

தொலைபேசி: 35821

79, மெசஞ்ஜர் வீதி — கொழும்பு-12.

# "ஆரிய பவான்"

சிறந்த சைவ உணவு வகைகளை யாவரும் விரும்பும் வகையில் தயாரித்து சகல மக்களின் நல்லாசியையும் ஆதரவையும் பெற்று முன்னணியில் நிற்பவர்கள்

## ஆரிய பவான் Ariya Bhawan

79, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 22410.

79, 2-nd Cross Street,
COLOMBO-11.

ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

## வி. ஜி. சன்ஸ்,

அன்றாட தேவைகளுக்கேற்ற
நவநாகரீக
ஜவுளி தினுசுகளுக்கு

இன்றே
எமது ஸ்தாபனத்திற்கு
விஜயம் செய்யுங்கள்

V. G. SON'S

132, KEYZER STREET,
PETTAH COLOMBO—11

நீங்கள் செலவு செய்யும்
பணத்திற்கு பெறுமதியான
பிடவைகள்
வாங்கக்கூடிய இடம்
ரஞ்சனா ஸ்டோர்ஸ்தான்!

எல்லாவிதமான
- சாரி வகைகள்
- கவுண் பிடவைகள்
- சூட்டிங் தினுசுகள்
- சேட்டிங் வகைகள்

ஆகியன மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

## ரஞ்சனா ஸ்டோர்ஸ்

52, பேங்ஷால் வீதி, கொழும்பு
போன்: 25851

புதிய நிர்வாகம்

நவீன அமைப்பு

திருப்தி தரும் உபசரிப்பு

நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள்

இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபையின்
அங்கீகாரம் பெற்ற ஒரே சைவ ஹோட்டல்

# கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல் லிமிட்டெட்

3-ஏ, சிறபெறி கார்டின்ஸ்,

பம்பலப்பிட்டி.

தொலைபேசி: 81986
85592

தந்தி: "கிறின்லண்ட்ஸ்"

உண்மையான அன்பை வாய்ச்சொல்
வெளிப்படுத்தாது சேவைதான் வெளிப்படுத்தும்

—மகாத்மா காந்தி

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும்
நயம் வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா?

●

நாடு நலம்பெற, நாம் நற்சேவை
செய்ய, எமது உற்பத்திப் பொருட்களை
வாங்கி உபயோகியுங்கள்!

வணக்கம்.

●

அதிபர்,

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை,**

தபால் பெட்டி இல: 77 — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233. தந்தி: ''மில்க்வைற்''

கிளை:

**மில்க் வைற் சோப் டிப்போ,**

79, மெசன்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: 36063.

மில்க்வைற் சோப் மேலுறைகளில் திருக்குறளை அச்சிட்டு வருகின்றோம்.
சேகரித்துக் கொடுத்துப் பரிசுகளைப் பெறுங்கள்!

தற்கால நாகரீக ஆடவர், பெண்டிர், சிறுர்கள் விரும்பும்,

புடவை தினுசுகள், ரெடிமேட் ஆடைகளும்

● காலணிகளும் ● மணிச் சாமான்களும்

மலிவான விலையில் கிடைக்கும்!

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

# விவேகானந்தா ஸ்டோர்ஸ்

[புதிய நகரம்]

129, பிரதான வீதி — மஸ்கெலியா.

கிளை:

உமா டெக்ஸ்டைல்ஸ்—டிக்கோயா.

இடம் அன்பளிப்பு

## AVRA & CO

SEA STREET,
COLOMBO.

"ஆத்மஜோதி"யின்
வெள்ளி விழா
சிறக்க
எமது
இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்

கொழும்பு
பிரிண்டிங் வேர்க்ஸ்,
88, மெலிபன் வீதி-கொழும்பு

"ஆத்மஜோதி" வெள்ளி விழா
சிறக்க
எமது நல்வாழ்த்துக்கள்

**V.K.M. நாகலிங்கம் அன் சன்ஸ்**
நகை அன் ரேடியோ வியாபாரிகள்
97, கொழும்பு வீதி — கண்டி.

இடம் அன்பளிப்பு

அசோகா ரேடியோ
ஹவுஸ் அன்
லிபர்ட்டி சினிமா
(உரிமையாளர்: V.K.T. பொன்னுசாமி)
அட்டன்.
தொலைபேசி: 429.

இடம் அன்பளிப்பு

ஸ்ரீ
பாலன் ஸ்டோர்ஸ்,
467, மெயின் வீதி—மாத்தளை.

உ

எங்களின் மனமுவந்த

# அன்பளிப்பு!

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41

## நூர்ஜஹான் அன் கோ.

கம்பளை.

போன்: 543.

Registered at the G. P. O. as a Newspaper - M. L. 59/300.

''சரீரத்தின் மத்தியில் சோதிமயமாகப் பிரகாசமாயிருப்பது ஆத்மா.
அது சத்தியத்தினுலும், தவத்தினுலும், நல்ல ஞானத்தினுலும்
அடையத்தக்கது.
பிரமச்சரியத்தால் உணரத்தக்கது.
அதை அறிவோர் புலன்களை வென்றவர்.
அத்தகையோர்க்குத் தோஷங்கள் கிடையா''

—உபநிடதம்


காலங்கடந்த இந்த உபநிடதப் பேருண்மையினுல்
அனுபூதி பெற்ற மெய்ந்நெறியாளரின் உபதேசங்களை
ஓயாது இடித்துரைக்கும் ஒரே ஒரு பத்திரிகை

# ஆத்மஜோதி

ஈழத்திலும் இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான
மெய்ந்நெறிநாட்ட முடையவரின் அபிமானத்துக்குரிய
மாத சஞ்சிகை:

# ஆத்மஜோதி

ஆண்டுச் சந்தா ரூபா ஐந்து.

## ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி.

தொலைபேசி: 353.


அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி (இலங்கை)